தோற்றுத்தான் போவோமா...



சபாலிங்கம் நண்பர்கள் வட்டம்

France - 1999

Thottuthan Povomaa...

தோற்றுத்தான் போவோமா...

Published: 01 May 1999

Publishers: Sabalingam's Friends Circle - France

Compilation: S. Pushparajah

© Authors

Typesetting: Luxmy

Layout
Illustrations: Krishnarajah

Cover Picture: La Vie Privée Des Hommes

Contacts: S. Pushparajah
7, Rue Racine
95140 Garges Les Gonesse
France
Tel: 01 39 86 31 30
Mobile: 06 11 33 65 95
Fax: 01 39 93 50 00

ஐந்து ஆண்டுகளுக்கு முன்
ஆயுத அராஜகத்துக்குப் பலியாகிப்போன
நண்பன் சபாலிங்கத்துக்கு
இம்மலர் சமர்ப்பணம்.



கொடியவர்கள் இழைக்கும் தீங்குகளிலும் பார்க்க,
அவற்றை நல்ல மனிதர்கள் என்போர்
அதிர்ச்சியூட்டுமளவிற்கு மௌனமாய்
சகித்துக்கொண்டிருப்பது பற்றியே நாம் இந்தத்
தலைமுறையில் வருத்தமுறவேண்டும்.

-மார்ட்டின் லூதர் கிங்

பொருளடக்கம்

சொல்லித்தானாகவேண்டும்	சபாலிங்கம் நண்பர்கள் வட்டம்	06
காலம் தாழ்த்திய ஒரு அஞ்சலி	சமுத்திரன் (நோர்வே)	10
கொலைக்களப்பாடல்	அருந்ததி (பிரான்ஸ்)	11
OLD BUT GOLD	தரங்கிணி (பிரான்ஸ்)	12
காற்றை எதிர்த்து ஒரு காலடி	சேரன் (கனடா)	14
நான் காணா மனிதனை	பானுபாரதி (நோர்வே)	19
வேர்கொண்டெழும் பாறை	தமயந்தி (நோர்வே)	20
மனிதர்கள் மனிதம் குறித்து....	ப. வி. சிறிரங்கன் (ஜேர்மனி)	23
நீ... தீ...	சஜி (இலங்கை)	26
புலம்பெயர்ந்தது தமிழர்கள் மட்டுமல்ல		
வன்முறைகளும்கூடத்தான்	அழகு குணசீலன் (சுவிஸ்)	29
சாபக்கேடு	இளைய அப்துல்லாஹ் (இங்கிலாந்து)	32
ஓர் ஒளியேற்று!	ஆழிபுத்திரன் (நோர்வே)	33
இன்னும் எத்தனையோ	கலைச்செல்வன் (பிரான்ஸ்)	33
கருத்துச் சுதந்திரமறுப்பு	ஜோர்ஜ் குருஷ்சேவ் (கனடா)	34
நான் பெண் (மொ. பெ.)	றஞ்சினி -பிராங்போர்ட் (ஜேர்மனி)	35
நான் + நீ = அராஜகம்	சி. புஸ்பராஜா (பிரான்ஸ்)	36
மனிதத்தின் பரிதவிப்பு	சி. புஸ்பராஜா (பிரான்ஸ்)	39
நீ - நான் - அவர்கள்	நா. விச்வநாதன் -பாபநாசம் (இந்தியா)	40
காலுடைந்த சிவில் சமூகமும் தமிழ்ப்புத்திஜீவிகளும்	ஸ்பாட்டகஸ்தாசன் (ஜேர்மனி)	41
வியாகூலப் பிரசங்கம்	செல்வம் அருளானந்தம் (கனடா)	44
பழி சுமந்த மண்	சி. புஸ்பராஜா (பிரான்ஸ்)	44
பெண் சிசுக்கொலை	ரஞ்சி (சுவிஸ்)	45
Aux voleurs de la démocratie	THIVYANATHAN. S (FRANCE)	46
பூனைக்குத் தோழர்கள்	சி. சிவசேகரம் (இலங்கை)	47
நெருடல்	உமா (ஜேர்மனி)	48
சிவுரைகளை அணிந்துகொள்ளுங்கள்	நீர்கொழும்பூர் முத்துலிங்கம் (இலங்கை)	49
துடைப்பானின் குறிப்புகள்	அசோக் (பிரான்ஸ்)	50
வெறுப்பு	சி. புஸ்பராஜா (பிரான்ஸ்)	52
சதுரங்கம்	தயாநிதி (நோர்வே)	53
கவித்திருப்பு, மனிதக்காட்சிச்சாலை காலங்கடந்த கவிதை, யாத்திரை மூன்று பு (புலவன்-புரவலன்-புகழ்)	திருமாவளவன்(கனடா)	55
சிந்தனை - அக்கினிக்குஞ்சு	மு. நித்தியானந்தன் (இங்கிலாந்து)	58
உயிர்வாழும் துவக்குகள்	குருபரன் -சென்னை(இந்தியா)	59
தொற்றவைப்பது எதை?	ரவீந்திரன் (சுவிஸ்)	60
ஓவியம்	றஞ்சினி -பிராங்போர்ட் (ஜேர்மனி)	62
எழுதும்! கவிதை, ஆத்மா	ப்ரியம் -பெரம்பூர் (இந்தியா)	63

சரியும் சர்வாதிகாரிகளின் சாம்ராஜ்யங்கள்	தி. உமாகாந்தன் (பிரான்ஸ்)	64
சினேகிதம்	நா. விச்வநாதன் -பாபநாசம் (இந்தியா)	68
அநிஷ்டை	ஏ. எம். ஜாபீர் (இங்கிலாந்து)	69
மொட்டை	சோலைக்கிளி (இலங்கை)	72
இரண்டு கன்னடக் கவிதைகள் (மொ.பெ.)	பாவண்ணன் (இந்தியா)	73
மாக்சியத்தினூடு இலக்கியம்	தமிழரசன் (ஜேர்மனி)	74
ஓவியம்	Thuronan (France)	80
முற்றுப்புள்ளியின் மௌனத்தில் கண்ணாடி	நா. கண்ணன் (ஜேர்மனி)	81
தஞ்சந்தாருங்கோ	நிருபா (ஜேர்மனி)	82
அதனால்தான்	சேரிமின்னல் -பெருங்குடிஉ(இந்தியா)	84
மனிதநேயம்	கு. ரா. -மேட்டூர்அணை (இந்தியா)	85
பொருளாதார தாராளவாதமும் மக்கள் உரிமையும்	சமுத்திரன் (நோர்வே)	86
ஓவியம்	றஞ்சினி -பிராங்போர்ட் (ஜேர்மனி)	88
பச்சமிளகாய்	சுவாதி (பிரான்ஸ்)	89
உன்னால் என்ன செய்யமுடியும்?	செந்திரு -தமிழ்நாடு(இந்தியா)	90
ஜெரெனியச் செடிகளின் துயரம் (மொ. பெ.)	சந்துஷ் (ஜேர்மனி)	91
அல்தூஸரின் கருத்தியல் அரசயந்திரம்	செ. கணேசலிங்கன் (இந்தியா)	92
தியாகிகளுக்கு வாழ்த்து (மொ. பெ.)	அ.ஜ. கான் (இந்தியா)	93
கஸ்டானியா மனிதன்	நா. கண்ணன் (ஜேர்மனி)	94
ஓவியம்	Veeshman (France)	95
ஒரு பரிமாணமும் மூன்று பரிமாணங்களும்	நாதன் (பிரான்ஸ்)	96
ஓவியம்	Veeshman (France)	97
தள்ளுபடி புத்தகக் கண்காட்சி	இரா. ரவீந்திரன் -மதுரை (இந்தியா)	98
ஊசி இருக்கும் இடம்கூட	தேவா (ஜேர்மனி)	99
நாமும் அவர்களும்	இரா. ரவீந்திரன் -மதுரை(இந்தியா)	102
மேற்குநாடுகளின் வளர்ச்சியும் மூன்றாமுலகமும்	வாணிதாசன் (ஜேர்மனி)	103
சுதந்திரத்திற்கான பாதை (மொ.பெ.)	அ.ஜ. கான் (இந்தியா)	106
பிரிப்பு	இராசா - கருப்பட்டி (இந்தியா)	107
சங்கிலியன்	கொ. ரொ. கொன்ஸ்ரன்ரைன் (இலங்கை)	107
அராயகமும் மாக்சியமும்	அழகலிங்கம் (ஜேர்மனி)	108
தவணைமுறையில்	நீலிதை -பொதிகை,மதுரை (இந்தியா)	120
தாய்மை	தமயந்தி (நோர்வே)	120
முகமறியாத் தோழனுக்கு	இளைய அப்துல்லாஹ் (இங்கிலாந்து)	121
ஓவியம்	Vithuran (France)	121
ஓவியம்	Veeshman (France)	121
கல்லறைக்கற்கள் அற்ற கல்லறை (மொ.பெ.)	அ.ஜ. கான் (இந்தியா)	122
நன்றி		123
புதியபூமி எழுந்துவரட்டும் (மொ.பெ.)	இந்திரன்	124

சொல்லித்தானாகவேண்டும்



சபாலிங்கம் கொல்லப்பட்டு ஐந்து வருடங்கள் ஓடி மறைந்துவிட்டன. அன்றாடக் கொடூர நிகழ்வுகளும் சர்வசாதாரணமாகிப் போகும் வாழ்க்கைச்சூழலில், சபாலிங்கமும் - சபாலிங்கத்தின் கொலையும் மறக்கப்பட்டு, மறைக்கப்பட்டுப் போய்விடுமோ என்ற பயநிழல் எம் மத்தியில் விழத்தான் செய்கிறது. ஒரு மனிதனுடைய குறைந்தபட்ச விருப்பமும் -- உயர்ந்த பட்ச உரிமையும் அவனுடைய உயிர்வாழ்தலாகும். அந்த விருப்பும் உரிமையும் ஆட்டம் காணும் ஒரு நிலையை எம்மினத்திடையே மிக மலிவாக விதைத்த காரணிகளை ஆரம்பத்திலேயே தட்டிக் கேட்காது சிலநேரங்களில் தட்டிக்கொடுத்து பல சந்தர்ப்பங்களில் கைகட்டி நின்று, முடிவில் ஒன்றும் செய்யமுடியாத நிலையில் மௌனமாகவிருந்த மொத்த இனமும் தாம் செய்த பாவத்துக்கு சிலுவைகளைச் சுமந்தே ஆகவேண்டிய நிலை.

சபாலிங்கம் தமிழ்பேசும் மக்களின் விடுதலைப்போராட்டத்தில் ஒரு முன்னோடியாகத் திகழ்ந்தார் என்பதும், அந்நிய வாழ்விலும் தனது பங்களிப்பை செய்தார் என்பதும் எல்லோ ருக்கும் தெரிந்த உண்மை. தமிழ்பேசும் மக்களுடைய விடுதலைப் போராட்டத்தில் அவர் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் விட்டுக்கொடுப்பாக சமரசநிலை கொண்டார் என்றோ, அவரை ஒரு துரோகி என கருதும் அளவுக்கு நடந்துகொண்டார் என்றோ யாரும் அடையாளம் காணாத வேளையில் கொன்றவர்களுக்கு மட்டும் அவர் எப்படித் துரோகியானார். புத்திஜீவிக ளையும் மனிதநேயமுள்ளவர்களையும், எமது மக்களுக்காகச் சிந்திப்பவர்களையும், தாய்நாட் டின் விடுதலைப் போராட்டத்தில் நியாயமான போக்குகளை எதிர்பார்ப்பவர்களையும், தனக்குச் சரியெனப்பட்டதை தமிழ்பேசும்மக்களின் நல்வாழ்வுமீது ஆர்வத்துடன் முன்வைப்பவர்களையும் தேடித்தேடி வேட்டையாடுவதால் யார்தான் எதைத்தான் அடையப்போகிறார்கள்.

ஒரு மனிதன் கொல்லப்படுவதைவிட கொடுமையானது - கேவலமானது, கொன்றுவிட்டு மோசமான காரணங்களைக் காட்டி நியாயப்படுத்தும் அல்லது கொச்சைப்படுத்தும் பிரச்சாரங்க ளைக் கட்டவிழ்த்து விடுதலாகும். பிரச்சனைக்கான தீர்வு கொலையல்ல. தவறுகளை சுட் டிக்காட்டுபவர்களையும், நியாயமாக விமர்சிப்பவர்களையும் கொலை செய்வதன்மூலம்

பிரச்சனை ஒழிந்தது என பெருமூச்சுவிட்டுக் கொள்ளமுடியாதென்பதை சுட்டிக்காட்ட விரும்புகி றோம். அரசியலற்ற குருட்டுத்தனமான ஆயுத வழிபாட்டுத் தத்துவங்கள் இன்று உலக மக்கள் மனங்களில் அடிபட்டுப் போய்விட்டது. நாட்டின் பெயராலோ, இனத்தின் பெயராலோ, மொழியின் பெயராலோ, மதத்தின் பெயராலோ வெறும் அதிகார வெறியர்களால் உலகில் பதிக்கப்படும் அட்டூழியத் தடங்களை மனிதாபிமானமுள்ள எந்த மக்களும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். இந்தக் கொடுமைகளுக்கு எதிராக அவர்கள் வீதிகளில் இறங்கிப் போராடத் தொடங்கிவிட்டார்கள். ஆனால் முரட்டுத்தனமாக, பிடிவாதமாக ஆயுதமுனையில் மக்களை மௌனிகளாக்குதல் என்னும் கொடியவெறி தணிந்ததாகத் தெரியவில்லை.

புலிகளிடமிருந்து தமிழ்பேசும் மக்களை மீட்பதற்கான போர் எனவும், சமாதானத்துக்கான போர் எனவும் நேரத்துக்கு ஒரு சாட்டுக்களைக் கூறிக்கொண்டு இலங்கை அரசானது ஒட்டு மொத்தமாக தமிழ்பேசும் மக்களுக்கெதிரான ஒரு யுத்தத்தையே மேற்கொண்டிருக்கிறது என்பது ஒன்றும் புதிய விடயமல்ல. யுத்தம் நடக்கும் எந்த நாட்டிலும், தமது சொந்த மண்ணிலேயே பாஸ் எடுத்து மக்கள் பயணிக்கும் நிலை இல்லையென்றே கூறலாம். முழுத் தமிழ்பேசும் மக்களையும் பயங்கரவாதிகளாகப் பார்த்து அவர்களின் உரிமைகள், உடமைகள், உயிர்கள் பறிக்கப்படுவது மட்டுமல்லாது வயது வேறுபாடின்றி பெண்கள்மீதான பாலியல் வன்முறை மிகக் கொடூரமாக கட்டவிழ்க்கப்பட்ட நிலையை நாம் வன்மையாகக் கண்டிப்பதுடன் உடனடியாக தமிழ்பேசும் மக்கள் மீதான கொடூரமான யுத்தம் நிறுத்தப்பட வேண்டுமெனக் கேட்கிறோம். காலம்காலமாக பௌத்த சிங்கள பேரினவாத அரசுகளால் தமிழ்பேசும் மக்கள் ஏமாற்றப்பட்டது போதும். விடுதலைப்புலிகளை குற்றம் சாட்டுவதையும் ஆயுதத்தைக் கீழே போடுங்கள் என்பதையும் விடுத்து தமிழ்பேசும் மக்களுக்கான நீதியான அரசியல்தீர்வை உடனடியாக முன்வைத்து அதை நடைமுறைப்படுத்த வேண்டியதே நேர்மை யான, யோக்கியமான, நாட்டின் சுபீட்சத்தில் அக்கறையுள்ள அரசின் கடமையாகும்.

தமிழ்பேசும் மக்களின் பிரச்சனையைத் தீர்க்கிறோம்; நாட்டில் நடைபெறும் அரசியல் கொலைகளை இல்லாதொழிப்போம் என வாக்குப் பிச்சை கேட்டு அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்ட சந்திரிகா இன்று - அதிகார வெறிபிடித்து அலைவது மட்டுமல்லாது நாட்டையே இரத்தக்காடாக்கிய படைகளின் சொல்லுக்குத் தலையாட்டும் நிலையில் வெட்கங்கெட்டு அரசியல் நிர்வாணமாகப் போயுள்ளார். பௌத்த சிங்கள பேரினவாதிகளிடம் தமிழ்பேசும் மக்கள் ஒன்றும் பிச்சை கேட்கவில்லை. தமது சொந்த நாட்டில், தமது சொந்த மண்ணில் சுதந்திரமான வாழ்வைத்தான் கேட்கிறார்கள். அது அவர்களது உரிமை. அது அங்கீக ரிக்கப்படாவிட்டால் நாடு இன்னும் நாசமாய்ப் போய்த்தான் துலையும். மக்கள் இன, மத, மொழி வேறுபாடின்றி மன-உடல் சித்திரவதைகளுக்கு ஆளாகத்தான் போகிறார்கள். இதை உணர்வது, உடன் செயல்படுவது, திடமான முடிவை எடுத்து தியாக மனப்பான்மையுடன் அதை நிறைவேற்ற முற்படுவது அதிகாரத்தைக் கையில் வைத்திருக்கும் இன்றைய பௌத்த சிங்கள பேரினவாதிகளின் கடமையாகும். அது நாட்டுக்கும் நல்லது; மக்களுக்கும் நல்லது. இதுவே எங்களால் சொல்லமுடியும்.

விடுதலைப்புலிகளைப் பொறுத்தவரை உலகிலேயே சிறந்த கொரில்லாப் போராளிகள்; இரண்டு பெரும் இராணுவத்துடன் போரிட்டவர்கள்; கட்டுக்கோப்பான சிறந்த அமைப்பு; வீரமும் விவேகமும் கொண்ட தலைவர் என மார்தட்டிக்கொள்ளலாம். இதன்மூலம் பிரச்சனை தீரப்போவதில்லை. ஜனநாயகம், மனிதநேயம், சகிப்புத்தன்மை இவைகளை புலிகள் மறுத லிக்கும்வரை பிரச்சனைகளிலிருந்து அவர்கள் மீளமுடியாது. காட்டிக்கொடுப்பவர்களாகவும், தலையாட்டிகளாகவும், முகமூடி அணிந்தவர்களாகவும், அரசாங்கத்துக்கு வக்காலத்து வாங்குபவர்களாகவும், துரோகிகளாகவும் மற்ற இயக்கங்களை ஆக்கியதில் பெரும்பங்கு தங்களைச் சார்ந்தது என்பதை புலிகள் ஒப்புக்கொள்வார்களா? ஒப்புக்கொண்டே ஆகவேண் டும். மற்றைய இயக்கங்களைத் தேடி அழிப்பதிலும், தடை செய்வதிலும் ஆர்வம் காட்டி னார்கள். இயக்கங்களை விட்டொதுங்கி சகவாழ்வு வாழ முற்பட்ட மாற்று இயக்கத்தவர்களை வேட்டையாடினார்கள். இயக்கங்களாலும் தேடப்பட்டு, அரசபடைகளாலும் தேடப்படும் ஒருவன் எங்கே ஓடமுடியும்? நாங்கள் யாரையும் நியாயப்படுத்தவில்லை. யாருக்காகவும் வக்காலத்து வாங்கவில்லை. எங்களுக்குத் தெரியும் உண்மையைச் சொல்லி வைக்கிறோம். இயன்றவரை இயக்கங்களை அழித்துவிட்டு, மிஞ்சியவர்களில் சிலரை அரசுடன் காவு கொடுத்துவிட்டு, மிகுதியானவர்களை மௌனிகளாக்கிவிட்டு, நாங்கள் மட்டுமே போராடுகிறோம் என்று சொல்வதில் பெருமையொன்றுமில்லை.

இவைகளைவிடக் கொடுமையானது இலங்கையில் கி.பி. 8ம் நூற்றாண்டு தொடங்கியதென வரலாறு கூறும் பாரம்பரியத்தைக்கொண்ட முஸ்லிம் மக்களை அவர்களது நிலத்திலிருந்து சில மணி நேரங்களில் துரத்தியடித்துவிட்டு விடுதலைப்போராளிகள் என பெருமை கொள்ள முடியாது. இன்று மொத்தத் தமிழ்பேசும் மக்களும் வெட்கத்துடன் தலைகுனிந்து நிற்கும் நிலையை இந்தச் செயல் ஏற்படுத்தியுள்ளது. முஸ்லிம் மக்கள் தங்கள் சொந்த மண்ணுக்குத் திரும்பி வந்து சகஜமான வாழ்வு வாழமுடியாதவரை தமிழ்பேசும் மக்களின் விடுதலைபற்றிப்

பேச நாம் அருகதையற்றவர்கள். அத்துடன் அப்பாவி சிங்கள பொதுமக்கள் மீது இதுவரை நடந்த வன்முறைகளையும் நாம் வன்மையுடன் கண்டிக்கிறோம். இதுபோன்ற நடவடிக்கைகள் உடன் நிறுத்தப்படாதவரை நாம் ஒரு நாகரீகமான சமூகத்தவர்கள் என்றோ, எமது இனத்தின் உரிமைகள்பற்றிப் பேச தகுதியுள்ளவர்கள் என்றோ சொல்லிவிடமுடியாது.

அராஜகமும் வன்முறையும் எங்கள் சார்ந்தவர்கள்மீது பிரயோகிக்கப்படும்பொழுது ஒப்பாரியிடுவதும்; மற்றவர்கள்மீது பிரயோகிக்கப்படும்பொழுது மௌனம் சாதிப்பது அல்லது மகிழ்வது எங்களுக்குப் பழக்கமில்லா ஒன்று. அது எங்கு நடந்தாலும், யார்மீது நடத்தப் பட்டாலும், யாரால் நடத்தப்பட்டாலும் அதை வன்மையாகக் கண்டிப்பதுடன், பாதிக்கப்பட்ட வர்கள்மீது அனுதாபம் கொள்வது எமது இயல்பு. அதை நாம் கடும் போர்க்குணாம்சத்துடன் செய்தே தீருவோம். பிரான்சைப் பொறுத்தவரை சபாலிங்கம் மீதுமட்டுமல்ல, நாதன், கஜன் மீதும் நடாத்தப்பட்ட அரசியல் வன்முறைக் கொலைகளை நாம் மிக வெட்கத்துடன், வேதனையுடன், கோபத்துடன் கண்டிக்கிறோம். இதுபோன்ற நிகழ்வுகளை தொடர்ந்தும் கண்டிக்கப் பின்நிற்கமாட்டோம். ஏனைய புகலிட நாடுகளிலும் நடாத்தப்பட்ட அரசியல் படுகொலை, வன்முறைகளை நாம் கண்டிப்பதுடன்; உடனடியாக இவைகள் நிறுத்தப்பட்டு அனைத்துப் பிரச்சனைகளும் துப்பாக்கியின்றி, வன்முறையின்றி, பகைமுரண்பாடின்றி பேசித் தீர்மானிக்கப்படவேண்டும்; அது முடியும் என்று கூறிக் கொள்கிறோம்.

நாம் வளர்த்துவிட்ட அரசியல்வன்முறையின் பலனாக சமுதாய வன்முறைக் குற்ற வாளிகள் உருவாகிவருவதை கட்டுப்படுத்தமுடியாத சூழல் எம்மிடையே ஏற்பட்டுள்ளது. புகலிட நாடுகளில் வளர்ந்துவந்த சமுதாய வன்முறைக்குற்றம் கொலை, தாக்குதல், வழிப்பறி, கொள்ளை, பெண்கள் மீதான சகல வன்முறை என ஒட்டுமொத்த இனத்தையே பீதிக்குள் தள்ளியிருப்பதை மிகவும் பொறுப்புடன் சிந்திக்க நாம் கடமைப்பட்டுள்ளோம். இவைகளை கண்டிப்பதுடன் நின்றுவிடாமல், இவைகளை களைவதற்கான மார்க்கமாக நாம் வழிகாட்டிகளாக அமையவேண்டும். அரசியல்வன்முறைகளை நாமே கட்டவிழ்த்துவிட்டு, நீ மட்டும் சமுதாயவன்முறை செய்யாதே எனக் கேட்கமுடியாது. குற்றம் செய்யாதவன் மட்டுமே கல்லெறியமுடியும்.

மிகக் கொடூரமாக கொல்லப்பட்ட சபாலிங்கத்தின் நினைவாக நாம் ஒரு மலரை சமர்ப்பணம் செய்வது என்பது எமது வரலாற்றுக் கடமையாகும். எந்த வன்முறைக்கு மத்தியிலும், எந்த எச்சரிக்கைகளுக்கு மத்தியிலும்; இவைகளை எதிர்த்து நாம் கொடுக்கும் குரலின் நம்பிக்கைதான் இந்த மலர். இது ஒரு வரலாற்றுப் பதிவாக இருக்கும்.

இந்த மலரானது அனைத்து அராஜகத்துக்கும் வன்முறைகளுக்கும் எதிரானதாகவும், மனிதநேயத்தை கட்டிவளர்ப்பதாகவும் நாம் எண்ணியது போல் அமையவில்லை என்பதை ஒப்புக்கொள்கிறோம். அனைத்து அராஜகத்தையும் வெளிப்படுத்துவதாகவும், மனித நேயத்தைத் தக்கவைப்பதாகவும் படைப்பிலக்கியங்களை நாம் கோரியபொழுது, இது ஒரு உலகம் தழுவிய வேண்டுகோள் என்பதை யாரும் கவனத்தில் கொள்ளவில்லை. இலங்கையில் மட்டுமல்ல; உலகம் பூராகவும் நடைபெறும் அராஜகம், வன்முறை, மனிதநேயமற்ற செயல்கள், பெண்கள்மீதான அடக்குமுறை, குழந்தைகள்மீதான வன்முறை, கைவிடப்பட்ட வயோதிபர்களின் மன உளைச்சல் எனப் பல கோணங்களிலிருந்து படைப்புகளை எதிர்பார்த்தோம். ஆனால், இவங்கள் புலிகளுக்கு எதிராகப் புத்தகம் போடுறாங்கள் எனத் தப்பாக எண்ணி, பேச விரும்பியும் பயத்தில் பேனாக்களெல்லாம் வெட்கங்கெட்டு மௌனம் சாதித்துவிட்டது; பேசிய பேனாக்களில் பல கழுவிய மீனில் நழுவிய மீனாகியது. இதற்கு நாம் பொறுப்பல்ல. அராஜகம், வன்முறை, மனிதநேய மறுப்பு என்றவுடன் எல்லோர் மனங்களிலும் ஈழவிடுதலை இயக்கங்கள் தோன்றி பயமுறுத்தும் சூழ்நிலையை ஏற்படுத்திய கடந்தகால கசப்பான நிகழ்வுகளைப்பற்றி அனைவரும் சிந்திக்க கடமைப்பட்டுள்ளோம். புகலிடநாடுகளில் எழுத்துப், பேச்சுச் சுதந்திரத்துக்கு விடுக்கப்பட்ட, விடுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் சவாலை நாம் மறுப்பதற்கில்லை. கனடாவில் தேடல் நூலகம் எரிக்கப்பட்டதும், பாரிஸில் ஈழநாடு அலுவலகம் கொழுத்தப்பட்டதும் மிகப்பெரிய வன்முறையாகும். ஆனால் இவைகளுக்கு அப்பால் நமக்கு நம்பிக்கையூட்டும் பேனாக்கள் இன்னும் இருந்துகொண்டுதான் இருக்கிறது என்பதை மனநிறைவுடன் குறித்துக் கொள்கிறோம்.

"நான் எழுதுவதைத் துணிந்து போடுவீர்களா?" என தெனாவெட்டாக கேள்விகேட்டு, "ஆம் எழுதுங்கள். போடுகிறோம்" என்றவுடன் மறைந்த அட்டைக்கத்தி வீரர்களையும் எண்ணிப் பார்க்கிறோம். நாங்கள் சிறிது தயங்கியிருந்தால் இந்தப் பித்துக்குளிகளெல்லாம் தங்கள் பதுங்குகுழிகளிலிருந்து மற்றவர்களுடன் எங்கள் முதுகெலும்புகள்பற்றி ஆய்வே நடத்தியிருப்பார்கள். அவன் எழுதினால் எழுதமாட்டேன்; இவன் எழுதினால் எழுதமாட்டேன்; அவனுடைய கை பட்டால் எழுதமாட்டேன் என்பதெல்லாம் சுயநல சந்தர்ப்பவாதமாகவே நாம் கருதுகிறோம். மறுபக்கத்தில் இதுவும் ஒரு வகையான வன்முறையாகவே நாம் கருதுகிறோம். ஆயுதங்கள் மட்டுமல்ல; சில பேனாக்களும் எச்சரிக்கை செய்துகொண்டுதானிருக்கிறது. துணிந்து கருத்தை முன்வைக்கப் பயமிருந்தால், தயக்கமிருந்தால் நேர்மையாகக்

களத்திலிருந்து விலகிக்கொள்ளலாம். அராஜகத்தைக் கண்டிக்கவும்; வன்முறையை எதிர்க்கவும்; மனிதநேயத்தை நிலைநாட்டவும்; இவைகளுக்காக ஓங்கிக் குரல் கொடுக்கவும்; பேனாவைப் பிடிக்கவும்; சந்தர்ப்பம், சகுனம், சூழ்நிலை, குழுபேதம் பார்க்கவேண்டியதில்லை. துணிவுடன் நாம் வைக்கும் கருத்தே முக்கியம். வரலாற்றுத் தவறொன்றை செய்தவர்களாகவே இவர்களை நாம் இனம் காண்கிறோம்.

ஈழவிடுதலையின் பெயரில் அராஜகத்துக்கும், வன்முறைக்கும் பலியாகிப்போன எல்லோர் பெயர்களையும் எம்மால் பட்டியலிட முடியாவிட்டாலும்; சிலரின் பெயர்களையும், சில நிகழ்வுகளின் முக்கியத்துவத்தையும் நாம் இங்கு பதிவு செய்யாமல் போகமுடியவில்லை. தமிழ்த்தலைவர்களைப் பொறுத்தவரையில் அமிர்தலிங்கம், தர்மலிங்கம், யோகேஸ்வரன், ஆலாலசுந்தரம், பொட்டர் நடராசா, சரோஜினி யோகேஸ்வரன், சாம் தம்பிமுத்து, சிவபாலன், கலா தம்பிமுத்து போன்றவர்களதும்; மட்டக்களப்பு ஆசிரியர் வேல்முருகு, காங்கேசன்துறை ஆசிரியர் கருணானந்தசிவம், குரும்பசிட்டி ஆசிரியர் கிருஷ்னானந்தன், மதிமுகராஜா, கந்தசாமி போன்ற சமூக அக்கறை கொண்டவர்களதும், ரஜனி, செல்வி, காவலூர் ஜெகநாதன், கரவை கந்தசாமி போன்ற எழுத்தை ஆயுதமாகக் கொண்ட சமூக சிந்தனைப் போராளிகளதும்; பத்மநாபா, சிறீசபாரட்ணம், உமாமகேஸ்வரன், இறைகுமாரன், சுழிபுரத்தில் அழித்துப் புதைக்கப்பட்ட ஆறு இளைஞர்கள் போன்ற இயக்க சார்பானவர்களினதும் கொலைகள் மறக்கவும், மன்னிக்கவும் முடியாமல் உள்ளது. இவைகளுக்கெல்லாம் ஆரம்பமாக அரசியல் சகோதரப் படுகொலைக்கு (1974) பலியாகிப் போன முதலாவது நபர் பருத்தித்துறை கண்ணாடி பத்மநாதன் - சொந்த இயக்கத்துக்குள் படுகொலைக்கு (1978) பலியாகிப்போன முதலாவது நபர் மட்டக்களப்பு மைக்கல்-மாற்று சகோதர இயக்கப் படுகொலைக்கு (1982) பலியாகிப்போன முதலாவது நபர் சிவசண்முகமூர்த்தி (சுந்தரம்) ஆகியவர்களையும் இங்கு நாம் நினைவு கூருகிறோம்.

இப்படிக் கணக்கிலடங்காது சவுக்கம் தோப்புகளிலும், வயல்வெளிகளிலும், காடுகளிலும், கரைகளிலும், செம்பாட்டு மண்ணிலும் புதைக்கப்பட்ட பெயர் தெரியா விடுதலைவிரும்பிகளை நினைத்தால் நெஞ்சு புண்ணாகிறது. விடுதலைக்கென ஆயுதம் ஏந்திப் புறப்பட்ட அனைத்து இயக்கங்களும் இதற்குப் பொறுப்பாளிகள். யாரிடம் சொல்லி அழமுடியும். கேட்கத் துணிந்தால் வாழ்வை விலை கேட்கிறார்கள். உயிர் என்ன மயிர் என்று நாம் சொல்லமாட்டோம். மற்றவர்கள் உயிர்மீது கரிசனை உள்ள, மனிதநேயமிக்க எமக்கு எங்கள் உயிரும் பெரிதுதான். வாழ்வுக்காகவே போராட்டம், போராட்டத்துக்காக வாழ்வு அல்ல. வாழ்வே மௌனமாக்கப்பட்டு நிர்ப்பந்தங்களுக்குள் தள்ளப்படுமானால்; வாழ்வுமீதான தேடலை நியாயமாகக் கருதுகிறோம். அந்தத் தேடலுக்காக நாம் மூர்க்கத்துடன் முயல்வோம். ஏனெனில் நாங்கள் அரசியல் வியாபாரிகளில்லை; எங்களிடம் நரித்தனமில்லை. எங்கள் தேடலில் நேர்மையும் மனிதநேயமும் இருப்பதால் நாம் அதைச் செய்யத் தயங்கவேண்டியதில்லை.

அடுத்ததாக, தென்னிலங்கையில் அரசியல் வன்முறைக்கு பலியாகிப்போன கொழும்பு பல்கலைக்கழக மாணவர் தலைவர் தயா பத்திரானா, பத்திரிகையாளர் றிச்சார்ட் டி சொய்சா, அரசியல்வாதி விஜய குமாரதுங்கா போன்றவர்களின் கொலைகளையும் கண்டிப்பதுடன் இப்படிப்பட்ட நிகழ்வுகளுக்கெதிராக நாம் தொடர்ந்தும் குரல் கொடுப்போம் என்பதையும் இங்கு குறித்துக்கொள்ள விரும்புகிறோம்.

இறுதியாக, அந்த மாங்காய்த்தீவில் தமிழ்பேசும்மக்களின் விடுதலையின்பேரில் நடந்து கொண்டிருக்கும் போரிலும் சரி, புரட்சியின் பேரில் நடாத்தப்பட்ட போரிலும் சரி அராஜகத்துக்கும் வன்முறைக்கும் பலியாகிப்போன, பாதிக்கப்பட்ட அனைத்து இயக்க விடுதலைப்போராளிகளையும், அனைத்துப் பொதுமக்களையும் இன, மத, மொழி வேறுபாடின்றி நாம் நினைவு கூர்வதுடன் அவர்களது வேதனையில் பங்கு கொள்கிறோம். இதுபோன்ற சம்பவங்கள் உடன் நிறுத்தப்பட்டு சகல மக்களின் சுதந்திர வாழ்வு உறுதிப்படுத்தப்படவேண்டுமென சம்பந்தப்பட்ட சகல தரப்பினரையும் கேட்டுக் கொள்கிறோம்.

எமது கருத்து, எமது நிலைப்பாடு, எமது வேண்டுகோள், எமது கண்டனம், எமது வேதனை, எமது கோபம் அனைத்தும் நியாயமானது என நாம் கருதுகின்றோம். இதில் நாம் தோற்றுப் போய்விடுவோமா என்ற பயம் எம்மைச் சுற்றி நடக்கும் நிகழ்வுகள் மீண்டும், மீண்டும் ஏற்படுத்தினாலும்; நாம் தோற்கமாட்டோம் என்னும் மனத்திடம் எம்மை வழி நடாத்திச் செல்லும். நாம் வெல்வோம்.

சபாலிங்கம் நண்பர்கள் வட்டம்
மே 1ம் திகதி 1999

ஈழத்தமிழர் போராட்டத்தின் முழுமையான வரலாறு என்றோ எழுதப்படத்தான் போகிறது. அங்கு தமிழ்ப்போராளிகளின் தியாகங்கள்பற்றி மட்டுமல்ல இயக்கங்களுக்குள்ளே இடம்பெற்ற கொடூரங்கள், இயக்கங்களுக்கிடையே இடம்பெற்ற அழிவுப் போராட்டங்கள் பற்றியும் அத்தியாயங்கள் எழுதப்படும். இந்த வரலாற்றில் சபாலிங்கம் போன்ற தனிமனிதருக்கும் ஒரு இடம் இருக்கத்தான் போகிறது.

காலம் தூழ்த்திய ஒரு அஞ்சலி

1994ம் ஆண்டின் முற்பகுதியில் ஒருநாள். இரவு பத்துமணிக்குப் பின்னர் என நம்புகிறேன். எனது தொலைபேசி மணி ஒலித்தது. பாரிஸிலிருந்து ஒரு நண்பர் பேசினார். தான் சபாலிங்கம் அவர்களின் இல்லத்திலிருந்து பேசுவதாகவும், சபாலிங்கம் என்னுடன் பேச விரும்புவதாகவும் கூறினார். அன்றுதான் முதல்தடவை சபாலிங்கத்துடன் பேசும் சந்தர்ப்பம் கிடைத்தது. அவரைப்பற்றி நிறைய அறிந்திருந்தேன் என்பதால் அறிமுகம் வேண்டியிருக்கவில்லை. என்னுடன் பேசுகையில் இலக்கியம் அரசியல் சமூகம்பற்றிய ஆக்கங்களை விமர்சனக்கட்டுரைகளை வெளியிடும் திட்டமொன்றுபற்றி ஆர்வத்துடன் பேசினார். வெளிநாடுகளில் வாழும் இலங்கைத் தமிழ் எழுத்தாளர்களின் பங்குபற்றியும் சமூகப்பொறுப்புகள் பற்றியும் கூறினார். என்னை எழுதும்படி கூறினார். அது ஒரு இனிமையான உரையாடலாயிற்று. அந்த மனிதனைக் காணும் சந்தர்ப்பமொன்றினை விரைவில் ஏற்படுத்தவேண்டுமென விரும்பினேன். ஆனால் அந்த விருப்பம் நிறைவேறவில்லை. அதற்கு முன்னர் அவர் சுட்டுக்கொல்லப்பட்டார். அந்தச் செய்தி என்னை மட்டுமல்ல, எனக்குத் தெரிந்த பலரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

நமது சமூகத்தில் நிராயுதபாணிகள் கொல்லப்படுவது புதிய துப்பாக்கிக்கலாச்சாரத்தின் ஒரு நடைமுறை அம்சம் போலாகிவிட்டது. ஆயினும், அத்தகைய ஒவ்வொரு கொலையும் கொலைசெய்யப்பட்டவரைச் சுற்றியுள்ள வட்டத்தினருக்கு அதிர்ச்சி தருவதாகவே இருக்கிறது. அதுவும் ஒரு ரஜனி திரணகமவோ, சபாலிங்கமோ கொலை செய்யப்படும்போது மேலும் பலருக்கு அதிர்ச்சியூட்டுவதாகவே இருக்கிறது. தமிழ்ச்சமூகத்தின் அறிவுரீதியான மேம்பாட்டிற்கும் கலாச்சாரச் செழுமையாக்கலுக்கும் உதவக்கூடிய ஒரு நீண்டகாலப்பணியின் ஆரம்பக் கட்டத்தில் இலட்சிய வாத உணர்வுடன் செயற்பட்டுக்கொண்டிருந்தார் சபாலிங்கம். சிதறடிக்கப்படும் விடுதலை விழுமியங்களினதும் மனிதத்துவத்தினதும் மீட்சிக்காக எழுந்து நின்று குரல்கொடுக்க முற்பட்டார் அவர். இவற்றிற்கான தண்டனை மரணம் போலும்.

ஈழத்தமிழர் போராட்டத்தின் முழுமையான வரலாறு என்றோ எழுதப்படத்தான் போகிறது. அங்கு தமிழ்ப்போராளிகளின் தியாகங்கள்பற்றி மட்டுமல்ல இயக்கங்களுக்குள்ளே இடம்பெற்ற கொடூரங்கள், இயக்கங்களுக்கிடையே இடம்பெற்ற அழிவுப்போராட்டங்கள்பற்றியும் அத்தியாயங்கள் எழுதப்படும். இந்த வரலாற்றில் சபாலிங்கம் போன்ற தனிமனிதருக்கும் ஒரு இடம் இருக்கத்தான் போகிறது. விடுதலையின்பேரால் நசுக்கப்பட்ட விடுதலை விழுமியங்களுக்காகவும், மண்ணின் பெயரால் மறுக்கப்பட்ட மனிதநேயத்திற்காகவும், போராட்டத்தின் பெயரால் மறுக்கப்பட்ட சிந்தனைச் சுதந்திரத்திற்காகவும் ஒலித்த குரலாக சபாலிங்கம் நினைவில் நிற்பார். அவரது விமர்சன நிலைப்பாடு தமிழ்மக்களின் உரிமைப்போராட்டத்தின் அடிப்படை இலட்சியத்தின் வழிவந்தது என்பதே வரலாற்றின் தீர்வாக இருக்கும் என நம்பலாம். ◆

சமுத்திரன்

கொலைக்களப்பாடலம்



பனிவிழும் தேசத்துக் கனவுகளில்
உருகி அழிந்தது மனம்.
மீளத்தரும் நினைவுகளில்
புதையுண்டு போனது
காலம்.
மீறமுடியாத கோடுகளுக்குள்
மௌனித்துப்போயின
எல்லாமும்.
வேட்டைமுடித்து
நிணம் புசிக்க
காடுகள் அவிந்தன.
காற்று
சாம்பலை அள்ளி வீசிற்று
தேசாந்திரமெங்கும்.
சிலுவை யுத்தமும்
யூதப் படுகொலைகளும்
மறைந்துபோக
நாங்கள் தோன்றினோம்.
அறுந்துபோன
வேர்களிலெல்லாம்
ஆயுதங்கள் தொங்கிக்கொண்டன.
எல்லைகளறுத்து
சர்வதேசிய கீதமாயின
கொலைக்களப் பாடல்கள்.
மகிழ்ந்துகொண்டனர்
நரகாசுரர்கள்
சுருதியும் தாளமும்
சுத்தமாய்ச் சேர
உச்சத்தொனியில்
உரத்துப்பாடினர்.
பூமி சுருங்கிக்கொண்டது
நான்கு திசைகளும்
ஒரே மையப்புள்ளியில்
சந்தித்துக்கொள்ள
சவக்குழியில் வீழ்த்துவது
எளிதாயிற்று.
தேடுவோம்
நாளை இன்னொரு தேசம்
குண்டுகள் துளைக்க
குருதியறைந்த சுவர்களில்
உலர்ந்துபோயிருக்கும் மனிதத்தின்
எச்சங்களோடு
நட்சத்திரங்கள் அப்பிய
வானத்தின் கீழ்
புதிதாக....

◆◆◆

OLD BUT GOLD

தொகுப்பு: தரங்கினி

துரோகி எனத் தீர்த்து
முன்னொருநாட் சுட்டவெடி
சுட்டவனைச் சுட்டது.
சுடக் கண்டவனைச் சுட்டது.
சுடுமாறு ஆணை
இட்டவனைச் சுட்டது.
குற்றஞ் சாட்டியவனை
வழக்குரைத்தவனைச்
சாட்சி சொன்னவனைத்
தீர்ப்பு வழங்கியவனைச் சுட்டது.
தீர்ப்பை ஏற்றவனைச் சுட்டது.
சும்மா இருந்தவனையுஞ்
சுட்டது.

– சி. சிவசேகரம்

மனிதத்தை
துப்பாக்கி முனையில்
நடத்திச் சென்று
புதைகுழி விளிம்பில்
வைத்துச் சுட்டுப்
புறங்காலால்
மண்ணைத் தள்ளி
மூடிவிட்டு வந்து
தெருவோரச் சுவரில்
குருதியுறைந்து
நியாயம் சொல்லுகிறார்கள்
நியாயம்!

– சேரன்

அந்தப் பரந்த வெளியில்
அழகான குழந்தைகளும்
கன்னிகழியா இளைஞர்களுமாக
ஆயிரக்கணக்கில் செத்துக்கிடந்தனர்.
இந்த அழகான உடல்களைவிட்டு
அசிங்கமான ஆயுதங்களை
மிஞ்சியிருந்த வீரர்கள்
பாதுகாத்துப்போயினர்.

– சுகன்

நண்பனே!
அன்று இன்றைய தினத்தில்
இரத்தவெறி பிடித்த தோட்டாக்கள்
உன்னைத் துளைத்த செய்தி எங்கள்
நெஞ்சங்களை சல்லடையாக்கியது.
அன்றிலிருந்து நாங்கள் வெறுப்பது
மரணவெறி பிடித்த துப்பாக்கிகளை
மாத்திரமல்ல
உயிருக்குப்பயந்து மௌனமாகிப்போன
பேனாக்களையும்தான்.

– தி. உமாகாந்தன்

கொழும்புத் தெருக்களில்
வெட்டியும் எரித்தும்
கொடுஞ்செயல் புரிந்த
உம்மவர் போலவே
அனுராதபுரத்து வீதிகளெங்கும்
எம்மவர் தீர்த்த வேட்டுக்கள் கேட்டு
பெருந்துயர் கொண்டோம்!

– சபேசன்

மதத்தால் வேறுபடினும்
இனத்தால், மொழியால்
ஒன்றென்றுரைத்த
உமது மனிதரெல்லாம்
எங்கே ஒளிந்தனர்...?
என்ற
'நாசிம் காதரின்' கேள்விக்கு
'நல்லசிவம்' எந்த முகத்தோடு
பதிலை உரைப்பது?

–அருந்ததி

எங்களை நெருங்கிவருகின்ற
மரணத்துக்காக
நம்பிக்கையோடு
நாங்கள் காத்திருக்கிறோம்!
உண்மையை
மறுப்பவர்களிடம் கூறுங்கள்
எங்கள் மரணம்
அது -
ஒரு முடிவல்ல.
-செழியன்

பெட்டியில் அடங்கும்
வாய்ப்பே அற்று
மயான மூலையில்
முகமறியா இருளில்
முகமிழந்து புதைந்த உடல்களை,
பாதி எரிந்து
மீதி அழிந்து
சிதைந்த உடல்களைச்
சுதந்திரத்திற்காய்க்
களத்திலிறங்கிச்
சுதந்திரம் இழந்தவர்களை
நாம் நினையாதிருந்தால்
மிகவும் கொடியது.
இது எதிரியின் வேலையல்ல
எம்மவர் கொலைக்கரம்
பதித்த சுவடுகள்.
- சேரன்

வாருங்கள் தோழிகளே
நாங்களும் வழிசெய்வோம்
மண்ணால் கோலமிட்டு
அழித்தது போதும்
எங்கள் செந்நீரில் கோலமிட்டு
வாழ்க்கைக் கோலத்தை
மாற்றி வரைவோம்
வாருங்கள் தோழிகளே.
-சிவரமணி

குந்தியிருக்கவோர் நிலம்
குறித்துக்காட்டவோர் பூமி
அள்ளியணைக்கும் உறவு
இழந்தவர் இங்கே
காற்சட்டை மேற்சட்டை போட்டு
நிர்வாணமாகத் திரிகின்றோம்
அந்நியரின் பூமியிலே!
-செல்வம்

காத்தான்குடிப்
பள்ளிவாசலில்
எங்கள் மானுடக்
கனவுகள் அழிந்தன
எமது வேர்களில்
எஞ்சியிருந்த
'மனித'மும்
அன்றுடன் தொலைந்துபோனது.
-அருந்ததி

மரணத்தைக் கண்டு
நாம் அஞ்சவில்லை
ஒரு அநாதைப்பிணமாய்
ஒரு அடிமையாய்
புதிய எஜமானர்களுக்காக
தெருக்களில் மரணிப்பதை
நாம் வெறுக்கின்றோம்
-செழியன்

காற்றை எதிர்த்து ஒரு காலடி

'இலக்கியம் என்றுமே அரசியலை அப்புறப்படுத்தி அரியாசனம் ஏறமுடியாது.'

உன்னையும் உன்னைப் போன்றவர்களையும் சகித்துக் கொள்ளமுடியாத அரசு, எவ்வளவு நொய்மையான கலாச்சார பலம் உள்ளது என்பது இப்போது வெட்டவெளிச்சமாகவே தெரிகிறது.

அச்சமும் அறியாமையும் ஏராளமான உண்மைத் தகவல்கள் வெளியே தெரியவர முடியாததுமான ஒரு அரசியல் சூழல்தான் எங்களுடைய தமிழ்ச்சூழல். இந்தச் சூழலில், தம்முடைய மாற்றுக் கருத்துக்களையும் அவை தாங்கி வருகிற மறுத்தோடி அரசியலையும் வெளிப்படையாக முன்வைப்பவர்களும், அத்தகைய கருத்துக்களுக்குக் களமாக அமைகிற சிறுசஞ்சிகைகளும் எமது கௌரவத்துக்கு உரியன. ஒரு சபாலிங்கத்தை, ஒரு ராஜினியை, ஒரு செல்வியை மறுத்தோடிகளாக உயர்த்தி நிற்பது இத்தகையதொரு வெளிப்படையான மாற்றுக்கருத்து அரசியல்தான்.

1. ஒரு கவிதை

ஊரில் சிறையிருக்கும் நண்பருக்கு

திசைகளுக்கு அப்பால்
எல்லோரும் பிரிந்து போய்விட்ட பிற்பாடு
காடுகளைவிட்டு வெளியேறுவதற்கான
கடைசி ஒற்றையடிப்பாதையையும்
புல்லும் புதர்களும்
பின்பனியும் மூடித்
தடங்களை அழித்துவிட்ட
பிற்பாடு
வாழ்க்கையும் கூடச்
சிந்தனை மூடுண்ட வெற்றிடத்துக்குள்
உலர ஆரம்பித்த
பிற்பாடு
இன்று
எங்களுடைய நிலத்தில்
மனித விடுதலையின் மூலவேர்
கோடை நெடுந் தூக்கத்துள்
ஆழ்ந்து போயுள்ளது.

'அன்றே பறந்து போயிருக்கலாமே'
என்று வெம்பிச் சினந்து
கொடிய தனிமைச் சிறையில் உறைகிறாய்.

கண்ணீர் எல்லோருக்கும்
நேசமான பொருளென்றாலும்
இப்போது அழாதே
இணையின்றிப்
பாலைவெளியில் தனித்துப்போன
ஒற்றைப் பனைமரங்கள் அல்ல நாம்.

வெறுங்காற்றில் பற்றியெரிய
இருப்பிழந்த மூங்கில்காடுகளும் அல்ல
நம் வாழ்க்கை.

காலத்தைக் கேள்
சொல்லும் அது
காத்திருப்புக்கு அப்பாலே
பூச்சூடும் புல்வெளிகள்.

2. ஒரு கடிதம்:

அன்புள்ள செல்வி,
உண்மைதான். இலக்கியத்தின் விளைவுகள் அப்படியொன்றும் எடுத்துக் காட்டும்படியாக இல்லை. இன்று இலக்கியம் படைப்பவர்கள் ஏதோ ஒரு தற்பாதுகாப்புக் காரணத்துக்காகவே செயற்படுகிறார்கள். அவர்கள் தைரியத்தை இழப்பதற்கான காரணங்கள் பல. உள்ளன தங்கள் நம்பிக்கைகள் நிறைவேறாததைப்பற்றிய வரவு, செலவுக் கணக்குப் போடும்போது அவர்கள் சொல்லுவார்கள்:
"இலக்கியம் என்றுமே அரசியலை

அப்புறப்படுத்தி அரியாசனம் ஏறமுடியாது. இப்படிப்பட்ட நம்பிக்கை இழந்த, மனம் தளர்ந்த நிலையிலும் ஒரு கேள்வி மட்டும் எழுகிறது. ஏன் ஒவ்வொரு காலகட்டத்தி லும் இலக்கியம் அதிகாரவர்க்கத்தின் கவனத்தை ஈர்க்கிறது? இலக்கியத்தின் குறிக்கோள் குறித்துச் சந்தேகமும் ஏன் அவர்களுக்கு எழுகிறது? இலக்கியத்தை அவ்வப்போது ஒடுக்குவதற்காக எடுக்கப்பட்ட முயற்சிகள்கூட இலக்கிய வரலாற் றின் ஒரு அம்சம்தான். இலக்கியம் என்ன சாதிக்க முடியும் என்ற எண்ணத்துக்குப் பின்னணியில் அது மிகவும் ஆபத்தானது என்று எழுதப்பட்டிருக்குமோ? ஒரு பக்கம் இலக்கியம் ஆபத்தானது என்ற நிலையும் மறுபக்கம் இலக்கியகர்த்தாக்களை அதிகாரவர்க்கத்தின் ஒலிபெருக்கியாக மாற்றுவதற்கான முயற்சிகளும் ஏன் மேற் கொள்ளப்பட்டன? இப்படிப்பட்ட 'ஒலி பெருக்கி இலக்கியகர்த்தாக்கள்' என்ன கூறி னார்கள்? எங்கு சமாதானம் நிலவுகிறது? கற்பனைத் திறனைக் குறைத்துக்கொண்டு மேலெழுந்தவாரியாகக் கானல்நீரை நிர்வகிப்பவர்களாக இலக்கியகர்த்தாக்கள் இருக்கவேண்டும் என்றுதான் அதிகாரவர்க்கம் மிக விரும்புகிறது.
கண்ணாடித்தொட்டியின் நான்கு சுவர்களுக்குள் அலையும் தங்கமீன்களைப்போலவே இந்த இலக்கியவாதிகளின் கதையும் முடிந்தது. அப்படிப்பட்ட தங்கமீன்களைத்தான் அதிகாரவர்க்கம் சகித்துக்கொண்டது.

இந்த நீண்ட மேற்கோளை, ஜேர்மன் புத்தகவெளியீட்டாளர் சங்கத்தின் சமாதான விரு தைப் பெற்றபோது, புகழ்பெற்ற ஜேர்மன் நாடகாசிரியர் ஸிக்.பிரீட் லென்ஸ் ஆற்றிய உரையில் இருந்து எடுத்து உனக்கு அனுப்புகிறேன்.

எனக்கு இலக்கியத்தில் நம்பிக்கை உண்டு. உனக்கும் அந்த நம்பிக்கை அளவற்று உண்டு என்பதும் நான் ஏற்கனவே தெரிந்துகொண்ட விடயம். எனினும், சர்வதேச எழுத்தாளர், கவிஞர், நூலாசிரியர் சங்கம் வருடாவருடம் தருகிற அறிக்கைகளைப் பார்க்கிறபோது இலக்கியத்துக்கு அப்பாலும் ஏதாவது செய்யவேண்டும் என்று தோன்றுகிறது.

உதாரணத்துக்குப் பாருங்கள்: உலகெங்கும் 305 எழுத்தாளர்களும், பத்திரிகையாளர் களும், கவிஞர்களும் கொடுங்கோலர்களின் சிறைகளில் வாடுகின்றார்கள் என்று ஒரு அறி க்கை தெரிவிக்கிறது. கடந்த வருடம் ஏறத்தாழ நூறு எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள் தங்களுடைய எழுத்துக்களுக்காகக் கொல்லப்பட்டனர் என்று இன்னொரு அறிக்கை தெரிவிக் கிறது.

நீ நான்கு சுவர்கொண்ட கண்ணாடித்தொட்டியுள் இருக்கின்ற மீன் அல்ல. சிறையில் வாடும் சிட்டுக்குருவி. உன்னையும் உன்னைப் போன்றவர்களையும் சகித்துக்கொள்ளமுடியாத அரசு, எவ்வளவு நொய்மையான கலாச்சார பலம் உள்ளது என்பது இப்போது வெட்டவெளிச்ச மாகவே தெரிகிறது. அதிகாரம், தான் ஏற்படுத்த விரும்புகிற மயான அமைதிக்கு சமாதானம் என்று பெயர் சூட்டி அமைதிகாண விரும்புகிறது. இதுவே உலகெங்கும் வரலாறாக இருக் கிறது. அதுபோலவே அந்த அமைதிகாணலை உடைத்துக்கொண்டு குரலை உயர எழுப்பு பவர்களே உன்னைப்போன்ற எழுத்தாளர், கலைஞர், பத்திரிகையாளர்கள். இன்றுடன் நண் பனும் பத்திரிகையாளனுமான குகமூர்த்தி காணாமல்போய் இரண்டு வருடங்கள் நீ கொண்டு செல்லப்பட்டு ஒரு வருடமும் எட்டு நாட்களும்.

இந்த நிலையில் 'பரிபூரணமாகத் தன்நிலையில் இருத்தல்' எனக்குச் சாத்தியமில்லை. எங்களுடைய வார்த்தைகள் உயிர்கொல்லும் வார்த்தைகள் என்று அவர்கள் கருதினால் கருதட்டும். உயிர்கொல்வது அல்ல எங்களுடைய வேலை. வார்த்தைக்கு உயிர்கொடுப்பதே எங்களுடைய வேலை.

விரைவில் சந்திக்கமுடியும் என்று நம்புகிறேன்.

8. மறுத்தோடி வாழ்வு

என்னுடைய அந்த நம்பிக்கை வீணாகப் போயிற்று. செல்வி என்று என் நண்பர்களால் அழைக்கப்பட்டு வந்த செல்வநிதி தியாகராசா விடுதலைப்புலிகளால் கொண்டு செல்லப்பட்டு ஒரு வருடம் முடிந்த பிற்பாடு எழுதப்பட்ட மேலுள்ள கடிதம்/கட்டுரை, வீரகேசரி தினசரியில், சனிக்கிழமைதோறும் நான் எழுதிவந்த பத்தியில் டிசம்பர் மாதம் பன்னிரண்டாம் தேதி, 1992இல் வெளியாகி இருந்தது. அதற்கு நீண்டநாளைக்குப் பிற்பாடு, அவர் கொல்லப்பட்டு விட்டார் என்ற தகவலைப் புலிகள் செல்வியின் தங்கை வீட்டாருக்குத் தெரிவித்துவிட்ட தகவல் எங்களுக்குத் தெரியவந்தது.

அதே காலகட்டப்பகுதியில்தான் எங்களுடன் இணைந்து நாடகமுயற்சிகளில் ஈடுபட்டு வந்த நெருங்கிய நண்பர்கள் தில்லைநாதன், தருமலிங்கம் ஆகியோரும் கடத்திச் செல் லப்பட்டுப் புலிகளால் கொல்லப்பட்டு விட்டார்கள். அவர்களோடு கூடவே, வெளியில் அதிகம் தெரியவராத, ஆனால் பல இலக்கிய நண்பர்களுக்கு அறிமுகமாகவும் புரவலராகவும்

கவிதை, சிறுகதை ஆகியவற்றூடாக வெளிப்பட்டிருக்கும் மறுத்தோடிப் பிரதிபலிப்புகள் கணிசமான அளவு உள்ளன. கட்டுரைகள், விவாதங்கள், புனைகதை இலக்கியம் சாராத எழுத்துக்கள், அனுபவப்பதிவுகள் என்பன ஏமாற்றம் தரும் அளவுக்குச் சொற்பமாகவே உள்ளன.

இருந்த நண்பன் யோகசுந்தரமும் இதே விதிக்கு ஆளானான். போராட்டத்தின் இயக்கவிதிகளின் விளைவாகக் கொல்லப்பட்ட ஆயிரக்கணக்கானோரில் இவர்களும் வரலாற்றின் சில ஏடுக ளாகப் புதையுண்டு போகக்கூடிய அவலமும் சாத்தியமும்தான் நிறைய உள்ளன. எனினும் இவர்களும், இவர்களைப்போன்ற பலரும், மாற்றுக் கருத்துக்கள், எதிர்ப்புக்குரல்கள் என் பவற்றின் விளக்கேந்திகளாக இருந்தனர்.

ஆட்சிபெற்றிருந்த கருத்தியலோடும் ஆதிக்கம் செலுத்துபவர்களோடும் ஒத்தோடிகளாக நிற்க மறுத்த இவர்களது மறுத்தோடிவாழ்வு, அதிருப்தியாளர்கள், மறுத்தோடிகள்(dissidents) பற்றிய சிந்தனைகளை சமூக, அரசியல் மற்றும் அறவியல் தளங்களில் எழுப்பத் துணைசெய்கிறது. இந்த அம்சங்களைப்பற்றிப் பேசுவதே இந்தக்கட்டுரையில் என்னுடைய நோக்கமாகும்.

மறுத்தோடி என்று ஒருவரை அழைக்கிறபோது, அதற்கான சில நியாயப்பாடுகள் உள்ளன என்பதும் குறித்த ஒரு காலத்துக்கும், அக்காலத்துக்குரிய சமுதாயத்தின் அரசியல் நிலைமை களைப் பொறுத்தும்தான், யார் மறுத்தோடி என்பதுபற்றிப் பேசப்படமுடியும் என்றும் கருதுகி றேன். ஒரு மிகவும் பொதுவான தளத்தில், இப்போது நிலவுகிற அரசியல் கருத்தியல், பொருளாதார ஒழுங்கு, சமூக விழுமியங்கள் என்பவற்றுடன் கருத்துரீதியாக முரண்பட்டு, ஒத்தோட மறுப்பவரை நாம் மறுத்தோடிகள் என்று அழைக்கமுடியும். இந்தப் பொதுவான தளத்தில் நாம் ஆயிரக்கணக்கானோரை மறுத்தோடிகளாக இனம்காணமுடியும். எனினும் இந்தப் பொதுவான அவதானிப்புக்கு அப்பால், நாம் சற்று ஆழமாகவும் விரிவாகவும் செல்லவேண்டி இருக்கிறது.

முரண்பாடுகளையும் அதிருப்தியையும் தன்னுடைய மனதுக்குள்ளே வைத்துப் புழுங்கிக் கொண்டும் குமைந்துகொண்டும் ஆனால் வெளியில் மௌனமாக இருக்கக்கூடியவர்களுக்கும், தமது மறுத்தோடித்தனத்தை ஏதாவது ஒரு வழியில் வெளித் தெரிவித்து, தமது மறுத்தோடி அரசியலை முன்வைப்பவர்களுக்கும் உள்ள வேறுபாட்டை நாம் எப்படி அணுகுவது?

ஒவ்வொரு மனிதனும் தனிப்பட்ட தெரிவுகளையும் அத்தகைய தெரிவுகளை மேற்கொள் வதற்காக அவர்களுக்கு இருக்கக்கூடிய சுதந்திரத்தையும் நாம் ஏற்றுக்கொள்கிற அதேவேளை, அத்தகைய தெரிவுகளின் அரசியலைப்பற்றி அல்லது அறவியலைப்பற்றி முன்வைப்பதற்குரிய சுதந்திரத்தையும் நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும். அந்தவகையில், இன்றைய எமது அரசியல் பண்பாட்டுச் சூழலில் முரணுற்று நிற்கக்கூடிய பலர் மௌனமாக இருக்கிறார்கள். அவர்கள் முரணுற்று இருப்பதே எங்களுக்கு அந்தரங்கமான நேர்ப்பேச்சின்போதுதான் தெரியவருகிறதே தவிர இவர்கள் தமது மறுத்தோடி அபிப்பிராயங்களை எழுத்திலோ பேச்சிலோ அல்லது வேறுவழிகளிலோ தெரிவிப்பதில்லை. இப்படித் தெரிவிப்பதற்கான சூழலும் பெருமளவுக்கு இல்லை. அச்சமும் அறியாமையும் ஏராளமான உண்மைத் தகவல்கள் வெளியே தெரியவர முடியாததுமான ஒரு அரசியல் சூழல்தான் எங்களுடைய தமிழ்ச்சூழல். இந்தச் சூழலில், தம்முடைய மாற்றுக்கருத்துக்களையும் அவை தாங்கி வருகிற மறுத்தோடி அரசியலையும் வெளிப்படையாக முன்வைப்பவர்களும், அத்தகைய கருத்துக்களுக்குக் களமாக அமைகிற சிறுசஞ்சிகைகளும் எமது கௌரவத்துக்கு உரியன. ஒரு சபாலிங்கத்தை, ஒரு ராஜினியை, ஒரு செல்வியை மறுத்தோடிகளாக உயர்த்தி நிற்பது இத்தகையதொரு வெளிப்படையான மாற்றுக்கருத்து அரசியல்தான். இந்த அரசியலின் ஆபத்து என்னவென்றால், இந்த அரசியலை எதிர்ப்பவர்கள் ஆயுததாரிகளாகவும், தமது புனிதப்பாதையில் குறுக்கிடும் எவரையும் எவ்வித தயக்கமற்றுக் கொன்றொழிக்கக்கூடிய சித்தம் படைத்தவர்களாக இருப்பதும்தான்.

இன்னும் அச்சம் தரக்கூடியதாகவும், மேலான சமூகவிழுமியங்கள் கொண்ட ஒரு சமூகமாக நாம் உருமாறுவதற்கான சாத்தியங்களையே கேள்விக்குறியாக்குவதாகும். இருக்கிற மற்றொரு அம்சம் என்னவெனில், மாற்றுக்கருத்துள்ளோரையும் மறுத்தோடிகளையும் அவர்கள் எத்தகைய நிரபராதிகளாக இருந்தாலும்கூட, கொன்றொழிப்பதை யுத்தத்தின் பேரால் நியாயப்படுத்துவதும் ஏற்றுக்கொள்வதும் அல்லது பாராமுகமாக இருந்து விடுவதும் ஆகும். எமது மையநீரோட்டப் பத்திரிகைகளுக்கும் சமூகத்தில் பலருக்கும் இது சாத்தியமாகி உள்ளது என்பது வரலாற்றில் புதிது அல்ல.

கொஞ்சக்காலத்துக்கு முன்பு சரிநிகர் பத்திரிகை விமர்சன அரங்கொன்றில் உரையாற்றிய பழம்பெரும் எழுத்தாளர் வள்ளிநாயகி இராமலிங்கம் (குறமகள்) அவர்கள், செல்வி 'காணாமல்' போனது தொடர்பாகவும் அதுபற்றி விடுதலைப்புலிகளைக் கண்டனம் செய்து பத்திரிகையில் வெளியான கட்டுரைகளையும்பற்றிக் குறிப்பிடுகையில் "விடுதலைப்பாதையில் முள் இருந்தால் அதனை அகற்றியாகவேண்டும். முள்ளைப்போட்டவர்களைக் கண்டிக்காமல் முள்ளை அகற் றியவர்களைக் கண்டிப்பது என்ன நியாயம்? " என்று கேள்வி எழுப்பியிருந்தார்.

அண்மையில் கனடாவில் நிகழ்ந்த ஒரு நூல் வெளியீட்டுவிழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய எஸ். எஸ். குகநாதன் அவர்கள் (ஆறு நாடுகளில் ஒரே நேரத்தில் அச்சாகும்

நாமோ எமது எல்லா மூலவளங்களையும்/ மூளைவளங்களையும் தமிழ் இராணுவத்தில் முதலிட்டுவிட்டுப் பொற்காலக்கனவுகளில் ஆழ்ந்துபோயிருக் கிறோம். நாம் விழித்தெழுகிறபோது என்ன எஞ்சியிருக்கும் என்பதை நினைக்கச் சித்தம் கலங்குகிறது.

தமிழ்ப்பத்திரிகையான ஈழநாடுவின் பிரதம ஆசிரியர்), "பத்திரிகைகளைப்பொறுத்து இன்றைய சூழலில் நடுநிலைமை என்ற கேள்விக்கே இடம் இல்லை. மேதகு பிரபாகரன் தலைமையிலான விடுதலைப்புலிகளை ஆதரிப்பது மட்டும்தான் எமது நிலைப்பாடு." என்று முழக்கமிட்டிருந்தார். இத்தகைய நிலைப்பாட்டுடன் வெளியாகிற பத்திரிகைகளிடம் இருந்து என்ன எதிர்பார்க்க முடியும் என்று விரிவுரை எழுதவேண்டிய அவசியம் இல்லை. நண்பன் சபாலிங்கம் கொல்லப் பட்டபோது, ஈழநாட்டின் கனடாப்பதிப்பு வெளியிட்டிருந்த மூன்றரை அங்குல நீளமான ஒற் றைக் கலம் செய்தியின் சாராம்சம் : "தமிழீழ விடுதலை இயக்கத்தைச் சேர்ந்தவரும் புலி களுக்கு எதிராக நூல்களை வெளியிட்டவருமான சபாலிங்கம், இனந்தெரியாதவர்களால் கொல்லப்பட்டார்." என்பதாகும்.

சபாலிங்கம் வெளியிட்டுள்ள நூல்களின் பட்டியலைப் பார்க்கிற எவருக்கும் மேலேயுள்ள செய்தியின் பொய்மை தெளிவாகத் தெரிந்துவிடும்.

சிறுசஞ்சிகைகளைத் தவிர்த்தால், ஐரோப்பாவிலிருந்தும் கனடாவிலிருந்தும் வெளிவருகிற தமிழ்வாரப் பத்திரிகைகள் அனைத்தும் விடுதலைப்புலிகளை விமர்சிக்கிற அல்லது போராட் டம்/யுத்தம்பற்றிய விமர்சனபூர்வமான அலசல்களை வெளியிடத் தயாரானவையாக இல்லை. ஒரு பயங்கரமான சுயதணிக்கையையே இந்தப் பத்திரிகைகள் அனைத்தும் கடைப்பிடிக் கின்றன. கொழும்பில் இருந்து வெளியாகும் மையநீரோட்ட ஆங்கில, சிங்கள, தமிழ்ப்பத்திரி கைகள் கடைப்பிடிக்கிற சுயதணிக்கையைவிட இது மோசமானது ஆகும். வானொலிச்சேவை களைப் பொறுத்தும் இதுதான் நிலைமை. ஒரு பக்கமான, 'உத்தியோகபூர்வமான' விடுதலைப் புலிகளது செய்திகள் அல்லது அவர்களுக்கு ஆதரவாகத் தரப்படுகிற/திரிக்கப்படுகிற செய்திகள் மட்டுமே வெளியாகின்றன. இந்தவகையில், புலிகளது பத்திரிகைகளும் மற்றும் அவர்களது அனுசரணையுடன் வெளியாகும் உலகத்தமிழர் (கனடா), ஈழமுரசு (பாரிஸ்) ஆகியவை பலமடங்கு சிறப்பானவையும் வாசிக்கும் தகவு வாய்க்கப்பெற்றவையும் என்பது சுவாரசியமான ஒரு விடயமாகும். இந்தப் பத்திரிகைகளை நாம் வாசிக்கிற அவர்கள் தரு கிற தகவல் புலிகளுடையது என்று எங்களுக்குத் தெரியும். யுத்தம்பற்றிய விபரங்கள், புலிகள் தரப்புச் செய்திகள், நியாயப்பாடுகளை நாம் இவற்றூடாகத் தெளிவாகப் பெறமுடியும். அவற்றை நேர்த்தியாக இவை தருகின்றன. இவற்றைவிட அங்கு நாம் வேறொன்றும் எதிர்பார்ப்பதில்லை. ஆனால் ஏனைய பத்திரிகைகள்தான் நமது இரக்கத்திற்கு உரியவை. பல சந்தர்ப்பங்களில் உத்தியோக பூர்வமாகப் புலிகள் தருகிற விஷயங்களையே பூதாகரமாகப் பெருப்பித்து எழுதி விடுகிறார்கள். கிளிநொச்சி, முல்லைத்தீவுச் சமர் நேரம் இந்தப் பத்தி ரிகைகளின் செய்திச் சேகரிப்பையும் செய்தி அறிக்கைகளையும் ஒருசேரப் பார்த்தால் இது துலக்கமாகும்.

இலங்கை அரசு தருகிற உத்தியோகபூர்வமான செய்தியின் விம்பமாகவே இவர்களது அறிக்கை இருக்கும். வித்தியாசம் என்னவெனில் இலங்கை அரசு ஆயிரம் புலிகளும் முந்நூறு படையினரும் பலி என்று அறிக்கை தந்தால் இவர்கள் ஆயிரம் படையினரும் இருநூறு புலிகளும் பலி என்று தருவார்கள். இத்தகையதொரு பத்திரிகைச்சூழலில் மறுத்தோடி எழுத்து என்பது பிரசுரம் பெறுவதற்கு வாய்ப்புகள் அதிகமாக இல்லை. பழைய சோவியத் யூனியனில் இருந்ததுபோல Zamizdat வகையான எழுத்துக்களே சாத்தியம் என்று தோன்று கிறது. இத்தகைய எழுத்துக்களிலும் கவிதை, சிறுகதை ஆகியவற்றூடாக வெளிப்பட்டிருக்கும் மறுத்தோடிப் பிரதிபலிப்புகள் கணிசமான அளவு உள்ளன. கட்டுரைகள், விவாதங்கள், புனைகதை இலக்கியம் சாராத எழுத்துக்கள், அனுபவப்பதிவுகள் என்பன ஏமாற்றம் தரும் அளவுக்குச் சொற்பமாகவே உள்ளன.

1979 ஜூலை மாதம் வடக்கில் அவசரநிலை பிரகடனப்படுத்தப்பட்டபோதிலிருந்து, வெளிப் படையான இனப்படுகொலையை இலங்கை அரசுகள் புரிய ஆரம்பித்தன என்று கொண்டால், ஒரு இருபது வருடகாலப் பயங்கரமான வாழ்வனுபவங்கள் எங்களுக்கு உள்ளன. இந்த அனுபவங்கள் இரண்டு வகைப்பட்டவை. ஒன்று, அரசும் அதனுடைய இராணுவ எந்திரங்களும் எம்மீது கட்டவிழ்த்துவிட்ட பயங்கரம். மற்றது, இந்தப் பயங்கரத்தின் உபவிளைவாக எமக்குள்ளேயிருந்து வெளிக்கிளம்பிய ஒரு பயங்கரம். இயக்கமோதல்கள், படுகொலைகள், மறுத்தோடிகளின் ஒழிப்பு என்று இந்தப் பயங்கரத்துக்குப் பல வடிவங்கள் உள்ளன. இந்த இரண்டு பயங்கரங்களின் விளைவாக நடந்திருக்கிற இரண்டு சமூகவியல் மாற்றங்கள் எமக்கு மிகவும் முக்கியமானவை.

ஒன்று, எமக்கும் - பொதுமக்கள், சிவில் சமூகம் என்ற அர்த்தத்தில் - போராளி இயக் கங்களுக்கும் இடையேயான உறவுகளையும் தொடர்புகளையும் வரையறை செய்வது வன்முறையும் அதனுடைய அரசியலும் என்பதாகத்தான் இருக்கிறது. இதேபோலவேதான் எமக்கும் இலங்கை அரசுக்குமான உறவு (அப்படி ஏதாவது எஞ்சியிருந்தால்!!) வன்முறை மூலமே தீர்மானிக்கப்படுகிறது. அந்தவகையில் எமது கருத்துக்கள், நிலைப்பாடுகள் எமது பங்கு ஆகியன எல்லாம் இக்கணம் நிகழ்ந்துகொண்டிருக்கும் வன்முறைமேலோங்கிய வாழ்க்கைக்கோலத்தில் பெறுமதியற்றவையாக உள்ளன.

இரண்டாவது, கடந்த இருபது வருடகாலத்தில் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டவர்களை நாங்கள் இழந்திருக்கிறோம். ராணுவத்திறனிலும் தாக்குதல் வீச்சிலும் இலங்கை அரசை விடுதலைப்புலிகள் மிஞ்சக்கூடும். ஆனால், எமது சமூகத்தை, அதனுடைய இருப்பு நிலைமைக ளிலிருந்து உடைத்தெறிந்துவிடுவது என்ற இலங்கை அரசின் அடிப்படையான நோக்கத்தில் அவர்கள் வெற்றிபெற்று வருகிறார்கள். மூன்றுலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் இன்று வடக் குக் கிழக்கைவிட்டு வெளியேறிவிட்டார்கள் அல்லது வெளியேற்றப்பட்டுவிட்டார்கள். ஒரு திட்டமிட்ட, மறைமுகமான இனத்துவச் சுத்திகரிப்பில் (ethnic cleansing) இலங்கை அரசு வெற்றிபெற்று வருகிறது. எமது கல்வி, பண்பாட்டு விழுமியங்கள், கலை வெளிப்பாடு என் பன சிதைந்து வருகின்றன. இவற்றைப் பேணுவதற்கும் இவற்றின் வளங்களையும் செழிப்பையும் விகசிக்கச் செய்வதற்குப் பதிலாக, ஒற்றைப்பரிமாணம் கொண்ட, பெருமள வுக்குச் சாரமற்ற, பாசிச இயல்புக்கூறுகளை வெளிப்படுத்தும் ஒருவகைக் கலை பண்பாட்டு இலக்கியப் போக்குகளே விடுதலைப்புலிகளால் உத்தியோகபூர்வமாக ஊக்குவிக்கப்படு கின்றன. இவை எமது விழுமியங்களையும் பன்முகப்பாட்டையும் மேலும் புண்படுத்துகின்றன.

யுத்தத்தாலும், கட்டற்ற வன்முறையாலும் எமது சமூகத்துக்கு ஏற்பட்டுள்ள உளவியல், சமூக பாதிப்புக்கள் மிக உச்சமானவை. உளநலப் பாதிப்புள்ளோர்வீதம் எமது சமூகத்தில் - வடக்குக் கிழக்கிலும் சரி, புலம்பெயர்ந்த சூழலிலும் சரி - மிகவும் அதிகரித்துவிட்டது. தமிழ்மொழி, புலம்பெயர்ந்த சூழலில் மெல்ல மெல்ல மறைந்துவருகிறது. இவைபோன்ற ஏராளமான சமூக-உளவியல் பண்பாட்டுப் பிரச்சினைகளை நாம் தீவிரமாக எதிர்கொள்ளவேண் டியிருக்கிறது. இத்தகைய பிரச்சினைகளே எமது சமூக ஒருமைப்பாட்டினைப் புற்றுநோய்போல நீண்டகாலத்துக்குச் சிதைக்கக்கூடியது. இதனை ஏற்படுத்தியதிலும் தொடர்வதிலும் திட்டமிட்ட முறையில் இலங்கை அரசு வெற்றிபெற்றுவருகிறது.

ஆனால் நாமோ எமது எல்லா மூலவளங்களையும்/மூளை வளங்களையும் தமிழ் இராணு வத்தில் முதலிட்டுவிட்டுப் பொற்காலக்கனவுகளில் ஆழ்ந்துபோயிருக்கிறோம். நாம் விழித்தெழு கிறபோது என்ன எஞ்சியிருக்கும் என்பதை நினைக்கச் சித்தம் கலங்குகிறது.

எங்களுக்கு இப்போது மிகவும் தேவையாக இருப்பது நான் எழுப்புகிற பிரச்சினைகளையும் மாற்றுக்கருத்துக்களையும் பற்றிய திறந்த மனதுடனான விவாதங்கள். இப்போது மேலோங்கி யுள்ள தமிழினவாதக்கருத்தியலும் அரசியலும் இத்தகைய விவாதங்களுக்கு இடம் தருகிற அளவு ஆரோக்கியமானவை அல்ல. எனினும் இத்தகைய விவாதங்களுக்காகப் போராடுவதும், மாற்றுக்கருத்துக்களுக்கும் எதிர்ப்புக்குரல்களுக்குமான இடத்தை உருவாக்க முயல்வதும் எங்களுடைய வரலாற்றுக்கடமை மட்டுமல்ல. எமது அறவியல் கடப்பாடும் ஆகும். ◆

'நம்மவர்'
ஓவியம்: கொ. ரொ. கொன்ஸ்ரன்ரைன்

நான் கானாத மனிதனை

எனக்கென்றொரு
கண்கண்ட கடவுளை தேடித் தந்த
என் தந்தைக்கும்,
தாயின் சமாதிக்கும்
நான் சொல்லிக் கொள்வது....

எனது மகளுக்கு
நிச்சயமாய்
நானோர்
கண்கண்ட கடவுளை
தேடித் தரப்போவதில்லை
அவள்
ஒரு மனிதனை
தானே தேடி கண்டடைவாள்.

கனவு காண மட்டும்
வளர்ந்த, வளர்க்கப்பட்ட
பெண் நான்.

பல நூறாய்
பல ஆயிரமாய்
பல இலட்சமாய்
பூத்து நின்ற நட்சத்திரப் பட்டாளமாய்
எனது கனவுகள்.

ஈரும் பேனுமாய் பிடுங்கி
வாயில் போடும் குரங்கைப்போல்
எனது
கண்கண்ட கடவுளந்த
நட்சத்திரங்களை பிடுங்கி
வாயில் போட்டுக்கொண்டான்.
எஞ்சியதை
கூட்டியள்ளி
கொட்டு குப்பையிலென
என்னிடமே கட்டளை பணித்தான்.

எனது மகள்
ஒரு
மனிதனைத் தேடிக்கொள்வாள்.

வாழ்க்கை
வடக் கயிறாய்
அவள் கழுத்தைச் சுற்றிக்கொள்ளாது.
வாழ்க்கை அவளையும்,
அவள்
வாழ்க்கையையும் கூட்டிச் செல்வாள்.
என்னைப்போல்
ஒரு
கண்கண்ட கடவுளிடம்
கனவுகளை தொலைக்கமாட்டாளவள்.
கூட்டியள்ளி
குப்பையில் கொட்டவும் மாட்டாள்.

அவளை நேசிக்கும் ஒரு மனிதனுடன்
நேசமாய்
கை கோர்த்து நடப்பாள்.

எனது அம்மா
உன்னைப்போலல்லாமல்,
அவளது அம்மா
என்னைப்போலல்லாமல்
தலை
நிமிர்ந்து நடப்பாளவள்.

இப்போது
நான் முறையிடுதல்போல்
எனது சமாதியில் அவள் நின்று
முறையீடு செய்யாள்.

அம்மா!
கண்கண்ட கடவுளை அன்றி
ஒரு மனிதனைக்காண
ஏனன்று இல்லாமற்போனது
எனக்கனுமதி?

◆

தமயந்தி

தேர் கொண்டுவரும் பாறை

பாத்திரங்கள்:

ஒரு கிராமம்
ஒரு புனிதர்
ஒரு மனிதன்
ஒரு படைவீரன்
ஒரு தோணி
ஒரு அகதிமுகாம்
ஒரு சவப்பெட்டி
ஒரு பாறை

"அவனவன் தன்தன் திராட்சைச் செடியின் கனியையும், தன்தன் அத்திமரத்தின் கனியையும் புசித்து, தன்தன் கிணற்றின் தண்ணீரைக் குடியுங்கள். இவ்விதமாய் நீங்கள் சாகாமல் பிழைப்பீர்கள்."

கம்பளியாட்டின் தோலை இடைக் கச்சையாகவும், காட்டுமல்லிகைத் தடியை ஊன்று கோலாகவும், சடைத்த சடைமுடி தாடியையும் கொண்ட முதிர்ந்த அந்தப் புனிதர் பாறையில் ஏறி அமர்ந்து கொண் டார். அது கரிய பாறை. கடற்கரை யோரத்தில் காலாகாலமாக அமர்ந் திருக்கும் பாறை. கரை வந்தேறும் அலைகள் ஓங்கி ஓங்கி உதைக் கும் போதெல்லாம், அந்த உதைப்பு கள் அத்தனையையும் தாங்கி, தன் னையும் வலுப்படுத்திக் கொண்டு, கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து நிற்கும் கரிய பாறை. ஆனால் மலையல்ல. புனிதரை விடவும் வயதுகூடிய பாறை. ஆனால் புனிதரிடம் தெரியும் முதிர்ச்சியோ, தளர்ச்சியோ அந்தப் பாறையிடம் இல்லை.

"இந்த மலைப் பிரசங்கம்..., இந்த மலைப் பிரசங்கத்தினூடாக..., இந்த மலைப் பிரசங்கத்தை..., இந்த மலைப் பிரசங்கத்தில்..., இந்த மலைப் பிரசங்கத்தைப்போல்...."

அந்தக் கரையோரப் பாறையில் அமர்ந்தபடி, புனிதர் தனது பிரசங் கத்தின் இடையிடையில் இப்படிப் பதங்களைப் பாவிப்பதனூடாக நாம் ஒரு பொது முடிவுக்கு வரமுடியும்.

மலைப் பிரசங்கம்.

இப்படித்தான் அந்தப் புனிதர் எண்ணிக்கொண்டார் தனக்குள்.

தான் மலையல்ல என்பது அந் தப் பாறைக்கு நன்கு தெரியும். தெரிந்திருந்தும் அந்தப் பாறை வாய்திறந்து உண்மையைச் சொல்லி புனிதரின் எண்ணத்தில் மண்ணை அள்ளிப்போட விரும்ப வில்லை.

"நான் மலையல்ல என்பதை சொல்லி புனிதரின் எண்ணம் தவ றென நிரூபிப்பதால் யாருக்கு என்ன லாபம், யாருக்கு என்ன நட்டம்? ஒரு சாதாரண சிறிய பாறையான என்மீது அமர்ந்துகொண்டு, பெரிய மலைமீது தான் அமர்ந்து பிரசங் கிப்பதாய் எண்ணி புனிதர் தனக் குள் ஓர் அற்ப சுகத்தை அனுபவிக் கிறாரெனின், அதனை ஏன்தான் நான் கெடுத்துக் கொள்வான்? இத னால் எனக்கு என்ன லாபம்?, அல் லது சொல்லாமல் விடுவதனால் யாருக்கு என்ன இழப்பு?" பாறை மௌனமாய் இருந்தது.

"எதற்கும் உதவா இந்தச் சிறிய பாறை எனக்கு தற்காலிக இருப்பி டம் தருவதாலும், இதிலிருந்தபடியே எனது உவமைகள் பிரசங்கிக்கப் படுவதாலும் மலை என்ற அந் தஸ்தை அடைந்து பெருமை கொள் ளக் கடவதாக" புனிதர் தனக்குள் எண்ணிக்கொண்டார் இப்படி.

தொடர்ந்தார் புனிதர், "ஆட்டு மந்தையைப்போல பாதாளத்திலே கிடத்தப்படுகிறார்கள். மரணம் அவர் களை மேய்ந்துபோடும். செம்மையா னவர்கள் அதிகாலையில் அவர் களை ஆண்டு கொள்வார்கள். அவர்கள் தங்கள் வாசஸ்தலத்தில் நிலைத்திருக்கக்கூடாதபடி அவர்களு டைய ரூபத்தைப் பாதாளம் அழிக்கும்."

கூட்டத்தில் மெல்லியதாய் சலசலப்பு உண்டாகத் தொடங்கியது. கூட்டத்தின் நடுவில் கால்களை நீட்டிப் போட்டபடி அமர்ந்திருந்த அந்த வயதான கிராமத்தின் காதினுள் புகுந்த புனிதரின் வார்த்தைகள் 'சுள்'ளெனச் சுட்டது. அதன் முகம் கோபத்தால் சிவப்பேறியது. பின் முகம் சுருங்கி விழிகள் கலங்கியது. புலம்பியது.

"போனாரே போனாரே என் மக் கள் பரதேசம் போனவர் வருவாரோ இந்தப் போக்கத்த பூமியிலே..."

கிராமம் அழுதது. மூக்கைச் சீறி கரையோர ஊரிமணலில் துடைத்

தது. கிராமத்தின் இந்த நிலையைக் கண்டும் காணாததுபோல் தலை யைக் குனிந்தபடி இருந்தது சவப் பெட்டி.

நீண்டநாட்கள் நங்கூரம் தூக்கப் படாததால் பாசிப்படை படர்ந்து போன கயிற்றில் தன் மூக்கை பிடிகொடுத்தபடி, அலவாக்கரையில் அசைந்துகொண்டு கிடந்த தோணி ஒரு தடவை தலையை ஆட்டியது.

"மவுனமாயிருக்கிறவர்களே! நீங்கள் மெய்யாய் நீதியைப் பேசு வீர்களோ? மனு புத்திரரே! நியாய மாய்த் தீர்ப்புச் செய்வீர்களோ? மனதார நியாயக்கேடு செய்கிறீர்கள். பூமியிலே உங்கள் கைகளின் கொடுமையை நிறுத்துக் கொடுக்கி றீர்கள். துன்மார்க்கர் கர்ப்பத்தில் உற்பவித்ததுமுதல் பேதலிக்கிறார் கள். தாயின் வயிற்றிலிருந்து பிறந் ததுமுதல் பொய் சொல்லி வழி தப் பிப் போகிறார்கள்"

பிரசங்கத்தை இடையில் நிறுத்தி விட்டு புனிதர் கடலை வெறித்துப் பார்த்தார். அலைகள் அமைதியாய் அசைந்தனவே தவிர எழவுமில்லை, விழவுமில்லை. அலையின் அசை வுகளிடையே தோணி நடந்து திரிந் தது. அதன் நடையின் எல்லை, தன்னைக் கைது செய்து வைத்தி ருக்கும் பாசிக் கயிற்றின் நீளமாய் மட்டுமேயிருந்தது.

"போனாரே போனாரே என் மக் கள் பரதேசம், போனவர் வருவாரோ இந்தப் போக்கத்த பூமியிலே" மீண்டும் கண்ணீர் சொரிய கிராமம் ஒப்பாரி வைத்தது. இப்பொழுதும் சவப்பெட்டி மௌனமாய் தலை குனிந்திருந்தது.

ஊரி மணலில் கால்களை நீட் டிப் போட்டபடி, தலைக்கு கையை முண்டு கொடுத்தபடி ஒருக்களித்துப் படுத்திருந்த அகதிமுகாம் எழுந்து உட்கார்ந்தது.

"எணை ஆச்சி, உனக்கென் னணை கேடு வந்ததிப்ப? ஏனணை சும்மா சும்மா ஒப்பாரி வெக்கிறாய்? நீ எல்லாத்தையும் கவுட்டுக் கொட் டிப்போட்டு, குண்டியில் மண்ணையுந் தட்டிப்போட்டுச் சுகமாச் சீவிக்கி றாய். நானெல்லோ கிடந்து ஈடழியி றன்." கிராமத்தை அதட்டியது அகதிமுகாம்.

"வாடா துரயே வா...! விண்ணா ணஞ் சொல்ல ஒரு நாயுமில்ல எண் டிருந்தன், மண்ணாளும் மகராசா நீ வந்த தென்னப்பு? பிந்தோரு மசிரால போறன் பரதேசம்... வாடா துரயே வா" கிராமத்தின் கோபம் அகதி முகாமின் பக்கமாய்த் திரும்பியது.

அகதிமுகாம் மீண்டும் கையைத் தலைக்கு முண்டு கொடுத்தபடி ஊரி மணலில் ஒருக்களித்துப் படுத்தது. சவப்பெட்டி தனக்குள் ஒரு தடவை சிரித்துக் கொண்டது. கிராமம் ஒரு தடவை திரும்பிப் பார்த்த பார்வை யில் அது சிரிப்பை அடக்க முயற் சித்தது முடியவில்லை. சிரித்தது. தலையைக் குனிந்தபடியே சிரித் தது. கிராமத்துக்குக் கோபம் கோப மாய் வந்தது. "பட்டத்து மகராசி இடி விழுந்து படுத்தாலாம், பஞ் சத்து மன்னரெல்லாம் பல்லிழிச்சுப் பாப்பினமாம்..... இழிப்பென்ன வேண் டிக்கிடக்கு இழிப்பு? முன்னால ஆரும் கிழிஞ்சுபோயோ கிடக்கினம்? இழிக்கிறாராம் பேக்கிலவாண்டிப்பயல் இழிப்பு..." கிராமம் கொடுத்த கிழியலில் சவப் பெட்டியின் முகத்திலிருந்த சிரிப்பு மாயமாய் மறைந்தது. அதன் முகம் வெட்கத்தாலும், வேதனையாலும் இறுகிப்போயிருந்தது.

"இந்தக் கிராமத்துக்கு நானென்ன கேடு நினைத்தேன்? இதன் நிலை கண்டு துக்கித்துப் போயல்லவா இருக்கிறேன். இதன் மீது ஊரும் காற்று நாறிப்போகக் கூடாதென்றுதானே நான் எனக்குள் சுமக்கிறேன்..." தன்னுள் நினைந்து நினைந்து உருகியது சவப்பெட்டி.

"என் ஜனங்களே! என் உபதே சத்தைக் கேளுங்கள். என் வாயின் வசனங்களுக்கு உங்கள் செவிக ளைச் சாயுங்கள். என் வாயை உவ மைகளால் திறப்பேன். பூர்வகாலத்து மறைபொருள்களை வெளிப்படுத்து வேன்" புனிதர் மீண்டும் தன் பிரசங் கத்தைத் தொடர்ந்தார்.

எத்தனை நாட்கள் இப்படியே இருந்தோம் என்ற கணக்குத் தெரி யாமலே பிரசங்கப் பாறையின் முன் னால் அமர்ந்திருந்த அந்த மனித னுக்கு இப்போது பசியெடுக்கத் தொடங்கியது. சோர்வோடு கொட் டாவி விட்டான். பசிக் களை அவ னது முகத்தை சுருங்க வைத்தது. வயிற்றைப் பிசைந்தெடுத்தது. அவன் சர்வாங்கமும் வலுவிழந்து, விழச் சித்தமாயிருந்தது.

"ஐயா! பசிக்கள உயிர் போகு தையா...."

தழுதழுத்த குரலால் கெஞ்சி னான். அவனது கெஞ்சுதலில் ஓர் எதிர்பார்ப்பு வெளிப்பட்டது. ஆமாம். அந்த ஐந்து அப்பமும், இரண்டு மீனும் பலவாகிப் பெருகிய அற்பு தம் மீண்டும் நிகழாதா என்ற எதிர் பார்ப்பே அது.

"ஐயா....! பசிக்கள.... உயிர்.... போகுதையா..."

அவன் சோர்ந்து ஊரிமணற் தரையில் சரியலானான். சரிந்தவன் முதுகில் துருத்தி நின்றது படைவீர னின் சுடுகுழலின் முனை. சரிந்து சென்ற மனிதன் தன்னை நிமிர்த்தி உட்கார வைத்தான் மிகுந்த பிர யத்தனங்கள் மத்தியில்.

"அவனவன் தன்தன் திராட்சைச் செடியின் கனியையும், தன்தன் அத் திமரத்தின் கனியையும் புசித்து, தன்தன் கிணற்றின் தண்ணீரைக் குடியுங்கள். இவ்விதமாய் நீங்கள் சாகாமல் பிழைப்பீர்கள்"

புனிதர் முன்பு சொன்னதையே மீண்டும் சொல்வதனூடாக பசித்த மனிதனின் பிரச்சனைக்கு தீர்வு சொல்வதாய் எண்ணிக் கொண்டார்.

"புண்ணாக்குச் சித்தனாம் உள் நாக்கு மருந்து சொல்லி, சூறெல் லாம் புண்ணாகிச் செத்தானாம் பரதேசி... ம்.... ஆரு செய்த மோச மையா ஆராரோ வந்தெனக்குப் பதஞ் சொல்லிப் போகினமே..." கிரா மம் புலம்பியது.

மனிதன் பசிக்களையால் மீண்டும் நிலத்தில் சரிந்தான். படைவீரனின் சுடுகுழல் முனை மீண்டும் அவனின் முதுகை அழுத்தியது.

அகதிமுகாம் மெல்ல எழுந்து வந்து மனிதனின் பக்கத்தில் அமர் ந்து, அவனைத் தாங்கிப் பிடித்தது. தன்னிடமிருந்த காய்ந்துபோன பழைய ரொட்டித்துண்டு ஒன்றை எடுத்து அவனுக்குக் கொடுத்தது. நடுங்கும் கரத்தால் அதனை வாங்க எத்தனித்தான். படைவீரனின் முரட் டுக்கரம் மனிதனின் கன்னத்தில் ஆழப் பதிந்தது. அகதிமுகாமின் கையிலிருந்த ரொட்டித் துண்டைப் பறித்த படைவீரன், அதனை எட்டி உதைத்தான். ராணுவச் சப்பாத்துக் காலின் உதையைத் தாங்க முடி யாத அகதிமுகாம் தூரத்தே போய் விழுந்தது. அதனிடமிருந்து பறித் தெடுத்த ரொட்டித் துண்டை தானே வாய்க்குள் போட்டு தின்று விழுங்கி னான்.

காய்ந்த சருகுபோல் ஊரிமணற் தரையில் துவண்டு கிடந்தான் மனி தன். அவனது உடலில் சிறிதளவு

உயிர் மட்டும் எஞ்சியிருந்தது.

இவற்றையெல்லாம் பார்த்துப் பொறுக்க முடியாத தோணி இங்கு மங்குமாய் தன்னை அசைத்தது. பாசி படர்ந்த கயிற்றை அறுத் தெறிய முனைந்தது. முடியவில்லை. இரண்டு தடவைகள் தலையைத் தூக்கிக் குத்தியது. சேற்றில் ஆழப் புதைந்த நங்கூரம் அசையவில்லை. முயற்சியைக் கைவிட்ட தோணி அடங்கிப்போனது.

பாறைமீது அமர்ந்திருந்த புனிதர் தன் தீர்க்கதரிசனங்கள் மூலமாய் இவையெல்லாம் நடந்தேற வேண்டியவை என முன்பே அறிந்த வர்போல் கடலையே வெறித்துப் பார்த்தபடி மௌனமாய் இருந்தார். அவர் அமர்ந்திருந்த பாறை இப் போது புதிதாய் ஒரு வேரை ஊரி மணலின் அடியில் பிரசவித்தது. பாறையின் மேல் அமர்ந்திருந்த புனிதர் இதனை அறியார். உண்மை யிலும் உண்மையாகவே இதனை அறியவே மாட்டார். ஏனெனில் இவை தீர்க்க தரிசனங்களுக்கு அப்பாற் பட்டவையாகையால்.

சப்பாத்துக்காலின் உதையால் பட்ட வலியால் அகதிமுகாம் நிலத் தில் துடித்துக்கொண்டு கிடந்தது. அதனருகில் வந்த சவப்பெட்டி அத னைத் தாங்கி நிறுத்தியது. இரண் டும் ஒன்றுக்கொன்று பார்வைகளால் ஆதார ஒத்தடம் கொடுத்துக் கொண்டன.

"போனாரே போனாரே என் மக் கள் பரதேசம், போனவர் வருவாரோ இந்தப் போக்கத்த பூமியிலே..." கிராமம் தனது வழமையான ஒப்பாரி யைச் சொல்லிக் கலங்கியது.

"அவனுடைய வல்லமை பெரு கும். ஆனாலும் அவனுடைய சுய பலத்தினால் அல்ல, அவன் அதிசய மான விதமாக அழிம்புண்டாக்கி, அனுகூலம் பெற்றுக் கிரியை செய்து, பலவான்களையும் பரிசுத்த சனங்களையும் அழிப்பான். அவன் தன் உபாயத்தினால் வஞ்சகத்தைக் கைகூடி வரப்பண்ணி, தன் இருத யத்தில் பெருமை கொண்டு, நிர்வி சாரத்தோடிருக்கிற அநேகரை அழித்து, அதிபதிகளுக்கு அதிபதி யாய் இருக்கிறவர்களுக்கு விரோத மாய் எழும்புவான்"

கூறி முடித்த புனிதர் தனது நீண்ட தாடியைத் தடவியபடி, படை வீரனை ஒருகணம் பார்த்தார். பின்பு கடலைப் பார்த்தபடியிருந்தார்.

ரொட்டித்துண்டு வயிற்றில் விழுந் ததால் எழுந்த உசாரில் படைவீரன் கிராமத்தின் அருகில் வந்தான். கிரா மம் தனது ஒப்பாரியை மீண்டும் மீண்டும் சொல்லிச் சொல்லிக் கலங் கியது. அது ஓயவில்லை. மூக்கைச் சீறி ஊரிமணற் தரையில் துடைத் தது. படைவீரனுக்கு ஆத்திரமாத்திர மாய் வந்தது. சுடுகுழலின் பிடியால் ஓங்கி அதன் வயிற்றில் இடித்தான். கிராமம் சரிந்து தரையில் விழுந் தது. விழுந்தும் அது தனது ஒப்பா ரியை நிறுத்தவில்லை. மீண்டும் மீண்டும் அதன் வயிற்றிலும், தலை யிலுமாக இடித்தான். அதன் உட லம் இரத்தக் கசிவு கண்டது. ஆனாலும் ஒப்பாரியிட்டது.

பாறையிலமர்ந்தபடி கடலைப் பார்த்துக்கொண்டிருந்த புனிதர் தொடர்ந்து "நியாயம் தண்ணீரைப் போலவும், நீதி வற்றாத நதியைப் போலவும் புரண்டு வரக் கடவது" என்றார்.

பலநாள் பட்டினியால் வாடி வதங்கிச் செத்துக்கொண்டிருந்த மனிதனின் பக்கம் சென்றான் படை வீரன். ஊரிமணற் தரையில் முகம் குப்புறக் கவிழ்ந்து கிடந்த பாதி உயிர் மனிதனைத் தனது சப்பாத் துக்காலால் புரட்டி நிமிர்த்தினான்.

கிராமம் ஒப்பாரியை நிறுத்தி விட்டு, தலையை நிமிர்த்திப் பார்த் தது. தோணி தன்னை அங்குமிங் கும் அசைத்தது. அகதி முகாமும், சவப்பெட்டியும் நடக்கப்போகும் விப ரீதத்தை எண்ணி, ஒன்றையொன்று அச்சத்தோடு பார்த்துக் கொண்டன. பாறைமீதிருந்த புனிதர் பாறைபோல் அசையாதிருந்தார். ஆனால் பாறை நிலத்தின்கீழ் தன்னை அசைத்து அசைத்து வைரமான வேர்க் குழந் தைகளை ஈன்றுகொண்டிருந்தது.

படைவீரனின் கரங்களில் விறைத்து நின்ற சுடுகுழல் ஒருத டவை எக்காளமிட்டது. இரண்டு தடவை எக்காளமிட்டது. மூன்று தடவை எக்காளமிட்டது.

சவப்பெட்டி அழுதழுது தன் பணியைச் செய்யத் தொடங்கியது. அகதிமுகாம் தன் தலையில் அடித்து அடித்து ஓலமிட்டு அழுதது. தோணி என்ன செய்யும்?!, இங்கு மங்குமாய்த் தன்னை உலுப்பியது. அசைந்தசைந்து அங்குமிங்குமாய் நடந்தது. பின்பு அடங்கியது.

மீண்டும் புனிதர் "அவன் சிங்கார மான தேசத்திலும் வருவான். அப் பொழுது அநேக தேசங்கள் கவிழ்க் கப்படும்" என்றார். பின்பு மௌனமா னார். கடலைப் பார்த்திருந்தார்.

படைவீரன் கிராமத்தின் அயலில் வந்தான். அது இரத்தம் சொட்டச் சொட்ட சோர்ந்து கிடந்தது. அவன் தன் கையிலிருந்த சுடுகுழலின் முனையை கிராமத்தின் பிடரியில் வைத்து அழுத்தியபடி தன் கருமத் திற்குத் தயாரானான்.

சவப்பெட்டியும், அகதி முகாமும் கண்களை இறுக மூடிக்கொண்டன. அவற்றின் இறுக மூடிய கண்களால் உடைப்பெடுத்து நீர் சொரிந்தது.

தோணி தன்னை உலுப்பியது. மீண்டும் மீண்டும் தன் உடலை தூக்கிக் குத்தியது. பாசி படர்ந்த கயிறு அறுந்து தெறித்தது. தோணி வேகமாய் கரையை வந்து தட்டியது.

ஆயிரமாயிரமாய் வேர்க் குழந் தைகள் பாறையைத் தூக்கி மேலே கொண்டு நிமிர்ந்தன. பாறை இப் போது மலையானது. பெரு மலையா னது. அதன் வைரம் பாய்ந்த வேர்க் குழந்தைகள் அதனைத் தாங்கி நிறுத்தி நின்றன. பெருமலையாய்த் தலை நிமிர்ந்து நின்றது பாறை, தன் உடலை ஒரு தடவை அசைத் தது. பாறி விழுந்தார் புனிதர் ஊரிம ணற் தரையில். தரைதட்டிய தோணி அவரை அலாக்காகத் தூக்கிப் போட்டுக்கொண்டு ஆழிக்கடல் நோக்கி ஓடியது.

"ஆனாலும் கிழக்கிலும் வடக்கி லும் இருந்து வரும் செய்திகள் அவனைக் கலங்கப் பண்ணும்." புனிதரின் இறுதி வார்த்தைகளாய் கொட்டுண்டன ஆழியிடையில்.

ஆயிரமாயிரம் வேர்க் கால்கள் முளைத்து நடந்து வந்த மாமலை யைக் கண்ட படைவீரன் திகைத் தான். நடுங்கினான். நடுங்குமவன் கைகளிலிருந்த சுடுகுழல் நிலத்தில் வீழ்ந்து மண்டியிட்டுச் சாய்ந்தது. அதுபோலவே படை வீரனும்....

"ஆழிக்கடல் போன ராசா வருவாரோ பகல் கொண்டு....." கிராமம் பாடியது.

ஆழிக்கடல் போன தோணி பாய் வலித்து வருகிறது. துவர்ப் பாய். புதுப் பாய். ஏழு தலைப் பாய். கிராமம் சிரித்தது முகமலர்ந்து.

(குறிப்பு: இந்தக் கதையில்(?) புனிதர் என்ற பாத்திரம் புகலும் அனைத்து உரை களும் விவிலியம் 'பழைய ஏற்பாட்டில்' இருந்து எடுத்தவைகளாகும்.) ◆

ப. வி. சிறீரங்கன்

மனிதர்கள்: மனிதம் குறித்து...

மனிதம் குறித்த புரிதல் மிகமிகப் பெரிய ஆழ்ந்த பார்வையில் வைத்துக் கட்டுடைப்புச் செய்யவேண்டும். அப்போதுதாம் உண்மையான மனிதம் - மனித இருத்தலை உறுதி செய்யப்படும், அதைத் தீர்மானிக்கும் விஷயமாக பொருளியலே அடித்தளமாகவும் இருக்கும். பூமியில் கூட்டுழைப்பு உருவாக்கம் கொள்ளும்போது மனிதம் பூத்துக் குலுங்குமென்று பசப்ப முடியாது!, அப்படிப் பசப்பிய காலத்தை நாம் மறக்கவும் முடியவில்லை.

இன்று, ஆய்வுலகம் புதியதொரு கூட்டுக்குத் தயாராகிறது; திபெத்தின் விடுதலைகோரும் தலாய் லாமாவும் அவுஸ்திரியாவின் பௌதிக விஞ்ஞானி அன்ரன் சைலிங்கரும் புதியவகைச் சந்திப்பைச் செய்கிறார்கள். கூடவே, அமெரிக்க வல்லாதிக்கத்தின் விஞ்ஞானியான பௌதிகப் பேராசிரியர் ஆர்த்தூர் சாய்யோன்க் மற்றும் பலரும் 'இன்ஸ்புறுக்' பல்கலைக் கழகத்தில் சந்திக்கிறார்கள்.

உலகத்தின் தோற்றுவாய் குறித்து மீண்டும் தேடுகிறார்கள்: "மாறும் பொருளின்றி மாற்றமே நிரந்தரம்" குறித்து வெகுவாக அங்கீகரிக்க மேற்குலகம் தயாராவது போல் பாசாங்கு செய்கிறது இன்னொரு புறம் 60% விஞ்ஞானிகள் உலகத்தினதும், அண்ட பிரபஞ்சத்தினதும் தோற்றம், வளர்ச்சி, அழிவு, மீட்சி யாவுக்கும் மூலமாக இறைவன் உள்ளதாக இந்த நிமிஷம்வரை ஓயாமல் கத்திக்கொண்டிருக்கிறார்கள்.

இந்த இடருக்குள் மீண்டும் மனித இருத்தல் குறித்த வொரு தேடல் மிகவும் தேவையாகவும் - வலுவற்றதாகவும் பொருள் கொள்ளத்தக்கவகையில்... புதியவுலகக் கட்டமைவில் புதியவகைத் தேவைகள் பொலிந்துகொள்ளும்போது, 'புதிய மாதிரிக்கான' மனிதம் பிறப்பெய்யப்போகும் விசும்புநிலையில்... நாம் இலங்கையிலிருந்து இடம்பெயர்ந்து இதே பூமியில் ஏதோவொரு மூலையில் கிடந்து மனித இருத்தலுக்காக சதா போராடியபடி என்றபோதும் எமக்குள்ளேயே ஒரு புதியவுலக ஒழுங்கு மிக மங்கலாக - சிறிய கண்ணியாக பிரதிபலிக்கின்றது, இதுவே சபாலிங்கத்தைப் போன்ற வர்களைக் காவு கொள்ளும் ஒரு நிகழ்வுப் போக்காக தன்னை உறுதிப்படுத்திச் செல்கிறது. இந்தவகை மாதிரியான சமூக நடவடிக்கை புதியவகைப் புரிதலுக்கு நம்மை உந்தித் தள்ளியபடி.

இது நாள்வரையான மனிதம் குறித்த கட்டமைவுகள் இனியொரு வேளை செல்லாக்காசாகும் நிலையை புதிய கூட்டுகள் உருவாக்கிவிட முடியும். அப்போது புரியும்படியுள்ள எந்த மனித விழுமியம் எமக்கான மனிதவரையறையைத் தக்கவைக்கப் போராடும்?

மனிதம் குறித்துப் பேசுவதற்கு மனித இருத்தலின் பொருளே தீர்மானிக்கும். ஆனால், புதிய விஞ்ஞான பௌதிக வடிவங்கள், கட்டமைவுகள், தரவுகள் யாவும் மனிதஇருத்த லுக்குப் பொருளேயில்லையென்பதும் - சூனியத்தில் பொருள் கொள்ள என்னவொரு தேவையுள்ளதென்று கேட் கிறது!

மனித மூளையிலுள்ள 100பில்லியன் நரம்பு மண்டலத்தையும், அதன் செயற்பாட்டையும்: "நம் காலத்தின் super-super computer" என்று சொல்லிக் கொள்ளும் இன்றைய பௌதிக விஞ்ஞானம், புதியவொரு பொருத்தப்பாட்டுக்காக பௌத்தத்தை அரவணைக்கின்றது. இதற்கு தலாய் லாமாக்கள் ஒத்தூதுவார்கள். மனித இருத்தலே வெறும் பொருளற்றதென்று கூறிவிட முடிவு கட்டிவிடும் நிலைக்கு இன்று விஞ்ஞானவுலகு முன்னறிவுறுத்திக் கொள்கிறது.

'மேட்ரோ பிசிக்சும்', 'குவான்ரம் பிசிக்சும்' நம்மையெல்லாம் தோற்றங்களின் பிம்பம் என்ற நிலைக்கும், அதற்குக் கீழும் தள்ளிவிடும் சூரத்தனத்தில் மூலதனத்தின் கெட்டிப்பட்ட குவிப்பு நோக்குக்கு முக்காடிட்டபடி புதிய புதிய ஆயுதக்கண்டுபிடிப்புகளும், அதற்கப்பாலும் சென்றபடி...

இந்தக் கட்டுரை எழுதிக் கொண்டிருக்கும்போது ஈராக்கின் தலைநகர்மீது பல்லாயிரம் கொடுமையான குண்டுகள் விழுந்து வெடிக்கிறது. நாகரிகவுலகத்தின் மனிதாபிமானம், ஈராக்கை வேட்டையாடிக்கொள்ளும் போக்குக்கு : மனிதாபிமானம், மனிதஇருத்தலைக் காப்பதற்கு என்ற விளக்கம் வேறு...

இது தாம் நாம் வாழும் உலகம்.

இந்த உலகத்தின் தேவைக்கேற்ப மனிதஇருத்தல் ஒவ்வொரு சூழலில் ஒவ்வொரு வடிவமாக விரிவுறும்போதும், நாம் என்ன பொருள் கொள்கிறோம்? மேற்குலகின் பம்மாத்துக்கு ஏற்றவாறு ஊதுகுழல்களாக நம்மில் பலர் செயற்படும்போது நமக்கான உண்மைக் குரலாக - நம் இருத்தலையும், அதன் விழுமியத்தையும் தக்கவைத்துக் கொள்ளத் தக்க வகையாக எந்தப் பெரிய நம்பிக்கையுமில்லை.

வளர்ச்சியுறும் மனித சமூகம், வளர்ச்சிக்குரிய உச்சவடிவமாக ஒரு பகுதியை தம் பொருட்டு ஏற்பதும், மறு பகுதியைச் சிதைப்பதும் அதிபிரசித்தி பெற்ற ஈனத்தனம். தேசியவாதம், கலாச்சாரக்காப்பு, மொழிக்காப்பு, தொன்மை புனிதங்கள் காப்பு என்று நாளாந்தம் வரும் ஓலங்களுக்கு என்ன அர்த்தம்? மதம், அரசியல், சமூக நிறுவனங்கள் இத்யாதி நாசகாரி வடிவங்கள் யாவும் மனிதத்தை எவ்வகையில் பிரதிபலிக்கின்றன?

இவைக்கும், இன்றைய எமக்கும் என்ன வகையுறவு? இதற்குள் விடை தேடியலையும் ஒருவர் எந்த வகைப்

புரிதலோடு மனிதம் குறித்துப் பேசுகிறார்?

மேலுள்ள கேள்விகளுக்கு விடையுறுத்து மனிதம் குறித்துப் பேசுதல் சாத்தியமாகும்போது மனிதம் பற்றிய வேட்கையை ஒரு அற்ப விஷயமாகக் கருதமுடியாது. நாம் நமது பசிக்குத் தீனியிடுவது மாதிரியேதாம் நம் மனிதம் குறித்த நோக்கும் முக்கியம் பெறும்.

தேசிய எல்லைகள் உடைகின்றன. மனிதம் வேறுமாதிரியாக வடிவெடுக்கிறது.

மூலதனம் கண்டம் விட்டுக் கண்டம் பாய்கிறது. கூடவே ஆட்லரிகள், ரொக்கட்டுகள் மனிதம் பேசுகின்றன. அதையும் நாம் நம்பிக் கொள்ளும்படி வீட்டுக்குள்ளேயே வந்து பிரசங்கங்கள் தொடர்ந்தபடி.

ஒருநேர கஞ்சிக்கு வழியின்றி குண்டுகளின் கோர நர்த்தனத்துக்குள் வாழுகின்ற நம் சனங்களின் (முழு மொத்தவுலக மக்களும்) நிலையில் மனிதம் எப்படி நோக்கப்படுகிறது?

அடக்கியொடுக்கின்றவனின் தொடர்ச்சி என்ன? அவன் பேசும் மனிதம் - மனித இருத்தல்தாம் என்ன? அவன் ஓங்கி சத்தியம் செய்கிறான் போப் வடிவில் வத்திக்கானில் - சங்கராச்சாரி வடிவில் இந்தியாவில், தலாய் லாமாவாய் திபெத்தில்.

இந்த நாசமாய்ப்போன இடருக்குள் இருந்து ஒரு அச்சொட்டான புரிதலுக்காகவாவது சற்று முயற்சித்துப் பார்ப்போம் மனிதம் என்பதன் நோக்கம் என்னவென்று:

நான் யார்?

எனக்கும் இந்த உலகத்துக்கும் என்ன ஒட்டு?

என் இருத்தலுக்கான காரணம் யாது?

மீண்டும் கேட்போம்.

நான் யார்?

இதென்ன கேள்வி!

அன்றைய யோகிகளிலிருந்து நேற்றைய சோக்கிரட்டீஸ் வரையும், இன்றைய அன்ரன் செலிங்கர் தொடர கேட்பது தானே இந்தக் கேள்வி?

இவர்களை விடுவோம்.

இந்த மகாமேதைகள் உலகப் பெரும் உண்மைக்காக அப்படிக் கேட்கிறார்கள். நாம் ரொம்பக் கீழான ஜீவன்கள். நமக்கு பசிக்கு உண்பதற்கும், உடுக்கப் பிடவைக்கும், தூங்க ஒரு கொட்டிலுக்குமானதே என் கேள்வி!

நான் இந்தப் பூமியில் ஒரு உயிர். என் பௌதிக இருத்தல் வெறும் சதையும் இரத்தமுமில்லை. எனக்கு உணர்வுண்டு. உறவாட மூளையுண்டு. இந்தவுலகத்தின் ஒரு மூலையில் கற்சுவரின் காகமிட்ட எச்சத்தில் வளர்ந்த வொரு கொடியாக இருக்கட்டுமே. அதன் இருத்தலை மறுக்க முடியுமா?

அது ஒரு செடி. அவ் வண்ணமே நானும் மனிதன். என் உயிர் வாழ்தலை மறுக்க எந்த எஜமானுக்கு உரிமையுண்டு? எஜமானாகிவிட்ட மனிதனின் இருப்புத்தாம் என்ன?

இந்த உலகத்தின் உற்பத்தியில் பங்கேற்கும் மகாப் பெரிய எதிர்கால பொறுப்பேற்பாளி அவனாம். இந்த அவனது பாத்திரமே என் இருப்பைத் தீர்மானிக்க முனைந்து கொள்வதால் நான் - அதுவாக மாறுகிற போக்கு நிலவுகிறது. இந்தப் போக்கு தன்னிலை இழப்புக்கு என்னை வலுவாக உந்தித் தள்ளும்படி அவன் பார்த்துக் கொள்கிறான். அவனிடமிருக்கும் யந்திரம் அதைச் செய்தபடி ஒவ்வொரு நாள் காலையும் என்னை உள்வாங்கி, மாலையில் கசக்கிக் கக்கிவிட்டபடி மெல்ல நகர்த்தும் பொழுதுகளை.

இப்போது நான் - அதுவாகியபடி!

இனி எனக்கும் இந்தவுலகிற்குமான தொடர்பு?

தொடர்பும் மண்ணாங்கட்டியும்! கோபம் வேண்டாம்.

இறைச்சியும் இரத்தமுமாய் இருப்பதால் எனக்கும் இந்த பௌதிக உலகுக்கும் ஒரு பண்பான இயங்குநிலைத் தொடர்புண்டு. கனவு வேண்டாம்.

காலையில் எழு. ஓடி விடு வேலைவேண்டும் யந்திரத்திடம். மாலையில் ஓடு கொட்டிலுக்கு வயிற்றை நிரப்பு. சோறு உண்டு - பியர் உண்டு, சிகரட் உண்டு = தஞ்சம். முடிந்தால் கண்விழி, மீண்டும் ஓடு...!

பின்பு உனக்கும், இந்த உலகுக்குமென்ன தொடர்பு? "பேசாமல் வேலையைப் பார். உன்னை வேலையில் வைத்திருப்பதே, என் மனிதாபிமானத்தால் தாம்!" அவன் நெற்றியில் அடித்துக் கூறுவான்.

நாசமாய்ப்போன மனிதம்.

இதென்ன கடைச்சரக்கே கிலோக் கணக்கில் பேச?

நான் நானாகிவிடுவதும், அவ்வண்ணமே அவன் அவனாகி விடுவதும் மகாப்பெரிய மனிதம் பேசுகிறது!

இடையில் இருக்கு விசம்.

எனக்கும் அவனுக்கும் குறுக்கே இருக்கு விசம்.

யந்திரமாய் சொத்தாய் ஏதோவொன்றாய்... அது தீர்மானித்துக் கொள்கிறது என்னை, அவனை.

அது என் வசமானால் அவனையும், அது அவன் வசமிருக்கும்போது என்னையும் ஊனப்படுத்தும்.

அது அவன் வசமிருக்கக் கூடிய மாதிரியே ஒழுங்குகள் உள்ளன. நான் தலையால் கிடங்கு கிண்டினாலும் அது என்னிடம் வராது.

அப்போது: ஒழுங்குகள் மீது என் கண் வருவது இயல்பாகிறது. அது என்ன பெரிய ஒழுங்கு?

காலையில் எழு. வேலைக்குப் போ. களவு கொள்ளாதே. தண்டனை பெறுவாய். குடும்பம் குலையும் போராடாதே. சட்டமும் நீதியும் உனக்கானது. ஏற்றதன்படி நட.

போதுமே!

மனிதம் புரிந்து போச்சுதே!!

என்ன புரிந்தது? மனிதம்?

நல்லது.

மனிதம் புரிந்துகொள்ளத் தக்கது தாம். அவரவர் நலனுக்கேற்றவாறு. துப்பாக்கி காவி நம் முன்னுக்கு நிற்பவனும் மனிதம் பேசுகிறான். தான் புரியும் கடமை எதிர்காலச் சந்ததி நிம்மதியாக வாழ. 'பயங்கரவாதிகளிடமிருந்து' நாட்டையும் மக்களையும் காப்பதற்காகவேதாம் தான் எதிரியைக் கொல்வதாகவும், தான் மரிப்பதாகவும் அவன்/ள் நம்புகிறான்/ள்.

"ஈராக்கில் குண்டு போடும் அமெரிக்க/பிரித்தானிய யந்திர மனிதன் தன் உயிரைத் துச்சமாக மதித்து 'நாசகார சர்வாதிகாரி'சதாமையும், அவரது 'நாசகார ஆயுதத்தையும்' இல்லாது ஒழிக்கப் போராடி என் எதிர்காலக் குழந்தைகளுக்காக தம் கடமையைச் செய்கிறார்கள்" என்று ஜெர்மனிய பில்ட் பேப்பர் (BILD ZEITUNG) வாசகி எழுதுகிறாள்.

இப்போது அவளுக்கும் புரிந்துவிட்டது மனிதம்!, இராணுவ மனிதர்களுக்கும் புரிந்துவிட்டது, நமக்கும் புரிந்துவிட்டது, முதலீட்டாளர்களுக்கும் அரசியல்வாதிகளுக்கும் புரிந்துவிட்டது மனிதம்.

ஆனால் எந்தத் தரப்பு மனிதம் நம் இருத்தலுக்கு உறுதியாகவுள்ளது? பொதுசன ஊடகங்களாக இருப்பதெல்லாம் ஆள்பவர்களது சொத்தாக இருக்கும்போது -

பில்லியன் கணக்காய் சொத்து வைத்துள்ள Axel Springer குடும்பத்தின் BILD பேப்பர் வாசகிக்கு அவர்களின் மனிதம் ஏற்புடையதாக இருப்பதில் அது அவள் தவறில்லை. கூலிக்கு மாரடிக்கும் உழைப்பாளி இராணுவ சிப்பாய்களுக்கும் இது பொருந்தும். ஆனால் நாம் புரியும் மனிதம்: அது நம் இருத்தலோடு சம்பந்தப்பட்டதா? ஆம்!

இப்போது கேட்போம்: நாமென்றால் யார்?

உழைப்பில் பங்கேற்கும் தொழிலாளர்கள்?

ஆமென்றால் நம் கண்முன் விரியும் மனிதம் வர்க்கம் சார்ந்தது. அ.ˆ.து ஒடுக்குபவனுக்கும்-ஒடுக்கப்படுபவனுக்கும் வித்தியாசம் காணும். அ.ˆ.து ஒடுக்குமுறையாளனுக்குத் துணை போகும் அனைத்துத் தரப்புமீதும் மனிதத்தைக் காட்டப்போவதில்லை.

இத்தகைய மனிதம் குறித்த புரிதல் இதுநாள் வரை சரியாக இருந்தது!, இனியும் சரியானதா?

அடித்துக் கூறுவோம் இல்லையென்று!

அப்போ புதிய புரிதல் வேண்டும்.

மனிதம் குறித்த புரிதல் மிகமிகப் பெரிய ஆழ்ந்த பார்வையில் வைத்துக் கட்டுடைப்புச் செய்யவேண்டும். அப்போதுதாம் உண்மையான மனிதம் - மனித இருத்தலை உறுதி செய்யப்படும், அதைத் தீர்மானிக்கும் விஷயமாக பொருளியலே அடித்தளமாகவும் இருக்கும். பூமியில் கூட்டு முழைப்பு உருவாக்கம் கொள்ளும்போது மனிதம் பூத்துக் குலுங்குமென்று பசப்ப முடியாது!, அப்படிப் பசப்பிய காலத்தை நாம் மறக்கவும் முடியவில்லை.

அப்படியெனில்? கிட்லரை, முசோலினியை, நவீன கிட்லர் கிளின்டனை மட்டுமல்ல... ஸ்டாலினையும் விமர்சிக்கக் கற்றுக் கொள்வேன். மாவோவை, லெனினை - கியூபாவின் காஸ்ரோவை. ஏன் சே குவாராவைக் கூட விமர்சித்து முன்னேறுவேன், கூடவே பிரபாகரனையும் கட்டுடைப்புச் செய்யலாம், நாளை உயிர்...

மனிதம் என்பதே வாழ்முறையென்று கற்றுக்கொள்ள மனிதாபிமானம் வேண்டும். அப்போதுதாம் தோழர்களுக்கும், தோழர்களுக்கும் சரியான தோழமை காணக் கிடைக்கும். நம்மிடம் நிறையத் துப்பாக்கிகள் மனசில் உண்டு. அவை இந்த அமைப்பிலிருந்து முளைத்து விருட்சமாகியவைதாம். நம் மனசிலிருக்கும் யந்திரம் காலப் போக்கில் கைக்கு மாறிவிடும்போது, அது நண்பனையும் - எதிரியையும் ஒரே தட்டில் வைத்துப் பார்க்கிற துர்ப்பாக்கிய நிலைக்கு நாமே காரணமாகியுமுள்ளோம்.

எமக்குள் செரித்துக் கொண்ட இதுநாள் வரையான புரிதல்கள் கெட்டிப்பட்ட தத்துவார்த்தப் போக்குடையதாகவு மிருக்கலாம். எனினும், சக மனிதனின் கருத்தை அங்கீகரிக்கமுடியாத வெறிக்கு எந்த வகையில் ஆரோக்கியமான வழி பிறக்கும்?

தனக்குப் பிடிக்காதபடி கருத்துக்கூறிவிட்டால் அவனைக் கழுமரத்தில் ஏற்றிவிடும் பாரிய பாரம்பரியம் நமது. மனிதம் என்பதற்கான வரையறை அளவுகோல் துப்பாக்கியை புகழ்ந்து கொள்ளவும், செத்து மடிபவர்களை எண்ணிக் கணக்குப் பார்ப்பதிலும் போய் முடிந்துள்ளது.

நியாயமாகக் கூறிவிடுவதற்கு நாம் நிற்கும் ஆற்றிலுள்ள 'மண் குதிர்' எவ்வளவு நேரத்திற்குத் தாக்குப் பிடிக்கு மென்பதில்தான் தங்கியுள்ளது.

"We are the world

We are the child" - என்றபடி உலகை ஏப்பமிடும் உல கமயமாகும் மூலதனப் பாய்ச்சல் ஏதோவொரு மூலையில் குப்பை கொட்டுபவனிடம் கருணையா காட்டப்போகுது?

இந்த மனிதம் குறித்த பேச்சுக்கள் ஒடுக்குமுறைக்குள்ளான நமக்கு முக்கியம் பெறுகின்றது போன்று மேற்குலகில் வாழும் ஐரோப்பிய தொழிலாளி சிந்திக்கின்றானா?

"எளிய துருக்கிப் பண்டியே, உனக்கு இருநாட்டுப் பிரஜா உரிமையா வேணும், ஓடு உன்ர நாட்டுக்கு"

"ஊத்தை வெளிநாட்டவனால் எங்கள் நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம்"

சதா ஏசிக்கொள்ளும் தொழிலாளிகளாக மேற்குலகின் பாட்டாளிகள்.

"உலகப் பாட்டாளிகளே ஒன்றுபடுங்கள்"- ஒரு நூறாண்டாகப் போகும் மகாப்பெரிய மனிதம் குறித்த வார்த்தை.

இன்றைய நிலை? விஞ்ஞானம் சிலவற்றை சீரிய முறையில் சிதைத்துள்ளது. அதில் ஒன்று மனிதர்களாக இருத்தல். மனிதம்! நமது அரசியலும், விஞ்ஞான விளக்கங்களும் இன்னும் ஆழமாக மனிதம் குறித்து தேடுதலுக்குத் தயாராகும்போது: யாழ்குடா நாட்டிலிருந்து வெருட்டியடிக்கப்பட்ட இஸ்லாம் மக்களின் அவலம் குறித்து எப்படி யோசிக்கிறது?

எனக்குரிய இருத்தலை நான் இழக்கமுடியாது! அது போன்றதே மற்றவர்களதும். ஆனால், அப்படி என்னால் யோசிக்கமுடியாதபடி எனக்குள் வந்திருக்கும் தேசியம், கலாச்சாரப் புளுகு என்னைக் கட்டிப் போட நான் இடம் கொடுத்துள்ளேன்.

ஏன்?

இதற்கு நான் விடையிறுப்பதில் தாம் நம் மனிதம் குறித்த பொதுமையான இயல்பு புரியும், 21ம் நூற்றாண்டினது ஆரம்பத்தில் நம் ஸ்தானத்தை இதுவே குறித்துரைக்கும்!!! அதுவரையும் நாம் கூறும் மனிதம், கடைப்பிடிக்கும் பண்பு, யாவும் இரட்டைத் தலையுடைய விசப்பாம்பு.

இனி எங்கள் மனதிற்குள் சிலவற்றைக் கேட்டுக் கொள்வோம்:

முக்கால்,

தோட்டக்காட்டான்,

மோட்டுச் சிங்களவன்,

பறையன்-நளவன்...

பேச்சு வழக்கில் கோபத்தைக் காட்டக்கூட முறைக்கு முப்பது தடவை 'பறையன்-நளவன்' என்கிறேன்.

இப்போது, என் மனோ பாவம் குறித்து நான் கேள்வி கேட்க வேண்டும், புரியும்படி என்னை நான் புரிந்து கொண்டால், நான் பேசும் மனிதமும் நேர்த்தியாகவும், நேர்மையானதாகவும் இருக்கும். இல்லையேல், கிளின்டன்-போப், கோபி அனான் - சங்கராச்சாரிகள் பேசும் மனிதத்திற்கும், என் மனிதம் குறித்த நேசிப்புக்கும் வித்தியாசம் இருக்குமா?

காலவோட்டத்தில் எம் மனிதம் குறித்த பொதுமையான பார்வை ஒரு கட்டத்தில் புரட்சிக்கு எதிராகக்கூடக் கொடி பிடிக்கும். அ.ˆ.து முழு மொத்த மனித நேசிப்பின் போக்கில் நிகழும். அப்போது உடமை வர்க்கத்திற்கு அதுவே காவல ரண்களாயும் இருக்கும். இந்தச்சிக்கலை ஒரு கட்டத்தில் சந்திக்கும்போது மகாப்பெரிய மனிதநேயமும் எதிர்ப்புரட்சிக்குரிய குணாம்சமாகப் போகும்.

பின்பு மீளவும் உண்மை மனிதம் உதிப்பதற்கு வாய்ப்பே உருவாகிவிட முடியாது. எனவே, 'காலம்-இடம்-சூழ்நிலை' மனிதத்தின் போக்கில் பாரிய தாக்கஞ் செய்யும். அப்போது வர்க்கம் சார்வதும்- வர்க்கமற்ற சூழலை உருவாக்குதலும் அதனூடே மனிதத்தைக் கட்டியெழுப்புவதும் - எதிரியையும் அதே தளத்தில் நேசிப்பதும், வாழும் உரிமையை அங்கீகரிப்பதும் உண்மை மனிதாபிமானமாகும். ◆

சஜீ

சேகு...

அவனிடமிருந்ததை அவர்கள் பறித்துக்கொண்டார்கள். ஆனால் அதற்கு முதலே அவன் நடைப்பிணம்தான்.

அவர்களது அகராதியில் அகாலவேளை என்ற ஒன்று இல்லை. இருப்பினும் சிறியண்ணா அவ்வேளையில் வந்ததும் முகாம் (Camp) விறைத்துப் போயிருந்தது.

அவன் கட்டி ஆண்ட முகாம், இன்னொருவனின் கைக்கு மாறியது. எந்த உணர்வுகளுமற்று சித்தப்பிரமை சிக்கெனப் பிடித்தவனாக மண்தரையில் மல்லாக்கப் படுத்திருந்தான்.

முகட்டின் சில ஓட்டைகளால் பொந்தல் வானம்.

உழவுக்குப் பெயர் போன, உடனே நீங்கள் தொழிலுக்கும் என்று முணுமுணுக்கக் கூடாது. இது வேவு.

அவர்களின் தலைமைக்குப் போகவேண்டிய விதத்தில் போய்ச்சேர்ந்தது.

இப்படித்தான் ஒருமுறை, அந்த முகாமில் மாவட்டத்திலுள்ள அனைத்து முகாம் பொறுப்பாளர்களும் வந்திருந்தார்கள். யமனுக்கு 'பொடிகாட்' நிக்கக்கூடிய மூன்று பேருடனும், சிறுவனொருவனுடனும், சிறியண்ணா வந்திருந்தார் சிம்மசொப்பனத்தில். அவர்களல்லாத நீங்கள், சிறுவனை செல்லமாக 'தவ்வல்' என்றழைப்பது, அவர்களுக்குத் தெரியாததொன்றல்ல. இதற்கு முதலே கூடிய அனைத்து முகாம் பொறுப்பாளர்களின் ஆயுதங்கள் வாசலில் வைத்து வாங்கப்பட்டு விட்டது.

உங்களுக்கு வேண்டுமென்றால் பறிக்கப்பட்டதாக இருக்கலாம்.

முழங்கால் குத்துண்ண ஒருவனை மண்ணில் இருத்தினார்கள். கைகட்டி அனைவரும் சுற்றி நின்றார்கள்.

சிம்மசொப்பனத்தில் காலுக்கு காலைத் தூக்கிப் போட்டுக்கொண்டு, கண்கள் சிவந்திருக்க கைவிரலைச் சுண்டி,

"சொல்றா நாவேசமேன, என்ன செய்தனியெண்டு"

சுற்றி விறைத்திருந்த முகங்களுக்கிடையில், ஒரு ஜீவனின் ஈனசுரம் சுரந்தது. அது நம்பிக் கையிழந்த உயிர்தல் வேண்டி!

"பக்கத்துவீட்டக்கா பாத்ரூமில குளிக்கேக்க நான் போய் சோப் போட்டனான், வேற எந்தத் தப்பும் நடக்கேல்ல"

"டே வாய மூடுறா! தப்பேதும்.....! என்ன தண்டன தெரியுமோ? "

அதிர்ந்தது. கட்டுப்பாட்டுக்குப் பேர்போன அவர்கள். ஊரிலல்ல. உலகத்தில்.

அந்தப் பலிக்கடாவின் பார்வை நிலத்திலேயே, நிலைகுத்தியிருந்தது. அது விட்ட மூச்சினால், மண்ணும் சிறு துணிக்கைகளும் சிதறிக்கொண டிருந்தன.

எழுந்த சிறியண்ணா, தனது இடுப்பிலிருந்த பிஸ்டலை பிடுங்கி சிறுவனிடம் கொடுத்தார்.

பாரம் தாங்கமுடியாத அவனது கைகள் தொங்கின மட்டுமல்ல; நடுங்கின. விழிகள் மிரண்டு ஓடுப் பட்டன. காற்றுக்காடும் சீலைபோல அங்குமிங்கும் ஆட்டம் கண்டது.

"வையடா"

எங்க வைக்கிறது. பொறுமையிழந்த சிறியண்ணா, தட்டிப்பறித்து, பின்பக்கம் நின்று அதன் பிடரிக்கு குறிவைத்தார்.

சுற்றியிருந்தவர்களுக்கு மட்டு மல்ல, எட்டியிருந்த செவிகளுக்குள் ளாலும் கூவிச்சென்றது.

"எல்லாருக்கும் இது பாடம்"

எழுந்து போய்விட்டார்.

சுற்றியிருந்தவர்களும் கலைந்து போனார்கள். அந்த முகாமுக்குப் பொறுப்பாக இருந்த அவனும், நிதிக்கு பொறுப்பாக இருந்த அவனுடைய உற்ற நண்பன் நிதியும் சிறிது நேரம் மௌனம் காத்தனர்.

இந்த விடயம் அவர்களின் காதில் போய்ச்சேர்ந்ததெப்படி என் பது இருவருக்கும் புரியாமல் இருந்தது.

தண்டிக்கப்பட்டவன் எவ்வளவு நம்பியிருப்பான்.

இருவரும் அறிந்தவுடனே இரகசி யமாக அவனுக்கு 1000 ரிப்ஸ் அடி க்கும்படியும் 1000 இலையான்கள் பிடிக்கும்படியும் 'பணி ஸ்மன்ற்' கொடுத்து விட்டுவிட்டார்கள்.

தப்பினோம் பிழைத்தோம் என் றொரு ஜீவன் பிழைத்தது. தப்ப வில்லை.

இப்படியான ஒரு ஏற்பாட்டில், சிறியண்ணா இருவரையும் எச்ச ரித்தார்.

வெட்கத்துக்குள் வெட்கம் புகுந்து கொண்டதில் புதினமேது மில்லை. பொட்டு வெளிச்சத்தை முகாம் மூடியிருந்தது. நிசப்தம்.

ரயர்களின் இடையில் உடல் வளர்த்தப்பட்டிருந்தது மல்லாக்க. நிதி அவனிடம்,

"மச்சான் நீ போய் அலுவலைப் பார்." என்றான்.

இயந்திரமாக அவன் மனம் விரைந்து தீ மூட்டியது. "ஆராரோ ஆட்டுவிக்க, ஆராரோ ஆடவந்தார்"

சில நொடிக்குள் பட்டணத்தார் எட்டிப் பாத்துவிட்டு போய்விட்டார். ஆண்டனுபவித்தவன், சொல்லிவிட்டு போய்விட்டான்.

தடியெடுத்து, மண்டையோட்டை தட்டியெரித்தான். ஈரல் கருகி வெண் ணெய் துளித்துளியாய்....

தீ முகம் மலர்ந்து ஒளி வீசியது.

இருவரை அவ்விடத்திலேயே விட்டுவிட்டு அகன்று கொண்டான்.

காலை, ரயர்களின் கம்பி வளையங்களுடன் சாம்பல் மட்டும் எஞ்சி யிருந்தது. அருகிலேயே சிறு குழி ஒன்று தோண்டப்பட்டது. சாம்பலை விறாண்டி அதற்குள் தள்ளி மூடியாகிற்று.

முதல் நாள் மாலை யாரும் சாப்பிட்டுவிடாத சாப்பாடு அப்படியே இருப் பதைக் கண்டு திருப்தி அடைந்தவனாக 'இன்று காலைச் சாப்பாடு' ஆயத்த மானதை உறுதிப் படுத்திக்கொண்டு, புரண்டு, புரண்டு படுத்துக்கொண்டிருந்த நிதியையும் ஏற்றிக்கொண்டு மோட்டார் சைக்கிள் காற்றைக் கிழித்துக்கொண்டு பாய்ந்தது.

தலைமயிர்களெல்லாம் அறுந்துவிடும் துடிப்பில். காதோடு உரசும் காற்று கன்னங்களை சூடாக்கியது. கண்ணில் மோதி வழி தவறிய காற்று; கண்ணிலிருந்து காது இடைவெளிக்கு நீர் கோடு நீண்டது.

நிதி ஒரே ஒரு செல்ல மகன். செல்வத்திலும் அவன் வறிய குடும்பம் ஒன்றின் பிரதிநிதி. ஆனாலும் இருவரும் படிப்பில் ஒன்றில் ஒன்றியிருந் தார்கள். தரப்படுத்தல் என்றொரு விளையாட்டில், நிதி அனுமதி பெற்றான். விரக்தியுற்ற அவனுக்கு வறுமையின் தோற்றுவாய் தரப்படுத்தலாக்கும் என்றெண்ணி விடுதலை மந்திரத்தில் கட்டுண்டான்.

நிதி, நண்பனின் எதிர்பாரத முடிவால், தானும் எதிர்பாராத முடிவை எடுத்துக்கொண்டான்.

இருவருமாக இணைந்து கொண்டார்கள். ஆரம்பத்தில் திறிலாகவும் இலட்சியமாகவும் இருந்த இலக்கு மறையத் தொடங்க சலிப்பு பற்றிக் கொண்டது.

நிதி மென்மையானவன். சிறு அசம்பாவிதமென்றாலும் கலங்கிப்போவான். ஆரம்பத்தில் வாய்விட்டே அழுதுவிடும் சுபாவம். போகப்போக அவனால் வடிவமைக்கப்பட்டது.

இருவருடைய நினைவஞ்சலிப் போஸ்டர்கள் அவர்களின் மனதின் கண்க ளில். ஒன்றாகவே இருவருடைய படங்களும். அவ்வாறே போடவேணுமென்று சொல்லியும் வைத்தார்கள்.

தேனாகவினித்த 'சா' வேப்பெண்ணைக் கச்சல்.

எதிரியிடமிருந்து வரவேண்டிய சாக்குறி, தன்விரலிலிருந்தே தனக்கு ஆகும் நிலையில், நிலைத்தது.

விடிந்தும் விடியாத காலைப்பொழுதில் சுடலையில், இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொள்ளக்கூட இல்லை. இதிலெப்படி உரையாடல். தகவல் வெளிவந்ததில் - அவனுக்கு இவனாக இருக்கலாம்; இவனுக்கு அவனாக இருக்கலாம். இருந்தும் இருவரின் நெருங்கிய உறவில், சுடலையில் தனி மையில்.

எத்தனையோ சித்திரவதைகள், மரணங்கள் என்று கண்முன்னால் நடந்தவை தான்.

தண்டிக்கப்பட்டவனை தண்டித்தது தாங்கொணா வேதனையை அவ னுக்குள் இருந்திருந்தெழுப்பியது.

இது முதற் தடவையாக ஏற்பட்டமையாலோ என்னவோ அவனுள் பூகம் பம் புகுந்துகொண்டு!

நிதி முழங்கால்களுக்கிடையில் முகத்தைப் புதைத்துக்கொண்டான். அவன் அவனருகில் வந்து ஆதரவாக தோள்களில் கையை ஊன்றினான்.

"கடிதம் கொடுக்கப்போறன்."

அவனுக்கும் அதே எண்ணம்தான் ஊறிக்கொண்டிருந்தது. அவன்

முந்துவான் என்று அவனுக்கெப்படித் தெரியும். இருவருமாக விலத்தக்கூடிய சிறுதுளி சாத்தியப்பாடுகளில்லை.

"நீ முதலில குடு மச்சான்"

வெய்யில் சூடு எகிறியது. அவர்கள் அவ்விடத்தைவிட்டு அகன்று போனார்கள்.

சந்தர்ப்பம் வரும்போது, அல்லது சந்தர்ப்பத்தை வரவழைத்துக்கொண்டு கடிதத்தைக் கொடுக்க வேண்டும்.

நிதிச்சேகரிப்புக்காக நிதி புறப்பட்டுப் போனான். இவன் தனது முகாம் பொறுப்பு வேலைகளை அட்டவணையிடும் வேலையில் மூழ்கிப்போனான்.

▼▼▼▼▼▼

விசாரணை. முகம் கறுக்க கைகட்டி நின்றான் நிதி.

"எப்படி வசந்தியக்காவிடம் நிதி பெறமுடியும்? " என்று கேள்வியெழுப்பியிருந்தான்? தன்னால் அவ்வாறானதொரு செயலை செய்ய முடியாதென்றும் வசந்தியக்கா எம்மால் விதவையாக்கப்பட்டவள் என்பதையும், அதுகூட அவருக்கு தெரியப்படுத்தப்படவில்லை என்றும் காரணங்களாக நிறுத்தியிருந்தான்.

விசாரணை ஆரம்பித்த வேகத்திலேயே முடியவில்லை.

நிதியின் காரணங்கள் நம்மைப்போல ஒரு சாராருக்கு ஏளனமானது. இன்னொரு சாராருக்கு நியாயமாகியது. அவனுக்கு வலுவற்ற நியாயத்தை நிதி வென்றேயாகவேண்டும்.

முயற்சி வினை திருவினையாகியது. நிதி விலத்தலாம். ஆனால் அவரிடம் ஒப்படைக்கப்பட்ட சகல பொறுப்புக்களையும் ஒப்படைக்கும்வரை அவர் முகாமிலேயே இருக்க வேண்டும்.

அவன் உடைந்து வீழ்ந்தான். நிதியின் கையிலிருந்த பொறுப்புக்கள் இன்னொருவன் கைக்கு

மாறியது. இன்னொருவனுக்கும் அவனுக்குமான உறவு தொடங்கப்பட வேண்டும். அதற்கிடையில்

அவனுக்கெதிராவே மாறுதல்கள் வந்து நின்று விடக்கூடும்.

நிதியை ஒரு மூலையில் தூக்கி போட்டுவிட்டார்கள். மற்றவர்களுடன் குதூகலித்தான். ஆனால், அவனுடனான உரையாடல் விறைத்துப்போயிற்று. ஒருவேளை நன்மையாகவே இருக்கலாம்.

நிதியின் பொறுப்பை கையேற்ற இன்னொருவன், அவனுக்கும் நிதிக்குமான உறவின் நீள, அகலத்தை, கனஅளவை அறிவதற்காக அனுப்பப்பட்டிருக்கலாம். இதனுடைய பெறுமானங்கள் ஒன்றும் இல்லை என்றால் தான் திருவினையாக அமையலாம்.

காலம் காய்த்ததோ என்னவோ பேச்சுவார்த்தையில் எதிரியணி படைகள் ஆக்கிரமித்த பகுதிகளிலிருந்து வாபஸ் ஆகியது.

மழைவெள்ளம் போட்டு ஆறாகப் பாய்ந்தோடிய அடையாளங்கள் முழுமையாக இன்னும் மறையவில்லை.அடித்த மழைவெள்ளத்தில் அப்பகுதியிலுள்ள ஆயிரக்கணக்கான கால் நடைகளும் அள்ளுண்டு போயிற்று.

இவர்கள் பின்வாங்கும் போது அப்பகுதியில் சேகரிக்கப்பட்ட பெருமளவு நிதியை மண்ணுக்குள் பவுத்திரமாக மறைத்து வைத்துவிட்டு வந்துவிட்டார்கள். இன்று அதனை நிதி எடுத்து அவனிடம் கொடுத்துவிட்டு, விடைபெற்று போய்விடலாம்.

வீட்டில் தாய், தந்தையர் மட்டும் தானா குதூகலிப்பார்கள்! ஏன் நீங்கள்?

இடத்தைச் சுட்டிக் காட்டினான்.

"வெட்டுங்கோ"

மனநிறைவு கொள்ளும் தறுவாய். அவனிடமிருந்து வரும் 'டா, டோ' என்பவையெல்லாம் மறைந்து 'கோ' ஆனது.

மண்வெட்டிகள் 'பொத்துப்பொத்'தென்று பூமிக்குள் இறங்கின. மண் குவியலாகிக் கொண்டிருப்பதைக் கண்டு நிலைதடுமாறினான் நிதி.

கிடைத்தே தீருமென்ற வைராக்கியத்தில் அவன். கண்கள் மங்கிமங்கி ஒளிவீசின, மண் மலையாக ஆகிக்கொண்டிருந்தது.

வட்டமாக வெட்டிய குழியில் எந்த அசுமாத்தமுமில்லை.

நிதி எவ்வாறு? எங்கே? எப்படிப் போனது? வியர்த்து விறைத்து விறுத்துப் போனார்கள் - அவன், நிதி பன்மடங்கு குழம்பி கூழாகி தடுமாறி பூமி சுற்றும் வேகம் அவன் மனக்கண்ணில்.

நிதியின் பொறுப்பை ஏற்றிருந்த இன்னொருவன் அவனைப் பிடித்து உலுக்கி 'வோக்கியை' அவன் கையில் கொடுத்தான்.

"ஆளப் போடு"

"....."

"டே"

"இல்லயண்ண, கொஞ்சம் பொறுத்து, விசாரிச்சு...."

"போடுறா பிண்டமேன"

'வோக்கி'யின் கட்டளை காற்று வழி வந்து, செவி வழி புகுந்து கண்கள் இரத்தச் சிவப்பாக, கருவிழி கரைந்தொழுக 'பிஸ்டலை' கை பற்றிக் கொண்டது.

இனியென்ன திருவினை வினையாகியதில் நிதியின் கண்களை காணும் சிறுதுளி துணிவற்றவனாய் அவன் நிமிர, ஒரு மின்னலின் வேகத்தில் பார்வைகள் கலந்து ஆயிரம் கேள்விகளை சிந்திவிட தலைகுனிந்தான் நிதி. இறுதியாக நாவே எழவில்லை, கதை எங்கே!

ஆவிபிரியும் நிலையில் அவன் தன்னை நிறுத்தினான். நிறுத்தியே ஆக வேண்டும்.

குவிந்துகிடந்த மண்குவியலில் நிதி உறங்கினான். விழிகள் குத்துண்டு நிக்க. மண்ணுக்கென்ன தாகமோ அவன் தலையிலிருந்து சொட்டுச் சொட்டாய் விழும் வியர்வையை உறிஞ்சிக்கொண்டிருந்தது.

குழிக்குள் கிடத்தி மூடிவிடும் முயற்சியில் தோற்று, வட்டவடிவமான குழியை நிதியின் நீட்டத்திற்காக நீட்டிக்கொண்டிருக்கும் போது, ஓங்கி இறக்கிய மண்வெட்டி போன வேகத்தில் பன்மடங்காக எகிறிப்பாய்ந்தது.

'பிஸ்டலை' தரையில் விட்டெறிந்து குழிக்குள் குதித்து மண் வெட்டியை வேண்டி ஓங்கி இறக்கினான் அவன். தடுமாறிப் புதைந்த மண்வெட்டியை முழுப்பலமும் கொண்டு அள்ளி எத்தினான்.

காற்றின் குதூகலிப்பில் பண நோட்டுக்கள், பவுண்கள் இங்குமங்குமாக ஆடி ஆடி தரை நோக்கி!

வாய் பிளந்து கதறிக் கதறிக் கண்கள் குழிக்குள் அவன்

நீங்களும்

நிதி

நீதி! ◆

அழகு குணசீலன்

புலம்பெயர்ந்தது தமிழர்கள் மட்டுமல்ல வன்முறைகளும்தான்....

எந்த ஜனநாயக மறுப்புக்களுக்கும், மனிதஉரிமைமீறல்களுக்கும் சகல ஒடுக்குமுறைகளுக்கும் எதிராக ஆயுதம் ஏந்திப்போராட முன்வந்தார்களோ, அவர்கள் எல்லோரும் அதே ஆயுதத்தினால் அதே மறுப்புக்களையும் மீறல்களையும் ஒடுக்குதல்களையும் செய்யத் துணிந்தபோது போராட்டத்தின் இலக்கு கேள்விக்குறியானது.

எங்கிருந்து தொடங்குவது என்பது எனக்கும் பிரச்சினைதான். விலங்கியல் இயற்கைவிதியில் இருந்தா? அல்லது எமது மக்கள் என்றும் பெரும் நம்பிக்கை வைத்துள்ள மத, கலாச்சார அடித்தளத்தில் இருந்தா? எங்கிருந்து தொடங்குவது? இல்லை, தமிழ்த்தேசிய விடுதலைப்போராட்டத்தின் ஆயுதப்போராட்ட வரலாற்றில் இருந்தா? எங்குமே வன்முறைகள். எங்கிருந்து தொடங்குவது...?

புலம்பெயர்ந்த நாடுகளில் எம்மவர்கள் மத்தியில் நிலவுகின்ற அரசியல் வன்முறைக்கலாச்சாரத்தை ஆவணப்படுத்தும் நோக்கில் இங்கிருந்து தொடங்குகின்றேன். ஆம்! எஸ். ரகுபதியின் கவிதைவரிகளில் இருந்து...

"....
....
பூமி உருண்டையா?
தூக்கு கலிலியோவை
மைக்கலை, சுந்தரத்தை
மனோமாஸ்டரை ராஜினியை...
ஈழத்தில் ஆழப்புதை

ஆயிரம் மைல்களிற்கு
அப்பால் ஐரோப்பியத்
தெருக்களிலும் மறத்தமிழனின்
கருவிக் கலாச்சாரத்தை
சபாவுடன் தொடர்
உண்மையைத் திருகு.
....
...."

இந்தக் கவிதை வரிகள் ஈழப்படுகுழிகளில் இருந்து ஐரோப்பியத் தெருக்களுக்கு வன்முறைகளை எம்மவர்கள் காவிய கதையைச் சொல்லுகின்றன.

தமிழ்த்தேசியத்தின் ஆயுதப்போராட்டம் சகோதரப்படுகொலைகள், உட்படுகொலைகள், மக்கள்மீதான கொலைகள் என தனது ஆயுதப்பசிக்கு இரைதேடி ஈழத்தையும் இந்தியாவையும் தாண்டி, புலம்பெயர்ந்த நாடுகளிலும் சண்டித்தனம் செய்யும் ஒரு துர்ப்பாக்கிய துப்பாக்கிச் சூழலில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம்.

ஆயுதப்போராட்டத்தின் ஆரம்பம் தமிழ்மக்களுக்கு பெரும் நம்பிக்கையை அளிப்பதாக இருந்தது. இதனால் ஆயுதம் ஏந்திய அனைத்துக்குழுக்கள்மீதும் அவர்கள் அதீத நம்பிக்கை கொண்டு இருந்தனர். விளைவு 'மண் டையில் போடப்பட்ட', 'மின்கம்பத்தண்டனை வழங்கப்பட்ட' போதெல்லாம் இயக்கங்களால் விட்டுச் செல்லப்பட்ட எந்த ஒரு கடதாசியையும் அதில் இருந்த வாசகத்தையும் மக்கள் நம்பினர். அத்தோடு தாமாகவே முன்வந்து இவ்வாறான வன்முறைகளை நியாயப்படுத்தவும், அங்கீகரிக்கவும் அவர்கள் பின்நிற்கவில்லை.

இந்தப்போக்கு வன்முறைகளின் வளர்ச்சிக்கும், ஜனநாயக மறுப்புக்கும், மனிதஉரிமை மீறல்களுக்கும் உட்பட்ட ஒரு சமூகத்தை எம் மத்தியில் வளர்த்துவிடும் என்று அந்த மக்கள் எண்ணி இருக்கவில்லை. புனிதர்கள்மீது அபார நம்பிக்கையை அவர்கள் கொண்டிருந்தார்கள். இன்று நடந்து இருப்பது என்ன? அதன் அறுவடையை ஈழத்திலும், ஈழத்திற்கு வெளியே புலம்பெயர்ந்த நாடுகளிலும் நாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்.

எந்த ஜனநாயக மறுப்புக்களுக்கும், மனிதஉரிமை மீறல்களுக்கும் சகல ஒடுக்குமுறைகளுக்கும் எதிராக ஆயுதம் ஏந்திப்போராட முன்வந்தார்களோ, அவர்கள் எல்லோரும் அதே ஆயுதத்தினால் அதே மறுப்புக்களையும் மீறல்களையும் ஒடுக்குதல்களையும் செய்யத் துணிந்த போது போராட்டத்தின் இலக்கு கேள்விக்குறியானது.

இந்தப்பயங்கர விளைவைக் கேள்விக்குட்படுத்திய சமூகஅக்கறை கொண்டோர், பத்திரிகையாளர்கள், படைப்பாளிகள், விமர்சகர்கள், புத்திஜீவிகள், போராளிகள் போன்றோரின் எழுத்து, கருத்துச் சுதந்திரங்கள் மறுக்கப்பட்டு

வன்செயல்கள் → / நாடுகள் ↓	பத்திரிகைத் தடை	பத்திரிகை விற்பனைத்தடை	சஞ்சிகைகள் மீதான தடைகள்	பத்திரிகையாளர்கள் மீதான தாக்குதல்கள்	அமைப்புகள் மீதான ☛ கட்டுப்பாடுகள் ☛ தலையீடுகள்	கொலைகள்	மற்றவைகள்
கனடா	★செந்தாமரை	★செந்தாமரை	★மாற்றுச் சஞ்சிகைகள் மீதான கண்காணிப்பு	★டி.பி.எஸ். ஜெயராஜ்	★பொது அமைப்புக்கள், ★தமிழ் வானொலி மீதான கட்டுப்பாடு ★தேடகம் எரிப்பு		
பிரான்ஸ்	★ஈழநாடு எரிப்பு	★சரிநிகர் ★தினமுரசு	★மாற்றுச் சஞ்சிகைகள் மீதான கண்காணிப்பு		★பொது அமைப்புக்கள், மீதான கட்டுப்பாடு ★தமிழ் வானொலி மீதான கட்டுப்பாடு	★ஈழமுரசு கஜேந்திரன் ★விடுதலை புலிகள் நிதிப்பொறுப்பாளர் நாதன் ★சபாலிங்கம் ★நிதர்ஷினி	
சுவிஸ்	★தமிழ் ஏடு	★சரிநிகர் ★தினமுரசு ★தமிழ் ஏடு	★மனிதம்	★பாலசுப்ரமணியம்	★பொது அமைப்புக்கள், மீதான கட்டுப்பாடு ★புலிகள்-புளொட் மேதின மோதல்கள்	★புளொட் உறுப்பினர் ★கவுண்டர் ★குமாரசுவாமி	★ஈஸ்வரன் மீதான அச்சுறுத்தல், [redacted]
ஜேர்மனி			★மாற்றுச் சஞ்சிகைகள் மீதான கண்காணிப்பு		★பொது அமைப்புக்கள் மீதான கட்டுப்பாடு	★சுஜீதா ★குமார்	★குமரன் ஆசிரியர் மீதான தாக்குதல்
இங்கிலாந்து					★தமிழ் வானொலி மீதான கட்டுப்பாடு, தலையீடு		
நோர்வே			★மாற்றுச் சஞ்சிகைகள் மீதான கண்காணிப்பு				★தமயந்தியின் கண்காட்சி ஆவணங்கள் திருட்டு

ஈழத்தில் வாழ்வதற்கான உரிமையும் பறிக்கப்பட்டு, சொந்த மண்ணைவிட்டு வெளியேறக் காலக்கெடுக்களும், தவறின் மரணதண்டனைகளும் அறிவிக்கப்பட்டன. இந்நிலையில் கட்டாய பலாத்காரத்தினால் வெளியேற்றப்பட்ட அவர்கள் புலம்பெயர்ந்த சூழலிலும் தமது கருத்துக்களை முன் வைக்க முடியாதவாறு வன்முறைகள் அவர்களைத் துரத்துகின்றன.

புலம்பெயர்ந்த நாடுகளில் எம்மவர்களாலேயே எம்மவர் கள்மீது மேற்கொள்ளப்பட்ட வன்முறைகளை இவ்வாறு பாகுபடுத்தியுள்ளேன்.

- பத்திரிகைகள், சஞ்சிகைகள், பத்திரிகையாளர்கள் மீதான தடைகள், தாக்குதல்கள்.
- அமைப்புக்களுக்கு எதிரான வன்முறைகள், அச்சுறுத்தல்கள் - தலையீடுகள் கட்டுப்பாடுகள்.
- கொலைகள்

இங்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி இடம்பெற்ற வன்முறைகளை நாடுகள்வாரியாகத் தருவதற்கு முயற்சிக் கப்பட்டுள்ளது. இதன் கருத்து, இங்கு தரப்படாத நாடுகளில் எந்த வன்முறைகளும் இடம்பெறவில்லை என்பதல்ல. மாறாக கால அவகாசம் இன்மையினால் அவற்றையும் பெற்றுத் தொகுக்கமுடியவில்லை.

புகலிடத்தில் பத்திரிகைகள், பத்திரிகையாளர்கள் சஞ் சிகை வெளியீட்டாளர்கள் மீதான வன்முறைகள் அதிகரித் துவருகின்றன. கனடாவில் செந்தாமரை பத்திரிகையின் ஆசிரியர் டி.பி. ஜெயராஜ் தாக்கப்பட்டுள்ளார். சுவிஸில் வெளிவந்த 'தமிழ்ஏடு' பத்திரிகையின் ஆசிரியர் பாலசுப்பிர மணியத்திற்கு கொலைப்பயமுறுத்தல்கள் உட்பட பல அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டன. சுவிஸில் 'மனிதம்' சஞ்சி கைமீதும் ஒரு குழு கண்காணிப்பில் ஈடுபட்டது. LUZERN புகையிரதநிலையத்தில் அவர்கள் தமது சஞ்சிகையை விற்பனை செய்தபோது தடுக்கப்பட்டார்கள். மனிதம் குழு வினர்பற்றி பொலிஸாருக்கும் தவறான தகவல்கள் கொடுக் கப்பட்டன.

சில ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கையில் இருந்து வெளிவரும் தினமுரசு, சரிநிகர் பத்திரிகைகள்மீது சுவிஸி லும் பிரான்சிலும் விற்பனைத்தடை விதிக்கப்பட்டு இருந்தது. எனினும் சுவிஸில் ஒரு சில வர்த்தகர்கள் அத்தடையையும் மீறி விற்பனை செய்தனர். நான் பிரான்ஸ் சென்றிருந்தபோது 'லா சப்பல்' கடைகளில் தினமுரசு, சரிநிகர் தேடி அலைந் தேன். அந்த வர்த்தகர்கள், "அவை தடைசெய்யப்பட்ட பத்திரிகைகள் நாங்கள் அவற்றை விற்பனைசெய்ய முடி யாது. ஏன் வீண்வம்பு?" என்று கூறினார்கள். ஆனால் தற் போது 'தினமுரசு' தனது பார்வையை சட்டப்பையை நிரப் பும்வகையில் திருப்பி இருப்பதனால் அனுமதிக்கப்பட் டுள்ளது.

பொதுவாக மாற்றுக்கருத்துள்ள குழுக்களால் வெளியி டப்பட்ட சகல சிறுசஞ்சிகைகள்மீதும் ஏதோ ஒரு வகையில் வன்முறை இடம்பெற்றுள்ளது. அவற்றின்மீதான தடையாக அல்லது கண்காணிப்பாக அல்லது வெளியீட்டாளர்களுக் கான மிரட்டலாக அல்லது வேறுவடிவமாக இது அமைந்து இருக்கலாம்.

மனிதம், ஓசை, மௌனம், தூண்டில், சுவடுகள் போன்ற பல சிறுசஞ்சிகைகளை இதற்கு உதாரணமாகக் கொள்ள முடியும்.

கனடாவில் தேடகமும், பாரிஸில் ஈழநாடும் எரிக்கப்பட்ட சம்பவங்கள் ஈழத்தமிழர்களின் புகலிட வரலாற்றில் வன்மு றைகளின் புலப்பெயர்ச்சியைக் காட்டும் இரு முக்கிய விடயங்களாகும். ரொறன்ரோவில், 'தேடகத்'தில் ஆயுதக்க லாச்சாரத்திற்குப் பலியான ராஜினி திரணகம, றிச்சார்ட் டி சொய்ஸா, சபாலிங்கம் ஆகியோரின் நினைவாகக் கூட்டம் ஒன்றை நடாத்தியதைத் தொடர்ந்து 'தேடகம்' எரிக்கப்பட்டது.

மாத்தையாவுக்குப் பிரபாகரனால் விதிக்கப்பட்ட மரண தண்டனையை நியாயப்படுத்தி பாரிஸ் ஈழநாடு செய்தி வெளியிட்டிருந்ததைத் தொடர்ந்து ஈழநாடு காரியாலயம் எரிக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தில் ஈழநாடு காரியால யத்திற்கும், யாழ் நூலகத்திற்கும் தீவைத்த அரசபயங்கர வாதிகளுக்கும் இவர்களுக்கும் என்ன வித்தியாசம். வித்தி யாசங்களைத் தேடுவதைவிடவும் ஒற்றுமைகளைத் தேடு வது இலகுவானதல்லவா?

பாரிஸில் இடம்பெற்றுள்ள மூன்று அரசியற்படுகொலை கள் தமிழ்மக்களின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்தவை. விடுதலைப்புலிகளின் நிதிப்பொறுப்பாளர் நாதன், ஈழமுரசுப் பத்திரிகையின் ஆசிரியர் கஜன், இலக்கியவாதியும் மனித உரிமைகள்வாதியுமான சபாலிங்கம் ஆகியோரின் கொலை களே அவை.

நாதனையும் கஜனையும் குறிப்பிட்ட ஒரு இடத்திற்குச் சந்திக்க வருமாறு வஞ்சகமான முறையில் தகவல் கொடுத் தவர்கள் அங்கு காத்திருந்து அவர்கள் இருவரையும் சுட்டுக்கொன்றனர். அப்போது ஈழத்துப் பத்திரிகைத் தர்ம மும், ஜனநாயக அரசியலும் பாரிஸ் வீதியில் பிணமாக வீழ்ந்தன.

பாரிஸில் இடம்பெற்ற சபாலிங்கத்தின் கொலை மாற்றுக் கருத்துள்ள கலைஇலக்கியவாதிகளுக்கு பெரும் அதிர்ச்சி யாக அமைந்தது. அவரிடம் உதவிகேட்டு வந்த இரு துப்பாக்கி மிருகங்கள் அவரைச் சுட்டுக்கொன்றனர். மே முதலாம் திகதி உலகம் தொழிலாளர் தினத்தைக் கொண் டாடிக் கொண்டிருந்தபோது, வர்க்கவிடுதலையில் நம்பிக்கை கொண்டிருந்த அவரது உயிர் பறிக்கப்பட்டது.

இவற்றைத் தவிரவும் அரசியல் படுகொலைகளாக இல் லாதபோதும் எமது கொலைவெறிக்கு ஆதாரமாக அமையும் கொலைகளாக, சுவிஸில் வட்டிக்கொடுப்பனவுகளுக்காகக் கொல்லப்பட்ட கவுண்டர், குமாரசாமி ஆகியோரின் கொலை களும், பாரிஸில் அண்மையில் கொல்லப்பட்ட மாணவி நிதர்ஷனியின் கொலையும் மற்றும் ஜேர்மனியில் இடம் பெற்றுள்ள மாணவி சுஜீதாவினதும் குமாரினதும் கொலை களும் ஆவணப்படுத்தப்படவேண்டியவையே.

சுவிஸில் முன்னாள் புளொட் உறுப்பினர் கொல்லப்பட் டமையும், அண்மையில் காலமான ஈஸ்வரனுக்கு விடுக் கப்பட்டிருந்த கொலைப்பயமுறுத்தல்களும் அரசியல் சார் பானவையே. ஜேர்மனியில் கோடையிடி குமரன் தாக்கப் பட்டு கை ஒடிக்கப்பட்டார். நோர்வேயில் கண்காட்சி ஒன் றுக்காக ஆவணங்களைத் தயார்செய்து தமயந்தி எடுத்துச் சென்றபோது ஜனநாயகவிரோதச் சக்திகள் அவரது காரை உடைத்து ஆவணங்களைக் கொள்ளையடித்துச் சென்றனர்.

புலம்பெயர்ந்த நாடுகளில் தமிழர்களால் ஏற்படுத்தப்பட்டு சுயமாக இயங்கிவரும் மத, கலாச்சார, கல்விசார் பொது அமைப்புகளுக்குக் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவதுடன், அவர்களின் செயற்பாடுகளில் தலையிடுவதும் இடம்பெற் றுவருகின்றது. அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட தமிழ் வானொலிகளுக்கும் பத்திரிகைகளைப் போன்றே கட்டுப்பாடு களும் தலையீடுகளும் உள்ளன.

ஆயுதப்போராட்டம் ஊடாக வளர்ச்சி பெற்றுள்ள

கொலைக்கலாச்சார மிருகத்தனங்களாகவே இவற்றைக் கொள்ளவேண்டியுள்ளது. மிருகங்கள் உள்ளவரை மனித வேட்டைகளும் இருக்கும். இதனால் பல்வேறு மிருகங்களால் கொலைசெய்யப்பட்ட மனிதர்களின் பட்டியலைத்தரும் வ.ஐ.ச. ஜெயபாலனின் கவிதையில் இருந்து ஒரு பகுதி இங்கே,

யாழ் நூலகத்தை எரித்தது போல
யார் எங்கள் நூலகமான
மக்பூலுக்கு நெருப்பு வைத்தது

யாழ் நூலகத்தை எரித்ததுபோல
யார் எங்களது நூலகமான
வணசிங்காவைக் கொழுத்திப் போட்டது

யாழ் நூலகத்தை எரித்ததுபோல
யார் எங்களது நூலகமான
பிதா சந்திரா பெர்னாண்டோவை சாம்பராக்கியது

யாழ் நூலகத்தை எரித்ததுபோல
யார் எங்களது நூலகமான
கந்தசாமியைக் கருக்கிப் போட்டது.

யாழ் நூலகத்தை எரித்ததுபோல
யார் எங்களது நூலகங்களான
சபாலிங்கத்தைப் பாரிஸில் அழித்தது
செல்வியைப் பிடித்து நீறாக்கியது
யார் ஐயாவோடு சில்வா தோழரை
வன்னியில் பிடித்து ரயரில் எரித்தது

பதவிப்போட்டியில் தம் தோழரைக்கொல்ல
யாழ்ப்பாணத்து வைத்தியசாலையை
கசாப்புக்கடையாய் மாற்றியவர்கள் யார்
தாங்களும் தீவிர போராளிகளே என நிரூபிக்க
விஸ்வமடுவிலோர் ஏழையைப் பிடித்து
உளவாளியெனக் கொன்றெரித்தவர் யார்

இப்போது புரிகிறதா? புலம்பெயர்ந்த நாடுகளுக்கும் இவற்றின் தொடர்ச்சியாகத்தான் வன்முறைகள் புலம் பெயர்ந்தன. வன்முறைகளால் மனிதர்களைக் கொல்லலாம். ஆனால் அந்த மனிதர்களின் உன்னத இலக்குகளைக் கொலைசெய்யமுடியாது.

தொப்பி யாருக்கு அளவாக இருக்கிறதோ போட்டுக் கொள்ளுங்கள். ◆

இளைய அப்துல்லாஹ்

சாபக்கேடு

எரியும் தணலிடையுன்
ஊனுருகிப் போனது
உன் பால் பீச்சி
என் முகம் நிறையும்
உன் சிரிப்பு.

உன் பெரிய முலையிடுக்கில்
முகம் புதைத்தழுவேன்
கோதி மடிமீது
உச்சி மோர்ந்து....
சோர்வென்பது என்னம்மா?

துப்பாக்கி தொட்டிறக்கி
அநீதி பற்றி எப்போதும்
ஓதிக் கொண்டிருப்பாய்....
என்னலைச்சல் மீது
உனக்கும் சுமை.
உன்மீது எனக்குக் கோபமே வராத
அந்த ஒரு மணி நேர இரவில்....

என் வேதனைக்கு
ஈரலிப்பு வந்து விடுகிறது
பொதும்பிய துவாலையின்வழி
உருகி எரியிடை
வளரும் தீயென
உன் பூமுகம்...!

அம்மா!
எப்பிறவியில்
அநியாயம் இழைத்தேன்?
இழிந்து உருக்குலைந்து
சிதிலமாகிப் போன
உன் மார்பையும் முகத்தையும்
உடலையும்

முதலைப்பால இடிமதகினிலிருந்து
அள்ளி அணைத்துக் கொண்டு
கதறி அழுவதான
பொழுதை அடைந்தேன்.
காற்றில் வரும்
துர்வாடை மறந்து....

◆

25.02.99 அதிகாலை

ஆழிபுத்திரன்

ஓர் ஒளியேற்று!

நாளாந்தம்
குறையற்று உணவருந்தும் நீ
தினம் தினம்,
எண்ணிக்கை மறந்த நாட்களாய்
பசியில் வாடுவோருக்காக
ஓர் ஒளியேற்று.

ஒன்றுமில்லாதவர்களையும்
உணவின்றி
செத்துப் போவோர்களையும்
எண்ணிப் பார் சற்றேனும்.

பயங்கரவாதத்திற்கும்
அதன்
போர் முகத்திற்கும் எதிராக
எழுந்து செயற்பாடு கொள்.

உன்னை
நாடி வரும் மனிதத்தை ஆதரி.

அமைதியாலும், சமாதானத்தாலும்
உலகை கட்டியெழுப்ப
எம்மை அனுமதி
அந்த உன்னதமான உலகில்
நாம் அனைவரும் ஒன்றாயிருப்போம்.

உனது மட்டுமான நலனையும்,
அந்த நலனை நிறுவ
முன்னெழும் நிபந்தனைகளையும் ஒதுக்கிவிடு
உனக்காக
மற்றவர்கள் பாதிப்படையாது பார்த்துக்கொள்.

இந்த
மகத்தான வேள்விக்காக
ஏற்று ஒரு ஒளியை
அது
உன்னுள்ளே ஒளிர்வதை வெளிப்படுத்து.

விடிவுக்கான நம்பிக்கை ஒளியை
எரிய விடு.
இதனால் எங்கும்
அமைதியும் சமாதானமும் வளர்ந்து மலரட்டும்.

நோர்வேஜிய மொழி மூலம்: F.K. Blichfeld
தமிழில்: ஆழிபுத்திரன்

'இன்னும் எத்தனையோ?'

புகைப்படம்:
கலைச்செல்வன்

ஜோர்ஜ் குருஷ்சேவ்



கருத்துச் சுதந்திர மறுப்பு

கருத்துச் சுதந்திரம் என்ற கருதுகோள் எங்கள் சமூகத்திற்கு அந்நியமான ஒன்று போலத்தான் தெரிகிறது. மெலிந் தவனை மிதித்தும் வலிந்தவனை வாழ்த்தியும் ஊரோடு ஒத்தோடும் கூட்டத்திற்கு புதிய கருத்தும் அதற்கான சுதந்திரமும் என்பது 'நமக்கேன் வம்பு' என்ற ஜாக்கிரதை உணர்வுடன் கூடிய தக்கன பிழைக்கும் கூர்ப்புத் தத்துவம் சார்ந்ததாக இருக்கக்கூடும். அல்லது கருத்து இருப்பவனுக் குத்தானே சுதந்திரம் நமக்கு எதற்கு என்ற எண்ணமாகவும் இருக்கலாம்.

காலத்திற்குக் காலம் புதுக் கருத்துக்கள் தோன்றிய போதும் அந்தந்தக் காலங்களில் 'பேசாமல் இரடா, ஐயா சொல்லிறதைக் கேளடா' என்று அருகில் இருந்து பிடரியில் தட்டி அடக்குவதைத்தான் இந்த ஆண்ட தமிழினம் காலத்துக்குக் காலம் செய்து வந்திருக்கிறது. அப்படி அடக்காவிட்டால், ஐயாமாரே அதை அடக்கியும் வைப்பர். காலத்திற்குக் காலம் ஐயாமார் மாறினாலும் அந்தந்தக் காலங்களில் உள்ள ஐயாமார் 'சொல்லிறதைக் கேட்பதிலும்' நம் மவர்கள் சூரர்கள்.

'தட்டிக் கேட்போம்' என்று வாய்ச்சவடால் விடுவோர் எல்லாம் இப்போது 'திறவுங்கள்! தட்டப்படும்!' என்று 'தட்டிறதைக்' கேட்கமுடியாமல் இருக்கிறார்கள், 'கேட்டால், (தலையில்) கொடுக்கப்படும்' என்பதால்.

ஆட்சியில் இருப்போரைப் பகைத்துக்கொள்ளாமல், அநீதிக்கு எதிரான குரல் கொடுக்காமல், மக்களின் உணர்வுகளைப் பிரதிபலிக்காமல் பத்திரிகை (சு)தந்திரம் காத்த வீரகேசரி போல நடுநிலைப் பத்திரிகை நடத்த பலபேர் புகலிடங்களில் கனவுகளுடன் உள்ளனர். நடுநிலை என்பதே அதிகாரத்தைப் பகைத்துக் கொள்ளாதிருப்பது என்ற நிலை மீறி, ஒரு படி மேலே போய் குஷிப்படுத்தும் நிலைக்கு வேறு வந்திருக்கிறது. இயக்க ஊதுகுழல்களைவிட மிகைப்படுத்தி எழுதும் நடுநிலைப் பத்திரிகைகளே இங்கு அநேகம். கூட்டணி மற்றும் மற்ற இயக்கங்கள்பற்றி 'அம்பலப்படுத்தும்' தினமுரசு முதல் இறந்த இராணுவ எண்ணிக்கையை அறிவிப்பதில் 'வஞ்சகம்' பார்க்காத மற்ற புகலிட பத்திரிகைகள்வரைக்கும் கருத்துச் சுதந்திரம், நடுநிலைமை என்பது பற்றிய எங்கள் சமூகம் கொண்ட கருத்துக்களின் பிரதிபலிப்புகள்தான். இதனால் மகேசன் கருத்தே மக்களின் கருத்தாக மாறிவிட்டதில் வியப்பு ஒன்றும் இல்லை.

இந்தச் சமூகத்தில் தியாகமும் துரோகமும் வெகு இலகுவான வரை விலக்கணங்களில் அடங்கிவிட்ட நிலையில் மாற்றுக் கருத்துக்கள் துரோகங்களாக்கப்படுவது இலகுவாகிவிடுகிறது.

துரோகங்களுக்கு மரணமே பதில் என்ற விதிமுறைகள் அமுலாக இருக்கும்போது மாற்றுக் கருத்துகளுக்கு 'தட்டுதல்' உகந்த தீர்வாக அமைந்துவிடுகிறது.

இந்தச் சமூகத்தில் தியாகமும் துரோகமும் வெகு இலகுவான வரை விலக்கணங்களில் அடங்கிவிட்ட நிலையில் மாற்றுக் கருத்துக்கள் துரோகங்களாக்கப்படுவது இலகுவாகிவிடுகிறது. வித்தியாசமான கருத்துக்கள் துரோகம் என்று எண்ணும் மந்தைத்தனமான சிந்தனையால், தனித்துப்போன வெள்ளாடுகள் வேள்வியில் பலியிடப்படுவது ஏதோ பாவம் தீர்ப்பதற்கான வழிமுறையாகிவிடுகிறது.

துரோகங்களுக்கு மரணமே பதில் என்ற விதிமுறைகள் அமுலாக இருக்கும்போது மாற்றுக் கருத்துகளுக்கு 'தட்டுதல்' உகந்த தீர்வாக அமைந்துவிடுகிறது. இலக்குகளை அடைவதை இந்த மாற்றுக் கருத்துக்கள் பின்னடையச் செய்கின்றன என்ற பிரச்சாரமும் இந்தச் சமூகத்தில் எடுபடும் சூழ்நிலையில் சமூகமே இந்த மரணங்களை நியாயப்படுத்தத் தொடங்கியும் விடுகிறது.

'உன் கருத்தோடு உடன்பட முடியாவிட்டாலும், அந்தக் கருத்தைச் சொல்வதற்குரிய உன் உரிமையை என் உயிரைக் கொடுத்தேனும் காப்பேன்' என்ற பண்பு மறக்கப்பட்டு, 'என் கருத்தோடு உன்னால் உடன்பட முடியாவிட்டால் உன் உயிரை எடுப்பது என் உரிமை' என்ற நிலையில்தான் எங்கள் நிலை உள்ளது.

இந்தக் கொலைகள், அல்லது சரியான அரசியல் பதத்தில் சொல்வதாயின், களையெடுப்புகள் எதுவுமே

நியாயம் சார்ந்தவை அல்ல. கருத்துச் சுதந்திரத்தை அனுமதிக்க மறுப்பது ஒன்றும் மக்கள் நலன் சார்ந்ததும் அல்ல. தங்கள் நலன்பற்றி முடிவெடுக்கவேண்டியது அந்த மக்கள் தான். ஜனநாயகத்தின் அடிப்படையே அதுதான்.

இந்தக் கருத்துச் சுதந்திரமறுப்புக்கான அடிப்படை நோக்கங்கள் உண்டு. முதலில், கருத்துச் சுதந்திர மறுப்பே உண்மை வெளிவரும் என்ற பயத்தில் எழுவதுதான். வெளிவரும் உண்மைகள் தங்கள் அதிகார சொகுசுக்கும் ஆணவத்திற்கும் ஆப்பு வைத்து விடுமே என்ற பயம். வெளிவரும் உண்மைகள் மக்களைக் கிளர்ந்தெழ வைத்து, அதிகாரத்தில் இருந்து தூக்கியெறியப்படலாம் என்ற அச்சம். இதனால்தான் அவசரநிலை அமுலாக்கப்படுகையில் முதலில் பலியாவது பத்திரிகைச் சுதந்திரம். பொய்ப் பிரச்சாரங்களை வெளிவரும் உண்மைகள் அம்பலப்படுத்திவிடும் என்ற பயம்.

அடுத்தது. எஞ்சியிருப்போர்க்கான மிரட்டல்! களையெடுப்பு தொடரும்! மரணபயம் எஞ்சிய ஈனக் குரல்களையும் அடக்கிவிடும் என்ற எதிர்பார்ப்பு.

இதனால்தான் இந்த 'தேசவழமைச் சட்டத்தை அமுலாக்க' எல்லைகளைக் கடந்துகூட, அநீதி தன் கரங்களை நீட்டிக் கொள்கிறது. இலகுவாக இருந்தால் துரோகி என்றும், நம்பவைப்பது சிக்கலாக இருந்தால் தாங்களே கொன்றவனைத் தியாகியாக்கியும் கருத்துக்களை அடக்குவதும் களைந்தெறிய முனைவதும் நடக்கிறது. அதைக் கேட்டுக் கொண்டிருக்கும் கும்பலும் வேடிக்கை பார்த்துக் கொண்டே வெற்றிக்கூச்சல் போடுகிறது.

கறைபடியாத கரங்களுடன் ஆட்சியில் இருக்கும் தன் னம்பிக்கை கொண்ட தலைமைகளுக்கு இந்த அச்சம் இருக்க நியாயமில்லை. ஆனால் இரத்தவெறி கொண்டு அலையும் மிருகங்களுக்கு?

'உன்னையே நீ அறிவாய்' என்ற சோக்கிரட்டீசுக்கு நச்சுக் கிண்ணம்; 'பகைவனுக்கு அன்பு செய்வாய்' என்ற யேசுவுக்கு சிலுவை; 'உலகம் உருண்டையானது' என்ற கலிலியோவுக்கு சிறைவாசம்.

மனிதர்களைக் கொல்லலாம். ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும் கருத்துக்களைக் கொல்லமுடியாது.

சுதந்திரத்தை மறுக்கலாம். ஆனால் கருத்துக்கள் பொறியாகி, பிளம்பாகி, சோதியாகி.... சுடர் விடும். வழிகாட்டும். அத்தோடு சுட்டும் எரிக்கும். ◆

நஞ்சினி - Frankfurt

நான் பெண்

நான் பெண், எனது கத்தலைக் கேளுங்கள்;
நாங்கள் தொகையில் அதிகம், கவனிக்காமல் இருப்பதற்கு;
என்னை இடைபூறு செய்யமுடியாதபடிக்கு, எனக்கு அறிவு அதிகம்;
முன்பு கேட்டவையெல்லாம் நான் அடியில் இருந்தபோது;
என்னை மீண்டும் அடியில் அமுக்க எவராலும் முடியாது.
ஆம்! நான் அறிவானவள்;
ஆனால் இந்த அறிவு வலிகளில் இருந்து பிறந்தது;
ஆம், நான் விலை கொடுத்தேன்;
ஆனால் பார், எவ்வளவை வென்றுவிட்டேன் என்பதை;
நான் பலம் கொண்டுள்ளேன், என்னை வெற்றிகொள்ள முடியாது; நான் பெண்!
நீங்கள் என்னை வளைக்கலாம், ஆனால் என்னை ஒருபோதும் முறிக்கமுடியாது;
அது என்னை மேலும் திடமாக்குகிறது, எனது குறிக்கோளை அடைவதற்கு.
நான் இன்னும் பலமடைவேன்;
நான் ஆரம்பநிலையில் இல்லை
எனது நம்பிக்கையை நீங்கள் பலப்படுத்தியுள்ளீர்கள்
நான் பெண், நான் வளர்வதைப் பாருங்கள்;
நான் விரல்நுனியில் நிற்பதைப் பாருங்கள்;
எனது கைகளை வாஞ்சையோடு பூமிமேல் விரிக்கிறேன்.
ஆனால் நான் இன்னும் சிறிய கருத்தான்;
நான் போவதற்கு இன்னும் நீண்ட.... நீண்ட.... பாதைகள் உள்ளன.

இந்தியாவின் பெண்கள் விடுதலை இயக்கப்பாடல் ஒன்று.
இந்தியமொழியிலிருந்து ஜெர்மனுக்கு: CHRISTA WICHTERICH
ஜெர்மன்மொழியிலிருந்து தமிழில்: நஞ்சினி - Frankfurt

சி. புஸ்பராஜா

முழங்கால் இரண்டிலும் தலையை வைத்து, இரண்டு கைகளாலும் கால்களைக் கட்டி, சிந்தும் கண்ணீருடன் காட்டுசூசை செய்வதறியாது அந்த எலுமிச்சை மரத்தடியில் விறைத்துப் போயிருந்தான். கதறி அழவேண்டும் போலிருந்தாலும் அவனால் அது முடியவில்லை. அது பயத்தினாலா அல்லது இயலாமையினாலா என்பது மட்டுமல்ல கேள்வி; அது அவனது சுபாவமாகக்கூட இருக்கலாம். எல்லாமே முடிந்து விட்டது என்பதுகூட அவனால் முடிவுக்கு வராத ஒன்றுதான். பட்டகாலிலே படும், கெட்டகுடியே கெடும் என்பது அவனது வாழ்வின் சந்திகள். பொறுத்தார் பூமி ஆள்வார் என்பதில் அவன் நம்பிக்கை இழந்தவனாகிலும் அவனுக்கு பொறுமையைவிட வேறெந்த பற்றுக்கோல்களும் கிடைக்காத அப்பாவி.

அது மீன்பிடியைத் தொழிலாகக் கொண்டவர்களை பெரும்பான்மையானதாகக் கொண்டதொரு சிறிய ஊர். அந்த ஊரின் எல்லைப்பகுதியில் அடர்த்தியாக வளர்ந்திருந்த சிறிய பற்றைப்பகுதியை அந்த ஊர் மக்கள் காடு என சொல்வார்கள். வீடுகளில் வசதி இருந்தாலும் கடற்கரை ஓரங்களிலும், அந்தக் காட்டுப்பகுதியிலும் காலைக்கடன் செய்துகொள்வது அந்த ஊர் பழசுகளுக்கு (ஏன் சில இளம் வட்டங்களுக்குக்கூட) ஒரு சுகமான விருப்பம். சூசையின் வீடும் அந்தக் காட்டுப்பகுதியின் ஒரு மூலையில் இருப்பதால் சூசை காட்டுசூசையானான்.

வாழ்வின் சூட்சுமங்களோ, வெற்றியின் குறுக்குவழிகளோ, மற்றவர்களை ஏமாற்றும்கலையோ தெரியாததால் வாழ்க்கை என்பதே சூசைக்கு தினப்போராட்டமாகி, தானாகவே ஒதுங்குவது என்னும் கலையில் கைதேர்ந்தவனாகிவிட்டான். தன் உடன்பிறந்தவர்களெல்லாம் நிமிர்ந்து பார்க்கும் அளவுக்கு வாழ்வில் முன்னேறியது மட்டுமல்லாது அவர்களது பிள்ளைகளெல்லாம் டொக்டர், எஞ்சினியர் என வளர சூசை உயர்கோட்டின் அருகிலுள்ள சிறுகோடாகி மிக ஒதுங்கி காட்டுப்பகுதியில் தஞ்சமானான். சூசையின் வாழ்வும் கிராமத்து மக்களின் உறவும் ஓடும் புளியம்பழமும் கதையாகி எத்தனையோ ஆண்டுகளாகிவிட்டது.

☆☆☆☆

தறித்து எறிந்த பனைபோல் வீட்டில் அவர்களால் கொண்டுவந்து வீசப்பட்ட தனது மகனின் உடலைப் பலமுறை அருகில் சென்று பார்ப்பதும் மீண்டும் வந்து அந்த எலுமிச்சை மரத்தடியில் குந்தியிருப்பதுமாக மட்டுமே இப்போது காட்டுசூசையால் செய்யமுடிகிறது. யாரை நோவது யாரிடம் சொல்லி அழுவது. எல்லாம் முடிந்துவிட்டது. இனி யாரிடமும் யாசித்து பயனில்லை. பொங்கிவரும் கோபத்தை வெளியில் காட்டமுடியாத நிலையில், அடிக்கடி பாம்பு போல் மூசிக்கொண்டான் காட்டு சூசை.

காட்டுசூசையின் மூத்தமகன் உழைப்பில் வல்லியமானவன். அவன் தலை நிமிர்ந்தபிறகு அவர்களது குடும்பம் தளர்ந்து போயிருந்த காட்டுசூசையின் மனமும் இப்போ மோசமாகத் தளர்ந்தது. "அட இந்த நாசமாப் போனவன் ஏன் இப்படிச் செய்தான்?" என ஏங்கி நொந்துகொண்டிருந்தான். வெகுகாலத்துக்கு தன்னால் தனது குடும்பத்தைத் தள்ளமுடியாது என்பதை நினைக்கும் பொழுது அவனுக்கு பிரமைபிடித்தது போலாகியது.

கட்டுமரங்களெல்லாம் மாறி பெரிய பெரிய இயந்திரங்கள் பூட்டிய வள்ளங்களாகி, நைலோன் வலைகள், அறக்கொட்டியான் வலை, திருக்கை வலை, சூடை வலை என மாற்றங்கள் கண்டும், ஒரு களங்கட்டி வலைகூட இல்லாது வெறும் வீச்சுவலையும், கூடுமாக அலையும் காட்டுசூசையால் எதைச் சாதிக்கமுடியும்; யாருடன் தாக்குப்பிடிக்கமுடியும்? ஒரு வாரக் கூட்டுக்குக்கூட ஆழ்கடல்போக பயம்கொள்ளும் அப்பிராணி அவன். தன்னிலையை எண்ணித்தானே அழுதுகொள்வான். இரண்டு மகன்கள் இருந்தும், அவர்கள் இல்லை

நான் + நீ = அராஜகம்

கொஞ்சம் செல்வச் செழிப்புடன் ஊர் பார்க்க வாழ்ந்தார்கள். ஆனால் திடீரென மூத்தவன் யாரோ ஒரு பொட்டையைக் கூட்டிக்கொண்டு ஓடியதும் காட்டுசூசை குடும்பம் காற்றில் அகப்பட்ட காகிதத் துண்டாகியது. சூசையின் தலையில் இடிவிழுந்தது. அடுத்தடுத்த நாலு பெட்டைக் குஞ்சுகளுக்குப் பிறகு கடைக்குட்டியாக ஒருவன். அவனது வரவை எதிர்பார்த்து காட்டுசூசை களம் இறங்கி தன் குடும்பத்தை தள்ளலானான்.

காட்டுசூசையைப் பொறுத்தமட்டில் நாடு பிடிக்கும் போராட்டம் தீயாக படரத் தொடங்கியது பற்றியோ அல்லது அப் போராட்டம் இளைஞர்கள் கையில் மாறியது பற்றியோ பெரியதொரு 'கற்பு' இல்லாமல் தான் தனது வீடு, கடல் என்று ஓரமாகத்தான் வாழ்ந்தான். ஆனால் ஒருநாள் இரவு அவனது மீசை அரும்பிக்கொண்டிருக்கும் மகன் நாடு பிடிக்க வீட்டைவிட்டு ஓடிவிட்டான் என்று அறிந்தபோது மீண்டும் தலையில் இடி விழுந்து தகர்ந்துபோனான். உடல் என்ற கதையாகி வாழ முற்பட்டுக்கொண்டான்.

ஊரெல்லாம் பொடியள் அந்த இயக்கம் இந்த இயக்கமென வலம் வந்தார்கள். இப்படித்தான் ஒருநாள் திடீரென சூசையின் கடைக்குட்டி துப்பாக்கியும் கையுமாக வந்துநின்றான். சூசை கலங்கிப் போனான். பெத்தமனது பித்தானது. கண்கள் கலங்கியது. கோபங்கள் எல்லாம் பனிக்கட்டியாகியது. மலைபோல் பிரச்சனைகளை மடுபோல் எண்ணினான். என்னதான் இருந்தாலும் தனது மகனைப் பார்த்து மனதுக்குள் பெருமைப்பட்டுக்கொண்டான். தனக்கில்லாத வீரமெல்லாம் தனது பயலுக்கு எப்படி வந்தது என ஆச்சரியப்பட்டான். காணிக்கைமாதா கோவில் வளவில் நடக்கும் நாட்டுக்கூத்தில் மாபெரும் வீரனாக தோன்றும் செபஸ்தியாரின் நினைவு ஒரு மின்வெட்டில் அவனுக்கு வந்து போனது.

காட்டுசூசையின் மகன் தனது இயக்கப்பொடியளுடன் நாளுக்கொரு ஆயுதமும் - நாளுக்கொரு வாகனமுமாக

ஊரில் வலம்வந்து கொண்டிருந்தான். அதுவரை ஊரின் கோடியில் அந்தக் காட்டுப்புறத்தில் ஒதுங்கி வாழ்ந்த சூசை ஊர்மக்கள் மத்தியில் கொஞ்சம் நெஞ்சை நிமிர்த்தி உலா வந்தான். ஊராரும் சூசைக்கு மரியாதை கொடுத் தார்கள். நாலு ஐந்து இயக்கங்கள் - அதுவும் இயக்கங்களின் பெயர்களைச் சுருக்கமாக ஆங்கிலத்தில் பலரும் கதைப்பதால் சூசையால் அவைகளைப் புரிந்துகொள்ள கொஞ்சம் கஷ்டமாகத் தான் இருந்தது. ஆனாலும் தனது மக னிருக்கும் இயக்கத்தின் பெயரைக் கேட்டு அறிந்து மனப்பாடம் பண்ணிக் கொண்டான். கேட்பவர்களிடம் தன் மகன் இருக்கும் இயக்கம்தான் பெரியது எனப் பெருமையடிப்பதுடன் அதன் பெயரையும் சரியாகச் சொல்லிக் கொண்டான். இருந்தாலும்கூட ஏன் இத் தனை இயக்கங்கள்; எல்லாரும் ஒரு இயக்கமாக இருந்தால் என்ன என தனது சிறிய அறிவுக்கு எட்டியவரை யோசித்து, ஏதோ பொடியள் பிழை யாகவா செய்யப்போகிறாங்கள் எல்லாத் துக்கும் ஏதோ காரணம் இருக்கத்தானே செய்யுமென ஆறுதல் கொள்வான்.

☆☆☆☆

நாடுபிடிக்கும் போராட்டம் உக்கி ரமடையத் தொடங்க இயக்கங்களி டையேயும் போட்டியும், பொறாமையும் தலைதூக்கத் தொடங்கியது. இந்நிலை யானது அந்நியத் தலையீடுகளினால் நெருப்பிடை நெய்யானது. நடப்பவை அறியாது காட்டுசூசை தன் மகனின் பெருமையையும் - கடலும் - குடும்பமு மாக கொஞ்சம் மகிழ்வாகத்தான் தோன் றினான். இயக்கங்களின் போட்டியும், பொறாமையும் ஒன்றைஒன்று அழிக்கும் நிலையும் அதனால் காலத்துக்கொரு இயக்கத்தின் கை ஓங்குவது; மறு இயக்கங்கள் மறைவது என சித்து வித்தை விளையாட்டாக விடுதலைப் போராட்டம் மாறி மக்களும் வசதிக் கேற்ப பல பிரிவுகளாகப் பிரிந்து மகிழ் வதும், இகழ்வதும், துயர்வதுமாக புதுக் கோலம் கொண்டது விடுதலைப் போரா ட்டம்.

இயக்கங்கள் விடுதலைப்போரைவிட சக இயக்க அழிப்பில் முன்னின்றபோது காட்டுசூசையின் மகனின் இயக்கத்தின் கைஓங்கிநின்றது. எதிரியின் படைக ளைத் தேடியழிக்கும் வீரமும், வேக மும் சொந்த இரத்தங்களை சுவைப் பதில் திசைதிருப்பப்பட்டது. காட்டு சூசையின் மகனும் ஒன்றுக்கும் சளை க்காதவனாக தன்னியக்கத்தின் கட மையை நிறைவேற்றும் முன்னணிவீர னாகத் தன்னை எண்ணிச் செயற்பட் டான். பால்-வயது வேறுபாடுகளின்றி சுட்டும்-வெட்டியும், வதைத்தும்-எரித்தும் வீசப்பட்டார்கள், புதைக்கப்பட்டார்கள் சகோதரர்கள். துரோகிகள்-காட்டிக் கொடுப்பவர்கள்-சமூகவிரோதிகள் என துண்டுப் பிரசுரங்கள், மேடைப்பேச்சுக் கள் நியாயம் கற்பித்தன. மக்கள் மௌனித்தனர், சிலர் மகிழ்ந்தனர்.

இப்போதெல்லாம் காட்டுசூசையின் மகன் அவனது வீட்டுப்பக்கமே வருவது குறைந்தது. அவனுக்கு இரவேது, பக லேது? மறைந்திருக்கும் மாற்று இயக் கப்போராளிகளைத் தேடுவதிலும், அழி ப்பதிலும் மட்டுமல்லாது அவர்களுக்கு உதவுபவர்கள், உணவு கொடுப்பவர் கள், குடிநீர் கொடுப்பவர்கள் எனப் பலரையும் அழிக்கும்-ஒடுக்கும் மாபெ ரும் புனிதப் போராட்டம் அவன் சார்ந்த இயக்கத்தின் இலட்சியமானதால்; அதை நிறைவேற்றுவதில் அவன் தவக் கோலம் பூண்டான்.

தங்கள் நிலங்களில், வீடுகளில் அந்நியப்படைகள் புகுந்தது கண்டு பொங்கியெழுந்த மக்கள், இப்போது சொந்தப்படைகள் புகுந்து விளையா டுவதைப் பார்த்து மௌனித்தனர் சிலர் மகிழ்ந்தனர். எங்கும் கைதுகள், விசார ணைகள், தண்டனைகள், மின்கம்ப சட லங்கள்; கிணற்றில், குளத்தில், வீதி யில் என உடல்கள் எறியப்பட்டன. கோரத்தாண்டவ நிலையை விடுதலைப் போராட்டம் அடைய பயத்தின் அராஜ கத்தின் அர்த்தங்களை மக்கள் கற்ற றிய முனைந்தனராயினும் தோற்கடிக் கப்படும் மனிதநேயம்பற்றி யாரும் கவலை கொண்டதாகத் தெரிய வில்லை.

காட்டுசூசைக்கு பித்துப்பிடித்த நிலை. தனது மகன் வீட்டுக்கு வராமல் இருப்பதும், அவனைப்பற்றி ஊரார் ஒளிவும் மறைவுமாக பேசிக்கொள்வ தும்; இயக்கப்பொடியள் பலரைத் தன் மகனே கொன்றதாக அறியும் தகவல்க ளும் அவனை நிலைகுலைய வைத் தன. தனது மகனின் பெருமைகளால் நிமிர்ந்திருந்த அவனது நெஞ்சு இப்போ வேதனையால் துவண்டது. யார் செய்த பாவமோ இப்படி என் தலையில் இடியா னதே என அவன் நொந்துகொண்டான். ஊரார் தன்னைக்கண்டு பயந்து ஒதுங் குகிறார்களா? அல்லது சினந்து ஒதுங் குகிறார்களா? என அவனால் பகுத்தறி யமுடியவில்லை. ஆனால் தான் மட்டும் ஒதுங்கி ஒதுங்கி போவது என்னும் பிரமை அவனுள் ஏற்பட்டது. அது உண்மையும்கூட. ஆம், சூசை மீண்டும் ஒதுங்கி மௌனிக்கலானான்.

திடீரென ஒருநாள் தனது இயக் கப்பொடியளுடன் தேவைக்கதிகமான ஆயுதங்களுடன் ஜீப்வண்டியில் மகன் வந்திறங்கியபோது காட்டுசூசை ஆடிப் போய்விட்டான். வாரிவிடப்படாது கலை ந்து போயிருந்த தலைமயிரும், சிவந்து போன கண்களும், காய்ந்து கறுப்பே றிய முகமுமாக அவனது தோற்றத் தைப் பார்க்க காட்டுசூசையின் நெஞ் சில் ஈரம் ஊறமறுத்தது. என்னவோ எல்லாம் கேட்கவேண்டுமென காத்தி ருந்த அவன் எல்லாம் மறந்து கலங்கி நின்றான். காட்டுசூசையின் மனைவி எந்த உணர்வுகளுமில்லாது வந்தவர்க ளுக்குத் தேநீர் போட்டுக் கொடுத்து விட்டு ஒரு மூலையில் மரமாக நின் றாள். ஏதோ தோன்றியவன்போல் காட் டுசூசை தனது மகனைத் தனியே அழைத்து "என்ர ராசா மதவடி ராக வனை வேறை இயக்கம் என்று சொல்லி நீதான் சுட்டது என ஆக்கள் கதைக்கினம். உண்மையோ" என இறங்கிய, இரங்கிய குரலில் கேட்டான். "ஓம் அவனைத் துரோகி என முடிவு செய்து நாங்கள்தான் சுட்டது" என கத்திச் சொன்னான் காட்டுசூசையின் மகன். நீ சுட்டியா-நீங்கள் சுட்டீர்களா? நா வரை வந்தது கேள்வி, எல்லாம் முடிந்தபின் அர்த்தமற்றது என காட்டு சூசை கேட்காமலே விட்டான். இப் போது காட்டுசூசையால் தன் மகனை ஒரு வீரனைப்போல் வீறாப்புடன் பார்க் கமுடியவில்லை. இது எங்கு போய் முடியப்போகிறதோ என்னும் இனம் புரி யாத பயம் அவனைக் கௌவிக்கொண் டது. வீட்டுமுற்றத்திலுள்ள எலுமிச்சை மரத்தடியில் போய் குந்திக்கொண்டி ருந்து வானத்தை வெறித்துப் பார்த் துக்கொண்டிருந்தான் காட்டுசூசை.

☆☆☆☆

சக்கரம் சிறிதே சுற்றியது. மேல் கீழாகியது. கீழ் மேலாகியது. அடங் கியவர்கள் அடக்கப் புறப்பட்டார்கள்; அடக்கியவர்கள் ஒளிந்து மறைந்தார் கள். பழைய கடைகள் கட்டப்பட்டன; புதிய கடைகள் திறக்கப்பட்டன. துரோ கிகள்-காட்டிக்கொடுப்பவர்கள் எனப்பட் டோரின் பாத்திரங்கள் மாறியது. ஆம் காட்டுசூசையின் மகனின் இயக்கம் இப்போ வேட்டைக்கு இலக்காகியது. மற்ற இயக்கத்தின் கை ஓங்கியது. இயக்கத்தவரின் முகங்கள் மாறியதே தவிர செயல்கள்? வீறாப்புடன் ஆயுதம் ஏந்தியவர்களின் குதிரையேறிய பார்

வைகள், புழுதி கிளப்பி ஓடும் வாகனங்களில் அவர்களின் வருகைகள், மனிதரை வெறும் புழுக்களாக எண்ணும் நடைகள். எதிரியை மறந்து சொந்தத்துக்குள் குருசேத்திரம் அமைக்கும் வேகம் - சகோதரர்களை வேட்டையாட உள்ள துடிப்பு எதுவும் மாறவில்லை; இப்போ இயக்கம் மாறியுள்ளது.

காட்டுசூசையின் மகன் தலைமறைவானான். அவனது இயக்கத்தையும், இயக்கப்பொடியளையும், இயக்க ஆதர வாளர்களையும் வேட்டையாடி அழிப்பதில் மற்ற இயக்கம் வெறியாக அலைந்தது. அந்த இயக்கத்துக்கு சற்றும் சளைக்காமல் இந்த இயக்கமும் எங்கும் கைதுகள்-விசாரணைகள்-தண்டனைகள்-மின்கம்ப சடலங்கள், கிணற்றில் - குளத்தில்-வீதியில் உடல்கள் என மிகவும் பரபரப்பாக வேலைகளை முடுக்கி விடுதலைப்போரை பறணில் ஏற்றியது. விடுதலைப்போராட் டத்துக்காக இயக்கத்தில் சேருவது என்பது பழைய கதையாகி, பழிக்குப் பழிவாங்க இயக்கத்தில் சேருவது என்னும் புதிய தத்துவமும் இணைக்கப்பட்டது. மக்கள் மௌனித்தனர். சிலர் மகிழ்ந்தனர்.

புதிதாக அதிகாரத்தை (அநியாயத்தை) புரிய வந்த இயக்கத்தினரால் காட்டுசூசையின் ஊருக்கு (ஏரியா) பொறுப்பாளர்களாக நியமிக்கப்பட்டவர்கள் அதிதீவிரமாக சூசையின் மகனை வேட்டையாட அலைந்தனர். அதுவும் அவனால் கொல்லப்பட்டவன் எனச் சொல்லப்பட்ட மதவடி ராகவனின் தம்பியும் இயக்கத்துடன் சேர்ந்து பேயாய் அலைந்தான். இவர்கள் அடிக்கடி காட்டுசூசையின் வீட்டுக்குப் போய் அச்சுறுத்தினார்கள். சில நாட்கள் நடுச்சாமத்தில் வீட்டுக்குள் புகுந்து மகனைத் தேடுவது என்னும் பெயரில் காட்டுசூசையையும் அவனது குடும்பத்தையும் மரணபயத்துக்குள்ளாக்கினார்கள். "உங்கள் மகனை வெளிப்படுத்துங்கள் அல்லது உங்கள் குடும்பத்தையே அழித்துவிடுவோம்" எனச் சவால்விட்டார்கள். நல்ல கூரான கத்தியையே வாழ்வில் காணாத காட்டுசூசை புதிய புதிய ஆயுதங்களையும் அதை ஏந்தியவர்களையும் நெஞ்சில் சிறிதும் ஈரமற்ற அவர்களின் நடவடிக்கைகளையும் கண்டு வெலவெலத்துக்கொண்டிருந்தான்.

திடீரென ஒருநாள் வந்தவர்கள் காட்டுசூசையின் வீட்டுக்குள் புகுந்து அவனின் தலைமயிரில் பிடித்து தொரதொரவென இழுத்துவந்து வீட்டுமுற்றத்தில் அவனை முழங்காலில் நிற்கவைத்து அவனது மகன் எங்கே? இங்கு வருவதில்லையா? என விசாரித்துவிட்டுப் போனார்கள். இத்தனைக்குப் பிறகு காட்டுசூசைக்கு வாழ்வுமீதான நம்பிக்கையே அற்றுப்போனது. பயம், வெறுப்பு, இயலாமை காரணங்களால் அவன் கடல் பக்கமே எட்டிப் பார்க்காமல் விட்டுவிட்டான். அவனும் அவனது குடும்பமும் வீட்டுக்குள் முடங்கிக்கொண்டது. அடுப்பில் நெருப்பெரிவதே பெரும்பாடாகியது.

காட்டுசூசையின் மகனுடன் தொடர் புடையவர் எனப் பேசப்பட்ட ஆலடி அரசு விசாரணைக்கென இயக்கத்தவர்களால் அழைத்துச் செல்லப்பட்ட மறு நாள் கிணற்றுக்குள்ளிருந்து சாக்குக்குள் (கோணி) கட்டப்பட்ட பிரேதமாக வெளியில் எடுக்கப்பட்ட செய்தி அறிந்த காட்டுசூசையின் நெஞ்சு பதறிக்கொண்டது. தனது மகனுடன் தொடர்பு என்று சந்தேகிக்கப்பட்டவனுக்கே இந்தக் கதி என்றால்...? தன் மகனின் முடிவை அவன் யூகித்துக்கொண்டான். ஒன்றுமே தோன்றாதவனாக ஒரு மெழுகுவர்த்தியுடன் காணிக்கை மாதாவின் காலடியில்

சரணானான். புலம்பவேண்டும், கதற வேண்டும்போல் தோன்றியது. சர்வபயமும் அவனை ஆட்கொண்டு விம்மினான்; நேரம்போவது தெரியாது விம்மிக் கொண்டேயிருந்தான். இறுதியில் மாதாவின் காலடியிலேயே சோர்ந்து தூங்கி விட்டான்.

☆☆☆☆

அது நடந்துதான் விட்டது. சீறிப் பாய்ந்து வந்த வாகனத்திலிருந்து அவர்கள் இறங்கினார்கள். காட்டுசூசையையும் அவனது மனைவியையும் அழைத்தார்கள். சர்வசாதாரணமாக "உங்கடை மகனின் உடலை சிறிதுநேரத்தில் கொண்டுவருவோம். யாரும் சத்தம் போட்டு ஆர்ப்பாட்டம் செய்யக்கூடாது..." அவர்கள் கூறிமுடிக்கவில்லை, சூசையின் மனைவி "என்ரை யேசுவே" எனக் கதறியபடி நிலத்தில் புரண்டாள். காட்டுசூசை பதறியபடி மனைவியைக் கட்டிக் கொண்டான். "ஏய் நாங்கள் தமிழிலைதானே சொல்றம். விளங்கவில்லையா" என வந்தவர்களில் ஒருவன் அதட்டினான். காட்டுசூசையின் கையை முரட்டுத்தனமாகப் பிடித்து இழுத்து "நாங்கள் சொல்றதைக் கவனமாய்க் கேள். இங்கு கத்திக் குழறி கூட்டம் சேர்க்கவேண்டாம். நாங்கள் நினைத்திருந்தால் அங்கேயே உங்கடை மகனை எரித்திருப்போம். ஏதோ நீங்கள் நல்லசனம் எண்டபடியால் உடலைத் தருகிறோம்" மனிதாபிமானத்தின்(?) காவலர்களாக பேசியவர்கள் வேகமாகப் புறப்பட்டார்கள். "எங்கடை பிள்ளைக்கு என்ன நடந்தது தம்பியள்" என நடுங்கும் குரலில் சூசை கேட்டான். "அவருக்கு எங்கடை இயக்கம் எப்பவோ மரணதண்டனை விதிச்சது. காலமைதான் அம்பிட்டார்" என்றபடி அவர்கள் புழுதிகிளப்பிப் பறந்தார்கள்.

சத்தம்கேட்டு நடந்ததை ஊகித்துக் கொண்ட காட்டுசூசையின் மகள்களும் ஓடி வந்தார்கள். இப்போ எல்லோரும் சேர்ந்து கதறி அழுதுகொண்டிருந்தார்கள். காட்டுசூசையின் குடும்பம் அநாதரவாக புலம்பும் நிலையைக்கண்ட ஊரவர்கள் விடயமறிந்து சிறிய பயத்துடன் தயங்கித் தயங்கி வந்தார்களாயினும், செய்வதறியாது ஊமைகளாக நிலைகுத்தி நின்றார்கள். சிறிது நேரத்தில் சீறிப் பாய்ந்து வந்த இரண்டு மூன்று வாகனங்களிலிருந்து அவர்கள் இறங்கினார்கள். காட்டுசூசையின் மகன் உடலை ஒரு வாகனத்திலிருந்து இறக்கி வீட்டுக்குள்ளே கொண்டு சென்று அங்குள்ள மரப்பலகை போன்ற படுக்

கையில் வீசி எறிவது போன்று போட்டார்கள். நெஞ்சிலும் தலையிலும் வயிற்றிலும் அடித்துக் கதறியபடி சூசையின் குடும்பம் வீட்டுக்குள் ஓடி வந்தது. சூசை தனது மகனின் உடலைப் பார்த்தான். வலது முழங்கால் துப்பாக்கியால் சுடப்பட்டுச் சிதறியிருந்தது. நெஞ்சிலும் வயிற்றிலும் சூடுபட்டிருந்தது. முகத்தில் கட்டையால் அடித்ததுபோல் பெரிய காயங்களிலிருந்தது பெற்றமனம் பற்றி எரிந்தது. ஓடிப்போய் வீட்டுமுற்றத்தி லிருந்த எலுமிச்சை மரத்தினடியில் குந்தியிருந்து தலையிலடித்து அழத் தொடங்கினான்.

காட்டுசூசையின் குடும்பம் இயக்கத் தவர்களால் எச்சரிக்கப்பட்டது. வந்தவர் களில் முதன்மையானவன்போல் தோன் றியவன் காட்டுக்கத்தல் கத்தினான். "யாரும் சத்தம் போடக்கூடாது. இன்னும் இரண்டு மணித்தியாலங்களுக்குள் மர ணச் சடங்குகளை முடித்து பிரேதத்தை எடுத்துவிடவேண்டும். பிரேத ஊர்வலத் தில் வீட்டுக்காரர்களைத் தவிர யாரும் வரக்கூடாது" எனக் கட்டளை இட்டுக் கொண்டிருந்தான். மனதிற்குள் குமுறிக் கொண்டிருக்கும் கோபத்தை வெளியில் கொட்டவேண்டும் போல் காட்டுசூ சைக்கு இருந்தது; அடக்கிக் கொண் டான். "இவர்கள் கொடுமையானவர்கள்; இரக்கமற்றவர்கள். தான் ஏதாவது சொல்லப்போய் அதையே மனதில் கறளாய் வைத்து நாளைக்கு ஒரு நாள் தனது மகள்களில் யாரையாவது பிடித்து இராணுவத்துக்கு தகவல் கொடுத்தால் அல்லது வேறு இயக்கங்களுடன் தொடர்பிருந்தது எனச்சொல்லி கிணற் றிலோ குளத்திலோ சுட்டுப்போட்டார்க ளானால் என்ன செய்வது என எண்ணி னான்.

இயக்கப்பொடியளில் ஒருவன் வாயி லும் வயிற்றிலும் அடித்து அழுது கொண்டிருக்கும் காட்டுசூசையின் மனை வியை அழைத்து "களைப்பாக இருக் கிறது. எங்களுக்குத் தேநீர் போட் டுத்தா" என மிக சாவகாசமாகக் கேட் டான் "அட கொலைகாரப் பாவியள். உங்களுக்கு எதுக்கடா தேத்தண்ணி" எனக் கத்திய மனைவியைத் தள் ளிக்கொண்டு போய்விட்டுவிட்டு தான் தேநீர் போட ஓடினான் காட்டுசூசை. அவனது மனம் அந்தளவுக்கு பேத லித்திருந்தது - பயந்திருந்தது. காட்டு சூசையினால் கொண்டுவரப்பட்ட தேநீ ரில் நஞ்சிருந்தாலும் என்ற சந்தேகத் திலோ என்னவோ காட்டுசூசையை முத லில் குடிக்கும்படி கேட்டு அவன் குடித் தபின்பே வாங்கிக் கொண்டார்கள் இயக் கவீரர்கள்.

இயக்கக்காரர்களால் விதிக்கப்பட்ட காலக்கெடு முடிந்தது; உடலை எடுக் கும்படி கட்டளையிடப்பட்டது. காட்டுசூ சையின் குலக்கொழுந்தின் உடல் தூக் கப்பட்டது. இயக்கக்காரர்களின் உத்தர வைமீறி காட்டுசூசை குடும்பம் கதறி அழுதது. மரணஊர்வலம் புறப்பட்டது. பிரதானவீதியில் வந்தபொழுது என்ன நினைத்தானோ தெரியவில்லை காட்டு சூசை வீதியில் வீழ்ந்து கதறினான். "அடப்பாவிகளா.... இவங்களைத் தட டிக்கேட்க யாரும் இல்லையா" என, தான் இதுவரை காத்த மௌனவிர தத்தைக் கலைத்தான். மிகவேகமாக வந்த இயக்கக்காரன் ஒருவனின் கை சூசையின் பிடரியில் தாக்கியது. தாக்கி யவன் இரத்தமாகச் சிவந்து போயிருந்த சூசையின் முகத்தைப் பார்த்தான். "டேய், வாயைப் பொத்திக்கொண்டு வாடா" எனக் கத்திய அவனை நேரெ டுத்துப் பார்த்த காட்டுசூசை "என்றோ ஒரு நாள் இவன்கள் தட்டிக் கேட் கப்படுவான்கள். நிச்சயமாக தட்டிக் கேட்கப்படும்" அவன் மனம் சொல்லிக் கொண்டது. காட்டுசூசை தன்மகனைப் பின்தொடர்ந்தான். ◆



புகைப்படம்: சி. புஸ்பராஜா

நா. விச்வநாதன்

நீ-நான்-அவர்கள்

அது வரவேண்டும்தான்-
மிருதுவாக-
ஒரு மெல்லிய இறகு
தடவி பறப்பதேபோல்-
ஒரு சினேகிதனின்
இதமான பேச்சு
இழுத்துச் செல்வதேபோல்
பூவின் வாசத்தில்
கரைந்து புறப்படுவதுபோல்
அது வரத்தான்வேண்டும்
இயற்கையின்
சொந்தக்காரர்கள்
என்பதால்
அதுவும் அதுபோல
அமைவதுதான் நியாயமானது -
அது
வாழ்க்கையின் நேர்த்திகளில்
நியாயங்களில் ஒன்றாக
உருக்கொள்வது உத்தமமானது
ரகஸ்யமாய்
ஒரு கோழையின்
அர்த்தமற்ற சவடால்போல்
அது வருவது
ஒவ்வாதது - ஆனாலும்
என் சினேகிதமே
உனக்கும் உனக்கானதாய்
எனக்கும்கூட
அப்படி நேராதது சோகம்தான்
எப்படி நேர்ந்தது-
செயற்கையாய் ஆச்சர்யமாய்-
ஒவ்வொரு துளி குருதியும்
அர்த்தத்தோடுதான்
பூமியில் சிந்தவேண்டும்
என்ற லட்சியம் பேசினது
நினைவிலிருக்கிறது.
பூவின் இதழை
கிள்ளியெடுக்கக்கூட
ஒப்பியதில்லை-
பார்த்தே சந்தோஷித்த
காலங்கள் ஞாபகத்திலிருக்கிறது.
மென்மையைக் களவாடுவது
வெளிச்சத்தைத் திருடுவது
புன்னகையைச் சிதைப்பது
அவ்வப்போது நேரத்தான்
செய்கிறது-
பின்னால் திரும்பினால்
தெரிகிறது தொடர்ச்சி-
அர்த்தமற்ற காரியங்கள்
எவ்வளவோ

அதிலொன்று இதுவென
இப்போதைக்குச் சொல்லிக்
கொள்ளலாம்-
மென்மையையும்
மேன்மையையும்
முகத்துச் சிரிப்பையும்
பறித்துப் போனவர்கள்
திரும்பவருவர்
கனம் சுமக்கமுடியாமல்-
நீயும் உன்னோடு நானும்
விட்டுச் சென்ற
நினைவுகள்
வழித்தடமாகவும் கூடும்-
அவர்கள் திரும்ப வருவர்
எடுத்துச் சென்றதைத்
திரும்பக் கொடுக்க-
புன்னகையோடு பெற
நீயும் உன்னோடு நானும்
இருந்த இடத்தில்
ஆயிரம் பேர்களுக்கு மேல்
இருப்போம்
புன்னகை தொலைக்காமல்
பெற்றுக்கொள்ள-
◆

ஸ்பாட்டகஸ்தாசன்

தமிழ்த் தேசியப்போராட்டம் கலை, கலாச்சார உற்பத்தியை வீறுபடுத்திய தெனினும், அது ஒரு பிரச்சார அங்கமாக உருவெடுத்தமையாலும் அதன் மீதான விமர்சனம் ஆபத்தானதாகக் கருதப்பட்டதாலும், அத்துடன் இக் கலைப் படைப்புக்கள் புத்திஜீவிகளால் தரம் குறைந்ததாகக் கருதப்பட்டதாலும் ஒதுக்கப்பட்டது.

காலுடைந்த சிவில்சமூகமும் தமிழ்ப்புத்திஜீவிகளும்

புத்திஜீவிகள் குழுமமும் சிவில்சமூகமும் தமிழில் அருகிப்போய்க்கொண்டிருக்கும் ஒன்றாக உள்ளது. முன்னையது அழிந்துகொண்டிருக்கும் ஓர் இனமாகவும் பின்னையது ஆக்கிரமிக்கப்பட்ட ஒரு பிரதேசமாகவும் தோன்றுகிறது. பொதுவாகவே தற்கால தமிழ்சமூகம் புத்திஜீவிகள் எதிர்உணர்வுள்ள ஒரு சமூகம். இங்கு புத்திஜீவிகள் ஏமாற்றுக்காரர்களாகவும் அகங்கார உணர்வுடையவர்களாகவும் ஒட்டுண்ணிகள் என்றும் கருதப்படுகிறார்கள். இந்த நிலைப்பாட்டிற்கு ஈழச்சிந்தனையுலகில் நுழைந்த புத்திஜீவிகள் வெறுப்புணர்வுகொண்ட ஸ்ராலினிச முக்கியமாக மாவோயிச சிந்தனைகளும் வழிவகுத்துக்கொடுத்தது. சுயமான புத்திஜீவிகள் வாதத்தையும் சுயமான ஒரு பொதுத் தளத்தையும், குறிப்பாக, சிவில்சமூகத்தையும் ஸ்ராலின் காலத்திய சோவியத் யூனியனில் நடத்தப்பட்ட களையெடுத்தல் நடவடிக்கையின்போதும் சீனாவில் கலாச்சாரப் புரட்சியின்போது மாவோயிஸமும் மிகக்கொடூரமான முறையில் அழித்தொழித்தது. இப் போராட்டத்தின்போது எழுந்த புத்திஜீவிகள் எதிர்ப்புவாதம் ஈழத்திலும் நுழைந்தது.

ஏனெனில் தமிழுக்குப் புதிய சிந்தனைகளை அறிமுகப்படுத்தியதில் முக்கியபங்கு மேற்படி சிந்தனையாளர்கள் சார்ந்தது என்றால் மிகையாகாது. தற்போதைய தமிழ்ப் பொதுப்புத்தியும் இந்த நிலைப்பாட்டையே கொண்டுள்ளது. மேற்படி புத்திஜீவிகள்மீதும் சிவில்சமூகம்மீதும் பொதுவான வெறுப்புக்கும் எதிர்ப்புக்கும் காரணம் இல்லாமலும் இல்லை. புத்திஜீவிகள் குழுமம் தன்னைச் சமூகத்துடன் தொடர்பற்ற ஒரு பிரத்தியேக இனமாகக் கொள்வதும் அதிகாரத்தின் நியாயப்படுத்தலின் துணைக்கரமாகச் செயற்பட்டதும் இதற்கு முக்கிய காரணங்களாகும். இக்கட்டுரை எழுதிக் கொண்டிருக்கும்போது, யுக்கோசிலாவியாமீது நேட்டோவின் ஆக்கிரமிப்பை நியாயப்படுத்தி புத்திஜீவிகள் குழாம் கருத்துக்குண்டுகளைப் போட்டுக்கொண்டு இருக்கின்றது. புத்திஜீவிகள் சமூகமும், ஒரு சிவில் சமூகமும் எப்பொழுதும் முற்போக்காகவும் மனிதநேயம் கொண்டதாகவும் இருக்கும் என்றில்லை. வரலாற்றில் இவற்றின் மனிதவிரோத பிற்போக்கு செயல்பாடுகள் மலிந்தே கிடக்கினறன. ஆனால் ஒரு சமூக முன்னேற்றத்திற்கு அல்லது ஒரு சோசலிச பரிமாற்றத்திற்கு இவ்விரண்டின் இருப்பும் தனித்தன்மையும் முக்கியமானது என்பது எனது கருத்து. மெக்சிக்கோவின் சியப்பா பகுதிமக்களை மையமாகக் கொண்டு எழுந்த ஸபட்டிஸ்ரா இயக்கத்தின் உபதளபதியான மார்க்கோ தமது போராட்டத்தில் நுழைய சிவில்சமூகத்துக்கு அறைகூவல் விடுத்து சியப்பா மக்கள் போராட்டத்தில் சிவில்சமூக போராட்டத்தையும் இணைத்து ஓரளவு வெற்றியும் கண்டார். பின்நவீனத்துவப்புரட்சி என சில கட்டுரையாளர்களால் விபரிக்கப்பட்ட இப்பரிசோதனை முயற்சி(எழுச்சி) மற்றைய நாட்டுப் போராட்டக்குழுக்களால் கூடிய கவனத்துடன் அவதானிக்கப்பட்டதெனினும் அது பின்பற்றப்படுமளவுக்கு உகந்ததாகக் கருதப்படவில்லை. இதற்கு இம்முயற்சியில் காணப்பட்ட பலவீனங்கள்மட்டும் காரணமல்ல. மாறாக, பல முற் போக்குக் குழுக்களின் ஒருவித ஜனநாயக விரோதக் கோட்பாடுமே காரணமாகும். இதுவரை நடந்த போராட்டங்களும் புரட்சிகளும் கொடிய அதிகாரவர்க்கத்தையும் அதிகார ஆட்சிகளையும் உருவாக்கியமையின் காரணமாகவே ஸபட்டிஸ்ரா இயக்கம் தமது போராட்டத்தின் ஒரு பகுதியாக சிவில் சமூகத்தையும் தோழமைக்கு அழைத்தது மாத்திரமல்ல சிவில் சமூகத்திற்குச் சமபங்கையும் அழித்தது. இது புரட்சிகர வரலாற்றில் ஒரு முக்கிய திருப்பமாகும்.

சிவில் சமூகம்பற்றிய புரிதல் பல்வேறு கோட்பாடுகளுக்கு ஏற்றவாறும் பல்வேறு காலகட்டங்களுக்கு ஏற்றவாறும் மாறுபடுகிறது. மார்க்ஸ் சிவில் சமூகத்தை அரசின் ஒரு பகுதியாகவே கண்டார்.(?) மார்க்சியரான கிராம்சியால் இதன் தனித்தன்மை உணரப்பட்டு கருத்து மேலாண்மைக்கான போராட்டதளமாக அடையாளம் காணப்பட்டு மேற்குநாடுகளின் புரட்சியாளர்கள் இதைப்பயன்படுத்த வேண்டியதின் முக்கியத்துவம் உணரப்பட்டது. கிராம்சி சிவில் சமூகத்தை அரசுக்கும் பொருளாதார அடித்தளத்துக்கும் இடைப்பட்ட ஒப்பீட்டளவில் சுயாதீனமான ஒரு தளமாகக் கண்டார். மேற்குநாடுகளில் அரசுகள் தமது இருப்பை சிவில் சமூகமேலாண்மைமூலம் ஸ்திரப்படுத்துவதாகவும் (இங்கு அல்தூஸரின் கருத்தியல் அரசநறுமம் (Ideological State Apparatus)?) ஒத்துப்போவதைக்காணலாம். ஆகவே இந்நாடுகளில் அரசுக்கெதிரான போராட்டம் சிவில் சமூகத்தில் புரட்சியாளர்கள் மேலாண்மை பெறுவதன் மூலமே சாத்தியமென நம்பினார். இம் மேலாண்மைக்கான போராட்டத்தில் புத்திஜீவிகளின் பங்கு முக்கியமாகக் கருதப்பட்டது. அத்துடன் எல்லாருமே புத்திஜீவிகள் என்ற ஜனநாயகக் கோட்பாட்டைக் கடைப்பிடித்தார். எனினும் ஒரு சிலராலேயே புத்திஜீவிகள் செயல்பாட்டைச் செய்ய முடியும் என்றார்.

அதிதீவிர ஜனநாயகத்திற்கும் முதலாளித்துவ ஜனநாயகத்திற்கும் மேற்குறிப்பிட்ட சிவில் சமூகமும் புத்திஜீவிகளும் ஒரு பொதுத்தளமும் மிகமுக்கியம் எனலாம். மேற்குநாடுகளின் தாராளவாத ஜனநாயக அரசுகளில் நிலவும் ஒரு பொதுத்தளமும் சுயாதீன புத்திஜீவிகள் குழாமும் சிவில் சமூகஅமைப்புகளின் செயற்பாடும் இந்நாடுகளில் நிலவும் ஒப்பீட்டளவிலான ஜனநாயகப் போக்குக்குக் காரணமாகும்.

இன்று சிவில் சமூகத்தைப்பற்றிய ஆரம்பகால அங்காலாய்ப்புகள் எல்லாம் ஆறி அடங்கிவிட்டன. எழுபதுகளில் போலந்திலும் எண்பதுகளின்முடிவில் கிழக்கு ஐரோப்பியநாடுகளின் அரசுக்கெதிராக எழுந்த மக்கள் எழுச்சியின்போதும் உச்சநிலையை அடைந்த விவாதம் பின்மந்தநிலையை அடைந்துவிட்டது. சிவில்சமூகம் என்றால் அரசுக்கெதிரிடையாக உள்ள சமூகவெளியை அல்லது வாழ்வுத்தளத்தைக் குறிப்பிடுவதாகவும் அரசுக்கும் பொருளாதார அடித்தளத்திற்கும் இடைப்பட்ட ஒரு கலாச்சாரத் தளமாகவும் கருதப்படுகிறது. சிவில் சமூகம் அல்லது பொதுத்தளம்பற்றிய புரிதல் தாராளவாதிகளிடத்தில் (Hannah Arendt, Dahrendorf, Andrwe Arato, Rawls) சமூகசீர்திருத்தவாதிகளிடத்தில் (Habermas, Bourdieu) மற்றும் மார்க்சிஸ்டுகளிடத்தில் வெவ்வேறு மாதிரியான விளக்கத்தையும் செயற்பாட்டையும் பெறுகிறது. கிராம்சி கருத்துப்படி சிவில்சமூகம் அரசுக்கும் பொருளாதார அடித்தளத்திலிருந்தும் மாறுபட்ட ஒப்பீட்டளவில் சுயாதீனமான தளம் ஹாபர்மாஸ் பொதுத்தளத்துக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து அரசு தனது இருப்புக்கு நியாயம் பெறும் தளம் இது என்கிறார். அத்துடன் இதற்கும் அரசுக்கும் சமனான பங்கு அளிக்கிறார். புரிதலுக்கு கஷ்டமான இவரின் பொதுத்தளம், சிவில்சமூகம் பற்றிய கோட்பாடுகள் வளர்ச்சியடைந்த நாடுகளுக்குத்தான் பொருந்தும் எனலாம்.

Arendt மக்களின் சுயமான செயல்பாட்டை பொதுத்தளமாக கருதுகிறார். Rajini Kothari எமதுநாடுகளில் அரசு சார்பற்ற நிறுவனங்கள் சிவில்சமூக பங்கை ஆற்றுவதாகக் கூறுகிறார். Aratoவின் கருத்துப்படி மேற்கில் சிவில்சமூகம் மேலிருந்து நிறுவப்பட்ட, அதாவது அரசால் நிறுவப்பட்ட ஒரு தளமாகவும் கிழக்கில் கீழிருந்து எழும், அரசுக்கு எதிரான ஒரு தளமாகவும் பொருள் பெறுகிறது. அறற்ரோவின் கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கான விளக்கம், எமது நாடுகளுக்கான புரிதலுக்கு உதவிசெய்யும் எனக் கூறலாம். கிட்டத்தட்ட இதே கருத்துடன் மணிரத்தினத்தின் 'பம்பாய்' திரைப்படத்தின் இறுதிக்காட்சி அமைந்திருந்தது. அதாவது இந்து, முஸ்லிம் கலகத்தை 'சிவில்சமூகம்' எழுந்து தடுப்பதைப்போன்று அக்காட்சி அமைக்கப்பட்டிருந்தது. இந்தக் கற்பனைக்காட்சியில் சிவில்சமூகத்தின் தன்மைகள் காணப்படுகின்றன. மூன்றாமுலக நாடுகளில் புதிய சமூக இயக்கங்களும், அரச சார்பற்ற நிறுவனங்களும் சிவில் சமூகமாகச் செயற்படுகின்றன என்று கூறலாம். மூன்றாமுலக நாடுகளில் சிவில்சமூகம் புரட்சி சம்பந்தப்பட்டிராவிடினும் அதன் ஜனநாயகமயப்படுத்தலுடன் சம்பந்தப்பட்டதாக உள்ளது. பலநாடுகளில் சிவில்சமூக எழுச்சி நாட்டின் ஆட்சியாளர்களை மாற்றியுள்ளது. பிலிப்பைந்து, பங்களாதேசம், மாலி, ஹைற்றி போன்ற நாடுகளை உதாரணமாகக் குறிப்பிடலாம். ஈழத்தில் குறிப்பாக தமிழ்த்தேசியவாதத்தின் ஆரம்பக்கட்டத்தில் உருவான அன்னையர் முன்னணி, பிரஜைகள் குழு போன்றவை சிறீலங்கா அரசினது அட்டூழியங்களுக்கு எதிராகத் துணிவுடன் செயற்பட்டது. அன்னையர் முன்னணியின் உதாரணத்துடன் சிங்களப்பகுதியில் உருவாக்கம் அடைந்த சிவில்சமூகம், சிங்களப்பகுதியில் ஐக்கியதேசியக்கட்சியின் அனர்த்தங்களுக்கு எதிராக எழுச்சியடைந்தது. அது ஐக்கிய தேசியக்கட்சி தேர்தலில் தோல்வியடைவதற்கும் காரணமாக அமைந்தது. ஆனால், இச் சிவில் சமூக எழுச்சியைச் சுவீகரித்துக்கொண்ட சிறீலங்கா சுதந்திரக்கட்சி, அக்காலத்தில் நம்பிக்கை தருபவராகக் கருதப்பட்ட சந்திரிக்கா குமாரதுங்காவை ஆட்சிக்குக்கொண்டு வந்தது. ஆனால் தெற்கில் உருவான சிவில்சமூக எழுச்சி, சிங்களப் பகுதியின் மக்கள் எழுச்சிகளின் முக்கிய கூறுகளில் ஒன்றான இனவாதத்தில் விதிவிலக்காக இருக்கவில்லை. மாறாக அது, சந்திரிக்காவின் ஆட்சிக்காலத்தில் ஒரு இனவாத சிவில்சமூகமாக மாறி, தெற்கில் நடமாடும் தமிழர்களை அவதானிக்கும் ஒரு அரசு உப படையாகவும் சில இடங்களில் சுயநீதி வழங்கும் ஒரு அமைப்பாகவும் உருவெடுத்தது. இலங்கையில் பெரும் பொருளாதார வீழ்ச்சியின்போதும் இனவாத யுத்தத்தை அரசால் நடத்தக்கூடியதாக உள்ளமைக்கு, இனவாத சிவில் சமூகம்தான் காரணம். அரசகருவியையும் சிவில்சமூகத்தையும் இனவாதத்தில் தோய்த்து தமது அரசைக் காப்பாற்றுவதில் சிறீலங்கா சுதந்திரக்கட்சியினர் மிகவும் கெட்டிக்காரர்கள். தமிழ்த்தேசியவாதத்தின் ஆரம்பகாலத்தில் தமிழ்ப்பகுதிகளில் எழுந்த சிவில்சமூகம் இலங்கை அரசுக்கும் ஆயுத இயக்கங்களுக்கும் சவாலாக அமைந்தது. இலங்கை அரசு தமிழ்மக்கள் அழிப்பு நடவடிக்கையின்போதும் இயக்கங்களுக்கிடையேயான மோதலின்போதும் மற்றைய இயக்கங்கள் புலிகளால் தடைசெய்யப்பட்டு தாக்கப்பட்டபோதும் தன் எழுச்சியாக எழுந்த சிவில் சமூக சிறு குழுக்கள் மயிர்க்கூச்செறியுமளவுக்குத் தலையீடுகள் செய்தன. தமிழ்ப் பகுதிகளில் சிவில் சமூகத்தின் இயக்கம், 1987இல் விடுதலைப்புலிகளால் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. சில சமயங்களில் இயக்கங்களும் சிவில்சமூக உருவாக்கத்திற்கு உந்துதல் கொடுத்தன. குறிப்பாக இந்திய இராணுவக்கட்டுப்பாட்டில் தமிழ்ப்பகுதி இருந்தபோது இந்தியப்படைக்கு எதிராக சிவில்சமூக எதிர்ப்பைப் புலிகள் ஊக்குவித்தனர். ஆனால் இந்திய இராணுவம் பத்திரிகையாசிரியர்களை வேட்டையாடியும் அச்சுறுத்தியும் அச்சுக்கூடத்தைத் தகர்த்தும் சிவில்சமூக இயக்கத்திற்கு முற்றுப்புள்ளி விதித்தது. அதன்பின்பு தமிழ்ப்பகுதிகளில் சுயாதீன சிவில்சமூக செயற்பாடு தடைப்பட்டது. அதன்பின் இலங்கை அரசாலும் அல்லது அதன் சார்புக்குழுக்களாலும் வலுக்கட்டாயமாக உருவாக்கிய பொதுத்தளம்தான் மிஞ்சியது. தமிழ்ஈழ நிர்வாக அரசும் தமக்கு இசைவான சிவில்சமூகத்தை உருவாக்கி மக்களுக்கு ஒரு அரசியல் அகற்றப்பட்ட தனிப்பட்ட தளத்தைத்தான் (private sphere) அனுமதித்தது. ஆனால் புத்திஜீவிகளை சிவில்சமூகமும், சிவில்சமூகத்தைப் புத்திஜீவிகளும் உருவாக்குகிறார்கள் என்றால் மிகையாகாது.

இவ்வாறான சிவில்சமூக முடக்கம், தமிழ்ப் புத்திஜீவிதக் குழுமத்திலும் பாதிப்பை உண்டுபண்ணியது. ஈழப்புத்திஜீவிகள் பலர், சிறீலங்கா அரச தாக்குதலுக்கும் இயக்கங்களின் அச்சுறுத்தல்களுக்கும் ஒடுங்கி, அரசியலற்ற ஒரு கலை கலாச்சாரத்தளத்தைத் தேர்ந்து எடுத்தனர். இத்தளம் கிழக்குமாகாணம், கொழும்பு, தமிழ்நாடு, புகலிடம் எனத்தளம் கொண்டது. தமிழ்த் தேசியப்போராட்டம் கலை, கலாச்சார உற்பத்தியை வீறுபடுத்தியதெனினும், அது ஒரு பிரச்சார அங்கமாக உருவெடுத்தமையாலும் அதன்மீதான விமர்சனம்

ஆபத்தானதாகக் கருதப்பட்டதாலும், அத்துடன் இக்கலைப் படைப்புக்கள் புத்திஜீவிகளால் தரம் குறைந்ததாகக் கருதப்பட்டதாலும் ஒதுக்கப்பட்டது. கொழும்பில் பல்வேறு ஆபத்தினிடையேயும் ஒரு சிறு சிவில்சமூகத்தளம் உருவாகியது. கொழும்பில் உள்ள சிவில்சமூக செயற்பாடுகளிற்கு, இலங்கையின் மற்றைய பகுதிகளுடன் ஒப்பிடும்பொழுது - இங்கு சர்வதேச சமூகத்தின் பார்வை இருப்பதால் - ஓர ளவு பாதுகாப்பு இருக்கிறது. ஆயினும் இங்கும் சிவில்சமூக செயற்பாட்டாளர்கள் கொலைசெய்யப்பட்டும், கடத்தப்பட்டும், கொலைமிரட்டலுக்கு உள்ளாகியும், சிறையிலடைக்கப்பட்டும் வருகிறார்கள். தவிர, ஒரு NGO-Intellectuals வர்க்கமும் இங்கு செயற்பட்டு வருகிறது. (மேலதிக விபரங்களுக்கு சரிநிகர் 131 கோணேஸ்வரிகள் கவிதைபற்றிய எனது விமர்சனத்தைப் பார்க்கவும்)

தமிழ்நாடும் புகலிடமும் ஒருவித சுயாதீன புத்திஜீவிகள் தலையீட்டிற்கு உதவியது. தமிழ்நாட்டில் உருவான தலித்திய இலக்கியப்போக்கு, திராவிட, நவீனத்துவ, பின்நவீனத்துவ விவாதங்களில் ஈழப் புத்திஜீவிகள் பங்குபற்றுகின்றனர். இக்கரைக்கு அக்கரைப் பச்சை என்ற மனப்பாங்கிலும் தமது அரசியல் நிலைப்பாடுகளுக்கு பலம் சேர்க்கும் முகமாகவும் தமிழ்ச் சிறுசஞ்சிகை உலகம் இவர்களுக்குத் தளம் கொடுத்தது. அங்கு தளம்பதித்த ஈழத்துப் புத்திஜீவிகள் சிலர், ஒரு mercenaryயின் ஆவேசத்துடன் தத்தம் தளத்திற்குச் சேவையாற்றுகின்றனர். (காலச்சுவடு-17 இதழில் டானியல்பற்றி என்ற எனது விமர்சனத்தைப் பார்க்க). ஆனால் சில ஈழப்புத்திஜீவிகளின் தமிழகப் பங்களிப்புக் காத்திரமாக உள்ளது பாராட்டக்கூடிய விடயம். ஏனெனில், தமிழ்நாட்டிற்கு வெளியில் தமிழ் இல்லை என்கிற கலாச்சார முதலாளிகளும் பிரம்மரிஷிகளும் தனியறிக்கையாளர்களும் நிறைந்த இடம்.

புகலிடத்திலும் புத்திஜீவிகளின் பங்கு புகலிடப் பிரச்சினையுடன் தமிழக, ஈழ விவாதங்களுடன் தொடர்புடையதாக அமைகிறது. புதிய கருத்துக்கள் பல ஆய்வுக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றன. புகலிடத்தில் புத்திஜீவிகளின் நிலையை இரண்டாகப் பிரிக்கலாம். ஒன்று, சபாலிங்கம் கொலைக்கு முந்திய நிலை. மற்றது அதற்குப் பிந்திய நிலை, பிந்திய காலத்தில் உலக அளவில் சோசலிச அல்லது சமூகமாற்ற கனவுகள் மந்தமடைந்ததும் இந்நிலையைச் சற்று ஸ்தம்பிதமடையச் செய்தது. ஆனால் பெண்ணிய, தலித்திய மற்றும் ஜனநாயகம் பற்றிய சொல்லாடல்கள் இங்கு மிகமுக்கியம் பெறுகின்றன. புகலிடத்தில் நடைபெறும் எல்லா புத்திஜீவிதச் செயற்பாடுகளும் 'பிரயோசனமும்' புத்திசாலித்தனமானதுமல்ல. ஆனால் சுயாதீனமான ஒரு செயல்பாடு என்று கூறலாம். சமீபத்தில் சில முக்கியமான விவாதங்களை இவர்கள் தொடங்கியுள்ளார்கள். புகலிட சிவில்சமூகப் புத்திஜீவிகள் வரலாற்றில் முக்கியமாகக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டிய இன்னுமொரு அம்சம், IBC ஒலிபரப்புநிறுவனத்தின் பங்களிப்பும் ஆகும். இது இயக்கசார்பான புத்திஜீவிகளையும், இயக்கத்திற்கு இசைவான ஒரு பொதுத்தளத்தையும் உருவாக்கி வருகிறபோதும் ஒருவித கறாரான இயக்கப்போக்கை விடுத்து, தமிழ்த்தேசியக் கட்டுமானத்துக்குள் ஒப்பீட்டளவில் சுயாதீனமான ஒரு புத்திஜீவிதக் குழுமத்தை இது உருவாக்கி வருவதாகும். ஈழமுரசு பத்திரிகைக்கும் இதில் ஓரளவு பங்குண்டு. அத்துடன் யாழ்ப்பாணம் இராணுவக்கட்டுப்பாட்டுக்குள் வந்ததாலும் சிறீலங்கா அரசின் தமிழ்மக்கள் மீதான யுத்தம் தற்போது கொடூரமடைந்துள்ளமையாலும் சுயாதீனமாக அல்லது 'தீவிர ஜனநாயக முகாமுக்குள்' முன்பு இருந்த புத்திஜீவிகள் பலர், இன்று புலிஇயக்க ஆதரவான ஆனால் 'சுயமான' தளத்தை உருவாக்கிச் செயற்பட்டுவருவதும் முக்கியமான ஒன்றாகும்.

வரலாற்றில் சிவில் சமூகம் பல்வேறு பரிமாணத்தை எடுக்கிறது. அது எல்லா இடத்திலும் சரியானநிலைப்பாட்டை எடுக்கும் என்று இல்லை. சில இடங்களில் பிற்போக்கு நிலைப்பாட்டையும் எடுக்கும் என்பது தெரிந்ததே. ஆனால் சுயமான சிவில்சமூக செயற்பாட்டை அரசு தடுப்பது அதன் சர்வாதிகாரப்போக்குக்கு உதாரணம். அத்துடன் ஒரு சமூகத்தின் கலாச்சாரவாழ்வையும் வாழ்வுலகையும் இது பாதிக்கும். முடிவில் ஒரு அரசியல் கலாச்சார வரட்சிதான் ஏற்படும். சிறீலங்கா அரசும் தமிழ்ப்பகுதி நிர்வாக அரசும் ஒரு சுயாதீனமான தமிழ் சிவில்சமூக செயற்பாட்டை அனுமதிக்க மறுக்கின்றனர். இருபகுதியினரும் தமக்கு இசைவான ஒரு சிவில்சமூகத்தைக் கட்டி அமைப்பதிலேயே அக்கறையாக உள்ளனர். ஆனால் ஒரு சமூக கலாச்சார முன்னேற்றம் ஒரு சுயாதீன சிவில் சமூக செயற்பாடு அற்ற நிலையில் சாத்தியமாகா, எனது சிவில் சமூகம் பற்றிய புரிதல் ஒரு வயப்பட்டதல்ல. மற்றும் சிவில்சமூகம்பற்றி அதன் வரலாற்றில் பல்வேறு விளக்கங்கள் கோட்பாடுகள் உள்ளன. சிவில் சமூகம் பல்வேறு தருணங்களில் பல்வேறு பொருள்பட உபயோகிக்கப்பட்டமை, சிவில் சமூகம் என்றால் என்ன என என்னால் அறுதியாக கூறமுடியாமல் உள்ளது. ஒரு சமூக முன்னேற்றத்திற்கு சுயமாக செயற்படும் சிவில் சமூகமும், சுதந்திர புத்திஜீவிகள் குழாமும் போதுமான காரணமாக இல்லாவிடினும் அத்தியாவசிய காரணமாகும்.◆

ஜனநாயகம் சுவாசிக்கும் காற்றுப்போன்றது
- கோர்பாச்சேவ்



கணவனின் வன்முறைக்கு ஆளான ஒரு ஆபிரிக்கப் பெண்
Photo: One Touche Media

செல்வம் அருளானந்தம்

அயர்சூலைப் பிரசங்கம்

வெளிக்கிட்டு
முப்பத்து மூன்றாம் நாள் வந்து சேர்ந்தேன்.
காலம் எல்லாம் நடந்தவன் போல்
களைத்திருந்தேன்.

குடிவரவு அதிகாரி
கடும்வெய்யில் கண்டவர்போல்
சிவத்திருந்தார்.

தலித்தாய்ப் பிறந்து
தமிழாய்க் குனிந்து
கறுப்பாய் எனை உணர்ந்தேன்.

ஏன் வந்தாய்? என்றார்
அக்கிரமம் தலைதூக்கி
அன்பு தணிந்துபோன காலத்தில்
பிறந்தவன் ஐயா, என்றேன்
கல்லாகிப் பொல்லாகி இரும்பாகிக்
கலிபர் ஐம்பதான காலத்தில் வாழ்ந்தவன்

திரும்பவும் முறைத்து,
நீ ஏன் வந்தாய்? என்றார்
அண்ணனும் தம்பியும் அடித்து
அடுத்த வீட்டானும் அதற்கு அடுத்த வீட்டானும் துரத்த
ஆர் ஆரோ பட்ட துயரெல்லாம் என் கதையாக,
அவர் கலங்கி,
என்ன கொண்டு வந்தாய்? என்றபோது
மூவாயிரம் ஆண்டு இழுத்து வந்த சிலுவை இருக்குது
முப்பதாண்டுகளாய்ச் செய்த ஆணிகள்
இருக்குதென்றேன்.

போய் நீ உன்னையே அறை என்று
கைகுலுக்கிக் கனடாவுள் அனுப்பிவைத்தார்
இங்கே,
இலைகொண்ட கொடி ஆட
என்னை அறைவேன் சிலுவையிலே. ◆

பழி சுமந்த மனி

சி. புஸ்பராஜா

அகலத்திறந்து வையுங்கள்
உங்கள் கதவுகளை
அல்லது உடைக்கப்படும்.
காக்க வந்தவர்கள், காப்பாற்ற வந்தவர்கள்
நியாயம் கேட்காதீர்கள்
கேட்டால் உதைக்கப்படுவீர்கள்.

உங்கள் உடைமைகள் மட்டுமல்ல
உயிர்களும்
பெண்களின் கவடுகளும்தான்
எடுக்கவும், அழிக்கவும், சிதைக்கவும்
எழுதாமல் பறிக்கப்பட்ட உயில்.

உங்கள் கதவுகள் உடைக்கப்படும்
காத்திருங்கள் - சுடும் உண்மைதான்.
உங்கள் பிஞ்சுகள் ஏற்றப்படுவார்கள்
சிலுவையில் அறையப்படுவார்கள் - ஆனால்
அவர்கள் திரும்பமாட்டார்கள்.

ஆட்டுக்காகக் கண்ணீர் விட்டவரின்
ஆட்களென - நம்பிவிடாதீர்கள்
உங்கள் கதவுகள் உடைக்கப்படும்.
தொலைதேசத்துக்கு
ஆத்மாக்கள் அனுப்பப்படும்.

காத்தல் விடுத்து
அழித்தல் கொண்ட யமனாகி
கௌதமதத்துவம்.... இரக்கம் பறிபோய்
கொடூரர் சித்தமாகி - இரத்தாறாய்
நாசமாய்ப்போன தேசமது. ◆

பெண் - சிசுக்கொலை

ஒரு தாய் பத்து மாதம் சுமந்து தனது குழந்தையை பெறுகிறாள். அவள் பிரசவத்தின்போது படும் துன்பம் என்பது ஒரு மனிதஉயிர் மறுபிறப்பு எடுப்பது போல். அப்படியான ஒரு பெண் தன் குழந்தையை(பெண்) கொன்றுவிடுவதற்கான காரணத்தை வெறும் விருப்பு வெறுப்பின் அடிப்படையில் விளக்க முற்படுவது ஒருவகை அறியாமை ஆகும். இதற்கு பொறுப்பேற்க வேண்டியது யார்? பெற்றவளா? அல்லது இந்த சமூகமா?

பெண்களின் மேலேயே பிழைகூறிக் கொண்டிருக்கும் பெண்களும் ஆண்களும் இந்த ஆணாதிக்க சமூகத்தின் மேல் உங்கள் வெறுப்பையும் விமர்சனத்தையும் காட்ட முனையுங்கள்.

பெண்சிசுக் கொலைகள் பற்றிய ஆய்வு ஒன்றை யுனெஸ்கோ அமைப்பு ஆசிய, ஆபிரிக்க ஐரோப்பா, அமெரிக்க போன்ற நாடுகளில் மேற்கொண்டிருந்த வேளையில் பின்வரும் காரணங்களை இவ்வமைப்பு வெளியிட்டுள்ளது பெண்சிசுக் கொலை, பெண்குழந்தைகள் போதிய அக்கறையுடன் வளர்க்கப்படாததினாலும் சிசுக்கள் மடிவதற்கு ஒரு காரணம் எனவும், உலகில் கடந்த பத்து ஆண்டுகளில் சுமார் ஒரு கோடிப் பெண்கள் மற்றும் பெண்சிசுக்கொலைகள் நடந்துள்ளன என்றும் இவ்வமைப்பு தகவல்களையும் புள்ளிவிபரங்களையும் வெளியிட்டுள்ள அதே வேளையில் பொதுவாக உடல் ரீதியான வலுவைப் பார்க்கும் போது ஆண்குழந்தைகளைவிட பெண் குழந்தைகள் தான் உயிர் வாழும் சக்தி அதிகமாகக் கொண்டிருக்கின்றார்கள் என்றும் மருத்துவர்களின் கணிப்பீடு கூறுவதாகவும் தகவல் வெளியிட்டுள்ளது. ஆனால் இவ் ஆணாதிக்க சமூகம் மருத்துவ உண்மையை மாறிகூறிவருகின்றது. பல நாடுகளில் ஆங்காங்கு சிசுக்கொலைகள் இடம்பெற்று வந்தாலும் அதற்கான காரணதாரிகள் பெண்களே என்று இந்த ஆணாதிக்க வாதிகள் (ஆணாதிக்கக் கருத்தியல்களை வரித்துக் கொண்ட பெண்களும் இதற்குள் அடங்குவர்) வாதங்களை முன்வைக்கின்றனர். இந்த சமுதாய அமைப்புக்குள் சில பெண்கள் தங்கள் பெண்சிசுக்களை அழிக்கத் துணிகிறார்கள் என்றால் அதற்கான காரணம் இந்த சமூக அமைப்புக்குள்ளே இருந்தேயாகவேண்டும்.

பெண்கள் மேலேயே பெண்கள் குறை கூறுவதற்கு இந்த ஆணாதிக்க சமூகக் கட்டமைப்பே காரணமாகவும் இருக்கலாம். ஆணாதிக்கக் கருத்தியல்களில் ஊறிப் போய் இருக்கும் பெண்கள் இப்படியான குடும்ப அமைப்பு முறைகளை விளங்கிக் கொள்ள முன்வரவேண்டும். ஒரு தாய் பத்து மாதம் சுமந்து தனது குழந்தையை பெறுகிறாள். அவள் பிரசவத்தின்போது படும் துன்பம் என்பது ஒரு மனிதஉயிர் மறுபிறப்பு எடுப்பது போல். அப்படியான ஒரு பெண் தன் குழந்தையை(பெண்) கொன்றுவிடுவதற்கான காரணத்தை வெறும் விருப்பு வெறுப்பின் அடிப்படையில் விளக்க முற்படுவது ஒருவகை அறியாமை ஆகும். இதற்கு பொறுப்பேற்க வேண்டியது யார்? பெற்றவளா? அல்லது இந்த சமூகமா? ஒடுக்கப்பட்டவர்கள்மேலேயே பழிசுமத்திக் கொண்டிருக்கும் இந்த சமூகம்மேல்தான் பெண்கள் கோபிக்க வேண்டுமே தவிர ஒரு பெண்ணின்மேலே அல்ல. தன்னைப் போல் அந்த பெண்சிசுவும் இந்த ஆணாதிக்க சமூகத்தால் ஒடுக்கப்பட்டு, சித்திரவதைக்கு ஆளாகுவதில் ஏற்படும் அச்சமும் அதைத் தவிர்த்துக்கொள்ள - அப்பாவித் தனமாக- ஒரு பெண் தேர்வுசெய்யும் வழிமுறையும்தான் பெண்சிசுக் கொலை என நாம் ஏன் கொள்ளக் கூடாது?.

இன்று ஒரு பெண் எதிர்நோக்கும் சாதாரண பிரச்சினைகளான சீதனம், பாலியல் வன்முறை என்ற கொடுமைக்கு

எத்தனை பெண்கள் ஆளாகிக் கொண்டிருக்கின்றனர். சீதனத்திற்காக எத்தனை பெண்கள் உயிருடன் கொளுத்தப்படுகின்றார்கள், இந்த ஆணாதிக்க வக்கிரம் நிறைந்த சமூகத்தால் எத்தனை பெண்குழந்தைகள் பாலியல் வல்லுறவு கொண்டபின் - வெளியே தகவல் வந்துவிடக்கூடாது என்ற காரணத்துக்காக- கொலைசெய்யப்படுகிறார்கள். இவர்களின் உயிர்களுக்கு யார் உத்தரவாதம் வழங்குகிறார்கள் என்று எவராலும் கூறமுடியுமா? கடத்தப்பட்டு விபச்சாரவிடுதிகளில் மிருகங்களை விட கேவலமாக இருட்டறையில் அடைக்கப்படுகிறார்கள் என்று யாராவது அக்கறை கொள்கிறார்களா? இன்று குறிப்பாக 8 வயது தொடக்கம் அதற்கு மேற்பட்ட பெண் குழந்தைகள் பாலியல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுகின்றார்கள். பாலியல் தொழிலில் ஈடுபடுத்தப்பட்ட பல பெண்பிள்ளைகள் எழுந்து நடக்கமுடியாத அளவுக்கு பாதிக்கப்பட்ட காட்சியை தொலைக்காட்சிமூலம் பார்க்கும்போது உண்மையிலேயே பெண்ணாகப் பிறக்காமலேயே இருக்கலாம் என்று ஒரு பெண்ணுக்குத் தோன்றுகிறதென்றால் அதற்கும் காரணம் பெண்களா?

தற்போதைய ஆணாதிக்க, முதலாளித்துவ அமைப்பானது ஆண்குழந்தைகளின் பிறப்பு முதல் அவர்களுக்கு வழங்கப்படும் உயர்அந்தஸ்து, மரியாதை, உணவு, மருத்துவ கவனிப்பு, கல்வி எல்லாவற்றிலுமே ஆண்குழந்தைகளுக்கு முன்னுரிமை கொடுக்கிறது. அத்துடன் அவர்களுக்கான சுதந்திரமும் உண்டு. உடல்ரீதியான சுதந்திரம் மட்டுமல்ல, எண்ணங்களை அப்படியே வெளிப்படுத்தும் சுதந்திரமும், தேர்வுசெய்யும் சுதந்திரமும் அவர்களுடையதே. ஆண் குழந்தைகளின் பிறப்புரிமைகள் இப்படியிருக்கிறது. ஆனால் பெண் குழந்தைகளுக்கு...?? இவ்வாறு பாரபட்சமாக பெண் சமூகத்தை நடத்திக்கொண்டு, பெண்கள் ஆண்களின் ஆதரவையும் பாதுகாப்பையும் எதிர்பார்த்து சார்ந்து வாழ -கருத்தியல்ரீதியிலும் வன்முறைரீதியிலும்- நிர்ப்பந்தித்துக் கொண்டு இருக்கிறது ஆணாதிக்கம். அத்தோடு பெண்களை ஒரு பாலியல் பண்டமாகவும் இன உற்பத்தி செய்யும் உதிரியாகவும் அது பார்க்கிறது. இந்த நிலையில் பெண்களின் மீது நிகழ்த்தப்படும் வன்முறையை அது நியாயப்படுத்தும் அளவுக்குக்கூட - பல சந்தர்ப்பங்களில் - சென்றுவிடுகிறது. இவ்வாறு சமூக உத்தரவாதமற்ற நிலையில் அவர்களின் அச்சஉணர்வு நீக்கப்படாத நிலையில் பெண் சிசுக் கொலை போன்ற குறுக்குவழித் தேர்வுகள் நிகழ்த்தப்படுகின்றன. வேண்டப்படாத இந்தத் துயரம் (பெண் சிசுக்கொலை) இல்லாமலே போய்விடவேண்டும் என்பதில் யார்தான் உடன்பட மாட்டார்கள். ஆனால் அதற்கான காரணத்தை சமூகத்துள் தேடாமல் (பெண்கள் உட்பட) பெண்களையே குறை கூறுவது எந்தவகையிலானது?

இதற்கு பல தொடர்பு சாதனங்களும் துணைபோகின்றன. இவை தவிர்க்கப்பட வேண்டும். இப்படியான பெண்களுக்கெதிரான கருத்துக்களை பெண்களே அப்பாவித்தனமாக முன்வைக்கும்போது ஆணாதிக்க கருத்தியல்கள் மேலும் பலப்பட்டுப் போகின்றன. இவ்வாறான சந்தர்ப்பங்களிலாவது ஆணாதிக்க மனோபாவத்திலிருந்து எழும் கருத்துக்களை, பிழைகளை சுட்டிக்காட்ட பலர் முன்வரவேண்டும். பெண்களின் மேலேயே பிழைகூறிக் கொண்டிருக்கும் பெண்களும் ஆண்களும் இந்த ஆணாதிக்க சமூகத்தின் மேல் உங்கள் வெறுப்பையும் விமர்சனத்தையும் காட்ட முனையுங்கள். அதைவிடுத்து மீண்டும் மீண்டும் பல்லவி பாடுவதால் பெண்சிசுக் கொலைகள் போன்ற துயரங்கள் அதிகரிக்குமேயொழிய குறைந்துபோய்விடப்போவதில்லை◆

Thivyanathan. S



பூனைக்குத் தோழர்கள்

(சசி கிருஷ்ணமூர்த்தி 1998 ஒக்தோபரில் விமானவிபத்தில் இறந்தபோது வந்த சில இரங்கற்சொற்களின் அருவருப்பாக)

நீ
அரசினரின் சித்திரவதை முகாமொன்றில் செத்திருக்கலாமே!
அவர்கள் முழுகடித்த கலமொன்றில் போயிருக்கலாமே!
அவர்களது துப்பாக்கி வேட்டொன்றில் விழுந்திருக்கலாமே!
இல்லை,
காணாமற் போனோருள் ஒருவனாய்
புதைகுழியொன்றுள் அமிழ்ந்திருக்கலாமே!
குண்டு விழுந்து சரிந்த கூரைக்குக் கீழ்
அல்லது
சுவரொன்றன் கீழ்
புதையுண்டு போயிருக்கலாமே!
போகவில்லை.
அகதிமுகாமொன்றில்
பட்டினியோ பெரும்பிணியோ
உன்னை மெல்ல அரித்திருக்கலாமே!
இல்லை.
என்றாலும் போய்விட்டாய்.
இங்கே உனக்காக ஒருவன் இரங்குகிறான் -
நண்பனாம்!
நினைவுகளிற் கொஞ்சமாய் இரைமீட்டுக் கொள்கிறான்.
நிலையாமை சாவென்று நிறையவே பேசுகிறான்.
சொல்லுவன யாவுமே சுடலை ஞானந்தான்.
எனினும்
உன் சாவைக் கொணர்ந்தவர்கள் அவனுக்கு இனியவரோ?
ஏனோ
கொலையை, கொலைஞர்களை ஏசிடவும் முடியாமல்
கொலைச்செயலை வீரமெனக் கொண்டாட இயலாமல்
திணறுகிறான், பாவம்.
சாவதற்கு எத்தனையோ வழியிருந்தும் நீ அறிந்தும்
ஏனிந்த விதமாய் உன் 'நண்பனது' வாயடைக்க
முதலைகளின் விழிகளிலும் வழிகின்ற நீர் வற்ற
வானவெளியினிலே சாவினை நீ தேடினாய்?

◆◆◆

ஒரு ஆபிரிக்க சம்பாஷணை காற்றோடு கலந்து சங்கீதமாக மிதந்து வந்தது.

"இது யோகானாவா? "

ஒரு நப்பாசையுடன் முன்பகுதி இருக்கைகளில் எனது மகளுடன் அமர்ந்திருந்த நான் திரும்பிப் பார்த்தேன்.

பின்னிருக்கையில் சாவகாசமாக அமர்ந்து இரு ஆபிரிக்கப் பெண்கள் கதைத்துக்கொண்டிருந்தார்கள்.

இம்முறையும் ஏமாற்றம் தான்.

"யோகானா.... நான் உன்னை எங்கெல்லாம் தேடுவது? "யோகானா....

எனது வாழ்க்கையை வாழக் கற்று தந்தவள் நீ.... யோகானா....

என்னைச் சிரிக்கப் பழக்கியவளே நீ....

யோகானா நைஜீரிய நாட்டைச் சேர்ந்தவள். மூன்று வருடங்களிற்கு முன் என்னுடன், பாதிக்கப்பட்ட பெண்களுக்கான விடுதியில் நான் எனது மகளுடன் தங்கியிருந்த போது, அவளும் தன் மகளுடன் தங்கியிருந்தாள்.

நைஜீரியாவில் தனது கணவனிடம் அடி உதை வாங்க முடியாமல் மகளுடன் பிரிந்து வாழ்ந்தவள், ஒரு ஜேர்மானியரை மணம்முடித்து இங்கு வந்தாள். இங்கும் அவளுக்கு நரகம் தான். சிறை வாழ்க்கை. அடி உதை குத்து.

அவள் போராடினாள். அவளது மகளைப் பாலியல் வன்முறை செய்ய அவன் முயற்சித்தபோதுதான் அவள் போராட்டம் உச்சநிலையையடைந்தது. அவள் அவனை விட்டுப் பிரிந்து அந்த விடுதிக்கு வந்திருந்தாள்.

அப்போதுதான் நான் குணபாலனுடனான வாழ்க்கைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்து விட்டு அங்கு சென்றிருந்தேன்.

அங்கு சென்றபோதுதான் எனக்கு, எனக்கு மட்டும் என்று நினைத்தவை எனக்கு மட்டுமல்ல. நான் தனித்த வளல்ல, என்னோடு இன்னும் பலர் உள்ளனர் என்று புரிய ஆரம்பித்தது.

ஒவ்வொரு பெண்ணிற்குள்ளும் ஒரு சோகப்புதையல் இருந்தது. நான் அங்கு அவர்களின் கதைகளின் ஒவ்வொரு கோணத்தையும் தரிசித்தேன். எங்கள் எல்லோரினதுமான இறந்தகாலத்திற்காகவும் அழுதேன்.

கணவனால் அசிற் ஊற்றப்பட்ட சகீரா. தாய்லாந்திலிருந்து வாங்கிக் கொண்டு வரப்பட்டு வீட்டிற்குள் சித்திரவதைப்பட்ட சுயி. கணவனின் சித்திரவதையினால் கிட்டத்தட்ட மனநோயாளியாகவே மாறியிருக்கும் துருக்கியப்பெண் ஓசென். பிள்ளைகளைப் போலந்தில் கடத்திவைத்துக் கொண்டு தன்னுடன் வந்து சேரும்படி பிளக்மெயில் படுத்தப்படும் எலேன். இன்னும் எத்தனை சோகங்கள்.

இவர்கள் ஒவ்வொருவரினது கதையிலும் நான் என்னை இனம் கண்டேன். குணபாலனின் மறுபிறவிகளைக்கண்டு அதிசயித்தேன்.

இவர்களின் மத்தியில் யோகானாவும் இருந்தாள். எனக்கு சிறிதளவு ஆங்கிலம் மட்டுமே பேசத் தெரிந்திருந்தபடியால் நான் அவளுடனே சம்பாஷிக்க முடிந்தது.

அவள் தனது சோகங்களை மூட்டை கட்டி எறிந்து விட்டு எப்போதும் குதுகலமாகவே திரிந்தாள்.

அவளது அழகும், அவள் பழகும் சுபாவமும் எனக்கு மிகவும் பிடித்திருந்தது.

அவள் மிகவும் உயரமாகவும் அவளது உடல் பருமனாகவும் இருந்தது.

அவளது அகன்ற கண்களே அவளது முகத்திற்கு மெருகூட்டின. அவள் தனது கண்களுக்கு எப்போதும் மைதீட்டினாள். பல நிறங்களைக் கொண்ட அழகான ஆடைகளை அணிந்தாள். தன் குறுந்தலைமயிரை ஒரு துணியால் சுற்றிக் கட்டியிருந்தாள்.

எனது அழுகையை நிறுத்திவிட்டு அழகாக உடுத்து வெளியில் பயமில்லாமல் சுற்றித்திரியும்படி எனக்கு அறிவுரை சொல்வாள்.

நீ சிரித்தால் எவ்வளவு அழகாக இருப்பாய் தெரியுமா? - அவள் அடிக்கடி என்னைக் கேட்பாள். முக

த்தை உம்மென்று வைத்துக்கொண்டு இருக்காதே. அது உனக்கும் உனது மகளுக்கும் நல்லதல்ல என்று எப் போதும் கடிந்துகொள்வாள்.

நான் எப்படி சிரிப்பது?

எனது வாழ்வே சூனியமாகவிருக்கும்போது நான் எப்படி சிரிப்பது?

குணபாலனுடனான நான்கு வருட கசப்பான வாழ்வின் அவலங்களை பொதியாக என் முதுகில் சுமந்து கொண்டு நான் எப்படி சிரிப்பது. அவனுடன் கழித்த வருடங்களை வாழ்வு என்று சொல்லமுடியாது.

சந்தேகம், அதிகாரம், சுயநலம் எனப் பல விஷப் பாம்புகள் அவன் உடம்பென்னும் புற்றில் குடிகொண்டிருந்தன.

அவை அடிக்கடி வெளியில் வந்து என்னைக் கொத்திப்பார்த்தன. அவை அடிக்கடி கொத்தியமையால் எனது உடலும் மனமும் அவ்விஷத்திற்கு நீர்ப்பீடனமாகியிருந்ததோ என்னவோ நான் எல்லாவற்றையும் சகிக்கப் பழகிக் கொண்டேன். எனது சகிப்புத்தன்மையைத் தனக்கு சாதமாக்கிக்கொண்ட குணபாலன் பாம்புகளை என்மேல் மேன்மேலும் ஏவிவிட்டான். அவை கொத்திக் கொத்தி என் மனமும் உடலும் காயங்களால் நிறைந்திருந்தன. காயங்கள் வலியெடுக்கும் போதெல்லாம் எனது மகளிற்காகப் பொறுத்தேன். அவன் பாம்பாட்டியாக காட்சியளித்து என்னைக் காயப்

படுத்திக்கொண்டேயிருந்தான். அக்காயங்களின் அகோரங்கள் எனது மகளின் மனதில் சிறிதுசிறிதாக பரவுவதைப்பார்த்து நான் அதிர்ந்து போனேன். சகிப்புத்தன்மை, பொறுமை, தலைவிதியென எனது தலையில் நானே ஏற்றியிருந்த மகுடங்களை எறிந்துவிட்டு எனது மகளுடன் வெளியில் ஓடினேன்.

இது உனக்கு மட்டுமல்ல. இவ்வுலகில் எல்லாப் பெண்களுக்கும் நடக்கக்கூடியவொன்று.

இந்நிலையிலிருந்து நாம்தான் எம்மை விடுவிக்க வேண்டும். யோகானா மிகவும் கரிசனையுடன் என் தலையைத் தடவினாள்.

அழாதே.... இங்குள்ள எங்கள் எல்லோருக்கும் பிரச்சனை இருக்குது. கவலைகள் இருக்கின்றன. நாங்களும் இங்கு சந்தோஷமாக இல்லை. ஆனால் நாம் நிஜத்திற்கு முகங்கொடுக்கவேண்டும். அந்த மிருகத்திடமிருந்து நீ தப்பி வந்ததையிட்டு சந்தோஷப்படு.

அதற்காக சிரி.

உனது கடந்தகாலத்தின் கவலைகள், கொடூரங்கள் தொலைந்து போவதற்காக உரக்கச்சிரி.

உனது மனதை இலேசாக்கச் சிரி....

உனக்காகச் சிரி.... உனது மகளுக்காகச்சிரி....

புன்னகைக்கும்போது நீ எவ்வளவு அழகாய் இருப்பாய் தெரியுமா...? உன் கண் முன்னுள்ள நிஜத்தை புன்னகையோடு எதிர்கொள். அறைக்குள்ளே அடங்கியிருக்காதே. வெளியேவா.

அப்போதுதான் உன்னால் உனது மகளுக்கு வெளிச்சத்தைக் காட்டமுடியும்.

இங்குள்ளவர்கள் எல்லோரும் இங்கு நிரந்தரமாக இருப்பவர்கள் இல்லை. பலர் இங்கிருந்து வெளியில் சென்று தமக்கென வாழ்க்கையை அமைத்துக்கொள்வார்கள். துரதிஷ்டவசமாக சிலர் தமது கணவன்மாரிடம் திரும்பிப் போகத்தான் செய்கிறார்கள். பாவம் அவர்கள். யோகானா பெருமூச்சுவிட்டாள்.

தனது இரு கைகளினாலும் என் தோள்களை இறுக்கப்பற்றினாள். கவலைப்படாதே.... எனது காதிற்குள் மெதுவாகச்சொன்னாள்.

அவளது அன்பும் திடமான வார்த்தைகளும் எனது மனதில் அடைந்திருந்த பாரங்களை ஒவ்வொன்றாக வெளியே இறக்கின.

நான் எனது இறந்தகாலத்தை அனுபவமாகக்கொண்டேன். நிகழ்காலத்தைத் துணிவுடன் முகங்கொடுத்தேன். எதிர்காலத்தைப் புன்னகையுடன் வரவேற்றேன்.

எனது நண்பியொருவருடன் ஒருவார விடுமுறைக்குச் சென்று திரும்பியபோது எனது மேசையில் யோகானாவின் கடிதம் இருந்தது. தான் தொழில்வாய்ப்புத் தேடி ஒரு நண்பியின் நகரத்திற்குச் சென்றிருப்பதாக அதில் இருந்தது.

அதற்குப் பிறகு நான் அவளைச் சந்திக்கவில்லை. அதன் பிறகு நானும் அவ்விடுதியிலிருந்து வெளியேறி வெளியில் வாழ்ந்தேன்.

நாம் இறங்கவேண்டிய இடம் வந்துவிட்டதாக மகள் நினைவுபடுத்தினாள். கடந்தகால நினைவுகளிலிருந்து என்னை விடுவித்துக்கொண்டு நான் இறங்குவதற்கு ஆயத்தமானேன். ஒருமுறை பின்னிருக்கைப் பெண்ணைப்பார்த்தேன்.

நான் ஒருநாள் என் யோகானாவை நிச்சயம் கண்டுபிடிப்பேன் அல்லது அவள் என்னைக்கண்டுபிடிப்பாள்.◆

நீர்கொழும்பூர் முத்துலிங்கம்

சிவுரைகளை அணிந்துகொள்ளுங்கள்

எனதருமைப் பறவைகளே!
தரைக்கு வரவேண்டாம்
உங்கள் மொழி உங்களுக்குப் புரியும் - ஆனால்
இங்கு புரியாது - எனவே
இங்கே கொன்று விடுவார்கள்
வானத்திலும் உயரச் செல்லுங்கள்!
உங்கள் வானத்தையும்
இவர்கள் வசப்படுத்திவிட்டார்கள்
உங்களுக்கு இனமில்லை
மொழியில்லை - மதங்கள் இல்லை
நீங்கள் விதைப்பதும் இல்லையாம்
அறுப்பதும் இல்லையாம்
இங்கே -
விதைத்துக் கொண்டிருக்கின்றார்கள்.
இனித்தான்
அறுக்கப்போகின்றார்கள்
நீங்கள்
அழுவதும் இல்லை
தொழுவதும் இல்லை
இறைவனின் பெயரால்
உயிர்களை அழிப்பதும் இல்லை.
உங்களுக்கு நீங்களே வழிகாட்டிகள்.
உங்களுக்காக வழிகாட்டிகள் பிறப்பதும் இல்லை.
ஓ! பறவைகளே - நீங்கள்
தரைக்கு வரவேண்டாம்
உங்களை வரவேற்க - இங்கு
நிலக்கண்ணிகள் இருக்கின்றன.
காலொடிந்த ஆட்டுக்காக
அழுதவனைத் தொழுபவர்கள் - உயிர்க்
காலொடியும் காத்தாவை[1] பாடுகின்றனர்.
அப்படியும் நீங்கள்
இங்குவரவேண்டுமெனில்
அரியாசனத்தோடு - உங்களுக்கு
சரியாசனம் வேண்டுமெனில்
உங்கள் சிறகுகளை கழற்றிவிட்டு
'சிவுரை'[2]களை அணிந்து கொள்ளுங்கள். ◆

---

[1] காத்தா - பாளி சுலோகப்பாடல்

[2] சிவுரை - புத்தபிட்சு அணியும் காவியுடை

அசோக்

துடைப்பானின் குறிப்புக்கள்

ஒடுக்கப்பட்ட மக்களின் கோரிக்கைகளில் தேசியவாத உணர்வை மையப்படுத்தி உணர்ச்சி ஊட்டி கொதிக்க வைக்க முயலும் பிற்போக்குவாத அரசியல் தலைமைத்துவம் தொடர்பாய் விழிப்பாய் இருப்பதும், தேசியஇனப்பிரச்சினைகளை மார்க்சீய வழிப்பட்ட அணுகுமுறையில் இருந்து ஆராய்வதும், தலைமை கொடுப்பதும், முன்னெடுப்பதுவுமே இத்தேசியவாத பெரும் சேற்றிலிருந்து நாம் விடுபட ஏதுவாக இருக்கும் என்பதே என் கருத்தாகின்றது.

ஒருவர்மீது செலுத்தப்படும் வன்செயல் வடிவங்களில் உச்சநிலை எதுவென நீ கருதுகின்றாய்?

நீ இப்படி ஒரேயடியாகக் கேட்க முயலின் இக்கேள்விக்கான என் பதில் சிரமமானதே. ஆனால் இப்படிச் சொல்லலாம். உடலின் உயிர் பிரித்தலையே கடுமை என்பேன். வன்கொடுமைகளின் பல்வேறுவகைப்பட்ட பிரயோகங்களும் முடிவுகளும் உயிர் பறித்தலின் நிலை யைவிட அகோரம் மிக்கதாயினும் கொலை என்ற அடையாளமே உடலின் இயங்குநிலை என்ற பௌதிகத்தன்மைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிடும் உச்சநிலையை அடைகின்றது. அதற்காக உயிர்க்கொலைகளிலும் கொடுமைமிக்க உளவியல் கொலைகளை நான் நிராகரிக்கின்றேன் என்பதல்ல.

உளவியல்கொலை என்பதன் அர்த்தம் எனக்குப் புரியவில்லை?

நான் கொலை எனும் செயற்பாட்டை இரண்டாய் இனம் காண்பேன். ஒன்று உடல் சார்ந்த கொலை. மற்றையது உளவியல் கொலை. இவ் உளவியல் கொலை இரண்டு மையங்களில் தன் செயற்பாட்டைக் கொண்டு இயங்கும். அநேகமாய் கடந்த காலங்களில் தேசிய விடுதலை இயக்கங்கள் என சொல்லப்பட்டவற்றின்பால் நாம் நம் கவனத்தைச் செலுத்துவோமானால் இதனை நடைமுறைகளில் இருந்து விளங்கிக்கொள்ள முடியும். ஒவ்வொரு கொலையின் உயிர் அழிப்புக்கு முன்னாலும், பின்னாலும் கொலையாளிகளின் மதிநுட்பமான செயற்பாடு உயிர்பறித்தலுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மனிதன் மீதான குற்றச் சாட்டுகளை, வதந்திகளை, பொய்மைகளை தங்களின் வர்க்கநலன்களுக்கேற்ப சமூகமக்கள் திரள்மீது பக்குவமாய் மூளைச்சலவை செய்வதும், அவர்களின் மனோநிலையை உளவியலை இக்கொலையின் சார்பு நிலைக்குத் தள்ளுவதும்தான். அதாவது இம்மனிதன்பற்றிய நல்எண்ணங்களை, அர்த்தங்களை அவர்களாகவே தங்கள் மனத்தில் இருந்து அகலச் செய்யத் தூண்டுதல். இதன்மூலம் இக்கொலையை நியாயம் மிக்கதாய் மனதில் கற்பித்தல். மற்றைய உளவியல் கொலையின் மையச் செயற்பாடு குற்றச்சாட்டுக்கு உள்ளாக்கப்படும் மனிதனின் மன உணர்வுகளினூடாகக் கட்டியமைக்கப்படுகின்றது. இயக்கங்களினால் கைது செய்யப்படும் மனிதன்மீது இவ் இயக்க நபர்கள் கைக்கொள்ளும் உடல்/வார்த்தை சித்திரவதைகள், பாலியல் மனோவிகார குரூர துன்புறுத்தல்கள். இவைகள் ஒரு மனிதனின் உளவியலை, ஆரோக்கியமான மனஉணர்வுகளைக் கொன்று அவனை நடைப்பிணமாக்கி விடுகின்றது. கடந்தகாலங்களில் ஒவ்வொரு இயக்கங்களும் தங்கள் தங்கள் உறுப்பினர்களை இங்ஙனம் கொலை புரிந்து நடைப்பிணமாக்கி நடுத்தெருவில் அரசியல் அநாதைகளாக்கி நடமாட விட்டுள்ள நூற்றுக்கணக்கானவர்களை நாம் அறியமுடியும். உடலின்மீதான வன்முறையைவிட உள்ளத்தின் மீதான இக் குரூரவன்முறை மிகமிகக் கொடியது. எமது தேசிய விடுதலை இயக்கங்களின் தோற்றுவாய்க் காலங்களிலிருந்து இன்றுவரை உடல் சார்ந்த, உளம் சார்ந்த இவ்வன்முறை அணுகுமுறைகள் இயக்கத்தலைமைகளின் அதிகாரத்துவ சுயநலப்போக்கிற்கு மிகவும் 'அழகாய்' கொடியமுறையில் பயன்படுத்தப்பட்டுள்ளது. சக போராளியின் ஆக்கபூர்வ விமர்சனங்களைக்கூட மறுக்கும் அதிகாரத்துவம்பற்றி இன்றுகூட நாம் மௌனமானவர்களாகவே இருக்கின்றோம்.

இதை நினைக்கும்போது 'இட்'(விலங்கு வன்உணர்ச்சி) நம் எல்லோர் உள்ளத்திலும் இருக்கின்றது என்ற சிக்மண்ட் பிராய்டின் கூற்றே நினைவுக்கு வருகின்றது. 'இட் எனும் விலங்கு வன்உணர்ச்சிக்கும் இனவாத உணர்வுகளுக்கும் நெருங்கிய உறவு உள்ளதை நாம் பார்க்கவேண்டியுள்ளது. இந்த 'இட்' செயற்பாடுபற்றி சிக்மண்ட் பிராய்டை ஆராயத் தூண்டியதே முதலாவது உலக மகாயுத்த அழிவுகள்தான். எழுபது இலட்சம் இளைஞர்கள் போர்வீரர்களாக இறந்தனர். நூற்றிஐம்பது இலட்சம் போர்வீரர்கள் அங்கம் இழந்தனர். 1923ம் ஆண்டில் சிக்மண்ட் பிராய்டினால் 'ஈத்தும் ஈகோவும்' என்ற ஆய்வுநூல் வெளியிடப்பட்டது. ஆனால் இன்றுவரை அதிகாரத்தின் பெயரால் நடைபெறும் விலங்கு வன்உணர்ச்சி கொண்ட கொலைகளும், அழிவுகளும், சித்திரவதைகளும், பயங்கரங்களும் முடியவில்லை.

தேசியவாத உணர்வுகளின் வெளிப்பாடு தேசியவெறியாகி விலங்கு வன்உணர்ச்சியோடு தம் சக தேசிய மக்களை முற்றுமுழுதாக எதிரிகளாகப் பார்க்க முனையும் போக்கை, அவர்களை அழிக்க நினைக்கும் நிலையை உருவாக்கி வருகின்றது. சிங்களத் தேசியத் தலைமைகளிலிருந்து தமிழ்த் தேசியத் தலைமைகள்வரை இந்நிலைகளை மக்கள் மனங்களில் உருவாக்கும் சக்திகளாக இருந்துவந்துள்ளன. காலத்திற்குக்காலம் மிகவும் கொடூரமான முறையில் தமிழீழ விடுதலைப்புலிகளினால் கொலைசெய்யப்படும் சிங்கள பொதுமக்களின் மரணம், முஸ்லிம் மக்களின்மீது நடத்தப்படும் படுகொலைகள் இவற்றிலிருந்து தேசியவாதத்தின் போக்கு எவ்வாறு எதிர் தேசிய இனங்களின்மீது விலங்கு வன்உணர்ச்சியாக கொடூரமனநிலை உணர்வுகளோடு

கட்டியமைக்கப்படுகின்றது என்பதை அறியமுடியும்.

அதேநேரம் தங்களின் இனத்துக்குள் தங்களின் தலைமைகளை, தங்களின் கருத்துக்களை ஏற்றுக் கொள்ளமுடியாத, மாறுபட்ட கருத்துக்கொண்ட மனிதர் களையெல்லாம் தங்களின் துரோகிகளாக பார்க்க முனையும் போக்கையும், மக்களின் விரோதிகளாகக் காட்ட விழையும் நிலையையும் நாம் அவதானிக்க முடியும். இவ்வாறு மாறுபட்ட கருத்துக்களை, சிந்த னைகளைக் கொண்டிருப்பவர்கள் எல்லோரையும் துரோ கிகளாகப் பார்க்கும் உளவியல் கலாச்சார பாரம்பரி யத்தின் தோற்றுவாய் தமிழரசுக்கட்சி என்றே கூறு வேன். 1972இல் தமிழரசுக்கட்சிக் கூட்டம் ஒன்றில் அன்றைய உணர்ச்சிக்கவிஞரும் இன்றைய தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரமுகருமான காசிஆனந்தன் என்னும் நபர் இப்படிக் கூறுகின்றார், ".....ஆகியோர் தமிழினத்தின் எதிரிகள். அவர்கள் இயற்கை மரணத் திற்கோ அல்லது விபத்தான மரணத்திற்கோ தகுதியா னவர் அல்லர். தமிழ்மக்கள், குறிப்பாக இளைஞர்கள், அவர்கள் எப்படி மரணிக்க வேண்டும் என்பதைத் தீர்மானிக்கவேண்டும்."

இந்த நபர் போன்றவர்களின் பிரச்சாரவாடை உணர் ச்சி ஊட்டல் என்பவற்றின் பிழைகளை நாம் கடந்த காலங்களில் பல்வேறு இயக்கங்களின் ஊடாக அறு வடை செய்துள்ளோம். இதற்கு பல்வேறு கொலை களை நாம் உதாரணம் காட்டமுடியும். 1985ம் ஆண் டில் யாழ் பிரஜைகள் குழுவின் முக்கிய உறுப்பினரும், யாழ்/பரியோவான் கல்லூரி அதிபருமான திரு. ஆனந்த ராஜா அவர்கள் விடுதலைப்புலிகளினால் படுகொலை செய்யப்பட்டார். இவர் படுகொலை செய்யப்படுவதற்கு புலிகளினால் வைக்கப்பட்ட பிரச்சாரம் இவர் இராணுவ அதிகாரிகளோடு நட்பு வைத்திருந்தார் என்பதே. இக் கொலை நடந்து 15 மாதங்களின் பின்னர் ஸ்ரீலங்கா தொலைக்காட்சிகளிலும் பல்வேறு நிகழ்ச்சிகளிலும் விடுதலைப்புலிகளின் தலைவர்கள் ஸ்ரீலங்கா இரா ணுவ அதிகாரிகளுடன் உறவுபூண்டு காட்சியளித்துக் கொண்டிருந்தார்கள். இதுதான் தேசிய சந்தர்ப்பவாத அரசியல். இதை விளங்கிக்கொள்ள முனையும் ஒவ் வொரு மனிதனின்மீதும் தேசிய சந்தர்ப்பவாதிகளின் 'வெகுஜன புனைவுகள்' துரோகி என்ற பட்டத்தோடு மரணத்தை நோக்கிய 'கதைகட்டல்களாகவே' அமைந் திருக்கின்றன.

தேசியவாத உணர்வுகள் எப்படி கட்டியமைக் கப்படுகின்றது என்பதுபற்றி நீ எவ்வாறு விளங்கிக் கொள்ள முயலுகின்றாய்?

தேசியம் தொடர்பாய் நம்முன் பல்வேறு வகைப் பட்ட கருத்துக்கள் இருந்த போதிலும் என் பார்வை இது என்பேன். ஒரு தேசியஇனத்தின் இனப்பிரச்சினை எந்த அரசியல் கருத்தியல்கூறுகளை தன்னகத்தே கொண்டு வழி நடாத்தப்படுகின்றது என்பதே ஆதார பிரச்சினையாகும். தேசியம் என்பது ஒரு தேசியஇனம் உருவாக்கும் உளவியல் - கருத்தியல் சார்ந்த அரசி யல் செயற்பாட்டு இயக்கம். ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களின் நியாயம் மிக்க உரிமைகளுக்கு அப்பால் ஒடுக்கப்பட்ட தேசியத் தலைமைகள் ஏனைய தேசிய இனங்களின்பால் விரோதங்களையும் வெறுப்புக்களை யும் குரோதங்களையும் ஒடுக்கப்பட்ட தேசியஇன மக்க ளின் உளவியலில் ஏற்படுத்தி அதன் தாக்கமாக தேசி யமாக, தேசியவெறியாக கட்டியமைக்கும் செயலையே தேசியவாத உணர்வுநிலை உச்சமாக நான் கருதுகின் றேன். இந்த உளவியலில் ஏற்படும் தேசிய வெறித் தாக்கமே தமிழீழ விடுதலைப்புலிகளினால் படுகொலை செய்யப்படும் அப்பாவி சிங்கள பொதுமக்களின் மரணங்களை ஏற்றுக்கொள்வதும் முஸ்லிம் மக்கள் அடித்து விரட்டப்படும் போது, கொலைசெய்யப் படும் போது மௌனமாய் பார்த்துக்கொண்டிருப்பதுமாகும். தேசியவாதம் எப்பொழுதும் நன்னெறிக் கோட்பாடுகளி லிருந்தோ, முற்போக்குத் தன்மையிலிருந்தோ எங்கேயும் இதுவரை உருவாக்கப்படவில்லை என்னும் கசப்பான உண்மையை நாம் ஜீரணித்துத்தான் ஆகவேண்டி யுள்ளது. அப்படியானால் எமது போராட்டத்தை நீ ஏற் றுக் கொள்ளவில்லையா?

எமது ஒடுக்கப்பட்ட தமிழ்பேசும் மக்களின் உரி மைப்போராட்டத்தை நான் என்றுமே நிராகரித்தது கிடையாது. எமது போராட்டத்தில் உயிரை ஈயும் ஒவ்வொரு சக மனிதனையும் நான் எப்பொழுதும் நேசிப்பவனாகவும் அவன்பால் மரியாதை கொண்டவ னாகவுமே இருக்கின்றேன். நான் பேசுவதெல்லாம் இந்த நல் மனிதர்களின் உயிர்த்தியாகங்கள்மீது சவாரிசெய் யும் பிற் போக்குவாத இராணுவத்தலைமைகள்பற்றியும் அவர்களின் அரசியல்பற்றியுமே. நானும் ஓர் தேசியவி டுதலைஇயக்கம் ஒன்றில் இருந்தவன் என்ற உணர்வும், அதன் யதார்த்த நிலையும்தான் என்னை தேசியவாதம் தொடர்பாய் ஆராயத் தூண்டுகின்றது. இந் நேரத்தில் டாம் நாய்ரனின் கருத்துக்களை பார்ப்பது அவசிய மாகின்றது. அவர் கூறுகின்றார்:

"நவீனத்துவம் மற்றும் உலகமுதலாளித்துவத்தின் விளைவான சமச்சீரற்ற வளர்ச்சி தர்க்க விரோதமான ஒரு கண்ணோட்டத்தை பின்தங்கிய பகுதி மக்கள் சமூகங்களின் மத்தியில் ஏற்படுத்திவிடுகின்றது. நிறை வேற்றப்படாத எதிர்பார்ப்புக்கள், உரிமைகள் இவைகள் அம்மக்களில் ஆத்திரம் வெறுப்புக்களாய் மாறி உளவி யலில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. இது பின்னர் தேசியக்கருத்தியலாகவும், தேசியஇயக்கங்களாகவும் வெளிப்படுகின்றது. பின்தங்கிய பகுதிகளிலுள்ள மேல் தட்டினரே இத்தகைய உணர்வுகளுக்கு முதன்முதலில் ஆளாகுவதோடு அவர்களே தேசியஇயக்கங்களை முன் னெடுத்தும் செல்கின்றனர்."

அத்தோடு கிராம்ஷி சொல்வதையும் கேட்போம், "மேலாண்மை செலுத்தக்கூடிய வர்க்கமாக உருவாக விரும்பும் எந்த வர்க்கமும் தன்னைத் தேசியமயமாக் கிக் கொள்ளும்"

சரி, அப்படியாயின் ஒடுக்கப்பட்ட மக்களின் விடுத லைக்கு வழிதான் என்ன?

ஒடுக்கப்பட்ட மக்களின் கோரிக்கைகளில் தேசிய வாத உணர்வை மையப்படுத்தி உணர்ச்சி ஊட்டி கொதிக்க வைக்க முயலும் பிற்போக்குவாத அரசியல் தலைமைத்துவம் தொடர்பாய் விழிப்பாய் இருப்பதும், தேசியஇனப்பிரச்சினைகளை மார்க்சீய வழிப்பட்ட அணு குமுறையில் இருந்து ஆராய்வதும், தலைமை கொடுப்ப தும், முன்னெடுப்பதுவுமே இத்தேசியவாத பெரும் சேற் றிலிருந்து நாம் விடுபட ஏதுவாக இருக்கும் என்பதே என் கருத்தாகின்றது. இல்லாவிடின் ஆபிரிக்கப் புரட்சி எழுத்தாளன் பிரான்ஸ் பனான் சொல்வது போல "தேசி யம் நம்மை குருட்டுச் சந்திக்கே இட்டுச் செல்லும்" ◆

சி. புஸ்பராஜா

அனைத்தும் சிதைந்து போய்விட்டது
எனது கனவுகள் போல்
எனது நம்பிக்கைகள் போல்
இப்போது எனது வாழ்வு போல்
அனைத்தும் சிதைந்து போய்விட்டது.

ஒரு கோழிக்குஞ்சு போல்
மெல்லத் தடவி விட
இந்த மனிதர்களால் முடியவில்லை.
பத்மவியூகத்தின் அபிமன்யுபோல்
எங்கு திரும்பினும் கொலைவெறி முகங்கள்.
என் ஆளா, உன் ஆளா எல்லாம்
ஒன்றாகி திரிசங்கு சொர்க்கம்.

நாம் அறிவோம்
கோணேஸ்வரியும், கிருஷாந்தியும்
இன்னும் பல
துவசம் செய்யப்பட்ட ஆத்மாக்களையும்
முன்னைய தொடர்கதை, பின்னைய தொடரும்கதை.
வெறிக்கு எம் உயிர்மட்டுமல்ல, சதையும்தான்.
நியாயம் மறுக்கப்பட்டு, மறைக்கப்பட்ட மண்ணில்
ஒடுக்குமுறை வெறியரிடம் மனிதமும் மண்ணாங்கட்டியும்.

" " " " " " " " " " "

அண்மையில் அறிந்தோம் - வெட்கினோம்
முன்றலில் நிறுத்தி தீர்த்துக்கட்டினர் இருவரை
துரோகிகள் என நியாயப்படுத்தினர்
கைகட்டி, கூட்டமாய் நின்று
வேடிக்கை பார்த்தது மனிதர் கூட்டம்.
தட்டிக் கேட்க, பணிந்து கேட்க யாருமில்லை.
வெட்கி நின்றது கிழக்கு மண்.

மனிதங்கள் செத்து - சூழவும்
பயமூட்டும் இருள்வெளியில்
எதை நான் தேடுவேன்.
ஓடுவதுபோன்ற பிரமை என்னைத்தள்ள
தேடுதல் சாத்தியமில்லைத்தான்.

ஒரு பூவைப்போல், ஒரு புல்லைப்போல்
நம்பிக்கை கொள் என என்
உணர்வுகள் தூண்டினும் - சுற்ற
நிகழ்வுகள் நம்பிக்கை
தருவதாய் இல்லை.

தூ.... நிர்வாணமாகிவிட்ட மனிதர்கள்.

வெட்கி முகம்மூட நான் மட்டும் யார்?
◆

10.03.1999

தயாநிதி

வாழ்க்கையை நிர்ணயிக்கின்ற நாள் இன்று, இரண்டு நாட்களாக எனக்கு வழமையான நாளாந்த வேலைகளில் கவனம் செலுத்த முடியவில்லை. இன்னது என்று பிரித்தறிய முடியாத குமைச்சல். நான் திணறிக் கொண்டிருக்கிற நேரமாய்ப் பார்த்து சிந்துவுக்கும் ஏதோ போல் இருக்கிறது. காச்சல் இல்லை. பல்லும் வந்துவிட்டது. இனிவருவதற்கு ஒன்றும் இல்லை. நேற்று சிணுங்கியவள் இன்று அழத் தொடங்கிவிட்டாள்.

வசந்தனுக்கு இன்று லீவு போடச் சரிவராது. வாரத்தில் முதல் நாள் என்று சொல்லுவார். சாப்பாட்டு மேசையில் ஏதோ குழப்பம் போல. யாருடைய சாப்பாட்டுப் பெட்டி என்பதில் தொடங்கியிருக்கலாம் அல்லது யாருடன் யார் போவது என்பதில் கூட ஆரம்பித்திருக்கலாம். காலைத் தினப்பத்திரிகையில் மூழ்கியிருக்கும் வசந்தனும் அந்த மேசையில் தான் இருக்கிறார். பக்கத்துவீட்டு அனித்தாவுடன் சிந்துபற்றி கதைத்துக் கொண்டிருக்கும் எனக்கு சத்தம் இடையூறாக நான் நன்றி சொல்லி விடை பெறுகிறேன். என்ன விடயம் சர்ச்சையை கிளப்பியிருக்கும் என்பதை அறிய ஆவல் ஏற்பட்ட போதிலும் கவனம் குலையாது பத்திரிகை படிக்கும் வசந்தனைப் பார்க்கிறேன். என்னுடைய பார்வை ஏதோ ஒரு விதத்தில் அவரை சென்றடைந்திருக்க வேண்டும். தலையுயர்த்திப் பார்த்த வசந்தன்,

"என்ன சாப்பிட்டாச்சே, கைவாய கழுவிப் போட்டு வெளிக்கிடுங்கோ"

"நான் அப்பாவோட"

"நீங்கதானே போனகிழமை முழுக்க போனனீங்க"

"ரெண்டு பேரும் பஸ்ஸில போங்கோ எனக்கு வேலையிருக்கு"

சத்தம் குறைய நான் சிந்துவைப்பற்றி கூறுகிறேன்.

"டொக்டரிட்ட காட்டுமன், நான் 9க்கு நிக்க வேணும்" என அவசரப்பட்டார்.

சிணுங்கும் சிந்துவை கதிரையில் தூக்கி இருத்திவிட்டு பாண், பாணுக்கு பூசுவதை பொலித்தீனில் சுற்றி பிரிஷில் வைக்கிற போதும் மனசுமட்டும் முடிவு எடுக்கப்பட வேண்டிய விடயம் பற்றி சிலாகித்துக் கொள்கிறது. அந்த மனிதனின் அறிக்கையின் முன் பக்கம் படமாகிறது.

"பெயர்:- .....

பிறந்ததிகதியும் இடமும்:- ..... அகதிமுகாம்.

தாயின் முழுப்பெயர்:- தகவலாளருக்குத் தெரியாது.

தந்தையின் முழுப்பெயர்:- தெரியாது.

கல்வி:- முகாம் பாடசாலை.

லத்தீன் எழுத்துக்கள் அறிமுகமற்ற இவர் பல மொழிகளைப் பேசக் கூடியவர். 1994ல் அரசியல் தஞ்சம் கோரியுள்ளார். விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டுள்ளது."

நான் தாய்-சேய் நலன் பேணும் மருத்துவருடன் தொடர்பு கொள்கிறேன். தொலைபேசிப்பிரிவில் பணிபுரியும் பெண் அறிகுறிகளை வினாவுகிறாள்.

"நீங்கள் 'பரசிற்' குடுத்துப் பாக்கிறீங்களா அல்லது கட்டாயம் டொக்டரை சந்திக்க விரும்புகிறீர்களா?"

சிந்துவை திரும்பிப் பார்த்துவிட்டு 'பரசெற்' கொடுப்பதாக கூறித் தொடர்பைத் துண்டிக்கிறேன். உடனேயே வசந்தனின் தம்பிக்கு போன் பண்ணுகிறேன்.

"அண்ணி"

"சுகி அண்ணி போனில" என்ற பின்னணியுடன் சுகி "ஹலோ" சொல்லுகிறாள்

"எப்பிடி போகுது"

"இண்டைக்குப் பறவாயில்லை"

"சிந்துக்கு உடம்பு சரியில்ல. உங்களிட்ட கொண்டு வந்து விடுவம் எண்டு"

"அண்ணி நாங்கள் உங்க வரத்தான் இருக்கிறம்"

"எத்தினை மணியளவில"

"நீங்க எத்தினைக்கு இறங்க வேணும்?"

"நான் பத்துக்கு இறங்கினா காணும்"

"அண்ணை நிக்கிறாரே" மெல்லிய குரலில் சுகி.

"இல்லை அவர் போட்டார் ஏதேன் அலுவலே?"

"சீ, அவர் இல்லாட்டி நல்லம். நாங்கள் வாறம்." தொடர்பு துண்டிக்கப்படுகிறது.

நான் பரசெற்றை சிந்துவுக்கு குடுப்பதற்குள் பல கேள்விகளுக்கு பதில் சொல்லவேண்டி ஏற்பட்டது. பின்னேரம் சொக்கலற் கிடைக்கும்; சித்தாவும், சித்தப்பாவும் வருகினம் போன்றவை இறுதியில் உதவிக்கு வருகின்றது. அவள் விரும்பி விளையாடும் குதிரையை இருவரும் சேர்ந்து தேடுகிறோம். நேரம் 8.30 ஆகிவிட்டது.

"பொலிசாரின் கருத்துப்படி அந்த மனிதன் ஒரு விடயத்தில் உண்மையை தெரிவிக்கவில்லை. அந்த உண்மையற்ற தகவலின் அடிப்படையில் தான் அவருடைய கேஸ் பதியப்பட்டு, எந்த சிறு பான்மை இனத்தவர் என அறியப்படாது நிராகரிப்பட்ட விண்ணப்பம். முறையீட்டு காலத்தில் இங்கு வசிக்கிறார்."

வெள்ளை நிறமல்லாத குற்றம் புரிகின்ற எல்லா மனிதர்களுக்கும் குற்றம் புரிவதற்கான இயல்பு பரம்பரையலகு மூலம் கடத்தப்படுகின்றது என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கையுடைய பளிங்கு நீல விழிகளையுடைய வெளிர் நிற நீண்ட மனிதன் தனது முடிவிலும் உறுதியாக இருந்தான். சீருடை அணிந்த காரணத்தினாலோ என்னவோ? இதென்ன பலப்பரீட்சையா?

லோயர் ஒரு பக்கமும், சட்டத்தை நெறிப்படுத்துபவர்கள் இன்னொரு பக்கமும். அந்த வெளிநாட்டு மனிதன் உதவியின்றியவனாக காணப்பட்டான். அன்று, பூட்டிய கதவுக்குள் விசாரணைகள் நடைபெற்றன. எல்லாப் பதிவுகளும் எனது மேசைக்கு வந்தவைதான். என்னுடன் பணிபுரிவோரிடையே மாறுபட்ட கருத்துக்கள் அந்த மனிதனின் உடல் நிலை பற்றி ஏற்பட்டிருந்தது.

> "மொழியை சரளமாக பேச குறுகிய காலத்தில் கற்றுக் கொண்ட "....." தனது உயிரியல் தாயை சந்தித்துள்ளார்.
> தாய் 90களில் தீவிரமாக இயங்கிக் கொண்டிருக்கும் அமைப்பில் பொறுப்புவாய்ந்த நடவடிக்கைகளை மேற் கொண்டவர்"

இவருடைய நண்பனைக் கைது செய்வதில் பலருக்கு ஈடுபாடு இருந்தது. மனிதாபிமானம் மக்களது உரிமைகளைப் பேணுகிறோம் என்று பெருமிதப்பட்டுக் கொள்பவர்கள் அயல் நாட்டவன் என்றதும் நாலு வரிகளைக் கொண்ட சட்டவிதிகளை நன்றாகப் பிடித்துக் கொள்வதுண்டு.

ஜெகனும் சுகியும் வாசலில் நிற்கிறார்கள். சுகியின் முகம் சரியில்லை. வாசலிலேயே சிந்து கதைக்கத் தொடங்கிவிடுகிறாள். நான் தோளைத் தொட்டு பார்வையால் வினாவுகிறேன். சுகி உடைந்து போய் ஓவென்று அழுகிறாள். ஜெகன் சிந்துவுடன் உள்ளே போகின்றான். நாங்கள் சுகமான உரையாடலைத் தொடர நேரம் எடுக்கிறது. சிந்து நித்திரையாகி விடுகிறாள். வெறுமை படர்கிறது.

"என்ன பிரச்சனையெண்டு கேக்கலாமா? " இது நான் "சொல்லுமன்"

"நேற்று அண்ணி கொஸ்பிட்டலில எஸ்கான் பண்ணி பார்த்தவை. அதோட வேற ரெஸ்ற்றும் எடுத்தவை" தொடர முடியாமல் விம்மத் தொடங்கிய சுகியின் கையை இறுக அழுத்துகிறேன்.

"நான் அம்மாட்ட போகப்போறன்". நான் ஜெகனைப் பார்க்கி றேன்.

"பிள்ளைக்கு டவுன் சின்ரோம் என்று டொக்டர் சொன்னவர்." என்று சொல்லிவிட்டு தலையைத் திருப்பி விட்டார்.

எனது தலைக்குள் நான் வேலை தொடங்கு முன் பதியவைத்தவை வந்து போகின்றது. தொழிலுக்கான உடையில் அந்த நிறுவனத்தில் இருக்கும் போது உணர்ச்சிவசப் படாமல் நடுநிலைமையாக 'செய்தி'யின் நன்மைதீமைகளை எந்தவித ஒளிவுமறைவு இன்றிச் சொல்லவேண்டும். சம்பந்தப்பட்டவர்கள் எடுக்கும் முடிவில் எந்தவித பங்களிப்பையும் செய்யக்கூடாது. முடிவெடுக்கும் பொறுப்பை பெற்றோர் அல்லது பாதுகாவலரிடம் விட்டு விடலாம். ஆனால் இங்கு மௌனமாக இருப்பது மேல் என்று எனக்கு படுகிறது. நேரம் விரைகிறது. 9.40ஐத் தாண்டுகையில் நான் எதுவும் கூறாமல் இரண்டு மணிக்கு வருவதாக கூறி விடை பெறுகிறேன்.

> "கடமைகளை சரிவரச் செய்ய முயல்வது மனித இயல்பு. கட்டளைகளை நிறைவேற்றுவது கூட கடமை தான். தண்டனைகளை எதற்காக விதிக்கிறோம்? ஒழுங்கு விதிகளைப் பேணுவதற்காக."

இந்த விதிகள் மூலம் என்ன எதிர்பார்க்கிறோம்? சமூகத்தின் அங்கத்தவர்களுக்கு ஈடு செய்யமுடியாத இழப்பை ஏற்படுத்தும் தண்டனைகள் சமூகத்திற்கு தேவையா? யார் குற்றவாளி, என்ன தண்டனை வழங்க வேண்டும் என்பதையும் முடிவெடுக்கும் அதிகாரத்தை வழங்கியது யார்? எனது வாத்தியாரின் பாட நேரம் மனதில் நிழலாகிறது.

அலுவலக மேசையில் அடுக்கி வைக்கப்பட்ட கோப்புகளை மேலெழுந்தவாரியாக பார்க்கிறேன். முதலாவது சிகிச்சைக்குப் பின்பு பெற்றுக்கொண்ட வாக்குமூலங்கள் அவை.

"என்னுடைய அப்பாவை நான் பார்த்ததில்லை"

"அம்மா எங்கே இருக்கிறார்?"

"தேவாலயம் ஒன்றில்"

"பொலிசாரிடம் உண்மையை மறைப்பது தண்டனைக்குரிய குற்றம் தெரியுமா?"

"உங்களுடைய குடும்பத்தில் இப்பிடியொரு நிலைமையிருந்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்?"

சம்பாசணையைத் தொடர முடியவில்லை என கையெழுத்திடப்பட்டுள்ளது. அரசியல் தஞ்சம் கோரிய விண்ணப்பமும், விண்ணப்பத்திற்கான முறையீடும் நிராகரிக்கப்பட்டுள்ளது. லோயரின் முறையீட்டில்

> "உயிரியல் தாய், மற்றும் வளர்ப்புத்தாய் இங்கு வசிப்பதாலும் சொந்தநாடு இல்லாத நிலையில் இங்கு மனிதாபிமான ரீதியில் சிகிச்சைக்காலம் முடியும் வரை தற்காலிக வதிவிட அனுமதி கோரப்பட்டிருந்தது.

வெளியே வரும் நான், மிகவும் சந்தோசமாக கதைத்தபடி குறுக்கும் நெடுக்கும் நடக்கும் சம்பத்தை சந்திக்கிறேன். என்னைக் கண்டதும் தமிழில் வணக்கம் சொல்லிவிட்டு நோர்வேஜிய மொழியில் கதைத்தபடி நடக்கத் தொடங்கிவிட்டான். முடிவெடுக்கப்படும் மனிதனின் அறையை எட்டிப்பார்க்கிறேன். நீல வெளிச்சத்தில் நிம்மதியாக தூங்கிக் கொண்டிருக்கிறான். எனது முடிவு பற்றியும் லாபநட்டங்களை பட்டியல் படுத்துகிறேன். மனசு இலேசாகிறது.

கூட்டம் தொடங்கி விவாதம் சூடேறுகிறது. நிபுணர் தனது கருத்தில் உறுதியாக இருக்கிறார். நாங்கள் அவதானிகளாக இருக்கி றோம். இறுதியில் எம்மிடம் வருகிறது. கருத்து தெரிவிக்கப்படுகிறது. எம்மிடையே முரண்பாடுகள் இருந்தபோதிலும் என்னுடைய நோயாளி என்ற வகையில் எனது முடிவுக்காக பார்த்திருக்கின்றனர்.

> "நபரின் தனித்தன்மையில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக சுய கட்டுப்பாடுள்ள செயல்கள் சூழவுள்ளவர்களின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக இருக்கின்ற மையால் பிரயாணம் சிபாரிசு செய்யப்படவில்லை"

எனக் கையெழுத்திடுகிறேன். நீலக்கண்கள் என்னை ஊடுருவிப் பார்ப்பதாக உணருகிறேன். கைகுலுக்கிவிட்டு வெளியேறுகிறேன். சுகந்தியை நினைக்க உடம்பு சிலிர்க்கிறது. ◆

கழுத்திருப்பு

என்னுள் ஒரு கவிதை
கண்ணாமூச்சியாடுகிறது.

அடிக்கடி தோன்றுவதும்
விரிந்து படர்வதும்
ஆற அமரவிருந்து
பேனாவைக் கையிலெடுக்க
ஓடிஒளிவதுமாய்
என்னை அந்தரிக்கவைக்கிறது.

ஏதாவது
அலுவலில் இருக்கும்போதில்,
சனநெருக்கடியில்,
பஸ்ஸில் பிரயாணிக்கையில்,
வேலைத்தலக் கடமையிடை,
உணவருந்துகையில்,
நண்பர்களோடு உரையாடுகையில்
திடீரெனத் தோன்றி
என்னைப் பிடி பார்க்கலாம்
என சவால்விடுகிறது.

இன்று
தொழிலகக் கடமையிடை
மெல்ல நுழைந்து
முழுவதுமாய் வியாபித்து
சொற்களின் கட்டுமானத்தில்
எழுந்தாடிய கூத்தில்
எனையிழந்து
பவ்வியமாய் பதுங்கியிருந்து
பிடிக்க எத்தனித்த பொழுதில்....

எப்படியோ
இன்றும் எனை ஏமாற்றிவிட்டது
எசமானன்
திட்டிவிட்டுப் போனதுதான் மிச்சம்.

எப்படியும்
அதைப் பிடித்துவிட வேண்டுமென
உள்ளம் அவாவுகிறது

எப்படிப் பிடிப்பது
அதன் ஒரு எழுத்துக்கூட
ஊனமின்றி?

காத்திருக்கிறேன். ◆

மனிதக் காட்சி சாலை

கொடுங்கோடை
வெய்யில் கொழுத்த
தீக்கொழுந்தெறிந்த
தேசம்.

நாங்கள் முடிச்சுகளோடு
முகங்களை மாற்றினோம்.

கரடிகளுக்கும் மனிதமுகம்
கழுதைகளுக்கும் மனிதமுகம்
பன்றிக்கும் பூனைக்கும் குரங்கிற்கும்
பச்சோந்திக்கும் பறவைக்கும்
பல்லிக்கும்....

மனிதரும் கூட
தங்கள் தங்கள் முகங்களை
அழித்து
வேறு வேறு மனித முகங்களை
எழுதிக் கொண்டோம்.

புலம்பெயர்ந்து
நான்கு திசையிலும் படர்ந்தோம்

உலகு விரிந்தது பருத்து
சமநிலை கெட்டது
போலி முகங்களை கிழித்தெறிந்தோம்

இயல்பு தோன்றிற்று
பிறகென்ன?

கூட்டம் கொண்டாட்டம்
குழிபறிப்பு
குழையடிப்பு
கோவில் திருவிழா சூரன்போர்
குரங்காட்டம் கரடிவித்தை
பொதிசுமப்பு....

இப்பொழுது
பனிசொரிய மறுக்கிறது
துருவம்.
மடிபெருத்து பெருத்து
வீதியில் அலைகிறது
மிருகம்.

தப்பித்துக் கொண்டனர்
புத்தி தெளிந்தவர்
அகப்பட்டுக் கொண்டது
அப்பாவிகளும்
நானும். ◆

காலைங்கடந்த கவிதை

வெண்பனித் துகிலுள்
மோகித்துக் கிடக்கிறது
துருவம்.
நிலவு மெல்ல இறங்கி வந்து
பனிவயலில்
மேய்கிறது.

நான்
மோனத்துள் கிடக்கிறேன்
ஒரு கவிதைக்காய்.

நிலவும் அவளும் கூடிக்
கொலுவிருந்த
அன்றொரு பொழுதில்
எழுதொரு கவிதை
என்கிறாள் தோழி.

மொழியும் உணர்வும் ஊறிப்
பிரவாகித்த
அன்றைய இரவில்
மரபின் தளைகளுக்குள்
கட்டுண்டு அழிந்து போகிறது
என் கவிதை.

மரபின் தளைகளை மீறி
சுயமாய் கவிபுனையும்
இன்றைய பொழுதில்
நான்
மோனத்துள் கிடக்கிறேன்
ஒரு கவிதைக்காய்.

ஒருபத்து ஆண்டுகளை
இரைமீட்டு தள்ளிவிட்டு
காத்துக்கிடக்கிறது
காலம்.
துருவத்தின் உடல்மேல்
மெல்லமேய்ந்து வருகிறது
நிலவு.

எல்லாம் இருக்கிறது
ஆனால்
கவிதை கேட்ட அவள்? ◆

யாத்திரை

களங்கட்டிக் கூட்டுக்குள் சிறைப்பட்ட
மீன்போலென் வாழ்வு நகர்கிறது.
பாறாங்கல்லெனக் கனக்கும்
இதயச்சுமையை
புறந்தள்ள முடியாத்துயரத்தில்
வீழ்கிறேன்.

ஆண்டாண்டாய் ஊர்ந்து
நகர்ந்து
குழிவிழுந்த வீதிகள்போ
நீளும்
என் யாத்திரை.

ஒவ்வொரு கிடங்கும்
பொறிவைத்துக்
காத்துக்கிடக்கிறது
மரபு.

தவறி வீழும்போதில்
விதியென விலக்கிடமுடியா
இயலாமையில் துடிக்கிறேன்.

மீளஎழும்பொழுதில்
மரபுக்கோட்டையின்
அடிக்கல்லிலொன்றை
பெயர்த்துக் கொணரும்
எத்தனம் என்னுள்.

ஆடுபுலியாட்டமாய்
என் யாக்கையின் யாத்திரை
நகர்கிறது.
இதைவிட்டால்
வேறு எதைச் சொல்ல. ◆

மூன்று: பு

(புலவன் - புரவலன் - புகழ்)

அதோ!
அந்தப் பேனாமுள்ளை முறித்துவீசு.
அவன் குரல்வளையை
நெரி; எல்லை போடு;
வெளியே நிற்பவனை மிதி;
துவம்சம் செய்;
நீ உள்ளே வா; முதுகுசொறி;
என் உள்ளம் சுகிக்கும்
வரையில்....

விழா:
என் கன்னக்கோலுக்கு
பத்தாண்டு விழா.
இல்லை இருபதாண்டு... இதுவும்
போதாது.... முப்பதாண்டு....
ஆமாம் முப்பதாண்டு
இப்போதைக்கிருக்கட்டும்.

ஏய் புலவா!
என் ஆஸ்தான புலவா
பாடு; புகழ் பாடு; எட்டுத்திக்கும்
ஒலிக்கப்பாடு

பாடல்:
பெருமை கொள்வோம்
கல் தோன்றி
மண்தோன்றாக் காலத்து
முன்தோன்றிய குடிகளென்பதில்
பெருமை கொள்வோம்.

ஒலிவாங்கியில் தொங்கும்போதில்,
பதவிக்கதிரையுள் புதையும்போதில்,
மலர்மாலைக்குள்
தலை நுழைக்கும்போதில்,
விளம்பரத்தாள்களில்
எம்முகம் பார்க்கும்போதில்
வெற்றுத்தாளில் கையொப்பமிட்ட
ஜே. ஆர். காலத்து மந்திரி போல
விருதுக்காய்
கைகட்டிச் சேவகம் செய்யும்போதில்,
நாங்கள் பெருமைகொள்வோம்
துருவப்பூமியில்
தமிழ் வளர்வதாக.

நிறுத்து!
என் செவிப்பறை நுழைந்தது
அபசுரம்; எவன் குரல்;
என்னவன் குரலா;
பிடுங்கி எறி; தூர.

வெளியே வீழ்ந்த ஆத்மா சொன்னது:
காஞ்சோண்டிகளை அழி;
பனங்கொட்டைகளை விதை. ❑

'வாழ்வுக்கான போராட்டம்' புகைப்படம்: சி. புஸ்பராஜா

மு. நித்தியானந்தன்

சிந்தனை: அக்கினிக்குஞ்சு

கலை, இலக்கியம், அரசியல், சமூகம், சமயம், ஆத்மீகம் அனைத்திலும் புதிய சிந்தனைகளை, மாற்றுக் கருத்துக்களை எதிர்கொள்ளும் மனோபக்குவம் வறிதாகிக் கொண்டிருக்கிறது. கருத்தாடல்கள் ஸ்தாபனப்படுத்தப்பட்டு அவற்றுக்கு அனுசரணையான கருத்துக்கள்மட்டுமே ஆராதிக்கப்படுகின்றன. அபிப்பிராயபேதம் என்பதோ கருத்து முரண்பாடு என்பதோ ஆலகால விஷத்தைப்போல அஞ்சப்படுகிறது. விழாக்கள் என்றால் பொன்னாடை போர்த்துவதும், விமர்சனங்கள் என்றால் உச்சியில் வைத்துப் போற்றுவதும் என்று மாமூலாகிப் போயுள்ளது.

மாறுபட்ட கருத்துகள் எப்போதுமே சந்தேகத்தோடு பார்க்கப்படுகிறது. தங்களின் அதிகாரத்தை, ஆதிக்கத்தை, கட்டி எழுப்பப்பட்டுள்ள சொப்பனக் கனவுகளை, புகழ்க் கோபுரங்களை, பெருமிதப் பதாகைகளை அவை துவம்சம் செய்துவிடும் என்று அஞ்சப்படுகிறது.

ஒவ்வொருவரும் ஒவ்வொரு குறுநிலப் பிரதேசத்தைத் தமக்கெனக் கூறுகட்டி வைத்துக் கொள்ள விரும்புகிறார்கள். அதற்குள் அவர்களின் காட்டுத்தர்பார் அரங்கேறும். அவர்களுக்கு மகிழ்ச்சியூட்டத்தக்க பிரீதியான கருத்துக்கள் மட்டுமே அங்கு ஆரவாரத்தோடு வரவேற் கப்படும். தங்களின் அதிகாரத்தினைத் தக்கவைத்துக் கொள்ள கருத்துகள் வலிய இரும்புக் கரங்களால் உருவகிக்கப்பட்டு திணிக்கப்படுகின்றன. தாங்கள் வீசப்பட்டு விடுவோமோ என்று அனுதினமும் அஞ்சிக்கொண்டிருக்கும் இவர்கள் சதா கழுகுக் கண்களோடு மாற்றுக் கருத்துகளைக் கண் காணித்து வருகிறார்கள். அச்சமும் பீதியும் இவர்களைப் போட்டு வதைக்கிறது. புகழாரங்களின் வண்ணஒளியில் மட்டுமே இவர்களின் கண்களுக்குப் பார்வை கிடைக்கிறது. வேறுபட்ட கருத்துகளும் மாறுபட்ட கண்ணோட்டங்களும் எழும்போது இவர்கள் கபோதிகளாகிப் போகிறார்கள். அதிகாரவெறியும் புகழ் போதையும் உச்சத்தில் ஏறிய கிறக்கத்தில் இவர்கள் உலா வருகிறார்கள்.

தங்கள் குறுநிலப் பிரதேசங்களுக்கும் அப்பாலும் இவர்கள் பார்வை விழுவதுண்டு. அயல் பிரதேசங்களின் எல்லைகளுக்குள்ளும் இவர்கள் ஊடுருவுவதுண்டு; சமயங்களில் அவற்றோடு சமரசம் செய்துகொள்வதுமுண்டு. தேவதைகளும் கால்பதிக்கத் தயங்கும் இடங்களிலும் இந்த நச்சுச் சாத்தான்கள் ராஜரீகம் செய்ய ஆரம்பித்துவிடுகிறார்கள். அதிகார லகான்களைக் கையில் வைத்திருப்பவர்கள் உதிர்ப்ப தெல்லாம் பொன்மொழிகளாகிவிடுகிறது.

தடம்புரண்டு விழும்போது இவர்கள் யாரோடும் எந்த சமரசத்துக்கும் தயாராகிவிடுவார்கள். எல்லாருமே தங்களின் விசுவாசிகள் என்ற சுயமோஹிகளாகி விடுகிறார்கள். தாங்கள் விரோதங் கொண்டிருப்பவருக்கு எதிராக ஊரெங்கும் எத்தனை விரோதிகள் உள்ளனர் என்று விரல் மடக்கிக் கணக்குப் போட்டுப்பார்த்து குள்ள சந்தோஷத்தில் திளைத்துவிடுகிறார்கள்.

சிலைகளிலும் போஸ்டர்களிலும் கட்-அவுட்டுகளிலும் பத்திரிகைகளிலும் வண்ணங்களில் தங்களின் பிரதிமைகளைப் பார்த்து இவர்கள் மாய்ந்துபோய் விடுகிறார்கள். சின்னஞ்சிறு விமர்சனங்களும் இவர்களின்

மனிதன் சிந்தனைக்கு அஞ்சுகிறான். மரணத்தைவிட சிந்தனை அவனை அச்சுறுத்துகிறது. சிந்தனை கிளர்ச்சிகரமானது; சண்டமாருதம் போன்றது. அது அங்கீகாரங்களை உலுக்குகிறது. இதமான சௌகரியங்களைப் புரட்டிப் போடுகிறது. தவறுகளை அவை தயவுதாட்சண்யமின்றிச் சாடுகிறது.

◆◆◆◆

சிந்தனைப் பிரவாகம் என்பது காட்டுவெள்ளம் போன்றது. கரைபோட்ட பாதைகள் அதற்கில்லை. அது விதிகளை மதிப்பதில்லை. அதிகாரங்களை அது கேள்விக்கு இலக்காக்குகிறது. காலங்காலமாகப் பேணப்பட்டு வந்த கருத்துகளை அது துச்சமென மதிக்கிறது.

அடிவயிற்றைக் கலக்கிவிடும். ஒற்றைவரி விமர்சனங்கூட இவர்களை உபாதைக்குள்ளாக்கிவிடும். மாற்றுக்கருத்துக் களை உட்கொள்ளும் ஜீவன் இல்லாத ரத்தசோகை பிடித்த வர்களின் கூட்டம் இது. தியாகிகள் என்றோ துரோகிகள் என்றோ இலகுவில் கோடுபோட்டு ஆளைத் தீர்த்துவிடுவது மிக எளிதாகப் போய்விடுகிறது. இது ஒன்றும் புதிய கதை யும் அல்ல. அரசியல் சரித்திரத்தின் எல்லாப் பக்கங்களிலும் காணக்கிடைக்கிற உண்மைகள்தான்.

அறிவார்ந்த கருத்துகளை ஆழ நோக்கும் பொறு மையோ அவகாசமோ இல்லை. மேலோட்டமான சுலோகங் கள் மட்டுமே கிரஹிப்பிற்கு போதுமானவையாகி விடுகின் றன. மந்திரம்போல மேற்கோள்களை அழைத்துக்கொண் டுவர அவர்கள் சலிப்புறுவதில்லை. தங்களின் முட்டாள்தன மான முடிவுகளுக்கு மார்க்ஸிய மூலவர்களையும் துணைக் கழைத்துவிட்டு, பின்னால் தங்களின் முடிவுகள் லாயக்கில் லாதவையாக வெளிறிப்போனதும் தாங்கள் தமது முடிவை மாற்றிக்கொண்டிருப்பதாகவும் இவர்கள் ஒற்றைவரிப் பிரக டனம் செய்துவிடுவார்கள். மேற்கோள்களை அனாதையாக்கி விடுவார்கள். தங்களின் கொஞ்சநஞ்ச அறிவிலோ, அனுப வத்தின் பலத்திலோ அறிந்துகொண்டுவிட்டோமென்ற அகங் காரத்தின் முத்திரையை இவர்களின் வார்த்தைகளிலே பார்க்கமுடிகிறது. தங்களுடைய கருத்துக்களின் எதிரொலி களை மட்டுமே எங்குமே கேட்க இவர்கள் அவாவுறுகின் றனர்.

தாங்கள் கொண்டிருக்கும் கருத்துக்கள் அனைத்துமே மாற்றுக்குறையாத கருத்துகள் என்று நம்பும்போக்கு எங்கும் விரவியுள்ளது. முற்கற்பிதங்களும் தனிமனித விருப்பு வெறுப்புகளும் சமரசப்பாங்கும் லாபநஷ்டக்கணக்கும் அதி காரமும் பெருமிதமும் புகழ் அவாவுதலும் அச்சமும் கருத் துகளின் வீரியத்தைக் கபளிகரம் செய்துவிடுகின்றன.

மனிதன் சிந்தனைக்கு அஞ்சுகிறான். மரணத்தைவிட சிந்தனை அவனை அச்சுறுத்துகிறது. சிந்தனை கிளர்ச்சிக ரமானது; சண்டமாருதம் போன்றது. அது அங்கீகாரங்களை உலுக்குகிறது. இதமான சௌகரியங்களைப் புரட்டிப் போடு கிறது. தவறுகளை அவை தயவுதாட்சண்யமின்றிச் சாடுகி றது. சிந்தனைப் பிரவாகம் என்பது காட்டுவெள்ளம் போன் றது. கரைபோட்ட பாதைகள் அதற்கில்லை. அது விதிகளை மதிப்பதில்லை. அதிகாரங்களை அது கேள்விக்கு இலக் காக்குகிறது. காலங்காலமாகப் பேணப்பட்டு வந்த கருத்து களை அது துச்சமென மதிக்கிறது. ஸ்தாபனங்களுக்கு எதிரான குரல்களை அது ஓங்கி ஒலிக்கிறது. 'அமைதி'க்கு அது ஊறு தேடுகிறது. குருட்டு நம்பிக்கைகளுக்கு அது தார்க்கோல் சூடு போடுகிறது.

கலிலியோவும் கோபர்னிக்கஸும் நியூட்டனும் டார்வினும் மார்க்ஸும் பிராய்டும் ஐன்ஸ்டைனும் இந்தச் சிந்தனைப் பிரவாகத்திற்கு தம் ஊனையும் உயிரையும் சிந்தியுள்ளனர்.

நமது சொந்தச்சூழலில் கருத்துவன்முறையின் மிகப்பெ ரிய களப்பலியாக ராஜினி தெரிகிறார். தமிழர்தம் விமர்சன சரித்திரத்தில் எழுத்திற்காக உயிரைப் பறிகொடுத்த முதல் அரசியல் விமர்சகியாக ராஜினி முக்கியத்துவம் பெறுகிறார். மனிதநேயமிகுந்த சபாலிங்கத்தின் உயிர்குடிக்கப்பட்ட நிக ழ்வு இந்த இருண்ட வன்முறையின் மற்றுமொரு நாசப்பதிவு.

இந்த அக்கிரமங்களுக்கும் கொடிய வன்முறைகளுக்கும் முகங்கொடுத்து மனிதசிந்தனை மனுக்குலத்தின் சரித்தி ரத்தில் ஆழமான மாறுதல்களை ஏற்படுத்தியிருக்கிறது என்பதுதான் அபூர்வமான படிப்பினையாகும். ◆

குருபரன்

இருந்தும் இறந்தோர்

நண்பன் பேசவாரம்பித்தான்
கிழக்கிலிருந்து வந்தவன்,
பதட்டங்கள் சற்றே நீங்கியிருந்தன.

பிரச்சினை என்ன?

துவக்குகள் எதிரிக்காகத்தானே?
என்னிடம் ஒரு சந்தேகக் கேள்வி!

ஒடுக்குமுறை விளையாட்டில்
நண்பனும் எதிரியும் ஒன்றாகத்தானிருக்கின்றனர்.

மனச்சாட்சிகளின் மண் உருவங்கள் பேசியதால்
துவக்குமுனைகள் சுழன்றன சுற்றி
அறுபட்ட மரங்களாய் உடல்கள்
காற்றுவெளியில் ஒடுங்கிய குரல்கள்
கரைந்து பரவியது நாற்புறமும்.

கேள்வி கேட்கும் சந்ததிகள் வரும் - ஒரு நாள்
எதற்குத் துவக்கை ஏந்தினாய்?
எதற்குத் துவக்கை ஏந்தினாய்?

குதூகலம், விளையாட்டு, வாழ்வு
எல்லாம் இழந்து நிற்கும் பூமி.

ஓங்காரமிட்டும், பிளிறியும்
கோபத்தைக் கக்கும் துவக்குகள்....
கருகிவிடும் போதி மரங்கள்
மானுடம் வேண்டிய மாந்தர்கள்
மறைந்தனரோ மாயமாகினரோ....
எதிரிகளில்லை.... நண்பர்களில்லை
நாடுமில்லை.... வீடுமில்லை
துவக்குகள் மட்டுமே உயிர்வாழும்.

பூமி
பூமியை இழந்து நிற்க
மனிதன்
மனிதத்தை இழந்து நிற்க
சோம்பிய முகங்களில் முத்திரை குத்திக்கொண்டோம்
நாங்கள் அகதிகள்.

உனக்குத் தெரியுமா நண்பா?

மேற்கு நோக்கிய படகுகள்
திரும்பி வருமா?
காலங்காலமாய் கடற்கரையில்
மணல்கள் முணுமுணுப்பது
உனக்குத் தெரியுமா நண்பா?

அனைத்தும் மௌனமாகி
துவக்குகள் மட்டுமே பேசிக்கொண்டிருப்பது
உனக்குத் தெரியுமா நண்பா? ◆

தொற்றுவைப்பது எதை?

ரவீந்திரன்

"எப்படி சுவிஸ் சனம். உங்களோடை எப்படி? "

"என்ன... எங்களை ஸ்வாற்ஸ் (கறுப்பர்)" என்று சொல்லுவாங்கள். சிலவேளைகளில் இதைச் சொல்லி திட்டுவாங்கள்.

அவங்களுக்குச் சொல்லு, ஊரிலை நாங்கள்தான் வெள்ளையெண்டு.

சிரிப்பதற்கு மட்டுமல்ல ஒரு பொறியாய் அது மனசில் விழுந்தது.

காதலுக்கு குறுக்கே பெற்றோர் வருவது பிழை. அதுவும் புலம்பெயர் நாட்டில் இப்படி குறுக்கே வருவது மோசமான விளைவைத் தரலாம்.

விவாத மேடையில் இப்படிப் பேசிக்கொண்டிருந்தார் ஒருவர்.

அவருக்குத் தெரியாமலே அவரின் பேச்சு கோணலானது.

என்ரை பிள்ளை ஒரு கறுப்பனை காதலிச்சால்கூட நான் குறுக்கிட மாட்டேன் என்கிறார்.

"பொம்பிளை எப்பிடி நிறமோ? "

"ஆ.. கறுப்...பா? "

கல்யாணப்பேச்சில் கேட்டான் என் நண்பன்.

இயல்பாய் பதிலளித்தேன் நான், எதுவித தடங்கலுமின்றி.

என்னிடம் இருட்டு இருந்தது.

பற்றிக்கொண்ட பொறி என்னில் அணைவதாய் இல்லை. அது வளர்ந்துகொண்டிருந்தது.

அந்தக் கலைஞன் மேடையில் தனிநபர் நடிப்பில் வியாபித்துக் கொண்டிருந்தான். புலம்பெயர் வாழ்வின் அவலங்களை முகம் இழந்த மனிதனாக சித்தரிப்பதில் காற்றோடு கலந்துவிட்டிருந்தான்.

இப்போ அவன் பரீஸ் மெட்ரோ நிலையமொன்றுக்கு எம்மை அழைத்துச் சென்றிருந்தான். ஒரு ஆபிரிக்கர் ஏறுகிறார். பின் கதவால் அவரது நாட்டைச் சேர்ந்த இன்னொருவர் ஏறுகிறார். அவர்கள் சுகம் விசாரிக்கிறார்கள் உரத்த குரலில். மிக உரப்பாக பேசிக் காட்டுகிறார் நமது கலைஞர். அவர்களின் மொழியை அறியாதவர் அவர். எம்மை சிரிக்க வைப்பதில் அவருக்கு வெற்றிதான். (அப்படியாக உச்சரிப்புகளை அள்ளி வீசினார்.) அவர்களின் கலாச்சார அடையாளங்களை வெள்ளைத்து வத்துடன் ஒப்பிட்டோ என்னவோ நானும் சிரித்துக் கொண்டுதான் இருந்தேன்.

இவையெல்லாவற்றையும் என் பொறி கிளறி எடுத்து தின்று கொழுத்துக் கொண்டிருந்தது. இப்போ அது என்னைச் சுடுமளவிற்கு வளர்ந்துவிட்டிருந்தது.

"சிறீலங்கா எங்கை இருக்கு? ஆபிரிக்காவிலா?" என்று சிலர் அப்பாவித்தனமாகக் கேட்டுவிடும்போது துடித்துப் போவேன். விழுந்தடித்து மறுத்து ஆசியாவில் என்று நிறுவிய பின்தான் மூச்சே...

"நாங்கள் கறுப்பல்ல; பிரவுண்" என்பேன்.

எனக்கு குழப்பங்கள் எழுந்து கொண்டிருந்தன. வெள்ளைத் தோல் பிரவுணாக வரவேண்டும் என்பதற்காக சூரியக்குளிப்புக்காக அலைவார்கள். குளித்து குளித்து பின் ஓரிரு நாட்களில் மறைந்து போய் விடுவதற்குள் அந்த பிரவுண் நிறத்தை மற்றவர்களுக்குக் காட்டிக் கொண்டாடுவார்கள்.

ஸோன் பிரவுண். அப்படிச் சொன்னால்தான் அவர்களுக்கு திருப்தி தரும்.

அப்படியாயின் எங்களை ஏன் கறுப்பர் என்கிறார்கள்.

தமிழன் தமீலன் இரண்டுமே எனக்கு ஒரே உணர்வைத் தருவதில்லை.

தமிழன் என்பதன் டொச் மொழி பெயர்ப்பு தமீலன் என்பதற்குள் என் மனசு இப்போ அடங்குவதாகவும் இல்லை.

தமீலன் என்று ஒருவன் சொல்லும் போது ஓங்கி அறைய வேண்டும்போல் இருக்கிறது எனக்கு.

கறுப்பன் என்பதும் ஒரு நிறரீதியிலான அடையாளப் படுத்தலாக மட்டும் ஏற்க முடியாமல் இருந்தது.

ஸ்வாற்ஸ்.

ஆம் நான் கறுப்பன்தான்.

பிரவுண் என்று சாதிப்பதை நான் தவிர்த்தேன். இன்னும் சொல்லப் போனால் சாட்டுக்கு அப்படிச் (பிரவுண் என) சொல்வதை நான் வெறுத்தேன்.

நிறம் அப்பிடியெண்டாலும் என்ரை மனசு வெள்ளை என்று எனது முகம் கோணாமல் யாராவது சொல்லும்போதெல்லாம், இல்லை, என்ரை மனசும் கறுப்புத்தான் என்பேன். என் சொற்கள் அவர்களை ஓங்கி அறையும்.

எனது நண்பன் கனடாவுக்குச் செல்லும் வழியில் பொட்சுவானாவில் தடங்கிப்போனான். சுமார் ஒன்றரை வருடம் அங்கு வாழ்க்கையை ஓட்டி

விட்டு கனடா போய்ச் சேர்ந்திருந்தான்.

என்ரை வாழ்க்கையில் அப்பிடி நல்ல சனங்களை காணவே ஏலாது. என்ன அருமையான சனம் என்று எழுதியிருந்தான்.

வெளிப்படையாக பழகுவது அவர்களின் சிறப்பம்சம் என்றான்.

கறுப்பை அப்படித்தான் நான் அடையாளப்படுத்துகிறேன்.

என் மனதை கறுப்பு என நான் கொண்டாடுகிறேன்.

தடித்த சொண்டுகளும் எனக்கு அழகைக் காட்டியது.

மனம் திறந்து அட்டகாசமாய்ச் சிரிப்பதும் உவப்பைத் தந்தது.

ஊரில் எனக்கு ஒரு ஆசிரியர் இருந்தார். ஒவ்வொருத்தருக்கும்

பட்டப் பெயர் வைப்பதில் சூரன். கறுவல், சிவலை, வெள்ளையன், கொக்கன், அரிக்கன் (கட்டை இனம்), கிளி மூக்கன்... என்றெல் லாம் பெயர்கள் புழங்கும். அப்படி நாம் மற்ற மனிதர்களின் தோற்றமும் எமக்கு அலசலுக்கான விடயங்க ளாக இருந்தன. மற்ற மனிதர்களை தோற்றத்திலும்கூட அங்கீகரிக்கப் பழகாமல் வாழ்ந்தோம்.

கடந்த பல வருடமாக கொட்டியி ராத snow கொட்டியிருந்தது. பனித்தி ரளில் நிலம் நுரைத்துப்போய்க் கிடந்தது. வெள்ளை பளிச்சென்றி ருந்தது. விதவிதமாக படங்கள் எடுத்தேன். நானில்லாத காட்சிகள் மட்டும் தேறியது. Snow என்னுடன் ஒட்டாததுபோல் இருந்தது. ஆனா லும் ஆழப் புதையப் புதைய நான் நடந்ததும் அள்ளியெறிந்து விளை யாடியதும் பொய்யில்லை. அதில் நான் மகிழ்ந்திருந்ததும் பொய் யில்லை. நான் நின்றெடுத்த படங்களை ஏன் நான் கிழித்தெறிந் தேன். புரியவில்லை. எனது ஆசிரிய ரின் மொழியில் அதற்கான விடை சுலபமாகவே கிடைத்துவிடும்.

எனது நிறத்தை நான்கூட அங்கீகரிக்கப் பழகியிருக்கவில் லையோ என்னவோ.

எனக்கு அவனிடம் பொறாமை இருந்தது. அவன் ஒரு ஆபிரிக்கன். என்போலவே வேலைசெய்தான். மனம்விட்டுப் பழகுவான். ஸ்வாற்ஸ் (கறுப்பன்) என்று யாராவது திட்டி னால் அவன் பேசத் தொடங்கிவிடு வான். "நான் கறுப்பன்தான். அதுக்கென்ன இப்போ." ஒருவித அகங்காரத்துடன் பதிலடி கொடுப் பான். நானோ நான் கறுப் பில்லை. பிரவுண் என்று சாதித்ததை நினைத்து வெட்கப்பட்டேன்.

வெள்ளை தவிர்ந்த எல்லாமே கறுப்பு. இதுதான் வெள்ளைத்துவத் தின் கருத்தியல்.

வெள்ளையர், கறுப்பர் என்ப தெல்லாம் ஒரு நிறரீதியிலான அடை யாளப்படுத்தலாக கொள்வது ஒரு பகுதிச் சரிதான். அதைவிட அது சுமந்திருக்கும் கருத்தியல்தான் இயங்கிக் கொள்கிறது.

இப்போது புரிந்துகொண்டேன் தமீலன் (தமிழன்) என்று சொல் லும்போது எனக்கு ஏன் என்னை யறியாமல் கோபம் வருகிறதென்று.

பூக்களை நான் ரசித்தேன். வண் ணத்துப் பூச்சிகள் எனக்கு அழ கைத் தந்தன. நிறங்கள்... மணங் கள்... பிடித்ததோ பிடிக்கவில் லையோ கண்ணுக்கு இயல்பானதா கப் பட்டது. ஆனால் மனிதன் மட் டும்... ஏன் இன்னும் முடியாமல் இருக்கிறது. எனக்கும்தான்.

பொறி தீயாய் வளர்ந்து என்னை சுடுதற்கு என்னிடமும் பற்றைகள் புதர்கள் இன்னும் இருக்கின்றன.

என்னை நான் கிளறிக் கொண்டி ருந்தேன்.

இப்போ எனது நண்பன் இன் னொரு திசையால் வந்துகொண்டிருந் தான்.

"யாழ் மேயரை போட்டுட்டாங் கள்."

செய்தியை கேட்ட அவன் சொல் லிக்கொண்டிருந்தான். "தெரியும் தானே... இவையளுக்கு என்ன வேலை. பேசாமல் இருந்திருக்க லாம்தானே. பதவி ஆசை. போய்ச் சேருகினம்."

மனிதாபிமானம் நிறைந்தவன் எனது நண்பன். அவன் செய்தியிட்டுக் கொண்டிருக்கும்போது எதுவும் அவனைப் பாதித்ததாகவும் தெரியவில்லை. மிக இயல்பாகவே இருந்தான்.

"பதவி ஆசை. சரி வைத்துக் கொள்வோம். உயிரைக் கொடுத்து பதவியைப் பெறுவது என்பதற்குள் ஒரு முரணும் உனக்கு அகப்பட வில்லையா? "

"உயிர் போகுமென்று தெரியும் போது ஆசை என்பதற்கு என்ன அர்த்தம்? "

"உயிரைவிட பதவியில் ஆசையா?"

எனக்கு குழப்பமாகவே இருந்தது.

"அரசியல் வாழ்க்கைக்குள் போனவர்களால் சும்மா இருக்கமுடி யாது. ஏதாவது செய்துகொண்டுதான் இருப்பார்கள், கடைசி தமது திருப் திக்காகவேனும்." நண்பன் ஆத்மரீதி யான காரணத்துள் நுழைய முற்பட் டான். அதற்குள் நானும் சேர்ந்து கொண்டு முரண்டுபிடித்துக் கொண்டி ருந்தேன்.

காற்றில் அந்தப் பெரியவர் உட் கார்ந்திருந்தார், கையில் எழுத்துக் களை உருட்டியபடி.

சுகம்... சும்மா இருப்பதே சுகம்... சுகம்...

வேகமாகவே உருட்டிக்கொண்டி ருந்தார், ஆத்திரமோ என்னவோ.

கொலைகளைக் கண்டிக்கிறோம் என்று சிலர் சொல்லிக் கொண்டிருந் ததால் ஆத்திரப்பட்டுப் போயிருந் தார்.

உண்மையில் எனக்குச் சற்று அதிர்ச்சியாக இருந்தது. மனிதாபி மானத்தில் முதிர்ச்சி பெற்றுப்போயி ருந்தவர் அவர் என்பது என் அபிப்பி ராயம் என்பதால்.

அப்ப என்ன செய்யலாம்?

இக் கொலைகளை சரியென்று சொல்ல யான் வரவில்லை. அதே நேரம் இவைகளை கண்டிக்க வேண் டியதுமில்லை.

எனக்கு இன்னும் குழப்பமாகவே இருந்தது.

அப்படியானால்...

சும்மா இருப்பதே சுகம்.

கண்டும் காணாமல் இருந்துவிட வேண்டியதுதான்.

நான் தூக்கி வீசப்பட்டேன், கார ணங்கள் கண்டறியப்படக்கூடாத உலகுள். ஜனநாயகம் என்பது இன் னும் எட்டவாய்ப் போனது.

மனிதாபிமானம் என்பதெல்லாம் என்ன?

அதன் அளவு கோல் என்ன? தான் சார்ந்த கருத்துக்களால் வடித் துப் பார்ப்பதா?

நாளை நான் சொரித்த கருத்துக் கள் பிழையெனப் பட்டால்... கொலைசெய்யப்பட்டவர்களை தட்டியெழுப்பிவிட முடியப்போகிறதா?

சமூகத்தின் உடனடித் தேவை களை நிறைவேற்றும் வழிகளை நிரப்ப முடிந்தால் இவ்வாறான பதவி களின் கதிரைகள் தானாகவே இறந் துபோய்விடுமா?

அரசியல் சதுரங்கமாடி தமது சுகங்களை பெருக்கிக்கொள்பவர்களின் பகடைக் காய்களாக மடிந்துபோகிறார்களா?

அப்படியென்றால் எய்தவன் இருக்க அம்பை நோவது ஏன்?

நானும் தவித்துக்கொண்டுதான் இருந்தேன் காரணத்தைத் தேடி நுழைய.

இன்னும் முடியவில்லை.

கேள்விகள் மட்டும் எழுந்து கொண்டுதானிருக்கின்றன.

ஆனாலும் ஆனாலும்...

கண்டும் காணாமல் இருப்ப தில்தான் எனக்கு இன்னும் அதிகம் அச்சமிருக்கிறது.

ஊரில் பனைமரங்களுக்கிடையில் கக்கூசுக்கு இருக்கும்போது கைக் கெட்டும் கற்களை வரிசையில் வைத்து ஒரு வகுப்பு நடத்தி முடித் துவிடுவேன். கையில் தடியிருக்கும்.

கேள்வி கேட்பது, பதிலையும் நானே சொல்வது, தண்டிப்பது என தனி நபர் நடிப்பில் ஈடுபடுவேன். இன்று நான் புலம்பெயர் நாட்டில். ஒருநாள் ரொயிலற்றுக்கு இருந்தபோது நான்கு சுவர்களுக்குள் இப்படியொரு யோசனை எழுந்தது.

காரணங்கள் கண்டறியப்படாமல் கொலைசெய்யப்பட்டோர் சார்பாக உன்னிடம் ஏதாவது கவலைகள் இருக்கின்றதா?

ஆம்.

அது இருக்கக்கூடாது.

ஆரம்ப காலங்களில் விடுதலை இயக்கங்கள் ஏதாவதில் இருந்தாயா?

ஆம்.

நீ ஓர் குற்றவாளி.

இன்றைய போராட்டத்துக்கு ஏதாவது 'பங்களிப்பு' செய்கிறாயா?

இல்லை, உனது அர்த்தத்தில்.

நீ தமிழனல்ல.

கேள்வியும் நானே பதிலும் நானே. எனது காதும் கண்ணும் ஓய்வாக இருந்தன. ரொயிலற்றுக்குள் நிலவும் அமைதியுடன் அவை சிலாகித்தன.

எனது காதுக்குள்ளாலும் கண்ணுக்குள்ளாலும் நுழைப்பதற்கென்றே பல உள்நோக்கங்களை வானொலிகளும் பத்திரிகைகளும் தொலைக்காட்சிகளும் தன்தன் வழிகளில் செயற்படுத்திக் கொண்டிருக்கும். சரியைப் பிழையாக்கவும் பிழையைச் சரியாக்கவும் அவைகளால் முடியும். சிறிசைப் பெரிசாக்கவும் பெரிசைச் சிறிசாக்கவும் முடியும்.

மாற்றுக் கருத்துக்களை மழுப்பிவிடவும் ஆதிக்கக் கருத்துக்களை கேள்விக்கிடமற்றதாக்கவும் அவைகளால் முடியும்.

இப்படியாக வெகுஜன கருத்தியலை புலம்பெயர் வெகுஜன தொடர்புச் சாதனங்கள் பல இன்று செய்துகொண்டிருக்கின்றன.

அந்த அலைக்குள் நான் அடிபட்டுப்போகிறேன். உண்மையைத் தேட கடினமாக உழைக்க வேண்டியிருக்கிறது. நிறைய வாசிக்கவேண்டியிருக்கிறது. விவாதிக்க வேண்டியிருக்கிறது. இப்படி நான் மோதல்களை ஏற்படுத்தும்போது பல சந்தர்ப்பங்களில் குழம்பிப் போய்விடுகிறேன்.

எனது ஆழலும் மீளலும் என்னை எனது அறிதலை ஒரு வழியில் நகர்த்திக்கொண்டிருக்கின்றன.

எனது நண்பன் ஒருவன் அண்மையில் செத்துப்போனான். எண்பதுகளின் ஆரம்பத்தில் அவன் தனது இளமைப் பருவத்தை - தனது தேவைகளினூடன்றி- சமூகத்தின் தேவைகளினூடு வழிநடத்திச் சென்றவன். விடுதலைக்காக இயக்க மொன்றில் அயராது உழைத்தவன். இயக்க அராஜகத்தால் அதிலிருந்து அவன் வெளியேறி பல ஆண்டுகளாகிவிட்டது. தேடப்பட்டான்; கைது செய்யப்பட்டான்; சித்திரவதைப் பட்டான்; உருக்குலைக்கப்பட்டான்; புலம்பெயர்ந்தான்; மௌனமாய் வாழ்ந்தான். இப்போ வாழ்ந்து முடித்துவிட்டான்.

நானுண்டு என் வேலையுண்டு என வாழும் ஒரு மனிதனின் சாவுக்குக்கூட சனம் திரண்டு வரும். ஆனால் அவனுக்கோ அப்படியிருக்கவில்லை.

அஞ்சலிகளின் பிரமாண்டங்களின் நடுவே வரலாற்றிலிருந்து மறக்கப்பட வேண்டியவர்களாக ஆரம்பகால மாற்று இயக்கப் போராளிகளும் மறைக்கப்படவேண்டிய வரலாறுகளாக அவர்களின் பாத்திரங்களும் எப்படிப் போயின.

இது ஒரு அவலம்.

தான் ஒரு போராளியாக இருக்கிறேன் என்பதைத் தனது சகோதரனுக்குக்கூட சொல்லமுடியாத சூழல்களுக்குள், கடையில் ஒரு தேனீர் வாங்கி குடிக்கவே (சனத்தின்ரை காசு என்று) யோசிக்கின்ற அர்ப்பணிப்புகளுக்கிடையே உழைத்த உழைப்பெல்லாம் வாய் திறந்து சொல்லி திருப்திப்பட்டுக்கொள்ளக்கூட முடியாதபடி மௌனமாய் வாழ்ந்தே செத்துப்போனவர்கள் பலர். இவர்களுக்கெல்லாம் அஞ்சலி செலுத்துபவர்கள் யார் என்று பத்திரிகையொன்று எழுதியபோது ஆத்திரப்பட்டு பதிலெழுதிய மனிதாபிமானிகளும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

உள்நோக்கம் கொண்ட கொலைகள் எல்லாம் இனந்தெரியாதோரால் கொல்லப்பட்டார் என்ற செய்தியாய்க் கரைந்துபோயின. சபாலிங்கமும் இதே துயரத்துள் அடக்கப்பட்டார்.

இவ்வாறானவர்களுக்கான அஞ்சலியையாவது செலுத்தமுடியாத வெகுஜன தொடர்புச் சாதனங்களின் கருத்தியலும் மௌனமும் சொல்லி வைப்பது எதை?

நான் ரொயிலற்றுக்குள்ளிருந்து வெளியே வருகிறேன்.

வானொலியில் நேயர்களின் தொலைபேசி நிகழ்ச்சி போய்க் கொண்டிருக்கிறது. அறிவிப்பாளரின் குரல் சிரித்துக்கொண்டு வருகிறது. நீங்கள் எட்டடி பாய்ந்தால் இங்குள்ளவர்கள் (வானொலி நிலையத்தார்) பதினாறடி பாய்வார்கள். தெரியுமோ?

நேயரும் அதை ஆமோதிப்பது போல் இளிச்சுக்கொண்டே விடை பெறுகிறார்.

வணக்கம். ◆

ஓவியம்: றஞ்சினி - Frankfurt

எழுதும்! கவிதை

கவிஞனே! உன் ஓயாத சிந்தனைகளால்
ஏன் அன்பைப் பற்றி எழுதுகிறாய்.
இனி, யாம் ஆணைப்படுத்துதலை சிறப்பென்று
எழுது! ஏற்று எமை பின்பற்றி
புரட்சியென்றும்
விடுதலையென்றும் எழுது.
பெயர் சொல்லும் இதற்கொரு இசம் உண்டு.
விரிந்த எனது வலைக்குள் சிக்காது நீ
சிந்திக்கின்றாய் எனில் நீ ஒரு "ராஜவிசுவாசமற்றவன்"
என்று எமது கம்பெனி படைப்பாளர்கள் உம்மைக்
குறிப்பர்.
பாரம்பரியம் தொடரவேண்டும்.
நமது பாரம்பரியம் என்றெழுது!
அதிகாரபீடங்களை கைப்பற்றி புதிய
அதிகாரங்களை பெற்றது எதற்கு?
எத்தனை உயிர்பலிகளையிட்டது எதற்காம்?
எமது அதிகாரத்தினை வாழ்த்தி எழுது.
அதில்தாம் சமத்துவம் உள்ளது என்றெழுது!
எமை
எதிர்த்து எழுதினர் என்றவர்கள் 46 லட்சம் பேர்கள்
தலைசீவப்பட்டனர்.
துரோக குற்றத்திற்காக பாலையில் விடப்பட்டனர்
பனியில் புதைக்கப்பட்டனர்.
ஆறில் ஒருவர் ஐந்தாம்படை என்பதால் எமைமீற
முடியாது உம்மால்!
நாடு நம்முடையது! நாமெல்லாம் மன்னர் என்றெழுது!
எல்லைகளைக் குறித்தும்தாம்
கவிதைகள் வரவேண்டும். அதனால்
தேசத்தின்மீது பற்று வைத்துள்ளதாய் எழுது!
எல்லைகளைக் கடந்திருப்போரை எதிரிகளென எழுது!
அவர்களும் சகோதரர் என்றால் ஆள் காட்டினாய்
என்று கொல்லப்படுவாய்! எனவே
எதிரிகள் என எழுது! எதிரிகளை விழுத்தவே
கவிதைகள். எனவே கவிதையில் எதிரிக்கென
கத்தியை சுழற்று!
நமது தேசியவிழாவில் பார்த்தாயா! ஆயுதங்களின்
அணிவகுப்பை. எத்தனை அழகு.
ஒரு மலரிடம் காண்பாயா! அவ்வழகை!
எனினும் மலரைப்போல் எம் மனது
என்று நீ எழுது!
ஆயுதங்கள்தாம் தீர்மானிக்கின்றன எல்லைகளை.
அதிகாரங்களை. எனவே ஆயுதங்களைப்பற்றி எழுது.
உன் குரலின் எமை மீறாதே! மீறாது
எழுதினால், உனக்கு விருது தருவேன்
புதிய கலைகள் எம் கம்பெனியாரோடு
இணைந்து புரிக!
உம்மை கண்காணிக்கும் பொறுப்பை
எமது ஒற்றர்கள் கடமையுடன்
நிறைவேற்றுவர். ◆

ஆத்மா

இந்நிழல் எமதல்ல!
இக் கூடாரங்கள் எமது குடில்கள் அல்ல!
சுற்றி உறுதியாய் கோட்டைப்போல் அமைந்த
மதில் பாதுகாப்பல்ல! பிளவு
காணவும், ஒன்று சேரக் கூடாதென்பதன்
அடையாளமாகயிருக்கும் பிளவு.

முள்வேலிகளையும்
கண்ணிகளையும்
கடந்தபோது யார் யாரைத் தொலைத்தோம்!
யார், யார் யார் யாரை இழந்தோம்!
என்றறியாது
உடல் சிதைந்து, கால் சிதைந்து
ஈனஸ்வரத்தில் துடித்திருந்த எமது மக்களைத்
தாண்டினோம்.

கால் இடறிய இடம் கடல்.

பொங்கிச் சீறும் அலைகளின் நடுவே
சிறுதோணியில் பனி இறங்கும் கடலில் நடுங்கிக்
கொண்டே பயணித்தோம்.
வாழ்தலின் கடைசிமுனையில் நின்றுகொண்டு
வந்து சேர்ந்தோம். இங்கு.

இங்கு தரப்பட்டது இரண்டு தட்டும், டம்ளர்களும்
தரவேண்டியது மேலான ஒன்று.
எங்கள் கிராமத்திலிருந்தது அது.
அதன் சத்தியத்தை நீங்கள் காணமுடியாது.

எமது குடில்
எம்மக்கள் பூத்து வளர்ந்த கோவில். அந்நள்ளிரவில்
ராட்சசர்களைப் போல் உருண்டு வந்த
பீரங்கிகள் எமது குடில்கள் மீது ஏறியிறங்கின.

"அம்மா பயமாயிருக்கு" என்று அலறிய மழலைகளை
கட்டியணைத்தபடி திசையறியாது ஓடிய
எம் மக்களோடு ஓடினோம்.

முரட்டு ஆடை அணிந்தவர்கள் இடைமறித்து எங்கள்
குமரிகளை எங்கே இழுத்துச் சென்றார்கள்.
சேறும் சகதியுமாக கிடந்த பாதையில்
எத்தனை குமரிகள் சின்னாபின்னமாக கிடந்தார்களே!
யாரின் உறவுகள் அவர்கள்

இதுதாமா எமது வாழ்வு?

கொழுந்திட்டு எரியும்போது கண்டோமே!
கிராமத்தின் அழுகையை.
தீ, வளர்த்த தீயில் எமது பயிர்கள், மரங்கள்
வெந்ததே!
எம்மையே இழந்தோமே!

உணர முடிகிறதா உங்களால்!
தரமுடியாது உங்களால் எங்கள்
ஆத்மாவை. ◆

தி. உமாகாந்தன்

சரியும் சர்வாதிகாரிகளின் சாம்ராச்சியங்கள்

இறுதிக்கட்டத்தை அடைந்துவிட்ட இந்த இருபதாம் நூற்றாண்டு உலகின் பல பாகங்களிலும் பல்வேறுபட்ட குணாம்சங்களைக் கொண்ட சர்வாதிகாரிகளைச் சுமந்து நின்றது. குறிப்பாக இலத்தீன் அமெரிக்கா மோசமான சர்வாதிகார வரலாறுகளைக் கொண்டுள்ளது. இந்த இராணுவச் சர்வாதிகாரிகள் ஆர்ஜென்ரைனாவில், பொலிவியாவில், பிறேஸிலில், சிலியில், பராகுவேயில், உருகுவேயில் தமது விஷக் கரங்களைப் பதித்தார்கள். எதிர்க் கருத்துள்ளோரை வேட்டையாடினார்கள். இந்த நாடுகளில் எல்லாம் கொலை, கைது, காணாமல் போதல் என்பனவே அன்றாட வாழ்க்கையாயிற்று.

இருபதாம் நூற்றாண்டு இரக்கமற்ற பல சர்வாதிகாரிகளின் ஆட்சிகளைக் கண்டது. தாம் ஆட்சி செய்த நாடுகளின் மக்களை இரும்புக்கரங்களால் இறுக்கி கொலைகளும், கொள்ளைகளுமாய் பேயாட்சி செய்த இந்த சர்வாதிகாரிகள் தமது ஆட்சிக்காலம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட பின்னர் அமெரிக்கா போன்ற நாடுகளின் ஆசீர்வாதத்துடன் சொந்த நாட்டில் கொள்ளையடித்த பெரும்தொகை சொத்துக்களுடன் வேறு நாடுகளுக்குத் தப்பிச்சென்று அங்கு தமது சுகபோக வாழ்க்கையைத் தொடர்வது இருபதாம் நூற்றாண்டின் சகஜமான சம்பவங்கள். இதைவிடக் கொடுமை இந்தச் சர்வாதிகாரிகளில் சிலர் தமது ஆட்சி முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னரும்கூட தமது சொந்த நாட்டிலேயே தெரிவுசெய்யப்பட்ட புதிய அரசாங்கங்களுடன் சமரசம் செய்துகொண்டு கனவான்களாக வாழ்ந்து வருவது.

இவர்களுக்கெதிரான போராட்டங்கள், இவர்களை நீதியின்முன் நிறுத்தவேண்டுமெனக் கோரும் போராட்டங்கள் சர்வதேச மனிதஉரிமை அமைப்புக்களாலும் இச்சர்வாதிகாரிகளால் வதைக்கப்பட்டு, வாழ்விழந்து போனோரின் குடும்பத்தினராலும் முன்னெடுக்கப்பட்டு வந்தபோதும் அமெரிக்கா மற்றும் மேற்கு ஐரோப்பிய நாடுகளின் அரசியல் சித்துவிளையாட்டுகளால் இப்போராட்டங்கள் பெருமளவில் அலட்சியப்படுத்தப்பட்டே வந்தன.

ஆனால் வரலாறு எப்போதும் ஒரே திசையில் செல்வதில்லை. அதிசயங்கள் வாழ்வில் மட்டுமல்ல, வரலாற்றிலும் வருவதுண்டு என்பதை நிரூபிப்பது போன்ற சம்பவம் ஒன்று இந்த நூற்றாண்டு முடியப்போகும் காலப்பகுதியில் நடந்து சர்வாதிகாரத்துக்கு எதிரான போராட்டத்துக்கு ஒரு புதிய உத்வேகத்தை கொடுத்துள்ளது. கடந்த வருடம் அக்டோபர் மாதம் 16ம் திகதி லண்டனில் உள்ள தனியார் வைத்தியநிலையம் ஒன்றில் சிகிச்சை பெற்று வந்த சிலியின் முன்னாள் சர்வாதிகாரியும் இந்நாள் ஆயுட்கால செனட்டருமான ஜெனரல் ஒகஸ்ரோ பினாசெ, சர்வதேசப் பொலிஸ் அமைப்பான இன்ரபோலின் பணிப்பின்கீழ், ஸ்கொட்லண்ட் யார்ட் பொலிசாரினால் கைதுசெய்யப்பட்ட செய்தி உலகம் முழுதும் உள்ள மனித உரிமைவிரும்பிகளுக்கு மகிழ்வையும் முன்னாள் மற்றும் இந்நாள் சர்வாதிகாரிகளுக்கு பெரும் அதிர்ச்சியையும் கொடுத்துள்ளது.

சிலியின் முன்னாள் சர்வாதிகாரியான பினாசெ இங்கிலாந்துக்கு விஜயத்தை மேற்கொள்வது இது முதற் தடவையல்ல. இதற்கு முன்னர் பல தடவைகள் இங்கிலாந்துக்கு வந்திருக்கிறார். முன்னாள் பிரித்தானியப் பிரதமர் திருமதி மார்க்கிரெட் தச்சருடன் மிகுந்த நட்புக்கொண்டவர். இதனை விட Folkland தீவுகள் தொடர்பான பிரித்தானிய-ஆர்ஜென்ரீனா யுத்தத்தின்போது தமது நட்பு நாடான ஆர்ஜென்ரீனாவை அலட்சியம் செய்து பினாசெ பிரித்தானியாவின் பக்கம் சார்பெடுத்து உதவி செய்தவர். இதனைவிடத் தனது படையினருக்கு பிரித்தானிய யுத்தவிமானங்களையும் ஆயுதங்களையும் வாங்கிக் குவித்து பிரித்தானியாவின் ஆயுதச் சந்தையை இலத்தின் அமெரிக்காவில் விஸ்தரிக்க உதவினார். பினாசெயின் இந்த விசுவாசத்தை பிரித்தானியா என்றும் மறக்கவில்லை. பினாசெ குற்றமற்றவர். அவரை விடுதலை செய்யவேண்டும் என்று பினாசெயின் விசுவாசிகள் நடத்திய சிறு ஆர்ப்பாட்டங்களில் முன்னாள் பிரித்தானியப் பிரதமர் திருமதி மார்க்கிரட் தட்சர் கலந்துகொண்டது தமது விசுவாசியின்பால் கொண்ட அன்பினாலேயே. இதன் மூலம் தமது ஆட்சிக்காலங்களின்போது விஷஆட்சி நடத்திய இச்சர்வாதிகாரிகளுக்கு பக்கபலமாக இருந்தவர்கள், இப்போது இருப்பவர்கள் யார் என்பதைப் புரிந்து கொள்ளமுடியும்.

ஆனால் இம்முறை எல்லாமே காலம் கடந்துவிட்டது. தமது விசுவாசியை பிரித்தானியாவாலேயே காப்பாற்ற முடியவில்லை. பிரித்தானிய உடைகளை விரும்பி அணிந்து, "வாழ்ந்தால் பிரித்தானியாவில் வாழவேண்டும். வாழ்வதற்கு உன்னதமான இடம் பிரித்தானியா. அந்த நாட்டின் பண்பாடு, நவீனத்துவம், மக்கள் ஒழுங்கு, அவர்கள் நீதிக்கு அழிக்கும் மதிப்பு இவை அனைத்தும் என்னைக் கவர்ந்தவை." என்று அடிக்கடி சொல்லும் பினாசெ இன்று அந்த நாட்டிலேயே அந்த நாட்டின் நீதிக்கு முன்னாலேயே நிறுத்தப்பட்டிருப்பதும் தமது 83வது பிறந்த தினத்தை ஒரு கைதியாக கழிக்க வேண்டிய நிலை ஏற்பட்டதும் காலத்தின் கட்டாயமே.

பினாசெயின் சர்வாதிகார ஆட்சிக்கால கட்டத்தில் 1973ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 19ம் திகதி தமது மகனான எத்தியன் பெஸ்லே கைதுசெய்யப்பட்டு காணாமல் போன பின் தற்போது பிரான்சில் வாழ்ந்து வரும் றொபேட்டோ பெஸ்லே மகிழ்ச்சியுடன் இப்படிக் கூறுகிறார், "நான் நினைக்கிறேன் இது ஒன்றின் முடிவு. அதேவேளை இன்னுமொன்றின் ஆரம்பம்."

பினாசெயை மட்டுமல்ல உலகம் முழுவதும் வாழும் முன்னாள், இந்நாள் சர்வாதிகாரிகளை கலங்க வைத்திருக்கும் நிகழ்வு இப்படித்தான் நடந்தது. கடந்த வருடம் அக்டோபர் மாதம் 5ம் திகதி பினாசெ பிரான்சுக்கு வருவதற்கு விசாவுக்கு விண்ணப்பித்திருந்தார். ஏற்கனவே பிரான்சில் வாழும் சிலிநாட்டு குடும்பங்களில் பலர், பினாசேயின் அரக்க ஆட்சியின் கீழ் வதைபட்டவர்கள், குடும்ப அங்கத்தவர்களை இழந்தவர்கள். இவர்களில் பலர் பிரெஞ்சு நீதிமன்றங்களில் பினாசேக்கு எதிரான வழக்குகளைத் தொடர்ந்துள்ளனர். எனவே சிக்கலில் சிக்கிக்கொள்ள விரும்பாத பிரெஞ்சு அரசு பினாசெயின் விசா விண்ணப்பத்தை நிராகரித்துவிட்டது.

இதற்கிடையில் செப்ரெம்பர் 22ம் திகதி லண்டனுக்குச் சென்றுவிட்ட பினாசெ பிரான்ஸ் விசா நிராகரிக்கப்பட்டதால் லண்டனில் உள்ள தனியார் மருத்துவநிலையத்தில் சிகிச்சையைப் பெறத் தொடங்கினார். அவருக்கு அங்கு சத்திர சிகிச்சை முடிந்த ஒரு வாரத்தின்பின் அக்டோபர் 16ம் திகதி ஸ்பானிய நீதியரசர் ஹர்சோனின் பணிப்பின்பேரில் பினாசெ கைதுசெய்யப்பட்டார். இந்தக் கைதுக்கான காரணம் தற்போது 82வயதுடைய சிலியின் முன்னாள் இராணுவ ஜெனரலான ஒகஸ்ரோ பினாசெ தமது ஆட்சிக்காலமான 11 செப்ரெம்பர் 1973க்கும் 31 டிசெம்பர் 1983க்கும் இடையில் சிலியில் கொல்லப்பட்ட 79 ஸ்பானிய பிரஜைகளின் கொலைக்கு இராணுவ ஆட்சித் தலைவர் என்றவகையில் பொறுப்பேற்க வேண்டும். எனவே இவரைக் கைதுசெய்யும் ஆணையை ஸ்பெயினின் மட்ரிட்டிலுள்ள நீதிமன்றம் பிறப்பித்திருந்தது. ஐரோப்பிய கூட்டமைப்பு ஒப்பந்தங்களின் கீழ் இவரைக் கைதுசெய்து தம்மிடம் ஒப்படைக்குமாறு ஸ்பெயின் அரசு பிரித்தானியாவைக் கேட்டது. இவரை ஸ்பெயினிடம் ஒப்படைப்பது தொடர்பான வாதப் பிரதிவாதங்கள் பிரித்தானிய நீதிமன்றம், பிரபுக்கள் சபை என்று மாதக் கணக்காக தொடர்கிற போதிலும் நேற்றைய சர்வாதிகாரி பினாசெ இன்று கைதியாகவே இருக்கிறார். காப்பாற்றுவதற்கு சிலி அரசாங்கத்தைத் தவிர வேறு யாருமே இல்லாத நிலையில் கைவிடப்பட்டிருக்கிறார். சிலியின் ஜனாதிபதியான EDUARDO FREIயும் இராணுவத்தின் மிரட்டல் காரணமாகவே பினாசெயை விடுவிக்கும் முயற்சிகளில் ஈடுபடுகிறார். ஆனால் பினாசெ தண்டிக்கப்பட வேண்டும் எனக்கோரும் ஆர்ப்பாட்டங்கள் லண்டனிலும் சிலியிலும் தொடர்ந்து நடக்கின்றன. இத்தகைய ஆர்ப்பாட்டமொன்றில் "உன்னுடைய குற்றச் செயல்களுக்கான தண்டனையை நீ அனுபவிக்க வேண்டிய காலகட்டம் இப்போது வந்துவிட்டது" என்ற பதாகை ஒன்று வெகு பொருத்தமாகத் தொங்கவிடப்பட்டு இருந்தது. அதுமட்டுமல்ல ரோனி பிளயரின் தலைமையிலான தொழிற்கட்சி அரசு இக்கைதுக்கான பச்சைக்கொடியைக் காட்டியது என்று INDEPENDANT நாளிதழ் செய்தி வெளியிட்டிருந்தது. பிரதமர் அலுவலகம் இக்கைது குறித்து தாம் அறிவிக்கப்பட்டிருந்ததாகத் தெரிவித்தது. பிரித்தானிய வெளிவிவகார அமைச்சோ இது ஒரு அரசியல் பிரச்சனையல்ல; பொலிசும் நீதித்துறையும் சம்பந்தப்பட்ட பிரச்சனை எனக் கூறிவிட்டது. 'மிக முக்கியமான அரசியல் பிரமுகர்' என்ற நிலையைக் கொண்டவரை மதிக்க மறுத்து பிரித்தானிய அரசு அநீதி இழைத்துவிட்டது என்ற சிலி ஜனாதிபதியின் குற்றச்சாட்டுக்கு, "எம்மைப் பொறுத்தவரை பினாசெ மிகமுக்கிய அரசியல் பிரமுகரல்ல" என்று பிரித்தானிய அரசு இறுக்கமாகப் பதிலளித்துவிட்டது. இவையெல்லாம் சர்வாதிகாரிகள் தொடர்பாக ஐரோப்பாவில் குறிப்பாக பிரான்ஸ், பிரித்தானியா, ஜேர்மனி, இத்தாலி போன்ற நாடுகளின் சோசலிச அல்லது சமூக ஜனநாயக அரசுகளின் அணுகுமுறைகள் மாறத் தொடங்கிவிட்டதன் அம்சமாகும். இதற்கு இன்னுமொரு உதாரணம் பினாசெயின் கைதுபற்றி பிரான்சின் சோசலிச அரசின் பிரதமர் லியொனல் யொஸ்பன் இப்படிக் கூறுகிறார், "இச்செய்தி ஒரு அதிசயம். இச் செய்தி மிக மகிழ்ச்சியானது. ஆனால் சர்வாதிகாரிகளுக்கு இது ஒரு மோசமான செய்தி." என்கிறார். சோசலிச அரசின் கூட்டுக்கட்சியான பசுமைக்கட்சி "சர்வாதிகாரிகளுக்கான மிக மோசமான காலகட்டம் இது" எனக் கூறியுள்ளது. அரசியல்வாதிகள் மட்டுமல்ல, சர்வதேச மனிதஉரிமை அமைப்புகளும் தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளன. சர்வதேச மன்னிப்புச் சபை பினாசேயின் கைது குறித்து, "இது வரலாற்றில் முதல் சம்பவம். இத்தோடு சர்வாதிகாரிகள் விசேட அரசியல் பிரமுகர்கள் என்ற போர்வையில் வலம்வருவது நிறுத்தப்படும். பினாசே போன்றவர்கள் சர்வதேச நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட்டு விசாரிக்கப் படவேண்டும்." என்று கோரியுள்ளது. "மனிதஉரிமைமீறல்களுக்கு எதிரான போராட்டத்தில் கிடைத்துள்ள மிகப் பிரதான வெற்றி இது" என ஜெனிவாவில் உள்ள சர்வதேச யூரிகள் சபை கூறியுள்ளது.

இறுதிக்கட்டத்தை அடைந்துவிட்ட இந்த இருபதாம் நூற்றாண்டு உலகின் பல பாகங்களிலும் பல்வேறுபட்ட குணாம்சங்களைக் கொண்ட சர்வாதிகாரிகளைச் சுமந்து நின்றது. குறிப்பாக இலத்தீன் அமெரிக்கா மோசமான சர்வாதிகார வரலாறுகளைக் கொண்டுள்ளது. இந்த இராணுவச் சர்வாதிகாரிகள் ஆர்ஜென்ரைனாவில், பொலிவியாவில், பிறேஸிலில், சிலியில், பராகுவேயில், உருகுவேயில் தமது விஷக் கரங்களைப் பதித்தார்கள். எதிர்க்கருத்துள்ளோரை வேட்டையாடினார்கள். இந்த நாடுகளில் எல்லாம் கொலை, கைது, காணாமல் போதல் என்பனவே அன்றாட வாழ்க்கையாயிற்று. இக் கொடுமைகளில் பிரசித்தி பெற்றவர்கள் சிலியினதும் பராகுவேயினதும் இரகசியப் பொலிசார். இவர்களது செயற்பாடுகளுக்கான ஆசீர்வாதமும் நிதியும் பயிற்சியும் ஜனநாயகம், மனித உரிமைகள் பற்றி வாய் கிழியப் பேசும் அமெரிக்காவிலேயே வழங்கப்பட்டது. இதிலே இன்னுமொரு கேவலமான விடயம் என்னவென்றால் மேற்குறிப்பிட்ட நாடுகளிலே இந்த இராணுவச் சர்வாதிகாரிகளின் ஆட்சிகள் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னரும்கூட புதிதாகப் பதவியேற்ற ஜனநாயக அரசாங்கங்கள், தமது அரசாங்கங்கள் இராணுவ ஆட்சிக் கவிழ்ப்புக்கு உட்பட்டு விடக்கூடாது என்ற அச்சத்தில் இந்தச் சர்வாதிகாரிகளுடன் சமரசம் செய்துகொண்டு அவர்கள் செய்த மனித உரிமை மீறல்களை அலட்சியம் செய்துவிடுகிறார்கள். அது மட்டுமல்ல, இச்சர்வாதிகாரிகளுக்குப் பொதுமன்னிப்பு வழங்கும் சட்டங்களையும் நிறைவேற்றிவிடுகிறார்கள். இதன்காரணமாக இந்தச் சர்வாதிகாரிகளால் பாதிக்கப்பட்டோர் நடத்திவரும் போராட்டங்கள் பலமிழந்து பயனிழந்து போய்விட்டன.

இலத்தீன் அமெரிக்காவின் இதர சர்வாதிகாரிகளைப்

போலன்றி பினாசெ நாகரீகப் போர்வை போற்றிய நரித்தனமானவர் - இவர் தனது சொந்தத் திறமையால் இராணுவத்தில் ஜெனரலாகவில்லை. இவரது மனைவியின் குடும்பத்தின் உதவியினாலேயே இவருக்கு இப்பதவி கிடைத்தது. இக்காலகட்டத்தில்தான் 1970 செப்ரெம்பர் மாதம் சோசலிஸ்ட்டான சல்வடோர் அலண்டே சிலியின் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இலத்தீன் அமெரிக்காவில் இடதுசாரி அலை பரவிவிடுமோ என்ற அச்சம் அமெரிக்காவின் அடிவயிற்றில் நெருப்பை மூட்டியது. வழக்கம்போல பொருளாதார அழுத்தங்கள்மூலம் சிலியின் உள்நாட்டு அமைதி நிலையை அமெரிக்கா சீர்குலைக்கத் தொடங்கியது. சி.ஐ.ஏ. யினூடாக அலண்டேயின் அரசைக் கவிழ்ப்பதற்கான காய்களை அமெரிக்கா நகர்த்த ஆரம்பித்தது. விளைவு பினாசெயின் பணிவைப் பாராட்டி சிலியின் உள் நாட்டமைச்சர் ஜெனரல் பிறாற்ஸ் தரைப்படையின் தலைவராக்கினார். அலண்டேயின் ஆட்சியைக் கவிழ்க்க முயலும் அமெரிக்கச் சதிக்கு பினாசெ துணைபோனார். 1973ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 11ம் திகதி பினாசெயின் தலைமையில் அலண்டேயின் ஆட்சி கவிழ்க்கப்பட்டது. அலண்டேயின் மக்கள் ஐக்கிய முன்னணியின் உறுப்பினர்களும், ஆதரவாளர்களும் பெருமளவில் கைதுசெய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்டனர். நீதி விசாரணையற்ற கொலைகளும், கொடூரமான சித்திரவதைகளும் அன்றாட நிகழ்வுகளாயின. 1974ம் ஆண்டு யூன் மாதம் பினாசெ சிலியின் உயர் தலைவராக தன்னைத்தானே பிரகடனம் செய்துகொண்டார். அதே வருடம் டிசம்பர் மாதம் பினாசெ சிலிக் குடியரசின் ஜனாதிபதி தானே என்று அறிவித்தார். ஒரு இராணுவ அதிகாரி இராணுவச் சர்வாதிகாரியாக மாறி அமெரிக்க மற்றும் மேற்குலக ஆசீர்வாதங்களுடன் 17 வருடங்கள் தமது இரும்புக்கர ஆட்சியால் சிலி மக்களின் சிரங்களை நெரித்தார். 1987ம் ஆண்டு பெரும்பான்மையான சிலி மக்கள் இராணுவ ஆட்சியை நிராகரித்ததனால் 1989ம் ஆண்டு தேர்தலை நடத்தவேண்டிய நிலை பினாசெயிற்கு ஏற்பட்டது. மாறிவரும் உலக அரசியல் சூழ்நிலைகள் காரணமாக அமெரிக்காவினால்கூட தமது கைக்கூலி சர்வாதிகாரியின் ஆட்சியைத் தொடரச் செய்ய முடியவில்லை. தேர்தலில் வெற்றிபெற்ற கிறீஸ்தவ ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த பற்றீசியோ அயல்வீன் சிலியின் ஜனாதிபதியாகப் பதவியேற்றார். இருப்பினும் இராணுவம் பினாசெயின் செல்வாக்குக்குக் கட்டுப்பட்டே இருந்தது. ஆயினும் 1998ம் ஆண்டின் ஆரம்பத்தில் பினாசேயின் நிலையில் மாற்றம் ஏற்பட்டது. இதே ஆண்டு மார்ச் மாதம் பினாசெ இராணுவத்தின் சகல பொறுப்புகளிலிருந்தும் ஓய்வு பெற்றார். 1980ம் ஆண்டு தானே மேற்கொண்ட அரசியல் சட்ட சீர்திருத்தத்தின்கீழ் தமது எதிர்காலப் பாதுகாப்பு குறித்து வலதுசாரிகள் பலம் வாய்ந்த சிலியின் செனட்சபையில் ஆயுட்கால செனட்டர் பதவியை 1998இல் பினாசெ ஏற்றார். சிலி அரசின் முற்போக்கான அரசியல் சட்டச் சீர்திருத்தங்களை இச்சபையே தடுத்துவருவது குறிப்பிடத் தக்கது. அதிகாரபூர்வமான கணக்கீடுகளின்படி பினாசெயின் ஆட்சிக்காலத்தில் 3197பேர் கொல்லப்பட்டுள்ளனர். 1102பேர் காணாமல் போயுள்ளனர். ஆனால் உண்மையில் இவ்வெண்ணிக்கை இதைவிடப் பலமடங்கு அதிகம் எனக் கருதப்படுகிறது. பினாசெயின் கைது குறித்து அமெரிக்க அதிகாரிகள் கருத்துக்கூறும் போது இது அமெரிக்கா சம்பந்தப்பட்ட விடயம் இல்லை. சிலியும் பிரித்தானியாவும் தீர்த்துக்கொள்ள வேண்டிய விடயம் என்று நழுவிவிட்டனர். வழமையாக தமது கைக்கூலிச் சர்வாதிகாரிகளைப் பாதுகாத்துவரும் அமெரிக்காகூட மாறிவரும் உலக அரசியல் காரணமாக பினாசெயின் பிரச்சனையில் நழுவிவிட்டது.

பினாசெயின் கைது உலகின் பல பாகங்களில் வாழ்ந்துவரும் முன்னாள் இந்நாள் சர்வாதிகாரிகளுக்கு கிலியைக் கொடுத்துள்ளது. இன்னும் தம் சொந்த நாட்டிலும், வேறு நாடுகளிலும் வாழ்ந்து வரும் மேலும் சில சர்வாதிகாரிகளின் கடந்தகால, நிகழ்காலப் பக்கங்கள் எப்படி இருக்கின்றன என்பதையும் சற்று நோக்குவோம். ஆசியப் பிராந்தியத்தை எடுத்துக்கொண்டால் குடிசனத்தொகைமிக்க நாடான இந்தோனேசியாவின் சர்வாதிகாரியாகிய ஜெனரல் சுகார்த்தோ, இவருக்கு இப்போது வயது 76. 1965ம் ஆண்டு மேற்கொண்ட ஆட்சிக் கவிழ்ப்பின்மூலம். இந்தோனேசியாவின் ஜனாதிபதியானவர். கடந்த வருடம் மாணவர்கள் மேற்கொண்ட கிளர்ச்சிகளின் மூலமே இவரது பதவி முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. இவரது குடும்ப உறுப்பினர்கள் உயர் அரசபதவிகளில் இருந்துகொண்டு இந்தோனேசியாவின் வளங்களையும் சொத்துக்களையும் சூறையாடி இன்றைய இந்தோனேசியாவின் பொருளாதாரச் சீரழிவுகளுக்குக் காரணமாயினர். அதுமட்டுமல்ல, தம்மைப் பாதுகாத்துக் கொள்ள சுகார்த்தோ மூட்டி வைத்த இன மத முரண்பாடுகள், இன்று இந்தோனேசியாவில் 1965ம் ஆண்டுக்கும் 1966ம் ஆண்டுக்கும் இடையில் சுகார்த்தோ மேற்கொண்ட படுகொலைகளின் எண்ணிக்கை 5 இலட்சத்திலிருந்து 10 இலட்சம்வரையிலானதாகும் இத்துடன் சுகார்த்தோவின் கொலைக்கரங்கள் ஓயவில்லை. 1975ம் ஆண்டு கிழக்குத் தீமோரை ஆக்கிரமித்த சுகார்த்தோவின் படைகள் தீமோர் மக்களின் சுதந்திரப் போராட்டத்தை அடக்கி இதுவரை 2 இலட்சத்துக்கு மேற்பட்ட மக்களைப் படுகொலை செய்துள்ளனர். இவ்வளவு படுகொலைகள், கொள்ளைகள் புரிந்தும் தமது பதவி முடிவுக்கு வந்தபின் தமது ஆதரவாளர் ஒருவரையே ஜனாதிபதியாக்கிவிட்டு தமக்கு எதிரான மக்கள் எதிர்ப்புக்கள் குறித்தோ, நீதி விசாரணைகள் குறித்தோ அலட்டிக் கொள்ளாமல் சர்வாதிகாரி சுகாரத்தோ இந்தோனேசியாவில் தம் சுகபோக வாழ்க்கையைத் தொடர்கிறார். ஆனால் நிகழும் அரசியல் மாற்றங்கள் விரைவில் சுகார்த்தோவைக் கூண்டுக்குள் தள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது. காரணம் சுகார்த்தோவின் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற சர்வதேச அழுத்தம் தற்போது இந்தோனேசிய அரசின்மீது பாரிய அளவில் பிரயோகிக்கப்படுகிறது. ஆசிய பிராந்தியத்தின் இன்னுமொரு இராணுவச் சர்வாதிகாரி பர்மாவின் ஜெனரல் நெவின். இவருக்கு இப்போது வயது 87. 1988ம் ஆண்டில் பர்மாவில் ஜனநாயகத்துக்கான போராட்டத்தை முன்னெடுத்தவர்களில் 3000 பேரை நெவின்னின் அரசு படுகொலை செய்தது. இவரது அரசுக்கும் அமெரிக்கா அனுசரணையாக இருந்தது. 1988 யூலை மாதத்தின்பின் இவர் எந்தப் பதவியையும் வகிக்காதபோதும் பர்மா இராணுவ அரசிடம் செல்வாக்கு மிக்கவராகவே இருக்கிறார். பர்மிய மக்கள் தொடர்ந்தும் ஊழலும், கொடுமையும் நிறைந்த இராணுவ ஆட்சியாளர்களிடமே சிக்கித் தவிக்கிறார்கள்.

தென் அமெரிக்காவைப் பொறுத்தவரை ஆர்ஜென்ரீனாவின் இராணுவச் சர்வாதிகாரிகளால் நிகழ்த்தப்பட்ட படுகொலைகளே அதிகம். 1976க்கும் 1983க்கும் இடையே இந்த இராணுவ ஆட்சியாளர்களால் 30ஆயிரம் மக்கள் கொல்லப்பட்டனர். இக் கொடுமைகள் குறித்து சர்வதேச மன்னிப்புச்சபை ஒரு கறுப்புப் புத்தகத்தை வெளியிட்டுள்

ளது. கடத்தல், கைது செய்தல், கொலை, காணாமல் போதல், குழந்தைகள் கடத்தப்படல் இவை அனைத்துமே ஆர்ஜென்ரைனாவில் இந்த இராணுவச் சர்வாதிகாரிகள் நடத்திய அராஜக ஆட்சிமுறை. சர்வதேச நிர்ப்பந்தங்களும் ஆர்ஜென்ரீனா மக்களின் தொடர் போராட்டங்களும் புதிய அரசாங்கங்கள் இந்த இராணுவ ஆட்சியாளர்கள்மீது நடவடிக்கை எடுக்கத் தொடர்ச்சியாக வழி கோலியுள்ளது. இதன் காரணமாகவே ஜோர்ஜ் விடேலா, முன்னாள் அமிரல் மஸ்ரோ போன்றவர்கள் தண்டனைக்குள்ளாகி வருகிறார்கள். இந்தப் பிரதேசத்தின் இன்னுமொரு மோசமான சர்வாதிகாரி பராகுவேயின் அல்.பிரடோ ஸ்ரோஸ்னர். இவரே உலகின் மிகநீண்ட கால சர்வாதிகாரி. 35 வருடங்கள் இவரது இரும்புக் கரங்கள் பராகுவே மக்களின் சிரங்களை நெரித்தன. 1989ம் ஆண்டு இவரது சர்வாதிகார ஆட்சி முடிவுக்கு கொண்டு வரப்பட்டபின் இவர் இப்போது பிறேஸிலில் அகதியாக ஆனால் அரச வாழ்க்கை வாழ்கிறார். ஆனால் பினாசெயின் கைது இவரது அடிவயிற்றிலும் புளியைக்கரைத்திருக்கும்.

இந்த சர்வாதிகாரிகள் வரிசையில் இன்னுமொரு அதிர்ச்சியூட்டும் சர்வாதிகாரி 'பேபி டொக்' என அழைக்கப்படும் ஹெயித்தியின் யேன் குளோட் டுவாலியே. உலகின் மிக ஏழ்மைநாடான ஹெயித்தியிலிருந்து சூறையாடிய 200 மில்லியன் டொலர்கள் சொத்துக்களோடு 1986ம் ஆண்டு நாட்டைவிட்டு வெளியேறிய டுவாலியேக்கு அமெரிக்காவின் நிர்ப்பந்தத்துக்கு இணங்கி பிரான்ஸ் 8 நாட்கள் விசா அளித்தது. இவரது அகதி அந்தஸ்து கோரும் விண்ணப்பமும் நிராகரிக்கப்பட்டது. 12ஆண்டுகளுக்கு மேலாக பிரான்ஸில் செல்வந்தர்கள் வாழும் பகுதியான Côte d'Azur பகுதியில் மாளிகையில் வாழ்ந்து வரும் இவரது சரியான முகவரி தமக்குத் தெரியாது என பிரெஞ்சு வெளிநாட்டமைச்சும், பிரான்சில் உள்ள ஹெயித்தி தூதரகமும் இதுவரை சொல்லி வந்தது. ஆனால் பினாசேயின் கைதினால் மனிதஉரிமை அமைப்புகள் பெற்ற புதிய உந்துசக்தி இப்போது இவரை நீதிமன்றத்துக்கு அழைத்துள்ளது. பிரான்சில் வதிவிடப் பத்திரமற்றிருக்கும் பல நூற்றுக்கணக்கான வெளிநாட்டுமக்கள் அரசாங்கத்தால் நாடு கடத்தப்படும்போது வதிவிடப் பத்திரமற்றிருக்கும் டுவாலியேயை நாடு கடத்த வேண்டும் என்ற வழக்கை மனிதஉரிமை அமைப்புக்கள் கிறஸ் நகர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளன. இது குறித்த நீதிவிசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இது குறித்து பிரெஞ்சு உள்நாட்டு அமைச்சர் யேன் பியர் செவன்மா கருத்துக் கூறுகையில் பொலிசாரின் கையில் டுவாலியே சிக்குண்டால் அவர் நாடு கடத்தப்படுவார் எனக் கூறியுள்ளார். இது சர்வாதிகாரிகள் தொடர்பாக அரசாங்கங்களின் புதிய அணுகுமுறையைக் காட்டும் இன்னுமொரு சம்பவமாகும்.

சர்வாதிகாரிகளின் பட்டியலில் அடுத்துவரும் எல்சல்வடோரின் பாதுகாப்பு அமைச்சரான ஜோஸ் கில்லர்மோ கார்ஸியாவும் பல ஆயிரக்கணக்கான படுகொலைகளின் சொந்தக்காரன். இவனது படுகொலைகளுக்கும் இடதுசாரி எதிர்ப்பு என்ற போர்வையில் அமெரிக்கா பக்கபலமாக இருந்தது. அது மட்டுமல்ல இவர் இப்போது அமெரிக்காவில் வளமாக வாழ்கிறார். இச் சம்பவங்களின்மூலம் இந்தச் சர்வாதிகாரிகளின் ஆட்சிகளுக்கு அமெரிக்கா எப்படிப் பக்கபலமாக இருந்தது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

ஆபிரிக்காவும் சர்வாதிகார சாம்ராச்சியங்களுக்குள் மிக மோசமாகச் சிக்கித் தவித்த பிரதேசங்களில் ஒன்று. ஆபிரிக்காவின் முன்னாள் சர்வாதிகாரிகளில் இப்போது எஞ்சியுள்ளவர்கள் நான்குபேர். எண்ணற்ற கொடுமைகளுக்கு, கொலைகளுக்கு காரணமான இவர்கள் தமது குற்றச் செயல்களுக்காக நீதியின் முன் நிறுத்தப்படாது தமது சொகுசு வாழ்க்கையைத் தொடருகின்றனர். 14வருட சர்வாதிகார ஆட்சியின்பின் எதியோப்பியாவில் மென்கிஸ்து ஹெய்லே மரியம் 1991ம் ஆண்டு பதவியிலிருந்து இறக்கப்பட்டார். இவரது ஆட்சிக்காலத்தில் 1 இலட்சத்திலிருந்து 2 இலட்சம்வரையிலான மக்கள் கொல்லப்பட்டனர். எரித்திரிய மக்களின் தேசியவிடுதலைப் போராட்டம் மிலேச்சத்தனமாக நசுக்கப்பட்டது. தற்போது ஸிம்பாவெயில் அரசுக்குச் சொந்தமான ஆடம்பர வாசஸ்தலமொன்றில் சொகுசு வாழ்க்கை நடத்திவரும் மெகிஸ்துவுக்கு கடந்த ஆண்டே அடிஸ் அபாவிலுள்ள நீதிமன்றம் ஒன்று தண்டனை விதித்தது. ஆனால் அவர்மீது இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆபிரிக்கப்பிரதேசத்தின் இன்னுமொரு மூர்க்கமான சர்வாதிகாரியின் பெயரைக் கேட்டாலே இரத்தம் உறைந்துவிடும். அவர்தான் உகண்டாவின் இடிஅமின் டாடா. இவரது எட்டுவருட சர்வாதிகார ஆட்சி பெரும் பயங்கரங்கள் நிறைந்தது. எதிர்ப்பாளரின் இரத்தத்தைக் குடித்து மனிதமாமிசத்தை உண்ணும் வழக்கமுள்ள இடிஅமின் எண்ணக் கணக்கற்ற பெண்களை மனைவிகளாக்கிக் கொண்ட ஒரு பாலியல் வெறியன். உகண்டாவின் வளங்களை மாத்திரமல்ல, அங்கு குடியேறி காலம் காலமாக வாழ்ந்து வந்த ஆசியமக்களை விரட்டியடித்து அவர்களது சொத்துக்களையும் சூறையாடினான். இப்போது இவர் சவூதி அரேபியாவில் தனது பிள்ளைகளுடன் சொகுசு வாழ்க்கை வாழ்ந்து வருகிறார். இவருக்குப்பின் உகண்டாவின் ஆட்சியைக் கைப்பற்றிய இன்னுமொரு சர்வாதிகாரி மில்ரன் ஒபடே இப்போது லுஸாகாவில் தனது ஆடம்பர வாழ்வைத் தொடர்கிறார். தென்னாபிரிக்காவின் காட்டுமிராண்டித்தனமான நிறவெறி ஆட்சிக்கும், கறுப்புஇன மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட அராஜகங்களுக்கும் காரணமான தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதியான பீற்றர் பொதா தென்னாபிரிக்காவிலேயே ஒரு சுதந்திர மனிதனாக வாழ்கிறார்.

எது எப்படியிருப்பினும் பினாசெயின் கைது நேற்றைய மற்றும் இன்றைய சர்வாதிகாரிகளின் வயிற்றில் அமிலத்தைச் சுரக்கச் செய்திருப்பது உண்மை. சர்வாதிகாரிகளின் கொடிய ஆட்சிக்காலகட்டங்களின்போது கொல்லப்பட்ட, காணாமல்போன தமது உறவுகளுக்காக அப்பாவி மக்கள் ஓய்வில்லாமல் நடத்திவரும் வீதியோரப் போராட்டங்கள் வீண்போய்விடவில்லை. அதைப்போலவே நேற்று பிலிப்பைன்சின் மார்க்கோசையும், நிக்கரகுவாவின் சமோசாவையும், பாகிஸ்தானின் யாக்கியாகான், மற்றும் ஸியா வல்ஹக்கையும் ஈரானின் ஷா போன்றவர்களை பாதுகாத்தது போல இன்றோ நாளையோ பாதுகாக்கமுடியாது என்ற நிலைக்கு அமெரிக்காவும் அதன் சகபாடிகளும் வந்து விட்டன. இந் நிகழ்வுகள் இந்த நூற்றாண்டுக்கான முடிவுரை எழுதப்படும்போது சர்வதேச சர்வாதிகாரத்திற்கான முடிவுரையும் எழுதப்பட்டுவிடும் என்ற நல்லநிலையே இன்று தோன்றியுள்ளது. இது சர்வாதிகாரத்துக்கு எதிரான போராட்டத்துக்கும் மனிதஉரிமைகளுக்கான போராட்டத்துக்கும் கிட்டியுள்ள நல்ல சமிக்ஞையாகும். மக்களின் ஜனநாயக உரிமைகளை மிதித்தவர்கள்.... மிதிப்பவர்கள் உலகின் எந்த மூலையில் வாழ்ந்தாலும் தண்டனையிலிருந்து தப்ப முடியாது என்ற நிலை இன்று தோன்றியிருப்பது இருபத்தோராம் நூற்றாண்டுக்கான ஒரு நல்ல ஆரம்பமுமாகும்.◆

நா. விச்வநாதன்

சினேகிதம்

நட்சத்திரமொன்று
சேதி சொல்லிற்று-
அது எப்போதுமே
நல்ல சேதிகளைத்தான்
சொல்லும்-
எனக்கருகில் தெரிந்ததால்
மட்டுமே அதோடு கொண்ட
உறவு
அதீதமாயிற்று என்றில்லை-
பார்த்தவுடன் புரிந்தது
அது எனக்கானதென்றும்
நான் அதற்கானவன் என்றும்
இரவில் நெடுநேரம்
பேச்சு தொடரும்;
விடிந்த பின்னரும் சிலநாளில்-
பாஷை புரியாவிட்டாலும்
பாசம் புரிந்ததால்
செய்திகள் கொள்வதில்
சிக்கல் நேர்ந்ததில்லை-
எண்ணத் தொலையாத
எத்தனையோ ஒளிப்புள்ளிகளில்
பளிச்சிடும் இதன் புன்னகை
அடையாளம் காட்டிவிடும்-
உண்பதுபோல்-
யோசிப்பதுபோல்-
உறங்குவதுபோல்-
நித்திய கடன்களில்
ஒன்றாய்ச் சேர்ந்தது இது -
என் வீட்டுக் கொல்லை
பூவரசும் பாரிஜாதமும்
ஜென்னல் குருவியும்
எங்களை விலக்கிவிடாதே
தொலைதூரத்துச்
சினேகிதனுக்காய்யென்
அச்சங்கொண்டு
அவ்வப்போது முறையிடுவது
சகஜமாயிற்று -
இப்படியே எதுவும்
போய்க் கொண்டிருப்பதில்லை
எனச் சொல்வதுபோல்
என்
ஆகாயத்துச் சினேகிதன்
ஒருநாள்
காணாமல் போனான்-
வானம் கருக்கிட்டு
விசித்திரம்
கொண்ட
வருத்தமோ மாளாது-
தூக்கம் தொலைத்து
பசி தொலைத்து
புன்னகை தொலைத்து-
அண்ணாந்து பார்த்து
வானம் அளைவதே
வழக்கமாயிற்று-
எங்கே எங்கேயென
அலை பாய்ந்தபோது
வானத்துக் கம்பிகள்
பூக்களாய்ப் பொழிந்தன
திடீரென்று மறுநாள்-
வரண்ட பூமியில்
சடசடவென குத்திக்
கிழித்தன.
பத்து வருடமாய் இல்லாத
மழை என
நனைந்த சுகத்தில்
தெருவில் குரல் கேட்டது-
உனக்கு - உன் பூமிக்கு
உன்னருகில் வருவதற்கு
என்றாற்போல் பொழிந்த
மழையில் குளிர்ந்த பூமி-
வாசல் பன்னீர்மரத்தின்
வாடிய இலைகள்
தெம்போடு உதிர்த்தன
மழைநின்ற பிறகும் துளிகளை-
உற்றுப் பார்த்தால்
ஒவ்வொன்றிலும்
என் சினேகிதன்- ◆

ஏ. எம். ஜாபீர்

எதுவும் எமது கையில் இல்லையாயினும்
எல்லோரும் சரிவாய் நீரோட்டத்தில் கலந்தபின்னும்;
நம்பிக்கைகள் அனைத்தையுமே
ஆயுதங்கள் கைப்பற்றின பின்பும்;
துப்பாக்கி நுனியில் உயிர் ஊசலாடும்போதும்
ஆன்மா அதிகாரத்தை மறுத்துச் சிரிக்கிறது.

அகதிக்கூடை

அவர்கள் வந்து போனது மனதை நிலைகொள்ளாமல் ஏதோ செய்தது. நேற்று வந்தேன், போனகிழமை வந்தேன் என எத்தனைபேர் வந்து எத்தனை கதை பேசிப்போனார்கள். எல்லாம் சர்வசாதாரணமாய் புராணமாய் புதிய இதிகாசமாய் புதுநானூறாய் சேர்ந்ததுதான். இதற்காகவா நீர்விட்டு வளர்த்தோம்? எதிலும் இருக்கமுடிய வில்லை. எந்தப் புத்தகத்தையும் புரட்டமுடியவில்லை. யன்னலுக்கு வந்தேன். பல மாடிகள் முளைத்த புது நகரம். மாடி மொட்டைகள் காடாய்க் கிடக்க நான் ஒரு பொந்துக்குள் தலை நீட்டிக் கிடந்தேன். 14ஆயிரம் மைல்களுக்கப் பால் அல்ல, பல்லாண்டு காலமாய் பயணம் செய்துகொண்டேயிருக்கின் றேனே; சேர்த்தது என்னதான். எப்படி எல்லாமே மாறிப்போயிற்று. இதற் காகவா உயிர்த்தோம். நாடு கிடைத் தால் போதுமென்று எதையெல்லாம் இழந்தோம். மனிதத்தையும் விடுதலை யையும் நேசிப்பையும்.... மனிதன் உயிர்க்கவேண்டுமே. அன்று அப்படி என்னதான் செய்தோம். எதிரியை வீழ்த்த எண்ணி எம்மையே வீழ்த்திக் கொண்டோமே. தப்பு எங்கேதான் நிகழ்ந்தது. பொந்துக்குள் இருந்து வெளியே நழுவி வீழ்ந்தேன்.

▼▼▼▼▼

எங்கோ ஒரு முனையின் பட்டாம் பூச்சியின் சிறகசைவு எதிர்முனையில் புயலெழுப்பி கடல் பெருக்கி நாடு நகரம் நனைத்ததுபோல் எல்லாம் நடந்தது. அப்படித்தான் பார்த்தாலும் பட்டாம் பூச்சியைவிட மெலிந்த சிறகசைவுதான். ஆயினும் நம்பிக்கையில் எப்படி உயிர்த்துடிப்பாய் இருந்தோம். இளமையும் சத்தியமும் இந்த உலகை அசைக்க வல்ல தெம்பைத்தருவதில் ஆச்சரிய மென்ன. திசைகூட எதுவும் தெளிவாக இல்லைத்தான். ஆயினும் என்ன புறப் பட்டாகவேண்டும் என்றிருந்தது. இருத் தலின் நம்பிக்கைகள் அனைத்தும் தகர்ந்தபின்பு வாழ்தலின் அர்த்தம் எது வுமில்லை யென்றாகிவிட்டது.

கண்ணில்பட்ட துரும்புகூட கதாயு தம்தான். இருப்பைவிட எதிர்ப்பு அச்சம் தருவதாய் இல்லை. நல்லதோ கெட் டதோ நமக்கு முடிந்தது அவ்வளவு தான்.

வீட்டின் கனவுக்கோட்டைகள் எல் லாம் நமது கால்களில் மிதிபட்டன. நட்பும் நம்பிக்கையும் இலட்சியமும் மட் டுமே நமது உலகம்.

ஆயுதம் ஏந்தியபோது யாருக்குத் தெரியும் அரபாத்தையும் நெல்சனையும். மாக்ஸ், லெனின்கூட நமக்கு எட்டாத புலன்கள்தான். ஒருவேளை 'சே' கொஞ் சம் நெருக்கமாக இருந்திருக்கலாம். ஆயினும் நாம் யாரையும் கொடிபிடித் துக்கொள்ளவில்லை. எம்கண்முன்னே கண்டதையும் எதிர்த்ததையும் தவிர வேறு எந்த அறிவுகாட்டியும் நம்முன்னே இல்லை என்றால் யார்தான் நம்பு வார்கள்.

வெடித்துக் கிளம்பி பறக்க வெளிக் கிட்டபின்புதான் எல்லாம் வீதிவலம் வந்தன. சிறைக்கம்பிகளில் நாளும் சித்தி ரவதைப்பட்டு ஊனில் மிதந்தபோதும் நம்பிக்கை தளராதிருந்தோம். நாசம் வரும் என்று எவர் சொன்னார். எங்கோ தொடங்கிய சிறு அசை நுரை அலை யாய் அணையாய் வானளாவி வெகு ண்டு வீறுகொண்டெழுந்து புயலெனக் கிளம்பும் என எவர் கண்டார். அவ யவை எம்மையடித்து தும்பாக்கித் துப் பும் என யார்தான் அறிவார். இது பெரும் சுழிதான். மலைமுகடுடைத்து வெடித்துக் கிளம்பி கனன்று கழியும் தீக்குழம்பிற்கும், வீட்டையும் நாட்டை யும் மனிதர்களையும் காவிச்சென்று நாடுநாடாக வீசிச் செல்லும் பெரும் புயலுக்கும் மலையாய் முளைத்து மதம்பிடித்தலைந்து சரியும் சமுத்தி

ரத்திற்கும் இடையில் பொறிந்த பெரும் குழி. ஆயினும் ஓடிக்கொண்டேயிருக் கிறேன். எதிர்நீச்சல்தான். எதுவும் எமது கையில் இல்லையாயினும் எல்லோரும் சரிவாய் நீரோட்டத்தில் கலந்தபின்னும்; நம்பிக்கைகள் அனைத்தையுமே ஆயு தங்கள் கைப்பற்றின பின்பும்; துப்பாக்கி நுனியில் உயிர் ஊசலாடும்போதும்; ஆன்மா அதிகாரத்தை மறுத்துச் சிரிக் கிறது. உயிரோ உடலோ போகட்டும். அநியாயத்திற்கு அடங்கிப்போக எந்த உரிமையும் இல்லாத உந்தல். நிறுத் துவதற்கு காரணகாரியம் தேவையில் லாத உந்தல். எல்லாம் இருந்தும் எது தான் எமது கையில் இருக்கிறது. கரு த்து மனிதனைப்பற்றிக் கொண்டால்.... எல்லாம் வெறும் கதையாய்க் கன வாய்ப் பழங்கதையாய்....

அதிகாரத்தை எதிர்க்கிறபோது ஆயு தத்தையும்தானே எதிர்த்தோம். சாவு எந்த நேரமும் வரலாம்தான். எனினும் எக்கணமும் அது சிந்தையில் இல்லை. ஊசி கிழித்த நகங்கள் கழன்று, குதத் துள் போத்தல்கள் இறுக்கி, உயிர் உறுப்புக்கள் வெந்து வெதும்பி நசிந்த போதும் நாம் இறக்கவில்லை. ஆயினும் நாம் இறந்தோம். நாட்டைவிட்டுக் கிளம் பும்போது சிறுகச் சிறுக இறந்தோம். எல்லாம் செய்திகளாய், சிவப்பாய், நெருப்பாய் எரிகிறபோதும் தவித்துத் தவித்து இறந்தோம். இந்த இறப்பில் இருத்தல் எவர்க்கும் நியாயமாக இல்லை. எதிரியின் குண்டால், இறந் தால் எல்லோரும் வாழ்வு கொடுத் திருப்பார்கள். சக தோழராய் நிகழ்ந்தி ருந்தால் பிறப்பே இல்லாது தொலைத் திருப்பார்கள். நியாயம் மனிதத்தில் குந்தியிருந்து நெடுநாளாகிவிட்டது. இப் போதெல்லாம் அது லட்சியத்திலும் இராணுவ வெற்றிகளிலுமே நிலை கொண்டு விட்டது என்பது எவருக் குத்தான் தெரியாது.

▼▼▼▼▼

எங்கிருந்து வருகிறேன் என்பது எனக்கும்தான் புரியவில்லை. புறப்பட்டே யாகவேண்டும் என்று நெட்டி நெருடி உத்தியதும் புறப்பட்டதும் புறப்படும் போது பெரிய பள்ளத்தாக்குகளையும் கூரிய நிமிர்ந்த மலைச்சிகரங்களையும் காடுகளையும் கடக்கவேண்டும் என்று நினைத்ததுமட்டும் நினைவிருக்கிறது. மிதிவண்டியில் இயந்திரம்போல் என் கால்கள் இயங்கிக்கொண்டே இருக்கின் றது. எதையும் நினைத்துப் பார்க்க சிந்தையில்லையோ என்னவோ, சிந் திப்பதையே நான் நிறுத்திவிட்டேன். மிதிவண்டி வேகமாக ஓடிக்கொண்டே இருக்கிறது. முன்னே பெரு ஏறுமலை தான் விரிந்து கிடக்கிறது. ஆயினும் நான் வேகமாகத்தான் போகிறேன் எந் தக் கவலைகளுமற்று.

கரியரில் சுள்ளிகள் மட்டுமே கட் டியிருந்தேன். வெறும் காய்ந்த, எதற் குமே உதவாத, புகைவதற்கும் சாம்ப லாவதற்கும் என்றே விதிக்கப்பட்ட சுள் ளிகள். கனமான பொருள்களாக எனக் குக் கிடைத்த துரும்புகள். அவை தம் பாட்டுக்குப் பின்னே கிடந்தன.

எத்தகைய தடைக்கற்களையும் குழிகளையும் வெட்டியோடும் லாவகம் என் சுட்டுவிரலின் கணப்பொழுது முடி வுகளில் வீரியம் கொண்டு இயங்கியது. தூரம் எதையும் நான் கணக்கெடுக்க வில்லை. காலம்பற்றிக்கூட எனக்கு எந் தச் சிந்தனையும் இல்லை. இரவு பகல், காடு வீடு, எதுவும் எம் சிந்தைக்குள் அகப்படாமல்தான் எம் வரலாறு கழிந்து கொண்டேயிருக்கிறது.

இப்போது சுள்ளிகள் எனது மேல் இடுப்பில் முட்டி மோதுகின்றன. சற்றே அண்டி அண்டி முறிந்து இப்போ கீற ஆரம்பித்துவிட்டன. நான் புறப்படுவதா கத் தீர்மானித்தபோதே இவற்றை ஒழுங் காக நகராவண்ணம் எப்படிக் கட்டுவது எனப் பலநாட்கள் வெள்ளிகளைக் கணக்குப்பண்ணியே கட்டினேன். இதை விட இறுக்கமாக மீளக்கட்ட முடியாத படி மிகவும் அழுத்தம் திருத்தமான கட்டு.

அந்தக் கட்டில் அசையமுடியாத முக்கியமான இருவிடயங்கள் இருந்தன.

1. அவைகளின் இயற்கையான உணர்ச்சி நரம்புகள், அதிலும் மென்மையான அனைத்து நரம்பு களும்.
2. அவைகள் சிந்திப்பதற்கான அனைத்து அணுக்கள்.

இவை இரண்டில் எதுவும் தன்வயம் இழக்கமுடியாது.

எனக்கு ஒடிந்துவிடாத உறுதிமட் டும் போதும் என்னோடு அவை பயணம் செய்வதற்கு.

ஆயினும் இப்போதென்ன நடந்து விட்டது. என் முதுகுப்பகுதியைக் கிழிக் கின்றன. எதையும் நான் திரும்பிப் பார்க் கத் தயாராக இல்லை. இவைகளில் நான் கவனம் செலுத்தினேனாகின் அது என்னை அவமதிப்பதுபோலாகும். எனது வெள்ளிக் கனாக்கள் அனைத்தும் பொய்த்துப்போவதை நான் ஏற்றுக் கொள்ள முடியாது.

என் சுட்டுவிரலுக்கு அகப்பட்டது எல்லாம் தட்டப்பட்டன. அகப்படாதவை அடங்கிப் போயின.

நான் ஓடிக்கொண்டேயிருந்தேன். இலக்கு ஒன்றைத் தவிர எனக்கு எந்த வெளிச்சவீடும் இல்லை. இலக்கு என்னை எல்லாவிதமாகவும் சூச்சா காட் டிக்கொண்டேயிருக்கட்டும். பெருமலை களை என்முன்னே சரித்து விழுத் தட்டும். பெரும்புயலைக் கிளப்பி பெரும் புழுதிகள் என்னை மூடட்டும். நான் நகர்ந்து கொண்டுதான் இருக்கிறேன். எனது சிறு நகர்வு பெருமலைகளையும் சமுத்திரங்களையும்கூட என்னோடு இழுபட்டுவர வைத்துவிடுகிறது. இந்தப் பலத்தையெல்லாம் அவர்களே தந்தார் கள். நான் எதை எதை எப்படி எப்படி நகர்த்தவேண்டும் என்பதெல்லாம் சிந் திப்பதற்குத்தான் என்னிடம் எதுவும் இல்லையே.

மீண்டும் சுள்ளிகள் கீறுகின்றன. என் விலாவில் விரவி பழுவெல்லாம் வேல்க ளாய் ஏறுகின்றன. கிழிப்பதை உணரமு டியினும், இவையெல்லாம் வலி தரு வனவாய் இல்லை. குருதி கழிவதும் தேகம் நனைவதும் எனது இலக்கை எதுவும் செய்துவிடப்போவதில்லை.

இலக்கு எனது உயிர்ப்பு. எனது இயங்குசக்தி. இன்று இருப்பு எனது வாழ்வு வரலாறு எல்லாம். அதை நான் இறுகப் பற்றியிருக்கும்வரைதான் எல் லாம். நிலங்கள்தோறும் பிணங்கள் பர விக்கிடப்பினும் அவை எனக்கு உற்சா கத்தை மட்டுமே வழங்கும். குருதிகள் ஆறாய் ஓடுவது எனது விளைச்சலை உத்தரமாக்கும். நிணத்தின் நாற்றம் காதலை மெய்ப்பிக்கும். மிக முக்கியம் இலக்குத்தான்.

என் நெஞ்சத்து ஈரமெல்லாம் மழிக் கப்பட்டு இதயத்தில் சுள்ளிகள் நெரு டும்போது, இனியும் பொறுக்கமுடியாது அவற்றைப் பார்த்தேன்.

என்ன ஆச்சரியம். (மண்ணாங்கட்டி ஆச்சரியம். ஆச்சரியம் ஒன்றும் எனக் கில்லை. அதெல்லாம் உங்களுக்குத் தான்.) அவையெல்லாம் கைகள். ஒட்ட அறுத்த துண்டிக்கப்பட்ட கைகள். நீண்டு நிமிர்ந்து தினவெடுக்கின்றன. விரல்கள் என் உயிரை அறுக்கும் அதிர்வுகளோடு பறையடிக்கின்றன. நண்டுக்கால்களாய் கரியரில் பிணைந்த படியே என்னை இறுக்கப்பிணைகின் றன. கட்டை அறுத்து வெளி உலகத் தில் உலாவரத் துடிக்கின்றன. அது அந்தமட்டில்தான் என்றால் அது எனக் கொன்றும் பிரச்சினையில்லை. ஆனால் என் உயிரைக் குடித்து என் இல க்கை.... அதைமட்டும்....

இந்த இடத்தில் நிச்சயமாக எதையும் சொல்ல முடியவில்லை. பல சாத்தியங்கள் இருப்பதைச் சிந்திப்பதை மறுத்த என் சிந்தை முன்வைக்கிறது; இலக்கை அழிப்பது அல்லது அவற்றை அபகரிப்பது. ஆனால் சிலர் இப்படியும் ஏற்கனவே இருந்து பேசிக்கொண்டே இருக்கிறார்கள். அதாவது இலக்குக்கு அப்பாலுக்கும் அப்பால் உள்ள இலக்கை மட்டுமே இலக்காகக் கொள்வது. அதுதான் முடிந்த முடிபான இலக்காம். அந்த இலக்கை எட்டிவிட்டால், இந்த இலக்கெல்லாம் ஒரு இலக்கா என்கிறார்கள்.

எல்லாம் சரியாகவும் இருக்கலாம் அல்லது ஏதாவது சரியாகவும் இருக்கலாம். ஆனால் எனக்கு மூன்றும் மூன்றும் நாலு, நாலும் நாலும் ஏழு என்ற கணக்கெல்லாம் தெரியாது.

நான் தீர்மானித்த இலக்கு என் நியதிக்குட்பட்டது. என் வாழ்வுக்கும் உட்பட்டது. அவ்வளவுதான். அதற்கு மேல் என்னை ஒன்றும் கேளாதீர்கள். அதை நான் எக்காரணம் கொண்டும் அனுமதிக்க மாட்டேன். அத்தோடு இதையெல்லாம் பொறுத்துக்கொண்டு என் ஆட்காட்டிவிரல் சும்மாவும் இருக்காது. அது எதற்கும் எப்போதும் எந்தக்காலத்திற்கேனும் அல்லது எந்தச் சக்கரவர்த்திக்காயினும் ஒரு கணமேனும் நின்று நிதானித்துப் பொறுத்தது கிடையாது.

அந்த ரகசியம் எல்லாருக்கும் தெரிந்ததுதான். அதன் பிறகும் இப்போ என்ன நாசத்துக்கு இந்தக் கைகள் இந்தக் கெம்பு கெம்புகிறது. என்னை மோசமாகத் தாக்க ஆரம்பித்துவிட்டன. சில கைகள் மிகவும் நீண்டு என் கான்டிலைப் பிடிப்பனவும் சில முன் சில்லுக்குள் தடியோட்டுவனவுமாய் வளர்ந்துவிட்டன.

சரி என்னதான் பண்ணப்போகிறீர்கள்? பார்ப்போம்.

சைக்கிளை விட்டு இறங்கி ஓடினேன். கைகளும் சைக்கிளும் தாமாக என்பின்னே கலைத்துக்கொண்டு வந்தன.

நான் வேகமாக ஓடினேன். பங்கருக்குள் பதுங்கிப் பார்த்து காடு கரம்பை எல்லாம் வெட்டி ஓடினேன். சைக்கிள் என்னைத் துரத்திக்கொண்டே வந்தது. நின்றேன். நிதானமாகத்தான். நெருங்கியதும் உங்களுக்கு என்னதான் வேணும். ஆள்காட்டி விரலினால்தான் கேட்டேன். கைகள் எல்லாம் ஆயிரங்கால் மண்டபத்தைப்போல் என்னைச் சுற்றி 'கவரெ'டுத்து நின்றன.

ஒன்றுமட்டும் உறுதியாக விளங்கியது. அது அவர்களுக்கு விளங்காவிட்டாலும் அவர்கள் என்னைக் கொல்லமுடியாது. என்னைக் கொல்வது அவர்களையும் கொல்வது போலாகும். என் தோளில் இருந்துகொண்டு சொண்டு விரல்களால் கொத்திக் கொண்டிருக்கும் குருவிகள் இவை என்பதற்குமேல் இவர்களை நான் ஒருபோதும் பெரிதாக நினைத்ததில்லை.

நிற்க!

இவை என்னைச் சுற்றிய வலயத்துள் என்றுமே உட்புகமுடியாத கைகள். ஆயினும் எனது ஆரம்பமும் முடிவுமான ஆள்காட்டி விரலின் உச்சவிசையைப் பிரயோகிப்பதைத் தவிர வேறு வழியேதும் எக்காலத்திலும் எனக்கு இருந்ததில்லை. முடிந்தவரை தொடர்ந்து இயக்கிக் கொண்டேயிருந்தேன்.

மேலும் மேலும் கைகள் முளைத்தன. சுடலையின் குத்துக்கல்களாய் தேசமெங்கும் காடாய் விரிந்தன. நான் மட்டும் நடுச் சமுத்திரத்தில் தனியனாய் இருந்தேன். என் வலயமும்கூட.

இந்த இக்கட்டான இடத்தில் ஒரு முக்கியமான விடயம் நடந்தது. தூரத்தே மின்னல் விழுந்தது. இடியோசை முழங்கியது. வானமெங்கும் ஊர்திகள் நிறைந்தசைந்தன. புகைகள் பகலை இரவாக்கியது. குண்டுகள் பொழியத் தொடங்கின. ஒரு காலப்பிரளயத்தின் டைனசோர் அழிவுகள் போல் மலைகள் வெடித்துச் சிதறி கைகள் எல்லாம் முறிந்து விழுந்தன. எனது கைகள் பலத்தன. வலயங்கள் பெருத்தன. தாக்குதல்கள். உக்கிரமான பதில் தாக்குதல்கள். முடிவில் அவர்களும் வென்றார்கள். நானும் வென்றேன். இப்போது எனது பலம் பெரிதாக இருந்தது. சமுத்திரங்கள் குளமாகிவிட்டன. ஆயிரங்கால் மண்டபங்கள் அடியோடு சாய்ந்திருந்தன. அங்கொன்றும் இங்கொன்றுமாய்க் குத்துக்கல்லாட்டம் இருந்த கைகளைப் பார்த்துக் கேட்டேன்.

இப்போ எல்லோரும் எங்கே போய் விட்டீர்கள்.

அவர்கள் எதுவும் பேசவில்லை. ஒரு கணம் எல்லோரையும் உற்றுப் பார்த்தேன். சிலர் புகலிடங்களிலும், இன்னும் சிலர் என் வலயத்தோடும், வேறுசிலர் மண்ணோடும் வீழ்ந்து கிடந்தனர்.

இப்போது என்னதான் சொல்கிறீர்கள்.

எல்லாம் உண்மைதான்.

ஆயினும் நீங்கள் சிந்திக்கும் உரிமையையும் மறுத்தீர்கள்.

போராடும் உரிமையையும் மறுத்தீர்கள்.

ஆயினும் போராடினோம்.

மேலிருந்தும் கீழிருந்தும் முன்புறம் இருந்தும் பின்புறம் இருந்தும் பாய்ந்த குண்டுகளால் சாகடிக்கப்பட்டோம். ஆனால் உங்களுக்கு ஒழுங்காகக் குறி பார்த்துச் சுடத்தெரியும் என்பதையும் நாமறிவோம்.

இங்கே பாருங்கள். எனக்கு முக்கியமானது எனது இலக்குத்தான். நீங்களோ, நானோ, எனது வலயங்களோ இல்லை எதிரியோ அன்றி எனது மக்களோ இந்த உலகமோ எனக்கு முக்கியமானதல்ல. ஒரே ஒரு மூலமும் முடிவுமான பொருள் இலக்குத்தான். இந்த இலக்கை எட்டிவிட்டேன் என்றால் எதிரி எதிரியும் இல்லை. உங்களுக்கும் எனக்கும் பிணக்கும் இல்லை.

இது அவர்களுக்குத் திருப்தியானதாக இல்லைத்தான். அவர்கள், "உங்களதும் எங்களதில் பலரதுமான இலக்கை நீங்கள் நினைத்தவழி அடைவதற்கு விடுதலையும் சுதந்திரமும் மனிதமும் இயற்கையும் எல்லாமுமாய் அழிவது அராஜகமானது இல்லையா?" என்கிறார்கள்.

▼▼▼▼▼

இருள் என்றும் இல்லாததுபோல் இருள். உலகமெல்லாம் பொட்டம் பொட்டமாக கவிழ்ந்து கறுத்த இருள். நாமோ - யாரோ சூனியம் செய்தது போல், இருள், அடர்த்தியாகவும் நீண்டதாகவும் இருப்பதாக உணர்கிறேன். ஏனெனில் 1910களிலோ 1940களிலோ இந்த இருள் இவ்வளவு நீண்டதாக இருக்கவில்லை. இந்த மழைகூட அசாதாரணமாய் விரும்பத்தகாத ஒன்றாய், இல்லை, மேலும் வெறுக்கத்தக்கதொன்றாய் குத்தி முறிந்து மாய்ந்து கொண்டேயிருக்கிறது. இதுவும் சூனியத்தின் விளைவோ என்னவோ? ஓர் துர்க்குறியின் அடையாளமாகவே படுகிறது.

தப்பு. இதை ஓர் 20வருடங்கள் முன்னே சொல்லியிருக்கலாம்தான். இப்போ அடையாளத்தின் அத்திவாரமும் அஸ்தமனமும் இரண்டாய் கலந்த, இரண்டாய் அழிந்த, இரண்டாய் உயிர்த்த ஒன்றாகிவிட்டது அல்லவா?

இப்படி நான் உணர்வது ஓர் இயற்கையின் விளைவுதானே என்பதற்கு அப்பால் எதையும் எண்ணத்தோன்றவில்லை. ஆயினும் இந்த இருளினுள்ளே சூரியனின் கடாட்சத்தில் கால்

களை நீட்டி வைத்துச் செல்பவர்கள் போல் (ஒருவேளை அது எல்லாம் கூட்டித் துடைத்த ஒரு நீண்ட வெளியாகக்கூட இருக்கலாம்) பலரும் செல்வதையும் வீணியாய் நாறி ஒழுகும் மழையில் புதையாது விரைவதையும் பார்க்கும்போது எனக்கு அசாதாரணமாகப் பட்டது. ஆயினும் நான் இப்படி உணர்வதை அவர்கள் விளங்கிக்கொண்டிருந்தார்களா? இல்லையா? என்பதை என்னால் ஊகிக்கமுடியாவிட்டாலும் அவர்கள் என்னை ஒரு தினுசாக நோக்குவதை நான் உணர்ந்திருக்கின்றேன். எது எப்படித்தான் என்னை இழுத்தடிப்பினும் நான் இவற்றையெல்லாம் எண்ணி ஆச்சரியப்படாததற்கு அவர்களே சூனியக்காரர்கள் என்று எண்ணியது ஒரு காரணமாக இருக்கலாம். (உண்மை என்னவென்றால் இந்தக் கூற்று உண்மையல்லவென்பதுதான். நானும் ஒரு சூனியக்காரன்தான் என்பதை எனது வசதிக்காகவோ அல்லது எனது அதீத தூய்மைவாத துப்பரவற்ற உணர்வாலோ அல்லது நான் மட்டுமே நேர்மையான, துணிச்சல்மிக்க, உத்தமன் என்று உணர்த்தி எல்லோரையும் எனது சக்தியின் கீழ் பணிய வைக்கவேண்டும் என்ற ஒருவகை ஹீரோ உணர்வாலோ மறைத்துவிடுகிறேன். மன்னித்தருள்க!)

....இப்படி நான் எண்ணியதும் அவர்கள் என்னை ஒரு தினுசாகப் பார்த்ததும் - மொத்தத்தில் நான் பேய்பிடித்தவன்போல் ஆகியதில் வியப்பில்லைத் தானே.

இதுநாள்வரை நான் இதைப்பற்றி அதிகம் அலட்டிக்கொள்ளவில்லை. ஆகையால் அச்சம் இருந்ததில்லை அல்லது அதிக அச்சமும் இருந்திருக்கலாம். ஆயினும் எல்லா வகையிலும் நிலைமை இப்போ மாறிக்கொண்டு வருகிறது. முன்னரெல்லாம் இருள் இருளே என்றும் வீணிமழை என்றும் விலாவாரியாய் ஒப்பாரி நீட்டியவர்கள்கூட சூரிய கடாட்சம் பெற்றுவருவதையும் மேலும் வேகமாக விரைவதையும் பார்க்கமுடிகிறது. ஆச்சரியம்தான் என்று இல்லாவிட்டாலும் அச்சமல்லவா தருகிறது.

காவிப் போர்வைக்கும் கறைபட்ட போர்வைக்கும் வேறுபாடற்று இருளில் மறைந்து கிடப்பது அச்சத்திற்குரிய விடயமல்லவா.

▼▼▼▼▼

அவர்கள் மீண்டும் வந்தார்கள். மேலும் ஆயிரம் கதைகள் சொன்னார்கள். முடிவில் என்ன செய்வதாக உத்தேசம் என்றார்கள். இனியும் பொறுக்கமுடியாது என்றேன். ஆமாம்! எங்களுக்கும் அப்படித்தான் என்றார்கள். என்ன செய்யலாம் என அவர்களை நோக்கி நிமிர்ந்தேன். அவர்களோ ஜாக்கெற்றுக்குள் இருந்து மிக இலகுவாகவே அதிகாரத்தைக் கையில் எடுத்தார்கள். நான் மண்டியிட்டு வீழ்ந்தேன். ◆

சோலைக்கிளி

காற்றடித்து விழுந்த கொப்பில்
பூவும் பிஞ்சுகளும்
இளந்தளிர்கள் வெயிலுக்கு முகம் வாடி
மெல்லமெல்ல நிலத்தில்
உதிர்ந்து ஓடி விளையாடும் பிள்ளைகளின் கால்களுக்கு
ஒட்டும் பொட்டாகிச் சிதையும்
தாய்மரத்தில் சீழ் ஒழுக

யாரிவன், மாட்டைக் கூட்டிவந்து மேயவிட்ட பூமனத்தாபன்

அடிமரத்தில் அணில் இருந்து
குதித்தோட முடியாமல்
விக்க, பதிலுக்கு கத்துதல்போல் பசிதீர்ந்த
மாடு சத்தமிடும்
"மா"

மா மா மா
என் பொன் அணிலே
சற்று கவனமாய் இறங்கு மரம் சறுக்கும்
தாவக் கிளையில்லை
என் வீட்டிற்குள் நிறைய ஓட்டறைகள் கவிந்து
பார்க்க ஒரே அசிங்கம்
வந்து துடை உன்னுடைய வாலால்
சின்ன ஓலைக் கூந்தல்
என் இல்லத்தின் ஓட்டறையை
அப்படியே அப்பும்
அந்த மரம் தளைக்க நாளாகும்
உலகம் மொட்டை மயம் ◆

எங்க ஜனங்க

பாவண்ணன்

பசியாலே செத்தவங்க பட்டக்கல்லு சொமந்தவங்க
ஒதபட்டுச் சுருண்டவங்க எங்க ஜனங்க
கையகால புடிக்கிறவங்க கைகட்டி நடக்கிறவங்க
பக்தருப்பா பக்தருங்க எங்க ஜனங்க

கலப்பையோட்டி வெதச்சவங்க பயிரறுத்துக் களைச்சவங்க
வெய்யிலிலே வெந்தவங்க எங்க ஜனங்க
வெறும்கையோட வந்தவங்க உஸ்ஸ"ன்னு ஒக்காந்தவங்க
வாயும் வயிறும் காஞ்சவங்க எங்க ஜனங்க

மாளிகைய எழுப்பனவங்க பங்களாங்க கட்டனவங்க
அடிமட்டத்துல மாட்டனவங்க எங்க ஜனங்க
தெருவிலேயே உழுந்தவங்க சத்தமில்லாம கெடந்தவங்க
மனசுக்குள்ளேயே அழுதவங்க எங்க ஜனங்க

வட்டிக்காசு கொடுக்கறவங்க சொற்பொழிவு நெருப்புக்குள்
வெந்து சாம்பலானவங்க எங்க ஜனங்க
ஆண்டவனின் பேரைச்சொல்லி விருந்துசோறு தின்னவங்களுக்கு
செருப்புதச்சி குடுத்தவங்க எங்க ஜனங்க

தங்கத்த எடுக்கறவங்க சோத்தயே பாக்காதவங்க
துணிமணிய நெஞ்சவங்க அம்மணமா போனவங்க
சொன்னபடி கேக்கறவங்க எங்க ஜனங்க
காத்துலயே வாழுறவங்க எங்க ஜனங்க

◆

ஆயிரமாயிரம் நதிகள்

நேற்றைய தினம்
எங்கள் மக்கள்
மலைபோலத் திரண்டு வந்தார்கள்

கருத்தமுகம் வெளுத்த தாடி கனலுகின்ற கண்கள்
இரவையும் பகலையும் பிளந்து உறக்கத்தை விரட்டினர்
கம்பளிகள் முணுமுணுத்தன சீறியெழும் வேகத்தில்
பூகம்பமே ஆயிற்று அவர்களுடைய ஆர்ப்பாட்டத்தால்
எறும்புபோல நீளும் வரிசை புலிசிங்கங்களின் சீறல்கள்
ஒழிக ஒழிக சமமற்ற நிலை ஒழிக
என்றென்றும் அழிந்தொழிக பணக்காரச் செருக்கு
லட்சக்கணக்கில் நாகப்பாம்புகள் புற்றைவிட்டு வந்ததுபோல
ஊர்முழுக்கத் திரண்டார்கள்
பாதாளத்துக்குள் இறங்கினார்கள்
வான்நோக்கித் தாவினார்கள்

தெருவினிலே கிளைச் சந்தினிலே
சுற்றுச் சுவர்களின் மறைவினிலே
ஆண்டைகளின் இருப்பிடத்திலே அவர் அமரும் இருக்கையிலே
எங்கெங்கும் எங்கள் மக்கள் தண்ணீர்போல நிறைந்தார்கள்

இவர்கள் வாய் திறந்ததும்
அவர்கள் வாய் அடைந்தது
இவர்கள் குரல் கேட்டதும்
அவர்கள் குரல் தணிந்தது
புரட்சியின் புயலில் கைவீசி எழுந்த எங்கள் மக்கள்
காலம் முழுக்க உதைத்தவர்களின்
கழுத்தையெட்டிப் பிடித்தார்கள்

போலீஸாரின் கைத்தடிகள் கைக்கூலிகளின் கத்திகள்
வேதசாஸ்திர புராணம் துப்பாக்கிகளின் கிடங்கு
கசக்கிப்போட்ட குப்பை போல
காலடியில் கிடந்தன
போராட்டக் கடலைநோக்கி
ஆயிரமாயிரம் நதிகள்

◆

இன்னுமா கவிதைகள்?

மூலம்: சித்தலிங்கையா
தமிழில்: பாவண்ணன்

மாக்சியத்தினூடு இலக்கியம்

தமிழரசன்

மனிதகுலம் முதன்முதலில் கலைஇலக்கியம் ஊடாகத்தான் தன்னைத் தரிசித்துக்கொண்டது. மனிதர்கள் இயற்கைச் சக்திகளை கற்பனையாக அடிமைப்படுத்த முயற்சித்தபோதும் அதன் புதிர்களை மர்மங்களை விளங்கிக்கொள்ளப் போராடியபோதும் அதிலிருந்து எழுந்ததே மனித இனத்தின் தொன்மை இலக்கியச் செல்வங்களாகும். இவை மனிதகுலத்தின் இளமைக்காலத்தின் வாழ்வு, அனுபவம், போராட்டம், கற்பனை இவைகளின் தொகுப்பாகும்; வெளிப்பாடாகும். மனிதன் என்றால் உழைப்பு என்று பொருள். உழைப்பின்மூலமே மனிதன் தன்னை நிறுவிக் கொள்கிறான். மறுஉற்பத்தி செய்துகொள்கிறான். இந்த உழைப்பானது வெறும் பொருளியல்வகைப்பட்டதல்ல. உயிர்வாழ்வின் அடிப்படையில்மட்டும் கோரப்படுவதல்ல. கலாச்சாரமடைவதின் விளைவாய் மனிதன் தன் சிந்தனையை அழகுணர்வை இலட்சியங்களாய் பலசமயங்களில் கற்பனைகளால் பதிவுசெய்து கொள்கிறான். எனவேதான் மாக்ஸ், இலக்கியம் மனிதகுலத்தின் தாய்மொழி என்றார். பண்டைய கலைச்செல்வங்களை அன்றைய மனிதனின் ஆளுமைக்கு அழகுணர்வுக்கு அடையாளமாய்க் கொள்வதோடு பிற்கால அரசியல் சித்தாந்த, சமூக, கலைவடிவங்களுக்கும் அடித்தளமிட்டன என்ற வரலாற்றுண்மையிலிருந்தே மாக்சியம் புறப்பட்டது. மனிதர்கள் வர்க்கங்களாக, இனங்களாக, மதக்குழுக்களாக வேறுபட்டு இருக்கும் அதேசமயம் மனிதர்களுக்குரிய பொது அம்சங்களையும் கொண்டிருக்கிறார்கள். இங்கு மாக்சியம் வர்க்கமனிதனை மட்டும் பேசுவதில்லை. பொதுவான மனிதகுல வளர்ச்சிகளையும் போக்கையும் பேசுகின்றது. கலைகளும் இன, மத, வர்க்க அடிப்படைகளில் வேறுபடுகின்றன. இக்கலைகள் இந்தியக்கலைகளாய அரபு, எகிப்து, சீன கிறீஸ் என்றும் இஸ்லாமிய, கிறிஸ்தவ, இந்து, பௌத்தம் என்றோ, முதலாளிய, நிலப்பிரபுத்துவ, பாட்டாளி வர்க்கக்கலைகள் என்று வேறுபட்டாலும் அவையாவும் **கலைகள் என்ற** பொதுக்குணாம்சத்தில் அடங்குகின்றன.

பண்டைய கலைவடிவங்கள் முதல் இன்றைய கலைவடிவங்கள்வரை ஆயும்போது அவற்றின் வர்க்கச்சார்பை மட்டுமல்ல. அவை சமூகமுன்னேற்றத்தின் விதிகட்கு ஏற்ப வளர்வதையும் இருக்கும் சமூகஅமைப்பை கேள்விக்குள்ளாக்குவதையும் அதனோடு முட்டிமோதுவதையும் முரண்படுவதையும் கண்டுகொள்ளாமலும் அவற்றின் அழகியலை கண்டுணராமலும் நுகராமலும் நகரமுடியாது. வெறும் வர்க்கப்பார்வையைப் பொருத்தி பாட்டாளிகளைப் பாடாத இலக்கியம் யாவும் பிற்போக்கு என்பது ஒருபோதும் மாக்சியமல்ல. "ஒரு கலைப்படைப்பு தன்சொந்த அழகியல் விதிகளால் படைக்கப்படவேண்டும்" ஆனால் மாக்சியம் மட்டுமே ஒரு கலையின் தோற்றத்துக்கான சமூகக்காரணிகளை விளக்கமுடியும் என்பதே சரியான பார்வையாகும். கலை ஒரு வர்க்கக்கண்ணோட்டத்துடன் மட்டுமே இயங்குகின்றது பிரச்சாரம் செய்கின்றது. சார்புநிலையோடு இயங்குகின்றது என்ற நேர்கோட்டுத் தத்துவங்கள் ஸ்டாலின்காலம் உற்பத்தி செய்த கொச்சை மாக்சியப்போக்காகும்.

மாக்சின் எழுத்துக்கள் இலக்கியத்துடன்தான் தொடங்கின. இறுதிக்காலம்வரை அவரின் சகல எழுத்துக்களிலும் அவரின் பரந்த இலக்கிய அறிவின் பரப்புகளைத் தரிசிக்கலாம். கலையை ஏனைய உழைப்புத்துறைகளைப்போன்று ஒரு மனித உழைப்புத்துறையே என்று மாக்ஸ் மதிப்பிட்டார். மாக்சிய சிந்தனையை, சமூகம், பொருளாதாரம், அரசியல் தத்துவம் இவைகளை உள்ளடக்கியதாகவோ அல்லது இவற்றின் கூட்டுக்கலவையாகவோ காண்பவர்கள் மாக்சின் இலக்கியச் சிந்தனையையும் இரசனையையும் தவறவிட்டு விடுகிறார்கள். இயற்கைவிஞ்ஞானம், வரலாறு, அரசியல் வரலாறு, சட்டம், விஞ்ஞானம், கலையின் வரலாறு, மதத்தின் வரலாறு என்று சகலதையும் உள்ளடக்கும் மனித வரலாற்றையே மாக்ஸ் பதிவு செய்தார். கலைக்கும் உழைப்புக்குமிடையேயான உறவு, கலைகளின் சமூக மற்றும் அரசியல் அனுபவங்கள், கலையின் வர்க்க அடிப்படை, வர்க்கம் கடந்த நிலை, கலையின் காலம்கடந்த மற்றும் காலம் சார்ந்த நிலை, முதலாளிய சமூகத்தில் சந்தைப் பொருளாகும் கலை இவைபற்றி விரிவாக மாக்ஸ் ஆராய்ந்துள்ளார். மனிதவாழ்வின் அழகியற் கூறுகளோடும் மனிதனை மனிதனாக்கும் கலை குறித்தும் மாக்ஸ் தீவிரம் காட்டினார்.

மாக்ஸ் இலக்கியத்திடம் தத்துவத்தை எதிர்பார்த்தவரல்ல. "பொருட்கள்பற்றிய மனிதஉணர்வு மனிதனின் புலன்களில்மட்டுமே தங்கி நிற்கின்றது. இசைவயப்படாத காதுக்கு மிக இனிமையான இசைகூட அர்த்தமற்றது. பொருள்வயமான உலகின் புலன்கள் மனிதனின் தன்னறிவுக்கும் இருப்புக்கும் உதவுகின்றன." புலன்கள் நமது செயற்பாடுகளின் நேரடியான தத்துவஞானிகளாக மாறியிருக்கின்றன. மனிதனின் சுயங்களின் போராட்டத்திலிருந்தே அழகியல் உணர்வு எழுகின்றது" என்கிறார் மாக்ஸ். கெகல் மனிதனை சிந்திக்கும் உயிரி என்று குறுகத் தறித்துக்கொண்டபோது "புலனுணர்வுகள் கொண்ட உயிரினம் என்ற அடிப்படையிலும் மனிதன் உயர்ந்தவன்" என்பார் மாக்ஸ்.

மாக்ஸ் இளமைக்காலத்திலேயே ஹோமர், பிளாட்டோ, தூசி டெடிஸ், சிசரோ சோபாக்கிளிஸ், டாசிடெஸ், சேக்ஸ்பியர் ஆகியோரில் மூழ்கி எழுந்தவர். இலக்கிய விடயங்களில் பள்ளியில் முதல் மாணவராக இருந்த மாக்ஸ், Bonn, Berlin பல்கலைக்கழகங்களில் பயின்றகாலை சட்டம், தத்துவம், வரலாறு இவைகளோடு இலக்கியத்தையும் சேர்த்தே கற்றார். கவிஞன், இரவுக்காதல் போன்ற கவிதைகளையும் ஜெண்னிக்கு எழுதிய கவிதையையும் மாக்ஸ் இளம்வயதில் இயற்றினார். மனிதப்பெருமையில் புகழ்பெற்ற கிறீசின் இலக்கியப் பாத்திரங்களை உதாரணம் காட்டுகின்றார்.

பாறையில் கட்டுண்டு கிடந்த புரோமத்தியூஸ் கடவுளின் சேவகனான ஹெர்மிசிடம் "ஒன்றை உறுதி செய்துகொள். என்னுடைய இந்தத் துயரநிலையை உன்னுடைய அடிமைத்தனத்துக்கு மாற்றீடு செய்துகொள்ள மாட்டேன். பிதாவான சிசியூசின் நம்பிக்கைக்குரிய வேலையாளாக இருப்பதைவிட இந்தப்பாறையின் அடிமையாக இருப்பதே மேல்."என்ற புரோமத்தியூசின் தன்னுணர்வையும் சுதந்திர

அவாவையும் வெளிக்கொணர்கின்றார். நெருப்பைக் கடவுளிடம் இருந்து திருடி மனிதர்கட்கு வழங்கிய புரோமத்தியூஸ் மனிதஅறிவின் அடையாளமாயும் அடிமைத்தனத்துக்கு எதிராய்ப்போரிட்ட ஸ்பார்ட்டகோசையும் மாக்ஸ் பலதடவை நினைவு கூர்கின்றார். ரூசோ, வால்டேர், ஹோல்பாக், லெஸ்சிங், கென்றிச்கெயின், கான்ட், விங்கிள்மான், கதே, சில்லர், ஷ்லெகல் திதரோ, தாந்தே இவர்களைப் புலமையோடு கற்று தன் முழுப்படைப்புகளிலும் படரவிட்டவர். 1844இல் எழுதிய பொருளாதாரத்துவம் சம்பந்தமான கையெழுத்துப்பிரதிகள், அரசியல் பொருளாதார விமர்சனம் முதல், உபரிமதிப்பு, மூலதனம் ஈறாக அவரின் சகல எழுத்திலும் இலக்கிய ஆளுமையின் சுவடுகளைக் காணலாம். கிரேக்க ஆன்மீகச் சிந்தனையிலிருந்துதான் அரிஸ்டோட்டிலின் தத்துவச்சிந்தனையும் கான்ட், பொயபார்க், கெகல் போன்றவர்களின் கருத்துமுதல்வாதப்போக்கிலிருந்துதான் மாக்சியமும் தோன்றின என்பதை இன்றைய தீவிர இடதுசாரிக் காய்ச்சலில் கிடந்து உழல்பவர்களும் ஸ்டாலினின் அரசியல் பாரம்பரியங்கட்கு தம்மை ஒப்புக்கொடுத்தவர்களும் உணர்ந்துகொள்ள பிடிவாதமாய் மறுக்கின்றார்கள். மாக்ஸ் தம் வெவ்வேறு படைப்புகளில் அவர் பாண்டித்தியம் பெற்றிருந்த ஜெர்மன், பிரெஞ்சு, ரஸ்ய, ஸ்பானிய, இத்தாலிய, கிறீஸ், லத்தீன், ஆங்கிலம் ஆகிய மொழிகளின் தலைசிறந்த இலக்கியங்களின் மேற்கோள்களை எங்கும் காணமுடியும். நாடகம், கவிதை, நாவல், பழம்பெரும் காப்பியங்கள் என்பன மாக்ஸ் இறுதிவரை நேசித்த விடயங்களாகும். அவரின் தனிவாழ்விலும் அழகியல் மிகப்பெரும்பங்கு வகித்ததை அவரின் மகள் உட்படப் பலர் குறித்துள்ளனர்.

மாக்சியத்தை வெறுமனே ஒரு இயந்திரக் கோட்பாடாயும் உயிரற்ற போக்காயும் மறுபுறம் சமரசவாதமாயும் சீர்திருத்த வாதச் சதிராட்டங்களிலும் வழிதவறவிடப்பட்டுள்ள இக்காலத்தில் மனித இருப்பின் எந்தத்துறையும் மாக்சியத்துக்குப் புறம்பானதல்ல. கவிதை, நாடகம், இலக்கியம், நவீன ஓவியம், திரைப்படம் ஆகிய சகல கலைவடிவங்களையும் தத்துவரீதியில் அதன் உயர்மட்டங்கள் புரிந்துகொள்வது அவசியமாகும். இன்றைய கலை கலைக்காகவே என்ற சித்தாந்தக் கோவணாண்டிகளையும் அரசியல் சூனியத்தில் உலாவுவோரையும் மறுபுறம் கலைகளை முற்போக்கு பிற்போக்கு வெட்டொன்று துண்டு இரண்டாகப் பிளந்தெறிவோரையும் விலத்தி இலக்கியத்தை மிகச் சரியாகக் கண்டுயிர்த்து மனிதத்தினதும் உலக கலாச்சாரத்தினதும் படிகளாக மாற்றவேண்டும்.

மனித அறிவுடனும் தார்மீகத்துடனும் மட்டுமின்றி கண்ணுடனும் காதுடனும் கோரிக்கை வைக்கும் காட்சி, ஒலி வடிவங்களே இலக்கியம் எனும் மாக்ஸ் "பிரான்சில் வர்க்கப் போராட்டத்தில் விவசாயிகளை கற்பனாவாதப்படுத்திய கிராமிய வாழ்க்கையை இலட்சியமயப்படுத்திய தோமர், ஓவர்பார்க் போன்ற கிராமியம் சார்ந்த எழுத்துக்களை விமர்சிக்கின்றார். ஜெர்மனிய சில்லருக்கு எதிராக சேக்ஸ்பியரின் பாத்திரச் சித்தரிப்பை பாராட்டும் மாக்ஸ், சேக்ஸ்பியரிடம் வர்க்கப்பார்வை இல்லை; எனவே அவர் ஒரு சரியான கவிஞரல்ல என்றவர்களை மரமண்டைகள் என்று மாக்ஸ் நையாண்டி செய்தார். சேக்ஸ்பியரின் பாத்திரங்கள் யதார்த்த மனிதர்களுக்கும் அவர்களின் பௌதீக அக்கறைகட்கும் இடையேயான போராட்டச் சித்தரிப்பு என்பதை அடையாளம் காண்கின்றார். கதேயின் எழுத்துக்களில் மத்தியதரவர்க்கத்தின் பதட்டத்தினை டாரதி தோன்றும் கிராமியம் சம்பந்தப்பட்ட சித்தரிப்புக்களில் உள்ளதைச் சுட்டுகிறார். இத்தாலிக் கவிஞன் தாந்தேயின் நரகம்பற்றிய வர்ணனையை விக்டோரியா அரசிகாலத்து தீப்பெட்டித்தொழிற்சாலை நிலைமைகளோடும் ஹோமரின் ஓடிசில் வரும் பாதாள உலகப் பயணத்தில்கண்ட ஆவிகளின் துன்பப்படும் நிலையை தமது காலத்து உழைக்கும் மனிதனின் துன்பத்தோடு ஒப்பிடுகின்றார். ஓவியக்கலையைப்பற்றிப் பேசும் மாக்ஸ், ராபேலின் கலையை ∴பிளாரண்டைன் செல்வாக்குக்குட்பட்ட ரோமாபுரியுடனும் லியனார்டோவின் கலையை ∴பிளாரன்சின் போக்குகளுடனும் தொடர்புகொண்டு காட்டுகிறார். இலக்கியத்தில் நிதானமாகவும் மென்மையான படிமங்களின் ஊடாகவும் செல்லும் பழைய கவிஞர்களின் போக்கு முடிவடைந்து புதிய நவீனமான யதார்த்த நிலைமைகளை வெளிப்படுத்த அதற்கு வலுவான புதிய மொழிநடை வேண்டுமென்கிறார் மாக்ஸ்.

இலக்கியம் அதன் காலத்திய அதிகாரவர்க்கத்தின் மேல் வர்க்கங்களின் சிந்தனையின் பிரதிபலிப்பு என்ற கருத்தை மாக்ஸ் முழுமையாய் ஏற்கவில்லை. ஒரு உண்மைக் கலைஞன் வர்க்கக்கட்டுமானங்களையும் தன்னுணர்வின்றித் தாண்டமுடியும். அப்பால் செல்லமுடியும். மனித அவலங்களை ஒடுக்கப்படும் மக்களின் துயரங்களை வெளியிடமுடியும் என்று கண்டார். தூய அழகியல்வாதிகளின் பொய் அழகுகளை எரிக்கவும், வெறும் பிரச்சாரத்துக்காக எழுதப்படும் இலக்கியத்தைத் தோலுரிக்கவும், அதேசமயம் திறனும் உண்மையுமுள்ள எழுத்தை விமர்சித்து முன்னெடுக்கவும் மாக்ஸ் முயன்றவர். கென்றிச் கெயின், கியார்க், ஹேர்வேர் போன்ற மக்கள்கவிஞர்களிடம் சோசலிசப் பண்பாட்டின் ஒளிக்கீற்றுக்களைக் கண்டார். கென்றிச் கெயினயின் நெசவாளியின் பாடல்கள் பழைய நாட்டுப்புறப்பாடல்களின் வீரியத்தோடு புதிய தொழிலாளர் பண்பாட்டின் மூலஊற்றுக் கொண்டுள்ளதாய் பாராட்டினார்.

முதலாளித்துவம் கண்டதையெல்லாம் விற்பனைச் சரக்காக்கியது. இலக்கியமும் அதற்கு விதிவிலக்கல்ல. இலக்கியம் இலாபம் தரும் பொருளாகிவிட்டதையும் சுரண்டும் ஒடுக்கும் வர்க்கங்கட்கு நேரடியாகவே தொண்டுசெய்யும் நிலைக்கு இறங்கிவிட்டதையும் அதனால் இயற்கையோடும்

கலை ஒரு வர்க்கக்கண்ணோட்டத்துடன் மட்டுமே இயங்குகின்றது பிரச்சாரம் செய்கின்றது. சார்புநிலையோடு இயங்குகின்றது என்ற நேர்கோட்டுத் தத்துவங்கள் ஸ்டாலின்காலம் உற்பத்தி செய்த கொச்சை மாக்சியப்போக்காகும்.

பொருட்கள்பற்றிய மனித உணர்வு மனிதனின் புலன்களில் மட்டுமே தங்கி நிற்கின்றது. இசை வயப்படாத காதுக்கு மிக இனிமையான இசைகூட அர்த்தமற்றது. பொருள்வயமான உலகின் புலன்கள் மனிதனின் தன்னறிவுக்கும் இருப்புக்கும் உதவுகின்றன.

மனிதவாழ்வோடும் கொண்ட கலையின் உறவுகள் அலங் கோலமாயின. சமூகத்தில் பணத்தின் ஆதிக்கம் வளர வளர கலைகளின் மேல் வெறுப்பு அதிகமாகி மனிதனை அவனின் கலை மரபுகளிலிருந்து முதலாளித்துவம் விலக்கு கின்றது. எனினும் உண்மைக்கலைஞன் நவீன சமூகத் தில்கூட ஆளும் வர்க்கத்தின் அடிமையாகாமல் நாடுகடத்த லையும் சிறைவாழ்க்கையையும் தனிமைப்படுத்தலையும் எதிர்கொண்டு இலக்கியம் படைக்கமுடியும். முதலாளியத் தில் வர்த்தகத்தேவையையொட்டி கலைஞர்கள் பிறக்கின் றார்கள். ஆனால் தரமான கலைஞர்கள் அநீதிகட்கு ஒப் புக்கொடுக்க மறுக்கின்றார்கள். சமூகத்தை ஊடுருவி உண ர்ந்து நோய்க்குணத்தையும் முரணையும் அவலத்தையும் கண்டறிந்து அறிவிக்கின்றார்கள். போர்ப்பிரகடனம் செய் கின்றார்கள். தம் சுயங்களையும் சிந்தனைகளையும் நிலவும் அமைப்பின் நிர்ப்பந்தங்கட்கு விட்டுக்கொடுக்க மறுக்கின் றார்கள். ஆனால் சராசரி எழுத்தாளன் அதிகாரவர்க்க நடைமுறைகளைக் கேள்விகேட்கமாட்டான். சந்தேகிக்க மாட்டான். மாறாய் போற்றியே எழுதுவான். எனவே இங்கு உழைப்புப்போலவே கலையும் விற்பனைக்கானதாகிறது. எழுத்தன் தன்னையே எதிர்ப்பவனாயும் விற்றுக்கொள்ப வனாயும் தம்சுயங்களை தொலைத்துவிட்டவனாயும் காணப் படுகின்றார்கள். கலையின் சாரமும் போக்கும் எதிர்த்த டிக்கப்பட்டுச் சீரழிகின்றது. கூலி எழுத்தர்கள் பொருளியல் சார்ந்த சமூக நிர்ப்பந்தங்கட்கு தம்மை அறியாமலே அடி பணிந்து சுரண்டும் வர்க்கங்கட்கு சித்தாந்தத்தொண்டு செய் பவனாகிவிடுகின்றார்கள்.

முதலாளித்துவம் மனிதர்கள் தமக்குள் போட்டியிடவும் வஞ்சித்துக்கொள்ளவும் கொள்ளையிடவும் பேராசையும் கணக்குப் பார்க்கும் குணமும் கஞ்சத்தனமும் கொண்ட விலங்குத் தன்மையுள்ள புதிய புதிய வழிகளில் பொருட் களையும் தேவைகளையும் பெருக்கிக்கொள்ளும் உயிரி யாக மனிதனைக் குறுகச்செய்துவிட்டது. இந்த நிலை மைகளை எதிர்கொள்ளமுடியாமல் போலியான சமூக உணர்வுகொண்ட அற்ப இலக்கிய வடிவங்கள் மனிதவிரோ தத்திலும் சித்தாந்த விரோதத்திலும் தலையைப் புதைக் கும்போது உயர்ந்த கலைவடிவங்கள் சமூகவரலாற்றின் தேவைகளைஒட்டி வளர்ந்து எழுந்து முன்னேறும். இவைகள் யாவும் கட்டாயமாக சித்தாந்தங்களின் கட்டுத்திட்டத்துள் தம்மை அடக்கிக்கொள்ளும் என எதிர்பார்க்க முடியாது. ஆனால் மனிதனின் அதிஉயர் சிறப்பான தேவைகளிலி ருந்தே பிறக்கும். அது பொருளாதார பௌதிகத் தேவை களையும் கடந்து மனித ஆவல்களைத் தேடல்களை பிர கடனம் செய்யும். முதலாளியம் உண்மையான கலையின் எதிரி என்ற மாக்ஸ் கலையை பொருளியல் ஆர்வங்களில் இருந்து விடுதலை செய்யும்போதுதான் அது தனக்கேயுரிய முழுமையான மனித ஆன்ம வெளிப்பாட்டினதும் இயற்கை யினதும் மனிதனதும் செயல்களது தன்னியல்பான வெளிப் பாடாய் அமையுமென்றார்.

கலை பிரச்சாரம் செய்ய வேண்டுமென்றோ சித்தாந் தத்தையும் தீர்வுகளையும் சொல்லவேண்டுமென்றோ மாக் சும், ஏங்கெல்சும் எதிர்பார்க்கவில்லை. மாறாக அவ்வாறு அமைவதை எதிர்த்தார்கள். அதை வாழும் அமைப்போடு மனித அறிவு நடாத்தும் போராட்டமாகவே கண்டனர். கலை ஞன் கலையைப் படைத்தாலும் தனிமனிதன் சமூகம் சார்ந்த வனாயிருப்பதால் அவன் கலையும் சமூகம் சார்ந்ததே வரலாற்றுத்தன்மை வாய்ந்ததே. மாக்ஸ், ஏங்கெல்ஸ் இரு வரும் இலக்கியப்படைப்புக்கள்பற்றிக் கூறுகையில்,

பாட்டாளிவர்க்கக் கலாச்சாரம்பற்றிப் பேசும்போது இதை நாம் மனதில் கொள்ளவேண்டும். மனித குலத்தின் முழுவளர்ச்சிபற்றிய துல்லியமான அறிவும் அதனை மாற்றக்கூடிய ஆற்றலும் சாத் தியமானால்தான் பாட்டாளிவர்க்கக் கலாச்சா ரத்தைப் படைக்கமுடியும் என்பதைத் தெட் டத்தெளிவாக உணராவிட்டால் இப்பிரச்சி னைக்கு நம்மால் தீர்வுகாணமுடியாது. பாட்டாளி வர்க்கக் கலாச்சாரம் ஆகாயத்திலிருந்து குதிப்ப தல்ல. பாட்டாளிவர்க்கக் கலாச்சாரத்தின் நிபு ணர்கள் என்று அழைத்துக் கொள்பவர்களின் கண்டுபிடிப்புமல்ல. அவை எல்லாம் சுத்த அப த்தம்' என்கின்றார் லெனின்.

1. இலக்கியம் இயன்ற அளவு யதார்த்தத்தை ஒட்டியிருக்கவேண்டும்.
2. அதற்கு உருவ அமைதியும் உள்முகத்தன்மையும் வேண்டும்.
3. வார்த்தை வித்தைகள் கவிதைக்கு பதிலீடாகாது.
4. வெற்று உருவவாதம் கலையின் எதிரி.
5. மகத்தான படைப்புகளை புதிய படைப்புகட்கு முன்னோடியாக்கலாம்.

தூயகலைவாதிகளின் கலை மனிதனின் ஆழ்மனத் தேடல், தெய்வீக உத்வேகம் என்ற கற்பிப்புகளைக் கடந்து போலியுணர்வுகளைத்தாண்டிச் செல்ல வேண்டியதை வழி நடாத்திய மாக்ஸ் இறந்தகாலத்தின் இலக்கியக் கலாச்சார மரபுகளை மறந்து மறுத்து ஒதுக்கி புதிய சோசலிச மனித னின் கலாச்சாரத்தைப் படைக்கமுடியாது என்று நம்பினார். அத்தோடு இலக்கியவாதிகளின் கனவை நனவாகமாற்ற இலக்கியத்தைவிட வலிமைவாய்ந்த கட்டுறுதிகொண்ட சித் தாந்தத்தின் தேவை இருப்பதை எதையும்விட முன்மொ ழிந்தார். இலக்கியம் உட்பட பல்வேறுபட்ட போக்குகளை இலைகளாய்த் தாங்கிநிற்கும் மரமாகவே அவர் சித்தாந் தத்தைக் கண்டார்.

இத்தனை தெளிவோடு மாக்சிய மூலவர்கள் இலக்கியக் கொள்கையைக் கொண்டிருக்கையில் சோவியத் யூனியனின் லெனின் மறைவு, ரொட்ஸ்கியின் நாடுகடத்தல் இவைகட்குப் பின்னர் ஸ்டாலினியத்தின் தோற்றத்தோடு மாக்சியம் சம்பந் தமான இலக்கியக் கொள்கைகட்கு ஏற்பட்ட கெதியையும் அதன்பின்பான உலக இடதுசாரி இயக்கங்களிடையே ஏற் பட்ட இலக்கியம் சம்பந்தமான கொச்சை மாக்சியக் கருத் துக்களையும் தத்துவக்கேடான பார்வைகளையும் சற்றுப் பார்வையிடுவது இன்றைய திரிசங்கு சொர்க்க நிலைமை களை எதிர்கொள்ள உதவும்.

இங்கிலாந்தின் சார்லஸ் டிக்கன்சின் நாவல்கள் இங்கி லாந்தின் எந்தச் சமூக பொருளாதார நிபுணர்களையும் விட சிறப்பாய் அக்காலத்தை வெளிப்படுத்தியதை மாக்ஸ் காட்டுகின்றார். பால்சாக்கின் எழுத்துக்கள் அவரின் இராஜ விசுவாசத்தையும்மீறி நெருங்கிவரும் நிலப்பிரபுத்துவ

அழிவை முன்னறிவிப்பதை ஏங்கெல்ஸ் கவனிக்கின்றார். இதையொத்த போக்கையே லெனின் டால்ஸ்டாய் பற்றிய தமது ஆய்வுகட்குத் திறமையாய்ப் பயன்படுத்தினார். நசிந்து வரும் நிலப்பிரபுத்துவ அமைப்பின் போலித்தனத்தையும் விவசாயிகளது துன்பத்தையும் வறுமையையும் அடிமைத்தனத்தையும் அற்புதமாய் டால்ஸ்டாய் வெளிப்படுத்தியதைக் காண்கின்றார். டால்ஸ்டாயின் எழுத்து அவரது ஆன்மீகவாதத்தையும் தாண்டி மாபெரும் ஒக்டோபர் புரட்சியின் முக்கிய இயல்புகளை வெளிப்படுத்தியது. புஸ்கின் லெனினின் மனம் கவர்ந்த கவிஞர். பாட்டாளிவர்க்கத்தின் புகழ்பூத்த கவிஞன் மாயாகோவ்ஸ்கியைவிட லெனின் புஸ்கினையே நேசித்தவர். புஸ்கின் கவிதைகளில் அரசுக்கும் தனிமனிதனுக்கு முள்ள முரண்பாடுகளை அவர் கவனிக்கின்றார். அதனால் தான் நிலப்பிரபுத்துவ இலக்கியவாதி டால்ஸ்டாய், புஸ்கின் முதல் பாட்டாளிவர்க்க எழுத்தாளன் மாக்சீம் கார்க்கிவரை லெனினால் ஏற்க முடிந்தது. இலக்கியத்தின் சமூகக்கடமையையும் பரந்துவிரிந்த மனிதப்பரப்பையும் லெனின் மதிப்பிட்டு இருந்தார். புஸ்கினோடு, நெக்ரசோவ், வெர்மந்தோவ், சால்டிகோவ், ஸ்செட்ரின், கதே போன்றோரின் எழுத்துக்களிலிருந்து பேசும்போதும் எழுதும்போதும் மேற்கோள்கள் காட்டுவார். தனது சைபீரிய சிறைவாசத்தின்போது ∴பான் ஸ்சை ஜெர்மன் மொழியிலும் துர்கனெவின் 12 தொகுதிகளை ஜெர்மனிய - ரஸ்ய மொழிகளிலும் பயின்றார்.

சோவியத் புரட்சியின் இரட்டையர்களான ரொட்ஸ்கியும் லெனினும் இலக்கியம் சம்பந்தமான பரந்த பார்வையைக் கொண்டிருந்தனர். சோவியத் யூனியனில் பல்வேறுபட்ட இலக்கியப்போக்குகளின் தேவையை முன்வைத்தனர். புதிதாக உதித்துள்ள சோசலிச சமூகத்தில் உடனடியாக பாட்டாளிவர்க்கத்தின் பண்பாட்டையும் கலையையும் உருவாக்கமுடியும் என்ற மயக்கங்கள் எதுவும் ரொட்ஸ்கியிடம் இருக்கவில்லை. அது சோசலிசத்தின் வளர்ச்சிப்போக்கில் தோன்றுபவை. எதிர்காலத்தில் வளர்ச்சிபெற்ற சோசலிச சமுதாயத்திற்குரியவை என்ற கருத்தைத் தெளிவாய்க் கொண்டிருந்தார். உடனடியாகவே உழைக்கும் வர்க்கத்தின் கலை என்ற வரட்டுவாதத்தை ஒதுக்கிய லெனினும் ரொட்ஸ்கியும் சோசலிசத்தின் வளர்ச்சியை ஊக்குவிக்கக்கூடிய சகல எழுத்துக்களையும் ஆதரிப்பதைக் கொள்கையாக்கினார்கள். ரஸ்யாவின் புரட்சிக்கு முந்திய இலக்கியப் படைப்புக்கள் புரட்சி இலக்கியங்களையும் அவைகளின் இலக்கியத் தரத்தையும் அரசியல், சமூக வேறுபாட்டுணர்வுகளையும் விமர்சிக்கவும் வளர்க்கவும் செழுமைப்படுத்தவும் முயற்சித்தனர். யாவுக்கும் மேலாய் ரஸ்யாவினதும் ஏனைய மக்களினங்களதும் பழம்பெரும் இலக்கியச் செல்வங்களை உள்வாங்கி ஜீரணிக்காமல் உயர்ந்த இலக்கியத் தரத்தை அளந்தறியாமல் செழுமையான பாட்டாளிவர்க்க இலக்கியங்களைப் படைக்கமுடியாது என்றனர். ரொட்ஸ்கி சகலவகையான புத்தம்புதிய இலக்கியப் போக்குகளையும் புரட்சியின் விளைபொருளாயே கண்டார். பல்வகையான சிந்தனைப்போக்குகளில் முட்டிமோதிக் கற்றுத் தேறியே புதிய சோசலிச மனிதனின் உயர்கலாச்சாரம் எழும் என நம்பினார். அவர் புரட்சியின் ஆதரவாளர்களான சகல இலக்கியவாதிகளையும் 'சக பயணிகள்' என்று அழைத்தார். முற்போக்கு இலக்கியவாதிகள் புதியநிலைமைகளில் ஏனைய இலக்கியப் போக்குகட்கு மத்தியில் தம்மை எழுத்து வீரியத்தினூடு நிறுவிக்காட்டவேண்டும் என்று எதிர்பார்த்தாரே தவிர விசேட சலுகைகள் ஊடாக அவர்களை செயற்கையாக உருவேற்றிவிட விரும்பவில்லை. இது தொலைநோக்கப் பார்வையின்

கலைஞன் கலையைப் படைத்தாலும் தனி மனிதன் சமூகம் சார்ந்தவனாயிருப்பதால் அவன் கலையும் சமூகம் சார்ந்ததே வரலாற்றுத்தன்மை வாய்ந்ததே.

மிகப்பெரும்புரட்சியாளரான ரோசா லுக்சம்பேர்க் ரஸ்ய இலக்கியத்தை மதிப்பிட்டார். 'மனிதஇனத்தின்மீது அளவற்ற நேசம். சமூக அநீதிக்குப் பொறுப்பேற்கும் ஆழமான உணர்வு ஆகியவற்றால் அவர்கள் உந்தப்பட்டார்கள். உண்மையில் ஓர் உண்மைக் கலைஞனுக்கு அவன் தரும் தீர்வு இரண்டாம் பட்சமானதே. அதிமுக்கியமானவை அவனது கலையின் ஊற்றுக்கண்ணும் அதன் ஆன்மாவுமே; அவன் தனக்கென உணர்வுபூர்வமாக வகுத்துக்கொண்ட குறிக்கோள்' என்கிறார்.

பாற்பட்டது என்பதை சோவியத் வரலாறு பின்பு நிரூபித்துக் காட்டியது. நாடகம், இசை, நாட்டியம், சினிமா போன்ற சகல கலைவடிவங்களையும் சாதாரண மக்களுக்கு எட்டச் செய்வதும் கல்வியை சகலருக்கும் வழங்கி மக்களின் கலாச்சார மட்டத்தை உயர்த்துவதே மக்களின் இலக்கிய உணர்வை வளர்ப்பதற்கான முன்நிபந்தனை என்று லெனின் கருதினார்.

'புரோலிகல்ட்' என்ற கொம்யூனிஸ்டுகளை மட்டும் உள்ளடக்கிய எழுத்தாளர்கள், இலக்கியவாதிகள் அமைப்பையிட்டு லெனின் அதிருப்தி அடைந்தார். இனவிருத்தி முறையில் எழுத்தாளர்களை உருவாக்கமுடியாது. புரட்சியின் இலட்சியத்துடன் ஒத்துழைக்கும் எல்லா அறிவாளிகளையும், கலைஞர்களையும், எழுத்தாளர்களையும் அவர் ஆதரித்தார். இந்த நிலைப்பாட்டையே மாக்சிம் கோர்க்கி, மாயாகோவ்ஸ்கி உட்பட புரட்சி பெற்றெடுத்த பெரும்பகுதி கலைஞர்கள் கொண்டிருந்தனர். தன்னுடைய எண்ணப்படி சுதந்திரமாய் புறநிர்ப்பந்தம் எதுவுமின்றி எழுத ஒவ்வொரு இலக்கியவாதிக்குமுள்ள உரிமை உறுதிசெய்யப்பட்டது. கொம்யூனிஸ்டுகளும் கொம்யூனிஸ்டுகள் அல்லாத இலக்கியவாதிகளும் தத்தம் சொந்த அமைப்புகளை நிறுவிக் கொண்டனர். பத்திரிகை மற்றும் வெளியீடுகளைக் கொண்டு வந்தனர். புரோலிகல்ட், சிவப்புக் கன்னிநிலம், சகபயணிகள், பழைய எழுத்தாளர்கள், வெளிநாட்டிலுள்ள ரஸ்ய எழுத்தாளர்கள் என்று பலரின் பல படைப்புகள் வெளிவந்தன. மக்களிடையே இலக்கிய ரசனையும் வாசிக்கும் ஆர்வமும் இலக்கியங்களிடையே போட்டியும் எழுந்தன. இவை முற்போக்கான இலக்கிய வளர்ச்சிக்கும் மக்கள் தழுவிய எழுத்துக்கும் செழிப்பு மிகுந்த நிலமாயிருந்தன. புதிய உலகம், அக்டோபர் பதாகை, தாரகை உட்பட ஏராளமான வெளியீடுகள் தோன்றின. முதன்முறையாக வரலாற்றில் உழைக்கும் மனிதர்களுக்கு புதிய கலாச்சாரத்தின் வீரி

யத்தோடு இணைந்த எழுத்துக்கள் சென்றடைந்தன. எனினும் தவிர்க்கமுடியாமல் எளிமைப்படுத்தலும் கொச்சைப்படுத்தலும் பண்பட்டவையும் உயர்ந்த கலைத்திறனும் புரட்சியின்பால் விசுவாசம் என்று பல்வகைப்போக்குகள் வந்து முட்டிமோதின. இவை புரட்சி உறங்கிக் கிடந்த சமூக அமைப்பின்மீது உச்சந்தலையடியாய் இறங்கியபோது ஏற்பட்ட அதிர்வலைகளின் பிரதிபலிப்புமாகும்.

ஆனால் ஸ்டாலினிய சகாப்தம், பாட்டாளிவர்க்க இலக்கியம், சோசலிச யதார்த்தவாதம் என்ற பெயரில் சகல சுதந்திரமான இலக்கியப் போக்குகளையும் வேட்டையாடியது. எழுத்தாளனும் கலைஞனும் மனித மனங்களின் ஆன்மாவின் பொறியியலாளர்கள் என்ற வரட்டு வேதாந்தம் உருக்கொண்டு ஆடியது. கலை மற்றும் பண்பாட்டுத்துறைகளில் சர்வாதிகாரத்தையும் சித்தாந்த ஆசாடபூதித்தனத்தையும் படைத்துவிட்டது. ஐசக்பேபல், கிர்ஷோன் மெயர் ஹோல்ட், ஐவான்கதயேவ், கிரிலேவ், யாசெசென்கி, கோலட்ஸோச் ஆகிய புரட்சிபெற்றெடுத்த இலக்கியவாதிகள் ஸ்டாலினிச கொடுங்கோன்மைக்குப் பலியாகினர். ஒக்டோபர் புரட்சியின் கடும்பகைவரும் லெனின், ரொட்ஸ்கி ஆகியோரை அவதூறு செய்து கதை எழுதியவருமான அர்க்கடி அலெர் செங்கோவின் படைப்புகளைக்கூட வெளியிட்ட லெனின், ரொட்ஸ்கி கால சோவியத்யூனியன் பொய்மாற்றுக்கருத்துகள் கட்சிக்கு வெளியேயும் உள்ளேயும் எதிர்ப்புரட்சி பிரச்சாரமென்று தூற்றப்படும் சித்தாந்தக்கேடு வந்தது. ஸ்டாலின் கால, அதிகாரவர்க்கம் சகல தன் சர்வாதிகாரத்துக்கு எதிரான சக்திகளையும் ஒடுக்கியது. இரகசியப் போலிஸ் உளவுத்துறையின் கண்மூடித்தனமான கைதுகள், விசாரணைகள், கட்டாய உழைப்பு முகாம்கள், படுகொலை என்பன அதன் இயல்பாயிற்று. கட்சியாட்சி பின்பு மத்திய குழுவாகி பின்பு பொதுச் செயலாளர் தனிமனிதரின் ஸ்டாலின் என்ற சர்வாதிகாரியின் ஆட்சியாகவும் மாபெரும் புரட்சி ஊனப்பட்டது. உன்னதமான இலட்சியங்களும் உயர்ந்த அறநெறிமுறைகளும் கொண்ட போல்சுவிக் கட்சியின் லெனின் கால நடைமுறைகள் போய் மிருகத்தனமான அவநம்பிக்கையும் சந்தேகமும் காழ்ப்புணர்வும் கொண்ட சித்தாந்த வெற்று ஆரவாரங்களில் தன்னை மறைத்துக் கொண்ட ஸ்டாலினியம் பலம் பெற்றது.

புரட்சியின் எதிரிகளான வெண்படையின் எதிர்ப்புரட்சியில் பங்கேற்ற எழுத்தாளர்கள் பேராசிரியர்களைக்கூட எப்படி நடத்தவேண்டும் என்பதில் சோசலிச நடைமுறைகளை லெனின் பேணியவர். பல்வேறு கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல்குழு உறுப்பினர்கள், சட்டநிபுணர்கள் ஆகியோரின் எழுத்துமூல அபிப்பிராயத்தின் அடிப்படையிலன்றி விசாரணையின்றி எதிர்ப்புரட்சியாளர்கள்மீதுகூட நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று லெனின் உறுதியாக இருந்தவர். ஆனால் ஸ்டாலினிசம் பொருளாதாரத்துறையில் மட்டுமல்ல கலாச்சாரத்துறையிலும் கொம்யூனிஸ்ட் அறிவாளிகள், கொம்யூனிஸ்ட் அல்லாதவர் என்ற பேதமின்றி வன்முறையை ஏவியது. முதலில் வலதுசாரிப் போக்குள்ளவர்களை ஒடுக்க கொம்யூனிஸ்டுகளைப் பயன்படுத்திக்கொண்டு பின்பு கொம்யூனிஸ்டுகளையும் தன் பயங்கரவாதத்துக்குத் தீனியாக்கியது. இரகசியப் பொலிசாரின் தலைவராகவும் ஸ்டாலினின் வலது கரமாகவும் விளங்கிய கொலைஞன் யகோடாவின் மைத்துனரான லியோபோல்ட் அவர்பாக். இவர் ஸ்டாலின் கால இலக்கிய சர்வாதிகாரியானார். சகல சுதந்திரமான இலக்கிய அமைப்புகளும் நிர்மூலமாயின. இலக்கியத்தில் கூட இராணுவ மொழியிலான நடைகள் பிறப்பெடுத்தன. தாக்குதல், முற்றுகை, எதிர்த்தாக்கு, கவிதையில் நடை முறைத் தந்திரத்தவறு, இலக்கிய விமர்சனத்தில் போர்த் தந்திரம், பீரங்கித்தாக்குதல், பின்வரிசைத்தாக்குதல் என்பன போன்ற சொற்கள் பயன்படுத்தப்பட்டன. உயர்ந்த சுதந்திரமான இலக்கியத்தரம் போய் சோசலிச யதார்த்தவாதம் என்ற பெயரில் அதிகாரவர்க்கத்தின் ஆர்வங்களைப் பிரதிபலிக்கும் போக்குகள் பிறப்பெடுத்தன. அரசியல்ரீதியில் நம்பத்தகாதவர்கள், உருவவியல் பிறழ்வு, மனிதாபிமானக் கண்ணோட்டம், அரசியலற்ற அணுகுமுறை என்ற திரிபுகளில் இறங்கினார்கள். உண்மையான மக்கள் இலக்கியத்துக்குமாறாய் முதலாளியத்திலிருந்து சோசலித்துக்கு மாறிச் செல்லும் காலகட்டங்களில் நிகழக்கூடிய சமூகமுரண்பாடுகளை எழுச்சிகளை அதிர்வுகளை பிரதிபலிப்பிற்குப் பதிலாய் செயற்கையான புரட்சிகரவேடம் புனைந்துகொண்ட போக்குகள் அதிகாரத்தால் ஊக்குவிக்கப்பட்டன. நெருக்கடிக்கும் அடக்குமுறைகட்கும் ஆளான கலைஞர்கள் வேடம் கட்டவும் ஆன்மாவை இழக்கவும் துதிபாடவும் தொடங்கினர். அதிகாரத்துவம் காலால் இடுவதை தலையால் செய்வது புரட்சிகரக் கட்டுப்பாடு என்று போதிக்கப்பட்டது. உயர்ந்த கொம்யூனிச ஒழுக்கங்களும் தோழமையும் போல்சுவிக் கட்சியுள் லெனின் கட்டி வளர்த்த பண்பாடுகளும் ஸ்டாலினிசத்தால் சிதறடிக்கப்பட்டன. அவற்றின் அழிவிலிருந்தே ஸ்டாலினிசம் மூர்க்கத்தோடு எழுந்தது.

புரட்சியை நேசித்த உண்மையான படைப்பாளியான ஜாமியாடின் எழுதினான். "ஏதோ சன்மானம் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பிலோ அல்லது சவுக்கடிக்கு அஞ்சியோ நிமிர்ந்து உட்காரக் கூடிய நாய்கள் புரட்சிக்குத் தேவையில்லை. இப்படிப்பட்ட நாய்களுக்கு பயிற்சி தருபவர்களும் தேவையில்லை. எதற்கும் அஞ்சாத புரட்சியைப்போலவே எதற்கும் அஞ்சாத எழுத்தாளர்களே புரட்சிக்குத் தேவை. புரட்சியானது உடனடியாகப் பலன்களைத் தேடாதது போல் உடனடியான பலன்களைத் தேடாத எழுத்தாளர்களே புரட்சிக்குத் தேவை"

தொழிற்சாலைகளைப்பற்றியும் பண்ணைகளைப்பற்றியும் எழுதும்படி கட்டளைகள் பிறந்தன. ஜாரிசத்தின் பழைய உலகமும் பிற்போக்குப் பிரமாண்டங்களும் புதிய புரட்சியின் வெப்பத்தினால் கருகி நசிந்து அழிந்துபடுவதை அழகியலோடு சொல்ல கலைஞன் அனுமதிக்கப்படவில்லை. சோசலிசப்புரட்சியின் மகத்தான வரலாற்றுக்கட்டத்தில் வாழப் பாக்கியம் பெற்ற இலக்கியவாதிகள் புரட்சியின் குழந்தையையும் அதைப் பெறுவதற்காக நடந்த மரணப் போராட்டங்களையும் பேச அனுமதிக்கவில்லை. முற்போக்கும் பிற்போக்கும் பழமையும் புதுமையும் ஒன்றை ஒன்று எதிர்த்து போரிட்டுக் கொண்டிருக்கையில் புதிய தூயசோசலிச மனிதன் படைக்கப்பட்டுவிட்டதான மாயையை ஸ்டாலினிசம் ஊட்டியது. பிற்போக்கான சமூக அமைப்பிலிருந்து புரட்சிகர சோசலிசக் கட்டத்துக்கு மாறும் ஒரு சமூகம் அதன் மக்களும் அனுபவிக்கும் துன்பதுயரங்கள், வீரம், தியாகம், துரோகம், சுயநலம், உளவியல், இவைகளை யதார்த்தமாய் சொல்ல எழுத்துக்குச் சுதந்திரம் மறுக்கப்பட்டது. தியாகத்தையும் வீரத்தையும் சொல்ல உள்ள உரிமைபோன்று சோம்பலையும் துரோகத்தையும் சுயநலத்தையும் தன் கவிதைகளில் வடித்தமைக்காக புரட்சியின் சத்துருதாகிகளை அம்பலப்படுத்தியமைக்காக லெனினின் அன்புக்கும் மரியாதைக்கும் பாத்திரமான கவிஞர் டெமியோன் பெட்னியும் நேரடியாக ஸ்டாலினாலேயே விமர்சிக்கப்பட்டு கவிதை தடைசெய்யப்பட்டது. புரட்சியின் தீயசக்திகளை அம்பலப்ப

டுத்தி புரட்சியை செப்பனிட முயன்றவர்கள் கலகம் செய்ப வர்களாயினர். பழைய உலகின் அழிவையும் புதிய புரட் சிகர சோசலிசத்தின் வரவையும் பாடிய மாபெரும் பாட்டாளி வர்க்கக் கவிஞன் மாயாகோவ்ஸ்கியும் ஸ்டாலினிசக் கொடு மையால் மூச்சுவிடமுடியாத எழுத்துக்களோடு தற்கொலை செய்துகொண்டான். குடும்ப வாழ்க்கையில் தோல்வி, விவா கரத்து, ஏமாற்றம், காதல் தோல்வி, சட்டபூர்வமற்றுப் பெற்றெ டுக்கும் குழந்தை, கணவனுக்குத் துரோகம் இழைக்கும் மனைவி, மனைவிக்கு துரோகம் இழைக்கும் கணவன், பாலுறவுப் பிரச்சனைகள், தனிமனித உணர்வுகள் போன் றவை சோவியத் இலக்கியத்தில் தடைசெய்யப்பட்டன. சோவியத் சமுதாயமானது உடனடியாய் சகல சமுதாயச் சீர்கேடுகளையும் தீமைகளையும் ஒழித்துக்கட்டி தூயசோச லிச மனிதனைப் படைத்துவிட்டதாய் போலிப்பாவனை நில வியது. பல்நூற்றாண்டு கால சமூகப் பிரச்சனைகளையும் துயரங்களையும் மாற்றுதல் முடிவுக்குக் கொண்டுவரல் என்பதை சோசலிசம் வந்த அடுத்தநாளே பல தலைமு றைக்குக்கூட நீடிக்கக்கூடியவற்றை மறைந்துவிட்டதாய் காட்டும் கற்பனைகள் உலவவிடப்பட்டன. சோசலிச சமூகத் தில்கூட பழைய சமூகத்தின் குறைபாடுகள் சமூகத்தீமைகள் என்பன முழுமையாய் அழிந்துவிடாது. அவை ஒரு வர லாற்று மரணத்தை எய்த நீண்டகாலத்தைக் கோரும் என் பதை நிராகரித்தனர். புரட்சிபற்றியும் சோசலிசம்பற்றியும் எளிமைப்படுத்தப்பட்ட கருத்துக்களையும் வரட்டு முழக்கங்க ளையும்பற்றி லெனின்

"பாட்டாளிவர்க்கக் கலாச்சாரம்பற்றிப் பேசும்போது இதை நாம் மனதில் கொள்ளவேண்டும். மனித குலத்தின் முழு வளர்ச்சிபற்றிய துல்லியமான அறிவும் அதனை மாற்றக் கூடிய ஆற்றலும் சாத்தியமானால்தான் பாட்டாளிவர்க்கக் கலாச்சாரத்தைப் படைக்கமுடியும் என்பதைத் தெட்டத் தெளிவாக உணராவிட்டால் இப்பிரச்சினைக்கு நம்மால் தீர்வுகாணமுடியாது. பாட்டாளி வர்க்கக் கலாச்சாரம் ஆகா யத்திலிருந்து குதிப்பதல்ல. பாட்டாளிவர்க்கக் கலாச்சாரத் தின் நிபுணர்கள் என்று அழைத்துக் கொள்பவர்களின் கண்டுபிடிப்புமல்ல. அவை எல்லாம் சுத்த அபத்தம்" என் கின்றார். மேலும் லூனாசால்ஸ்கியுடன் நடந்த வாதத்தில் "இது இன்னமும் நில பிரபுக்களின் கலாச்சாரமே இந்த உண்மையை மறக்கமுடியாது" என்கிறார் லெனின். புதிய கலைகளை வளர்க்கும் பொறுப்பு ஒப்படைக்கும் பிரச்சனை வந்தபோது லூனாசால்ஸ்கியிடம் "கிறுக்கர்களையும் அரை வேக்காடுகளையும்பற்றி நீங்கள் சொல்வது மெத்தச்சரி. வெற்றிபெற்ற ஒருவர்க்கம், தனது சொந்த அறிவுஜீவிகளை மிகக் குறைவாகவே கொண்டுள்ள ஒரு வர்க்கம் இத்தகைய பேர்வழிகளிடமிருந்து தன்னைக் காப்பாற்றிக்கொள்ளாவிட் டால் அது அவர்கட்கு பலியாவது தவிர்க்கமுடியாததாகும்". இங்கு லெனின் புரோலிகல்ட் என்ற தீவிர இடதுசாரிவா தத்தில் இருந்த அமைப்பை கருத்தில்கொண்டே இவ்வாறு சொன்னார். பிற்காலத்தில் புரோலிகல்ட் ஸ்டாலினிசத்தின் தூணாகியதோடு மற்றைய சகல இலக்கியப்போக்குகளை யும் ஒடுக்கியது.

"இலக்கியத்தை யாந்திரீகமாக்குவது, ஒரே மட்டமாக்கு வது, பெரும்பான்மையோர் ஆட்சியை சிறுபான்மையோர் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்ற நியதிக்கு இலக்கியத்தை உட்படுத்துவது என்ற பேச்சுக்கே இடமில்லை. அதேபோல இத்துறையில் தனிமனித முன்முயற்சி, தனிமனித விருப்பம், சிந்தனை, கற்பனை உருவம், உள்ளடக்கம் ஆகியவற் றுக்கு மேலதிக வாய்ப்பு நிச்சயமாக வழங்கப்படவேண்டும். இவையாவும் மறுக்கமுடியாதவை. இவை யாவும் காட்டுவது என்னவெனில் பாட்டாளிவர்க்கக்கட்சியின் இலக்கியப் பகுதியை அதன் பிற பகுதிகளுடன் யாந்திரீகமாக ஒன்று படுத்திப் பார்க்கக்கூடாது என்பதுதான்" என்ற லெனின் கருத்தை ஸ்டாலினிசம் நிராகரித்த அதேவேளை அவர் இறப்பின்பின் அவரை வானளாவப் புகழ்ந்து சாமி படமாக்கி மாட்டிவிடுவதன்மூலம் தம்மைப் பாதுகாத்துக்கொண்டனர். ஸ்டாலினின் அதிகாரவர்க்கக்கூட்டம் மாக்சியத்தின் பெய ரால் எதேச்சாதிகார விளக்கங்களைக் கொடுத்தனர். உலகை உலுக்கிய சோவியத் புரட்சியின் இலட்சியங்கள், ஒவ்வொன்றாய்க் கைவிடப்பட்டு கட்சியும் அரசும் பாட்டாளிவர்க்கத்தின் புரட்சிகர ஆற்றலை சிதைத்தழித்து அதை அடிமை கொண்டனர். உலகின் மாபெரும் சோசலிசப் புரட்சியை நடாத்தி முடித்த சோவியத் தேசம் உயிர்ப்பை இழந்தது. ஸ்டாலினிசம் மனிதனை வெறும் அரசியல் விலங்காக்கியது. வெறும் சமூக பொருளாதார நிலை மைகட்கு அடிபணியும் ஜீவியாக மாற்றியது.

இலக்கியப் போக்குகள்பற்றி பழம்பெரும் போல்சுவிக்கும் லெனினால் கட்சியின் கோட்பாட்டாளன் செல்லப்பிள்ளை என்று அழைக்கப்பட்டவரும் 1930களின் இறுதியில் ஸ்டா லினிசத்தால் படுகொலையானவருமான புகாரின் புரட்சி யின்பின் பல்வகை இலக்கியப்போக்குகள் நிலவுவதை அங்கீகரித்தார். இடதுசாரித் தீவிரவாதப் போக்கில் கிடந்து வெந்தவர்கட்கு அவர் பின்வருமாறு புத்தி சொன்னார் "முதலில் சிறந்த படைப்புகள் மூலம் உங்கள் தகுதியை நிலைநாட்டுங்கள். பிறகு அங்கீகாரம் கோருங்கள். மற்றைய எழுத்தாளர்கட்கு கல்வி புகட்டி அவர்களை வென்றெடுக்க பாட்டாளிவர்க்க இலக்கியம் முயலவேண்டும் அன்றி குண் டாந்தடி மூலமாக அல்ல" கட்சி எழுத்தாளர்கட்கு ஆணை கள் விடுப்பதையோ எந்த இலக்கியப்போக்குக்கும் பிரத்தி யேக ஆதரவு கொடுப்பதையோ அவர் ஆதரிக்கவில்லை. இலக்கியம்பற்றி ஜெர்மனியின் மிகப்பெரும்புரட்சியாளனான ரோசா லுக்சம்பேர்க் ரஸ்ய இலக்கியத்தை மதிப்பிட்டார். "மனிதஇனத்தின்மீது அளவற்ற நேசம். சமூக அநீதிக்குப் பொறுப்பேற்கும் ஆழமான உணர்வு ஆகியவற்றால் அவர் கள் உந்தப்பட்டார்கள். உண்மையில் ஓர் உண்மைக் கலைஞனுக்கு அவன் தரும் தீர்வு இரண்டாம் பட்சமானதே. அதிமுக்கியமானவை அவனது கலையின் ஊற்றுக்கண் ணும் அதன் ஆன்மாவுமே; அவன் தனக்கென உணர்வுபூர் வமாக வகுத்துக்கொண்ட குறிக்கோள்" என்கிறார். எனவே இன்றைய பல இடதுசாரிப் போக்குகளில் உள்ள குறை பாடான பார்வை மாக்சிய விரோதம் கொண்டதாகும். ஸ்டா லினிச சம்பிரதாயங்களால் உருவாக்கி முற்போக்கு உல கின்மீது திணிக்கப்பட்டதாகும்.

"காற்றுவெளியிடைக் கண்ணம்மா நின்றன் காதலை எண்ணிக் களிக்கின்றேன்" என்ற பாரதியின் பாடலை நிலப் பிரபுத்துவக் காதலைப் பாடுகின்றது பாட்டாளி மனிதனைப் பாடவில்லை என்று ஒதுக்கமுடியுமா? பிற்போக்கு என்று துணியமுடியுமா? கம்பனைக் கொழுத்து மகாபாரதத்தை நீறாக்கு என்று முழக்கம் எழுந்துள்ள வேளையில் பண் டைய இலக்கியங்கள் எழுத்துக்கள்பற்றி தீவிரவாதத்தில் விழுந்து கால்முறிந்து போகாத சிந்தனைகளை முன் வைப்பது அவசியம். மாக்சியம் கலையின் வர்க்க சார்பை மட்டுமே பார்ப்பதில்லை. அதன் அரசியல் அம்சங்களை மட்டும் பரிசீலிப்பதில்லை. அதன் சமூக, வரலாற்று, அழ கியல் அம்சங்களையும் காண்கிறது. இன்றைய முன்னேறிய கருத்துக்களின் மூலவேர்கள் அவற்றிலுள்ளதையும் இலக்

கியம் மற்றும் சமயநூல்களில்கூட மனித ஆற்றல்கள், தொன்மைச் சிந்தனைகள், மானுடவியல் சிந்தனைகள், வரலாற்றுத் தகவல்கள் என்பன நிரம்பிக் கிடக்கின்றன. ஒடுக்கும் ஒடுக்கப்படும் வர்க்கங்களின் தாயான மனித குலத்தையும் அதன் ஒவ்வொரு காலகட்ட வளர்ச்சிகளை மாற்றங்களை அங்கு நாம் தரிசிக்கமுடியும். மனிதனுக்குள் உள்ள மனிதனை கலைஞனை துடிப்பும் அழகுணர்வும் கொண்ட உயிரியை ஆழ்ந்து தரிசிக்காதவர்கள் மனிதனின் பல்வேறுபட்ட நூதனங்களை முரண்படும் வர்க்கங்களின் ஆர்வங்களை காணத்தெரியாதவர்கள், பகுத்துணரத் தெரியாதவர்கள் ஒருபோதும் மாக்சியவாதிகளல்ல வெற்று ஆரவாரங்களும் மாக்சியச் சொற்றொடர்களுள் தம் வெற்றுத்தனங்களை மறைத்துக்கொண்டு கிளித்தட்டு மறிப்பவர்களும் மனிதகுல விடுதலைச் சித்தாந்தமான மாக்சியத்தை சிதைப்பதையும் அதன் இயக்கவியல்போக்கை நிராகரிப்பதையும் புரிந்துகொள்ளவேண்டும். ◆



ஓவியம்: **THURONAN (age 13)**

முற்றுப்புள்ளியின் மௌனத்தில்

பொட்டு வைத்து
பேரு வைத்த அம்மாதான்
முதல் காவல்.

பாவாடை கட்டிய
நாளிலிருந்து
நாலு வீதி தாண்டியதில்லை.

அம்மா
வீட்டை
விட்டுப்
போனதில்லை
என்கிறாள்.

பரம்பரை
அடிமைகள்.

ஆடை கட்டிய ஊரில்
அம்மணமாய்த் திரிந்த
பேரில்லா பக்கிரிதான்
என்னை விடுவித்தான்.

சீர் என்றும் தளை என்றும்
செந்தமிழைச் சிறைவைத்த
ஆசிரியருக்கு அடித்தேன்
அம்புக் காகிதமாய்
புதுக்கவிதை எழுதி.

தாலி
கட்டிக் கொள்வாயா?
என்று பயமுடன்தான்
கேட்டான்.

இருவருக்கும்.
என்றவுடன்
அந்தப் பேச்சை
விட்டான்.

குலம் என்றார்
கோத்திரம் என்றார்
கடல் தாண்டிப் போகாதே
என்றார்.

வானுக்கும் பூமிக்குமென
நாசாவில் சேர்ந்த
அவர் தலையில்
நான் பிறந்தேன்.

வட்டம் போடும்
சிந்தனைச் சிறையை
திட்டமாய் உடை
நண்ப.

கடவுளையும்
காற்றையும்
வெளியையும்
பேர் சொல்லிச்
சிறை வைப்பர்.

கவனம்.

இக்கவிதைச்
சிறையும் உடையும்போது
நிற்பது
காற்புள்ளி, அரைப்புள்ளி
கடைசியில்
முற்றுப் புள்ளி.

அங்கு சந்தி
என்னை.

சுதந்திரமாய்
காதல் செய்வோம்.

கணைமாடி

ஏலே! மூதி!
தூக்கிப் பிடி டோய்.

ஆகட்டும் எசமான்.
இப்ப நல்லா தெரியுதுங்களா?

சனிப் பயலே!
கீழே இறக்காதடா,
மேலே தூக்கிப் பிடி,
கேடு கெட்ட முண்டம்.

திட்டாதீக எசமான்,
இப்ப தெரியுதுங்களா?

மூதி, மூதி...
சாய்க்காத டோய்.

சொன்னா கோவிச்சுக்காதீங்க,
நான் எப்படி பிடிச்சாலும்
உள்ளதுதானுங்க தெரியும்!

என்னடா சொன்ன
தேவடியா மகனே...

காலின்
எகிறலில்
தாண்டி விழுந்து
உடைந்தது
கண்ணாடி.

சிதறிய
ஒவ்வொரு
சில்லிலும்

மீண்டும்
அதே முகம்.

நிருபா

கதைகும் தாருங்கோ

எங்களப்பற்றி நீங்கள் நிறையக் கேள்விப்பட்டிருப்பியள். எங்களுக்கெண்டு ஒரு நாடு இல்ல. வீடுவாசலும் இல்ல. சில நேரங்களில சொந்தமா பெயர்கூட இருக்காது.

நாங்கள் உள்நாட்டுக்குள்ள ஓடி ஓடி ஓய்ஞ்சு போனம். ஏலாத நிலயிலதான் உங்களத்தேடி வர வெளிக்கிட்டம்.

எங்களுக்கெண்டு இருக்கிறதெல்லாம் சின்னச் சின்ன ஆசையள்தான். ரண்டு அல்லது மூண்டு வேள சாப்பாடு. தண்ணி. இருக்க இடம். பாதுகாப்பு. ஏன் உங்கள் ஒவ்வொருத்தருக்கும் இந்த ஆசையள் இல்லையோ? நீங்கள் வெளிக்கிட்டு பத்துப் பதினைஞ்சு வரியங்கள். பயமெண்டா உங்களுக்கு என்னெண்டு தெரியுமோ? ஓமோம். எங்களப்பற்றி நிறையக் கேள்விப்பட்டிருப்பியள். பெருங்கதையள். குட்டிக் கதையள். கொறில்லாக் கதையள். சோகக் கதையள்....

கொஞ்சம் பொறுங்கோ. இப்ப கதவத் திறக்கிறது ஆர்? அந்தத் தடியனாத்தான் இருக்கவேணும். நினைச்சு முடிக்கிறத்துக்குள்ள வந்து நிக்கிறான். அவன்ர சப்பாத்து, துடையள், முகம், கையள், அதில தொங்கிற விரல்கள் எல்லாம் மொத்தம் மொத்தமா பெரிசா இருக்குது. இவன்ர மூஞ்சிக்கு சிரிப்புக் கொஞ்சம் வாங்கி ஒட்டினாலும் நிற்காது. களண்டு விழுந்திடும்.

ஒரு சின்னச் சிறையெண்டாலும் அது இப்ப எங்களுக்குச் சொந்தமானதுதான். உள்ள வரேக்க கதவத் தட்டிற்று வரலாம்தானே. நாங்கள் அரைகுறையா படுத்திருப்பம். கக்கூசுக்குப் போவம். உடுப்பக் களட்டிவிட்டு முதுகு சொறிஞ்சுகொண்டிருப்பம். பேனெடுத்துக் குத்திக் கொண்டிருப்பம்.

அடிக்கடி வாறாங்கள். போறாங்கள். எங்கட கையைப் பிடிச்சுப் பாக்கிறாங்கள். கொழும்பில நாங்கள் லொட்சிலை தங்கியிருக்கேக்க அங்கயிருந்த அரவிந்தன் அண்ணா, கண்ணன் அண்ணை, ஜீவன் எல்லாரும் எவ்வளவு மரியாதயா எங்களோடை நடந்தவ. றூம் கதவில தட்டிற்றுத்தான் உள்ள வருவினம்.

பின்னேரத்தில வட அல்லது உறைப்பு ரொட்டி. இரவுச் சாப்பாட்டுக்கு இடியப்பம், புட்டு அவயள்தான் போய் வாங்கிக்கொண்டு வருவினம். பின்னேரங்களில் எல்லாரும் ஒண்டுகூடி முஸ்பாத்திதான். முன்வளவில இருக்கிற தென்ன மரத்துக்குக் கீழ பெரிய கல்லொண்டு இருக்கு. அதிலதான் சந்திக்கிறது. ஒரே ஊர்க்கதையள்தான். அநேகமா பள்ளிக்கூடம். பிறகு இயக்கம். ஆர் ஆர் செத்துப்போனது. ஆற்ற வீடுகள் உடைஞ்சது. வங்கர் கதையள் நிறைய.

ஜீவன் மட்டும் நிறையக் கதைக்கமாட்டான்.அவன்ர காதல் கடிதத்தப்

பார்த்து எனக்குச் சிரிப்புத்தான் வந்துது.

"உங்களிலும் எனக்கு வயசு குறையவெண்டு பாக்கிறியளோ?"

"இல்லை ஜீவன். எனக்கு ஜேர்மனில பேசித்தான், இப்ப அவரிட்ட போக நிக்கிறன் எண்டு உமக்குத் தெரியும்தானே."

கொஞ்சநாளா தென்ன மரத்த சந்திக்கவோ கல்லோட கதக்கவோ ஜீவன் வாறேல்ல.

மின்ஸ்க்கில இருந்த தமிழ்ப்பெடியள் தறுதலையள். எல்லோருக்கும் ஒரே ஒரு அறைதான். ஒழுங்கா நித்திரை கொள்ள ஏலாது. சட்ட மாத்தேலாது. முதுகு சொறியேலாது. இதுக்கெண்டே இலங்கயில இருந்து வெளிக்கிட்டு வந்தமாதிரி இன்னும் நிக்குதுகள் கொஞ்சப்பேர்.

ஒருநாள் நல்ல நித்திர. ஏதோ கனவிலதான் நடக்குது எண்டு முதல் நினைச்சன். எழும்பிப் பாத்தா தறுதல ஒண்டு தடவிக்கொண்டு இருக்குது.

"என்ன வேல செய்யிறீர். நீர் நினைக்கிறமாதிரிப் பொம்பிள இல்ல நான்"

"இங்க இதெல்லாம் சகயம் அக்கா. நீங்கள் கண்டும் காணாதமாதிரி இருக்கிறது நல்லது."

"கப்பல் ஏறி வந்தாப்பிறகு எங்களுக்கு கலாச்சாரம், மானம் ஒண்டும் இல்லையெண்டு நினைச்சிட்டியளோ?"

"கற்புக் கிற்பெல்லாத்தையும் அங்க இலங்கயோட வைச்சுக் கொள்ளுங்கோ. சும்மா நடிக்காதையுங்கோடி"

மிச்ச எல்லா ஆம்பிளையளும் பாத்துக்கொண்டிருக்கினம். ஒருத்தரும் வாய் திறந்து கதைக்கினம் இல்லை. இவனுக்கு இவள் ஒமெண்டா நாங்களும் தேச்சுப் பாக்கலாம் எண்ட மாதிரி ஆவெண்டு பாத்துக்கொண்டு நிக்கிறாங்கள். உங்களுக்குத் தேவையெண்டா சுவரோட போய்த் தேயுங்கோடா.

என்ர பாஸ்போட் துலைஞ்சு போச்சுதாம். ஏன் பாஸ்போட் துலைஞ்சது எண்டு எனக்கெல்லோ தெரியம். அவனுக்குப் பெயர் குணசீலன். கோதாரில போவான். ஏஜென்சிகாரங்களெண்டா இவ்வளவு கெட்டவங்களெண்டு நானெண்டா நினைச்சே பாக்கேல்ல. பொம்பிள எண்டு பரிதாபம் பாத்துத்தான் இவ்வளவு ஆம்பிளயளோடையும் தனியத் தங்கவிடாமல் தன்ர வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு போறான் எண்டு முதல்ல நினைச்சன். படுக்கிறதத்தவிர ஆம்பிளயளின்ர தலேக்குள்ள வேற ஒண்டும் இல்லையே? யோசிச்சுப் பாக்கவே அரியண்டமாக் கிடக்குது. இப்ப பாஸ்போட் துலைஞ்சு போச்சுதாம். அவன் பாஸ்போட்ட தேடி எடுக்கிறதுக்குள்ள நானே துலைஞ்சுபோவன்போல.

எங்கேயோ தொடங்கி எங்கேயோ வந்திட்டனாக்கும். பொலிஸ் தடியன் இன்னும் நிக்கிறான். அவன் ஜேர்மனில கதச்சா எங்களுக்கு விளங்குமே? இவன் அறுப்பானுக்கு இங்கிலீசும் ஒழுங்காத் தெரியாது. தடக்கித் தடக்கி நம்பருகளை மட்டும் சொல்றான். நம்பர்

75 நானில்ல. சுமதி உள்ளங்கையைப் பிரட்டிக்காட்ட தலய சூரன் ஆட்டிறமா திரி ஆட்டிற்று அவளின்ர கைய இழுத்துக்கொண்டு போறான்.

காலம எட்டுமணிக்கே வந்திட்டாங்கள். ஒரு தமிழரும் வந்தார். அவன் தடியன் சொன்னத அவர் தமிழில சொன்னார். ஒவ்வொருத்தரா கூப்பிட்டு விசாரிக்கப்போயினமாம். தமிழருக்கும் சிரிப்பு கொஞ்சம் வாங்கித்தான் ஒட்ட வேணும்.

பொலிசுக்காரன்-எங்களில ஒருத்தி-மொழிபெயர்ப்பாளன்

"எந்த நாட்டுக்குள்ளால வந்தனியள்?"

"தெரியாது"

"உங்கட பாஸ்போட் எங்க?"

"ஏஜென்ஸி பறிச்சுப்போட்டார்"

நீங்கள் ஆறு பொம்பிளையள் ஒரேயடியா வந்திருக்கிறியள். ஏதேன் இயக்கத்தைச் சேர்ந்தனியளோ?"

"இல்ல. இயக்கம் எண்டால் எங்களுக்குப் பயம். ஆமிக்கும் பயம். வீடெல்லாம் உடைச்சுப் போட்டினம். நான் நிறையநாள் ஜெயிலுக்குள்ள இருந்தனான். அங்க பொம்பிளயளயும் பலாத்காரம் செய்யினம். எங்கட உயிருக்கு ஆபத்து. அதுதான் வந்தனாங்கள்"

"நான் கேக்கிற கேள்விக்கு மட்டும் பதில் சொன்னாக் காணும். இப்ப நான் ஐந்து படங்களைக் காட்டுவன். அதில உங்கட ஏஜன்ற் இருக்கிறாரோ எண்டு சொல்லவேணும்"

எங்களபற்றி உங்களுக்கு என்ன தான் தெரியும்? எங்களுக்குச் சொந்த மில்லாத நாடுகள் நிறைய. எங்கள நாடோடிகள் எண்டும் சொல்லலாமோ? நாங்கள் பண்டங்கள்மாதிரி. பண்டங்களையும், பணங்களையும் ஏஜென்ஸிட்ட குடுப்பினம். ஏஜென்ஸி பணத்த கொழும்பில வச்சுக்கொண்டு எங்கள அடியாக்களிட்ட மாத்தி மாத்தி குடுப்பினம். வெள்ளக்காரன்கள், கறுப்புக்காரன்கள், தமிழ்காரன்கள், சிங்களகாரன்கள், வங்காளகாரன்கள்....

அண்ணாக்களின்ர சிநேகிதர்மார் வீட்டுக்கு வந்திருந்தால் தேத்தண்ணி கொண்டுபோய்க் குடுக்கவே கை நடுங்கும் எங்களுக்கு. சின்னச் சின்னக் கிராமங்களில இருந்து நகரமே தெரியாமல் வளந்தனாங்கள். இப்ப கொழும்பு லொஜ்சுகள், பாங்கொக், மொஸ்கோ விமான நிலையங்கள், போலந்து காடுகள், நதிகள், ஐரோப்பாவின்ர சிறையள் எல்லாத்துக்கும் எங்கட கதயள் தெரியும். எங்களுக்கெண்டு ஒரு சொந்தவீடு இருக்கவேணுமெண்டு ஆசைப்பட்டம். எங்களுக்கெண்டு இருந்த ஒரே ஒரு சொத்தான சொந்தங்கள்கூட இப்ப இல்ல.

கொஞ்சம் பொறுங்கோ. எனக்கு சரியா தலைய சுத்துது. களைக்குது. ஒழுங்கா சாப்பிட்டு எத்தினை நாளாச்சு? மத்தியானம் ரண்டு துண்டு பாண். ஒரு சின்னப் பால்பெட்டி. தேத்தண்ணி தேத் தண்ணி எண்டு சொல்லிப் பாத்தம். பச்சத்தண்ணி கூட இல்ல. உடம்பெல்லாம் சரியாக் குளிருது. போர்வகூட இல்ல. நாங்கள் ராத்திரி பிடிபடேக்க வெளியால சரியான சினோ.

எங்களில ஒருத்தி-பொலிசுக்காரன்-மொழிபெயர்ப்பாளன்

"ஏன் நடுங்கிக்கொண்டு இருக்கிறியள் உண்மையைச் சொல்லீட்டிங்களெண்டா பிரச்சினை இல்ல"

"குளிருது. சப்பாத்து இல்ல. சொக்சுகள்கூட ஈரமாப் போச்சு"

"எங்க சப்பாத்து"

"ஏஜென்ஸி களட்டி எறியச் சொல்ல ஒரு காட்டுக்குள்ள எறிஞ்சிட்டம்"

"அது எந்த நாடு எண்டு தெரியுமோ?"

"தெரியாது"

"எங்கள விசரர் எண்டு மட்டும் நினைக்கவேண்டாம். ஏன் தெரியாது. பயணம் செய்யேக்கை எந்த நாட்டுக்குப் போறம். எதால போறம் எண்டு அறிஞ்சு வச்சிருக்கிறேல்லயா?"

"எங்கட ஏஜென்ஸியோட அப்பிடியெல்லாம் கதைக்கேலாது. பெடியள் கொஞ்சப்பேர் கேட்டதுக்கு அடிச்சுப் போட்டினம்."

"நீங்கள் பிடிபடுறத்துக்கு முதல் ஒரு வாகனத்தில வந்துதான் இறங்கியிருக்கிறியள். அது என்ன வாகனம்? அதை ஓட்டி வந்தது ஆர்? எண்டு சொல்லமுடியுமோ"

"அது ஒரு கார். வெள்ளைக்காரர்தான் ஓட்டி வந்தவர்"

"அது ரக்ஸியோ? காரோ? என்ன நிறம்?"

"தெரியாது"

எங்களபற்றி நாளுக்கு நாள் கேள்விப்படுறியலெல்லே? நாங்கள் வாறவழியளிலயே செத்துப் போறம். வந்து சேர்ந்தாலும் திருப்பி அனுப்புறாங்கள். பொலிசுக்காரர் மட்டுமில்ல; எங்கட மாப்பிளமாரும்தான். ஏதோ வாற வழியளில துலைஞ்சு போச்சுதாம். எனக்கு மறதி நிறைய. துலைஞ்சு போறதின்ர முதல் எழுத்து ஏதோ 'க'விலை தொடங்குது. மாதக்கணக்கா காடுகளிலயும் சின்னச் சின்ன அறையளிலையும் கிடந்து வேதனைப்படுறம். இதுகள் எல்லாம் என்னத்துக்காக?

நீங்கள் வந்து பதினைஞ்சு வரியங்கள். எங்களுக்காக என்ன செய்தியள்? ஒரு ஊர்வலம் வச்சியளோ? பொலிசுக்காரரோடை சண்டை போட்டனியளோ? உங்கட சோசல்காசு கிடைக்காமல் போனாலுமெண்டு அரசாங்கத்த எதிர்க்க மாட்டியள்.

தடியன் பொலிசுக்காரன் திரும்பவும் வந்திட்டான். இப்ப இவன் சொன்னது என்ர நம்பர். எட்டாம் நம்பர் எனக்குப் பொருத்தமே இல்ல. நான் கையக் காட்டினன். அவன் இறுக்கிப் பிடிச்சான். கைய இல்ல.தோள. இவன்ர பிடியில இருந்து தப்ப ஏலாது. இவன நான் எதிர்க்கவும் ஏலாது. பிறகு தஞ்சம் தர மாட்டாங்களெல்லே. நாங்கள் பதினொரு மாதங்களா எத்தனை கஸ்டப்பட்டம். அதுக்கெல்லாம் இனி விடிவு கிடைக்குமே? அவன்ர சப்பாத்து தொப் தொப் எண்டு கேக்குது. நான் முன்னுக்கு ஒரு கோழிக்குஞ்சுமாதிரி நடக்கிறன்.

பொலிசுக்காரன்-எங்களிலை ஒருத்தியாகியநான்- மொழிபெயர்ப்பாளன்

.....

"எங்கட உயிருக்கு ஆபத்து. திருப்பி அனுப்பினா கொல்லிப் போடுவினம். என்ர அண்ணர் ஒருத்தர் இன்னும் ஜெயிலுக்க இருக்கிறார். தம்பி புலியள் பிடிச்சுக்கொண்டு போட்டினம். எனக்குத் தஞ்சம் தாருங்கோ. திருப்பி அனுப்பிப் போடாதயுங்கோ."

"நாங்கள் கேட்கிற கேள்விகளுக்கு மட்டும்தான் பதில் சொல்லவேணும். நீங்கள் போலந்துக்குள்ளாலைதான் வந்தனியள் எண்டு எங்களுக்குத் தெரியும். அதனால அங்க எத்தன நாள் நிண்டனியள் எண்டு சொல்லுங்கோ"

"நாங்கள் மொஸ்கோவில இறங்கினதுதான் தெரியும். பிறகு எந்த நாடுகளில நிண்டனாங்கள் எண்டு தெரியாது."

"நீங்கள் உண்மையைச் சொல்லிட்டால் எல்லாருக்கும் இலகுவாக இருக்கும்"

"எனக்கு ஒண்டும் தெரியாது. நான் இவ்வளவு நேரமும் சொன்னது உண்மைதான்.. எங்கட உயிருக்கு ஆபத்து திருப்பி மட்டும் அனுப்பவேண்டாம்"

★★★

எங்களப்பற்றி உங்களுக்கு நிறையத் தெரியும்தானே. எனக்குத் தலையெல்லாம் சுத்துது. எந்தக் காடு எண்டு தெரியாது. நாங்கள் நடந்து கொண்டி

ருக்கிறம். சுமதிக்குப் பொக்கிளிப்பான். நேற்று அவள் திடீரெண்டு மயங்கி விழுந்திட்டாள். பிறகு எழும்பவேயில்லை. அவள விட்டிட்டுத்தான் போறம். ஏஜென்ஸிய நாங்கள் இனி எங்க கண்டு பிடிக்கிறது?

பி.கு.

நீங்கள் இதுவர காலமும் என்ன செய்தியள் எண்டு எனக்குத் தெரியாது. சிலநேரம் ஒரு கதை அல்லது ஒரு கவிதை எழுதியிருப்பியள். மிஞ்சி மிஞ்சிப் போனால் ஒரு கூட்டம் வச்சிருப்பியள்.

உங்களுக்குத்தான் நேரம் போறது தெரியாதே. கள்ளுக்குடிக்கிறவங்கதான் சில விசயங்கள கதைக்கலாமெண்டு அடிபட்டுக்கொண்டும், விமரிசனங்களுக்கெல்லாம் எப்பிடி சாட்டையடி போடலாம் எண்டு பக்கங்கள கிழிச்செறிஞ்சுகொண்டும், உங்கட கண்ண நீங்களே தோண்டி எடுத்திட்டு அதுக்குப் பிறகும் நவீனமா பாக்கலாம் எண்டு நம்பிக்கொண்டும் இன்னும் இன்னும்....

ஒண்டு சொல்லுறன் கேளுங்கோ. ஒவ்வொருத்தரும் உங்கட உங்கட வீடுகளில ஒவ்வொரு மெழுகுவர்த்தி கொழுத்தி வையுங்கோ (Rudies Reste Rampe எண்டு ஒரு கட இருக்கு. அங்க பெரிய அழகானது கள் நல்ல மலிவில வேண்டலாம். இது ஜேர்மனியில இருக்கிற ஆக்களுக்கு மட்டும்தான். ஒவ்வொரு நாடுகளிலையும் உப்பிடி வேற பேரில இருக்கும்)

மெழுகுவர்த்தி இந்த வின்ரர் நேரத்தில romantic ஆக இருக்கும். அதுக்குப் பிறகு அது கொஞ்சம் கொஞ்சமா உருகிறத பார்த்து ரசியுங்கோ. ஏலாட்டி அழுங்கோ. இது முதலக்கண்ணீர் இல்லையெண்டு விவாதிக்கலாம். எழுதலாம். கடைசியா மெழுகுவர்த்தி செத்துப் போச்சுது எண்டு கண்ணீர் அஞ்சலி அடிச்சு வெளியிடுங்கோ சிறப்பா இருக்கும். ◆

சேரிமின்னல் – பெருங்குடி – 22

அதனால்தான்

- நாங்கள்
  கடவுளின் குழந்தைகள்
  அதனால்தான்
  இன்றும் கருவரைக்குள் நுழையமுடியவில்லை

- அசுத்தம் என்னும்
  சொல்லுக்கு சொந்தக்காரர்கள்
  அதனால்தான்
  தெருக்களைச் சுத்தம் செய்கிறோம்

- உழைப்பு எங்களுக்கு
  ஊதியம் அவர்களுக்கு
  அதனால்தான்
  வறுமையில் வாடுகின்றோம்

- மண்ணின் மைந்தர்கள்
  நாங்கள்
  அதனால்தான்
  தெருக்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்

- தொலைந்த முகவரியைத்
  தேடுகிறவர்கள் நாங்கள்
  அதனால்தான்
  இன்றும் தீவிரவாதிகள்

- இரத்தத்தை வேர்வையாக்கினோம்
  நாங்கள்
  அதனால்தான்
  அவர்கள் அகராதியில் காட்டுமிராண்டிகள்

- தேசப்பற்று எங்களுக்கு
  உரிமை மட்டும் அவர்களுக்கு
  அதனால்தான்
  தியாகிகளானோம்

- சகிப்புத்தன்மைக்காரர்கள்
  நாங்கள்
  அதனால்தான்
  இன்னும் ஒடுக்கப்பட்டுள்ளோம்

- மற்றவர்கள் உயர
  பாடுபட்டோம் நாங்கள்
  அதனால்தான்
  இன்றும் தாழ்த்தப்பட்டோர்... ◆

மனிதநேயம்

மனிதம்
மனிதனின் அடையாளம்.
மனிதம்
மனிதனின் தலைமைப்பண்பு;
தாய்மைப் பண்பு.
○

மனிதம்
மனிதனின் குறியீடு.
○

மனிதம் மட்டுமே
மனிதர்களை மகாத்மாவாக்கும்.
○

மண்ணின் ஈரமும்
மனிதனின் மனிதமும்
உருவம் காட்டாதவை எனினும்
உயிரோட்டச் சுழற்சியின் மையம்.
○

குருதியில்
சிவப்பணுக்களும், வெள்ளையணுக்களும்
உண்டு என்பதை
அறிவியல் உரைக்கும்
கூடவே
இரக்க அணுக்களும் இருக்கட்டும் என
மனிதம் விரும்பும்.
ஆயினும்
மனிதனே நீ ஏன் இன்னமும்
ஆயுதங்களுடன் அலைகிறாய்.
○

உன் வேட்டையாடல்
விலங்குகளிடமிருந்து மனிதருக்கு
மாறிய தெப்படி.
உன் கத்திகளைத் தீட்டுவது
மனித உடலிலா.
○

மண் உன்னிடம்
மனித இரத்தத்தையா
யாசகம் கேட்டது.
○

நீ
குடிசைகளைக் கொளுத்தி
போகி கொண்டாடுகின்றாய்.
குழந்தைகளைப் பலியிட்டு
குலதெய்வங்களைக் கும்பிடுகிறாய்.
○

பூஞ்சோலைக்குள் நுழையும்போது
உன்னிடம் எதற்கு
இத்தனை வெடிகுண்டுகள்.
அழுகுரல்களைக் கேட்பதில்
உனக்கென்ன
அத்தனை ஆனந்தம்.
○

உன் வெறிகொண்ட ஓட்டத்தை
தடகளத்தில் காட்டியிருந்தால்
தங்கம் கிடைத்திருக்கும்.
நீ ஏன்
அழிவுக் கோட்டைத் தொட
இப்படி ஓடுகிறாய்.
○

உன் வருங்காலத் தலைமுறைக்கு
அழிந்துபோன சின்னங்களை
அடையாளம் காட்டாமல்
ஆக்கங்களைக் காட்டு.
○

பசுமை இழந்த தாவரமும்
மனிதம் இழந்த மனிதனும்
இறப்பினும், இருப்பினும்
ஒன்றுதான் என்பதை
உணர்ந்து உள்வாங்கு.
○

மனிதனே நமக்கு
சிலுவைகளையும் விடவும்
மரங்கள் முக்கியம்.
பிறையை விடவும்
வானம் முக்கியம்.
திருநீற்றை விடவும்
காற்று முக்கியம்
எல்லாவற்றை விடவும்
மனிதர்கள் முக்கியம்.
○ ◆

பொருளாதார தாராளவாதமும் மக்கள் உரிமைகளும்

தாராளவாதத்தின் இரண்டு முகங்கள்: ஒரு கண்ணோட்டம்

கடந்த இரு தசாப்தங்களாக நவதாராளவாதம் (neoliberalism) உலகளாவியரீதியில் பரவி வருவதைக் காண்கிறோம். இந்தப் போக்கின் அடிப்படையாக அமைந்திருப்பது சுதந்திரவர்த்தகக் கொள்கையும் தனியுடைமையாக்கலுமாகும். அரசியல் தாராளவாதத்தின் (political liberalism) முக்கிய விழுமியங்களாகக் கருதப்படும் தனிமனித சுதந்திரம், மனித உரிமைகள் போன்றவற்றிற்கும் இந்தப் பொருளாதார அடிப்படைக் கொள்கைக்குமிடையே முரண்பாடுகள் உண்டு. அதாவது லிபரலிசத்தின் அரசியல் ஜனநாயக இலட்சியங்கள் அதன் பொருளாதார இலட்சியங்களுடன் முரண்படுகின்றன.

தாராளவாதத்தின் உலகளாவிய எழுச்சிக் காலகட்டத்தில் - அதாவது கடந்த இரு தசாப்தங்களில் - மனித உரிமைமீறல்கள் அதிகரித்துள்ளன. இதற்கு ஒரு முக்கிய காரணம் பல தெற்கத்திய நாடுகளில் பொருளாதார தாராளவாதக் கொள்கைகளின் அமுலாக்கல் தொழிலாளர்களினதும் பொதுமக்களினதும் அரசியல் உரிமைகளை நசுக்கிவருவதே ஆகும். தெற்கத்திய நாடுகளில் மட்டுமல்ல கிழக்கு ஐரோப்பாவிலும் இந்தநிலையைக் காணக்கூடியதாகவுள்ளது.

லிபரலிசத்தின் பொருளாதாரத்திற்கும் அரசியலுக்குமிடையிலான இந்த முரண்பாடு வரலாற்றுரீதியானது. அரசியல் ஜனநாயகமாக்கலின் வளர்ச்சியை ஏற்படுத்த சந்தைப் பொருளாதாரத்தை அரசு பலவகையில் நெறிப்படுத்தல் கட்டுப்படுத்தல் அவசியம் என்பதை மேற்கு ஐரோப்பாவின் வரலாறு நன்கு காட்டுகிறது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிரித்தானியாவின் அரசியல் பொருளாதார போக்குகளை ஆய்ந்தறிந்த கார்ல் பொலன்யி(Karl Polanyi) கூறுவதுபோல் அந்நாட்டின் முதலாளித்துவ அபிவிருத்தியின் வரலாறு ஒரு இரட்டை இயக்கப் பாட்டினைக் கொண்டிருந்தது. ஒருபுறம் சந்தை சக்திகள் பரவி எழுந்தன. இவை பண்டமயமாக்கலை முன்தள்ளின. மறுபுறம் மனித உழைப்புச்சக்தியும் இயற்கை வளங்களும் பண்டமயமாக்கப்படும் இந்தப் போக்கிற்குச் சமூகத்திடமிருந்து பலவிதமான எதிர்ப்புக்கள் தோன்றின. தொழிலாளர்கள் அடிப்படை உரிமைகளைக் கோரினர். ஆளும் வர்க்கத்தினால் மூலதனத்திற்கும் உழைப்பிற்குமிடையிலான முரண்பாட்டைச் சந்தைச்சக்திகளிடம் மட்டுமே விட்டுவிட முடியவில்லை. தொழிற்சங்கங்கள் வேலைநேரம், கூலி, வேலைத்தள சூழல் போன்றவற்றைப் பிரதான போராட்ட விடயங்களாக்கின. இந்த வர்க்கப் போராட்டத்தின் விளைவுகளில் ஒன்று உழைப்புச்சக்திச் சந்தையின் நெறிப்படுத்தலாகும். அரசினால் பலவிதமான சட்டங்களும் விதிமுறைகளும் உருவாக்கப்பட்டன. இதேபோன்று பொதுமக்கள் அமைப்புக்கள், வறுமை குறைப்பு, சூழல் பாதுகாப்பு போன்றவற்றிற்காகப் போராடிச் சில வெற்றிகளைப் பெற்றன. இந்தப் போராட்டங்கள் இன்றும் தொடருகின்றன. நிலம் பண்டமயமாக்கப்பட்டபோதும் சூழல் பாதுகாப்புச் சட்டங்களும் விதிகளும் நிலச்சந்தையை சிலவழிகளில் நெறிப்படுத்த உதவுகின்றன.

சகல விருத்தி பெற்ற முதலாளித்துவ நாடுகளின் வரலாற்றிலும் முரண்பாடான இந்த இரட்டை இயக்கப்

> நிறுவனமயமாக்கப்பட்டுள்ள மனித உரிமைகள் தொழிற்சங்கங்கள் சூழல் இயக்கங்கள் பெண்ணுரிமை அமைப்புக்கள் போன்றவை முதலாளித்துவத்தின் ஜனநாயக முகத்தினைச் சார்ந்தவை. இவை அதே முதலாளித்துவத்தின் மற்றைய முகத்தின் அம்சங்களான சந்தைப்போட்டி தனியுடைமை லாபநோக்கு போன்றவற்றுடன் முரண்படுகின்றன.
>
> ▼▼▼
>
> சந்தைச்சக்திகளின் பாதகமான தாக்கங்களுக்கெதிராக அணிதிரண்டு போராடுவதன்மூலமே குறைந்தபட்ச உரிமைகளையாயினும் வென்றெடுக்க முடியும்.
>
> ▼▼▼
>
> தேசிய இனப்பிரச்சினைக்கான நியாயமான தீர்வு இல்லாவிடில் உள்நாட்டு யுத்தம் தொடரும். இது தொடர்வது பொதுவான உரிமை மறுப்புகளுக்கு உதவுகிறது.

பாட்டினைக் காணலாம். இதன் செயற்பாடுகளினால் நடை முறை முதலாளித்துவ பொருளியல் பாடநூலில் முன்வைக் கப்படும் தூயசந்தைப் போட்டி பொருளாதார மாதிரியைவிட பலவகையில் வேறுபட்டிருக்கிறது. நிறுவனமயமாக்கப்பட் டுள்ள மனிதஉரிமைகள், தொழிற்சங்கங்கள், சூழல் இயக் கங்கள், பெண்ணுரிமை அமைப்புக்கள் போன்றவை முதலா ளித்துவத்தின் ஜனநாயக முகத்தினைச் சார்ந்தவை. இவை அதே முதலாளித்துவத்தின் மற்றைய முகத்தின் அம்சங் களான சந்தைப்போட்டி, தனியுடைமை லாபநோக்கு போன்ற வற்றுடன் முரண்படுகின்றன. இறுதி ஆய்வில் இந்த முரண் பாட்டிற்கு முதலாளித்துவ அமைப்பிற்குள் தீர்வுகாணமுடி யாது. ஆயினும் மக்களுரிமைகளின் குறைந்தபட்ச நிறுவ னமயமாக்கலின் நடைமுறை முக்கியத்துவத்தை நாம் குறைத்து மதிப்பிட முடியாது. விருத்தியடைந்த முதலாளித் துவ அமைப்புகளின் இந்த வரலாற்றம்சம் இன்று முதலா ளித்துவம் விருத்திபெறும் நாடுகளின் தொழிலாளர்களுக்கும் பொதுமக்களுக்கும் சில பாடங்களைத் தருகின்றது. சந் தைச்சக்திகளின் பாதகமான தாக்கங்களுக்கெதிராக அணி திரண்டு போராடுவதன்மூலமே குறைந்தபட்ச உரிமைகளை யாயினும் வென்றெடுக்க முடியும். அதேவேளை இந்த உரிமைகளின் நிரந்தரமான நிறுவனமயமாக்கலையும் நியா யமான செயலாக்கலையும் உத்தரவாதப்படுத்த தொடர்ச்சி யான வெகுஜன இயக்கங்களும் அவசியம்.

இன்று நாம் எதிர்நோக்கும் சவால்

மூலதனத்தின் சர்வதேச மயமாக்கல் இதை இன்று பூகோள மயமாக்கல் - Globalization - என அழைக்கிறார்கள். முன்னெப்போதையும்விட பரந்து ஆழ்ந்து நகரும் காலமிது. இந்தக் காலகட்டத்தில் பொருளாதார தாராளமயமாக்கல் (economic liberalization) பல தேசியப் பொருளாதாரங்களைப் பாதகமாகத் தாக்கியுள்ளது. சமீப காலங்களில் ஜப்பானை யும் தென்கிழக்காசிய நாடுகளையும் தாக்கிய பொருளாதார நெருக்கடிகள் உலகப்பொருளாதார அமைப்பின் நெறிகெட்ட இயக்கத்தன்மைகளை நன்கு வெளிப்படுத்தின. ஆசியநாடு களின் நெருக்கடிகள் தொடரும் அதேவேளை கிழக்கு ஐரோப்பாவிலும் லத்தீன் அமெரிக்காவிலும் நெருக்கடிகள் ஆரம்பித்துள்ளன. ஆபிரிக்கக்கண்டமும் பல பாதகமான விளைவுகளை அனுபவிக்கிறது.

மேலும் குறிப்பாகக் கூறுவதாயின் பல்வேறு வறிய நாடுகளில் வேலையில்லாதோர் தொகை அதிகரித்துள்ளது. அரசாங்கங்கள் சமூகவிருத்திக்கான செலவினத்தைக் குறை த்ததால் பள்ளிக்கூடம் செல்லமுடியாத குழந்தைகளின் தொகையும் பொதுமக்களின் பிரச்சினைகளும் அதிகரித் துள்ளன. கல்வி, சுகாதாரத்துறைகளின் தனியுடைமையா க்கலினால் கணிசமானோர் இந்த வசதிகளிலிருந்து நிரந்தர மாக வெளிவாரிப்படுத்தப்பட்டுள்ளனர். தொழிலாளர்களின் உரிமைப்போராட்டங்கள் நசுக்கப்படுகின்றன. விலைவாசி யேற்றம் தொழிலாளர்களை மட்டுமல்ல விவசாயிகளையும் பாதிக்கிறது.

இன்று உழைக்கும் மக்கள் தமது உரித்துடைமைகள் (entitlements) பலவீனமாக்கப்படுவதைத் தடுக்க முடியாத நிலையிலுள்ளனர். ஒருபுறம் அடிப்படைச் சமூகசேவைகளுக் கான அரசசெலவு குறைக்கப்படுகிறது. இச்சேவைகள் படிப்ப டியாக தனியார்துறைமயமாக்கப்படுகின்றன. மறுபுறம் உழைப்பாளிகளின் ஊதியம் போதியளவு வளரவில்லை. தரமான சமூகசேவைகளை விலைகொடுத்து வாங்குமள விற்கு பெரும்பாலான தொழிலாளரிடம் கொள்வனவு சக்தி யில்லை. இதனால் இவர்கள் படிப்படியாகத் தரம் குறைந்து கொண்டிருக்கும் அரச சமூகசேவை நிலையங்களிடம் செல் கிறார்கள். அரசினால் வழங்கப்படும் சமூகசேவைகளின் தரம் உயர்த்தப்படாவிட்டால் இந்த மக்களின் எதிர்கால சந்ததிகளின் கல்வி, சுகாதார நலன்கள் நிரந்தரமாகப் பாதிக்கப்படும். நகர்ப்புறத் தொழிலாளர்கள், கிராமப்புற வறிய விவசாயிகள், கூலியுழைப்பாளர்கள் (தோட்டத்தொழி லாளர்கள் உட்பட) போன்ற சமூகப்பிரிவுகளும் உள்நாட்டு யுத்தத்தினால் பாதிக்கப்படும் பகுதிகளில் வாழும் மக்களும் தரம்குறைந்த சமூகசேவைகளின் நீண்டகால பாதகமான விளைவுகளை அனுபவிக்கிறார்கள்.

இத்தகைய சமூக அரசியல் பிரச்சினைகள் தலைவி ரித்தாடும் நிலையிலும் சர்வதேச நிதிநிறுவனங்களும் மேற் கத்தைய அரசியல் தலைமைகளும் பொருளாதார தாராள வாதத்திற்கு தொடர்ந்தும் புகழ்பாடுகின்றன. இந்தப் பிரச்சி னைகள் தற்காலிகமானவை, தவிர்க்கமுடியாதவை என சர்வதேசநாணய நிதியமும் உலகவங்கியும் கூறுகின்றன. இதுதான் நீண்டகால அபிவிருத்திக்கு சமூகம் கொடுக்கும் விலை. ஆனால் இந்த விலையைவிட வரப்போகும் சமூக நன்மைகளின் பெறுமதி அதிகமானதென அவை ஆறுதல் கூறுகின்றன. ஆனால் எனது அபிப்பிராயத்தில் இந்தப் பிரச்சினைகளுக்கு இப்போ தீர்வு கிடைக்காவிடில் சமூ கத்தின் கணிசமானோர் நீண்டகாலத்தில் பெரிதும் பாதிக் கப்படப்போகின்றனர்.

ஏற்கனவே குறிப்பிட்டதுபோல் இன்றைய பொருளாதார தாராளவாதிகளுக்கான பதிலை விருத்திபெற்ற முதலா ளித்துவநாடுகளின் வரலாறு கொடுக்கிறது. அந்த வரலாற் றின் இரட்டை இயக்கப்பாட்டினை நாம் புரிந்துகொள்ளல் இன்றைய சவாலை எதிர்நோக்க ஓரளவு உதவும். இங்கு நான் குறிப்பிட்ட சமூக அரசியல் பிரச்சினைகளை மற்றைய பல பிரச்சினைகளுடன் இணைத்துப் பார்த்தலும் அவசியமா கும். இப்படி அணுகும்போது நாடுகளிற்கிடையிலான விசேட வேறுபாடுகள் முக்கியத்துவம் அடைகின்றன. உதாரணமாக இலங்கையை எடுத்துக்கொள்வோம். இங்கு குறிப்பிட்ட பிரச்சினைகள் எல்லாம் இருக்கும் அதேவேளை இலங்கை யில் இன்னும் தீர்த்துவைக்கப்படாத தேசியஇனப்பிரச்சினை பூதாகரமாகியுள்ளது. இராணுவமயமாக்கப்பட்டுள்ள இப் பிரச்சினை மற்றைய பிரச்சினைகளை அரசியல்ரீதியில் பின்தள்ளியுள்ளது. ஆயினும் மற்றைய பிரச்சினைகளும் தொடர்ந்து ஆழமாகிவருகின்றன. அதுமட்டுமல்ல அரசின் உள்நாட்டு யுத்தக்கொள்கையும் நடைமுறையும் தமிழ்மக் களை பெரிதும் பாதிக்கும் அதேவேளை சகலமக்களினதும் அடிப்படை சுதந்திரங்களையும் பாதிக்கின்றது. தென்னி லங்கை அரசியலையும் துப்பாக்கிக் கலாச்சாரம் ஆக்கிரமித் துள்ளது. வன்செயல்களற்ற ஒரு உள்ளூர்த் தேர்தலைக்கூட அரசாங்கத்தினாலும் பிரதான எதிர்க்கட்சியான U.N.P.யினா லும் நடத்த முடியவில்லை.

இலங்கைபூராவிலும் மக்கள் உரிமைகள் மீறப்பட்டுவரும் இந்த நிலையில் நவதாராளவாதப் பொருளாதாரக் கொள் கையின் விளைவுகள், உரிமைமீறல்களை மேலும் வலுப்ப டுத்துகின்றன. ஆனால் தொழிலாளர் உரிமைகளுக்கான சமூகநல உத்தரவாதங்களுக்கான போராட்டங்கள் மற்றைய ஜனநாயகப் போராட்டங்களுக்கு ஒரு பலமான ஆதர்ஷத்தை யும் நேரடி உந்துதலையும் வழங்கவல்லன. தேசியஇனப் பிரச்சினைக்கான நியாயமான தீர்வு இல்லாவிடில் உள்நாட்டு யுத்தம் தொடரும். இது தொடர்வது பொதுவான உரிமை

மறுப்புகளுக்கு உதவுகிறது. இங்கு நாம் இலங்கையின் தெற்கில் வாழும் மக்களின் உரிமைப்போராட்டத்திற்கும் வடகிழக்கில் வாழும் மக்களின் உரிமைப்போராட்டத்திற்கும் இடையே ஒரு முக்கிய தொடர்பினைக் காண்கிறோம். தமிழ்மக்களின் இனவிடுதலைப்போராட்டத்தின் நியாயப் பாட்டினை வலுப்படுத்த இந்தத் தொடர்பு பயன்படும். அதே நேரம் தெற்கில் இடம்பெறும் மக்களுரிமைப் போராட்டங்கள் வடகிழக்கில் வாழும் தமிழ் முஸ்லிம் மக்களுக்கு ஆதர் ஷத்தை வழங்கும். அங்கே ஜனநாயகத்திற்கான போராட்ட நிலைமைகள் இராணுவமயப்படுத்தலாலும் துப்பாக்கிக் கலாச்சாரத்தாலும் நசுக்கப்பட்டுள்ளன. ஆனால் இன்றைய உலகின் அரசியல் பொருளாதாரப் போக்குகளின் உள் நாட்டுத்தாக்கங்களையும் இவற்றிற்கெதிராக தொழிலாளர்க ளும் பொதுமக்களும் எடுக்கும் முயற்சிகளையும் கணக்கி லெடுக்காது இனவிடுதலைக்கு வியாக்கியானம் கொடுக்க முடியாது. இந்தப்பரிமாணத்தை உள்வாங்குதல் சகல இன விடுதலைப்போராட்டங்களின் கடமை. இந்த உள்வாங்கல் இனஎல்லைக்கோடுகளைக் கடந்து செயற்படும் பிரச்சினை களுக்கும் இனரீதியாகத் தாக்கும் பிரச்சினைகளுக்கும் இடையிலான உறவுகளைப் புரிந்துகொள்ள உதவும். அந் தப்புரிந்துணர்வு பல மட்டங்களில் இடம்பெறும் உரிமைப் போராட்டங்களுக்கிடையிலான தொடர்புகளைப்பலப்படுத்த உதவும்.

முடிவுரை

பொருளாதார தாராளவாதத்தின் நடைமுறைகள் மக் களுரிமைகளை மறுப்பதையும் அதை எதிர்த்து அணிதி ரண்ட தொழிலாளர் மற்றும் பொதுமக்கள் அமைப்புக்களுக் கூடாக போராட்டங்கள் நடத்தவேண்டிய அவசியத்தையும் பற்றிப் பார்த்தோம். இன்றையநிலையில் இந்தப் போராட் டங்களை நீண்டகாலநோக்கில் அணுகி அவற்றை மக்கள் ஜனநாயகப் புரட்சிமீட்டெடுப்பின் அம்சங்களாக்குவது அடிப்படைச் சமூகமாற்றத்தை ஏற்படுத்துவதற்கு உதவும். மக்கள் ஜனநாயகப்புரட்சியின் மீட்டெடுப்பிற்கு அப்புரட்சி பற்றிய மீள்சிந்திப்பு அவசியமாகும். இது தனிமனிதர்களால் அன்றி போராட்ட இயக்கங்களின் கூட்டுமுயற்சிக்கூடாக செயற்படுத்துதலே சரியான நடைமுறையாக எனக்குப்படு கிறது. இந்தக்கூட்டு முயற்சியும் போராட்டங்களும் இன்றைய முதலாளித்துவத்திற்கு அப்பால் ஒரு புதிய சமூகஅமைப்பு பற்றிய கற்பிதத்திற்கு அவசியமாகும். அதாவது சோச லிசம்பற்றிய புதிய கற்பிதத்திற்கான வழிமுறையாக இது அமைகிறது. ◆



ஓவியம்: றஞ்சினி - Frankfurt

தூசணங்கோயி

மணியம் வாத்தியார் எண்டால் எல்லாருக்கும் பயம். ஆனா மணியம் வாத்தியாருக்கு எங்கட அப்புவக் கண்டாப் பயம். எங்கட அப்புவுக்கு சீவல்காரச் சின்ராசனக் கண்டாப் பயம். இப்பிடி ஒருத் தருக்கு ஒருத்தர் பயப்பிடுகினம் எண்டு எனக்குத் தெரியும். ஆனால் இதை யாரட்டப் போய்க் கேக்கிறது. ஆரட்டக் கேட்டாலும் அடிச்சுப் போடுவினம் எண்டு எனக்குப் பயம்.

நேற்றைக்கும் மணியம் வாத்தி யார் சின்ராசன்ர மகன எனக்குப் பக்கத்தில் இருத்திக் கணக்குச் சொல்லிக்குடுக்கச் சொல்லிப் போட்டு போயிற்ரார்.சின்ராசன்ர மகன்ர சேட்டுக்கொலரில இருக்கிற ஊத்தையெண்டால் ஒரு வண்டில் வரும். எனக்கு அவனுக்கு பக் கத்தில இருக்கப்பிடிக்கேல்லை. ஒருமாதிரிக் கணக்குப் பாடம் முடியும் வரைக்கும் சமாளிச்சுக் கொண்டிருந்தாச் சரி. அங்கால அவர அவற்ர வாங்கில்ல இருத்திப் போட்டு நான் தப்பிப்போடுவன்.

சீவல்க்கார சின்ராசன்ர மகனோட இருக்கிறதொண்டும் எனக்குப் பெரிய பிரச்சினை இல்லத்தான். நான் அவ னோட சினேகிதம் வச்சிருக்கிறன் எண்டு என்னோட ஒருத்தரும் கதைக்க மாட்டினமாம். அண்டைக்கு என்ர பிறந்த நாளுக்கு இனிப்புக் குடுக்கேக்கையும் கன ஆக்கள் என்னட்ட இருந்து இனிப்பு வேண்டித் தின்னேல்ல. வகுப்பில ஏதும் பேன, பெஞ்சிலக் காணாட்டி இவன் தான் கள்ளன். இவன் தான் எடுத்துப் போட்டான் எண்டு எல்லாரும் அவன்ல பழிய போட்டு விடுவினம். ஆனா அவன் அத எடுத்திருக்க மாட்டான் எண்டு எனக்குத் தெரிஞ் சாலும் நான் ஒண்டும் சொல்ற இல்ல. பிறகு என்னையும் கள்ளன் எண்டு சொல்லிப் போட்டு ஒதுக்கி விட்டுருவினம்.

ஒருநாள் இப்பிடித்தான் ஒரு பிரச்சினை வந்து எனக்காக சின் ராசன்ர மகன் எல்லாருக்கும் அடிச் சுப்போட்டான். உடன மணியம் வாத தியார் என்னையும் அவனையும் கூப்பிட்டு ஒருத்தற்ர காதில ஒருத்தர பிடிக்கச்சொல்லி தோப்புக்கரணம் போடச்சொன்னவர். அப்பேக்க எல் லாரும் என்னப்பாத்துச் சிரிச்சவேல்.



இதப்போய் நான் அப்புவெட்டச் சொல்லியிருந்தால் அப்பு உடன மணியம் வாத்தியார வீட்ட விட்டு எழுப்பியிருப்பார். ஏனெண்டால் மணி யம் வாத்தியார் அப்புவிட கலட்டிக் காணிக்கதான் இருக்கிறார்.

சின்ன வயசில நாங்கள் ஒழிச் சுப் பிடிச்சு விளையாடுவம். எல்லா ரும் ஒழிச்சிருக்க ஒருத்தர்தான் பிடிக்கிறது. பிறகு ஆமி பொலிஸ் எண்டு பக்கம் பிரிச்சு விளை யாடுறது. ஆமியும் பொலிசும் சேர்ந்து கள்ளனத்தான் பிடிக்கிறது. இப்ப அதெல்லாம் விட்டுப் போட்டு இயக்கம்பிரிச்சு விளையாடுறது. எந்த இயக்கம் பெரிசு? எது கெட் டிக்கார இயக்கம் எண்டு பாக்கிறது. அதுக்குள்ள நீயா நானா தலைவன் எண்டு சண்டை வரும். இப்பிடியே ஒரு இயக்கத்தில சண்டை கிளம்பி தலைவர் பதவி கிடைக்காத ஆக் கள் எல்லாம் ஒண்டு சேர்ந்து இன் னுமொரு இயக்கத்த உருவாக்கி அதுக்குள்ளையும் சண்ட வந்து முடிவு வர்றதுக்கிடையில விளையாடுற நேரம் முடிஞ்சு வந்திரும்.

போன வெள்ளிக்கிழமை மணி யம் வாத்தியார் வரயில்ல. வகுப்பில இருந்து ஒவ்வொருத்தரும் ஒருத்தர ஒருத்தர் கேட்டுக்கொண்டு வந்தினம். நீ எந்த இயக்கம்? நீ என்ர இயக் கத்துக்கு வர்றியா? என்ர இயக்கத் தில கன ஆக்கள் இருக்கு நல்ல ஆயுதம் எல்லாம் இருக்கு வாக னங்கள் இருக்கு என்ர இயக்கம் தான் பெரிய இயக்கம் எண்டான் சபேசன்.

நீ என்ர இயக்கத்துக்கு வாறியா? நான் இருக்கிற இயக்கம் தான் பாங் கெல்லாம் அடிச்சது, கள்ளன எல் லாம் பிடிச்சது. இதுதான் கெட்டிக் கார இயக்கம் எண்டான் சுரேஸ்.

என்ர இயக்கம் தான் பொதுமக் களக் காப்பாத்திறது. காட்டிக்குடுக் கிற ஆக்களை யெல்லாம் கம்பத் தில கட்டிப் போட்டுச் சுடுறது. கன ஆக்களை கண்ணையெல்லாம் கட் டிக்கொண்டு போறது. நீ வேற இய க்கத்தில சேர்ந்து போட்டு மதி சொல்லேக்க அதில சேர்ந்திருக்க லாம் எண்டு கவலப்படுவ என்றான் மதி.

ஆமி பொலிஸ் விளையாடேக்கையும் ஆமிக் கொமா ண்டரா வாற சின்ராசின்ர மகன் ரகு மட்டும் கருணாவோட சேர்ந்து நிண்டு இருவரும் தாங்கள் ஒரு இயக்கத்திட பெயரச் சொல்லி என்னக் கூப்பிட்டாங்கள். ஏன் எண்டால் அந்த இயக்கம் தான் தங்கட வீட்டுக்குப் பக்கத்தில இருக்குதாம். துவக்கால தென்ன மரத்தில இருக்கிற இளனிய எல் லாம் சுட்டுக்காட்டினதாம் என்றான். எனக்கெண்டால் ஒண்டும் விளங் கேல்ல. நான் எந்த இயக்கத்து டனும் சேர மாட்டன் எண்டு சொல் லிப் போட்டன். நான் பள்ளிக்கூடத் தால வெளிய வர எல்லாரும் சேர்ந்து என்ன துரத்திக்கொண்டு வந்தார்கள். நான் துரோகி நான் தான் காட்டிக் குடுக்கிறன் எண்டு. நானும் ஒரே ஓட்டமா சின்ராசண் ணன் வீட்டடியால வரேக்க எங்கட அப்பு சின்ராசண்ணை வீட்டு திண் ணையில இருந்து கள்ளுக்குடிச்சுக் கொண்டிருக்கிறார்.

மணியம் வாத்தி சாதி சமயம் பார்க்கிறதில்லை எண்டு எப்பி டித் தான் நடந்தாலும் இப்ப அவர் எண் னெண்டு வெளிய தலைகாட்டப்

போறார். எந்த முகத்தோட இந்தச் சம்மந்தத்த செய்து வைக்கப்போறார் என்று அம்மாவும் பரமேஸ்வரி அக்காவும் கதைச்சுக் கொண்டு இருந்தினம். மேளமடிக்கிற லாந்தியிட அண்ணன்ர மகனை மணியம் வாத்தியாற்ர மகள் காதலிச்சுப் போட்டாளாம். அவங்களும் பெட்டையக் கொண்டு போயிற்ராங்களாம் எண்டு கதைத்துக் கொண்டு நிண்டா. எனக்கு இப்பத்தான் விளங்குது ஏன் வாத்தியார் பள்ளிக்கூடம் வர்ற தில்லையெண்டு. அந்த நேரம் பார்த்து சபேசன் வந்து மணியம் வாத்தியாரையெல்லோ எங்கட இயக்கம் பிடிச்சுக்கொண்டு வந்து வச்சிருக்கிறாங்கள் எண்டான். உனக்கெப்படித் தெரியும் எண்டு கேக்க நான் எங்கட கிடுகு வேலிக் குள்ளால ஓட்டை வைச்சுப் பார்த்தனான். வேணுமெண்டா ஒருத்தருக்கும் சொல்லாமவா காட்டுறன் எண்டு என்னக் கூட்டிக் கொண்டு போக, நானும் போய்ப் பார்த்தன். ஒரு அண்ணை கேட்டார் மாஸ்டர் நீங்க என்ன இருந்தாலும் "....பிள்ளைக்கு என்ர வீட்டுல சம்மந்தம் கேக்குதா?" எண்டு கேட்டது பிழைதானே. அதனால நீங்க அவற்ர முதுகில கொட்டியிருக்கிற சீனிய உங்கட நாக்கால நக்கியெடுக்க வேணும் எண்டு சொல்லிப் போட்டு, மாஸ்டர் அழுது கொண்டிருக்க, அங்க பாருங்க மாஸ்டர் கனகலிங்கம் ஐயாவ கள்ளுக்குடிச்சுப் போட்டு பேசாமப் போறதுக்கு வெறியில கள்ளுக்குடுத்தவர "....பெடிப்புள்ளைக்கு என்ன காசு? என்று கேட்டார். அவருக்கு தண்டனையா 5 பச்சமிளகாய் குடுத்திருக்கிறன். அத அவர் சாப்பிட்டுக்கொண்டு இருக்கிறார். சாதி கதைக்கிற ஆட்கள் தண்டனையில் இருந்து தப்பவே ஏலாது என்றான். நானும் பாத்தன் எங்கட அப்புதான் பச்சமிளகாய் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்.

உடன நான் திரும்பியோட நில்லு எங்கபோற. வீட்ட போய் சொல்லி ஆக்கள் வந்து பாத்தா என்னண்டு உங்களுக்குத் தெரியும் எண்டு கேட்டு எங்களையும் அடிப்பாங்கள் எண்டான் சபேசன்.

இல்ல விடு சபேசன் அம்மாவோட இருந்து சாதிகதைச்சுக் கொண்டிருக்கிற பரமேஸ்வரி அக்காவுக்கும் நான் பச்சமிளகாய் குடுக்க வேணும். ◆

செந்திரு

உன்னால் என்ன செய்யமுடியும்?

பேராசையின் பெருஉருவமே!
உன் செயல்கள் ஒவ்வொன்றும்
ஆதிக்க அருவருப்பை
உந்தன் அறியாமையை
ஆணியடித்துச் சொல்கின்றன.
பழிவாங்கி விட்டதாய்
கல்லறைகளை எண்ணி
கர்வப்படாதே.
கல்லறைகளே
எங்கள் கருவறைகள்
நாங்கள் உயிரணுக்கள் என்றுமே!
உருக்குலைக்க முடியாது.
உன்னால் என்ன செய்ய முடியும்?
உயிரைப் பறிக்கும் நீ
உணர்வைப் பறிக்க முடியுமா?
யாதென் ஊர்? யாவர் கேளிர்? என
அகதியாக்கலாம் அநாதையாக்கலாம்
ஒருபோதும் அடிமையாக்க முடியாது.
தண்ணீர் பிரித்தாலும்
செந்நீர் இணைக்கும்
தன்மான நெஞ்சங்களை...
தரம் தாழ்ந்து விடவில்லை.
தலை சாய்த்து விடவில்லை
இன்றைய இழப்புக்கள்
நாளை உயிர்ப்புக்களாகுமென
உரமேற்றிக் கொள்கிறோம்.
நீயும் மனிதகுலம் என்பதையும்
மறந்தால்...
உன்னை இனி
நாங்கள் மறக்கவேண்டி வரும்.
உன்னைப்போல வெடிகுண்டல்ல
எரிமலை நாங்கள்
எச்சரிக்கையாய் இரு...

சந்துஷ்

(வோல்ஃப்காங் போர்ஷட்: கவிஞரும் சிறுகதையாளனும் நகைச்சுவையாளருமான 1921ல் ஜேர்மனி Hamburgஇல் பிறந்த Wolfgang Borchert, 26 வயதில் முடிந்துபோன தன் குறுகிய வாழ்வில் காத்திரமான சின்னஞ்சிறு படைப்புகளால் முக்கியமானவர். சிறிய ஆனால் ஆழமான பல படைப்புகள் வாழ்வின் அர்த்தங்களை, துயரங்களை, மர்மங்களை சிலாகிக்கின்றன.
வாழ்வின் ஆழங்களை விசாரிப்பது Borchert இன் எழுத்துகளின் தனித்துவம். அவரது படைப்புகள் குறுகியவை, ஆழமானவை.)

ஜெரனியம் செடிகளின் துயரம்

அவர்கள் முதலில் சந்தித்துக் கொண்ட பொழுது இருட்டிவிட்டி ருந்தது.

அவள் அவனுக்கு அழைப்பு விடுத்தாள், அவனும் அவள் வீட்டிற் குச் சென்றான்.

அவனுக்கு அவள் தனது வீட் டைக் காண்பித்தாள். தனது மேசை விரிப்பை, படுக்கை விரிப்பை, கோப்பைகளை, முள்ளுக்கரண்டிக ளைக் காண்பித்தாள்.

ஆனால் அவர்கள் அந்தப் பகல் வெளிச்சத்தில் எதிரெதிரே அமர்ந்து கொண்டபோது, அவன் அவளது மூக்கினைக் கண்டான்.

அவளது மூக்கு தைக்கப்பட்டி ருக்கிறது என அவன் நினைத்தான். அது மற்றைய மூக்குகளைப் போல ல்லாமல் இருந்தது. ஒரு தோட்டத் துக்கனியைப் போல. ஓ. அந்த மூக்குத்துவாரங்கள் அவை ஒரு சமச்சீராக இல்லையே. அவைகளின் இடையில் ஒற்றுமை இல்லை. ஒன்று ஒடுக்கமாகவும் முட்டைவடிவமாகவும் மற்றையது ஒரு பாதாளம் போல. அவன் தனது கைக்குட்டையை எடுத்து நெற்றியைத் துடைத்தான்.

"வெக்கையாக இருக்கிறது இல் லையா?" அவள் ஆரம்பித்தாள்.

"ஓம்" என்றவன் அவள் மூக் கைப் பார்த்தான்.

அது தைக்கப்பட்டிருக்கவேண் டுமென மீண்டும் நினைத்துக்கொண் டான். முகத்தில் அந்த மூக்கு அந் நியமான ஒன்றாகவிருந்தது. அதன் நிறம் அவள் தோளின் நிறத்திலும் மிக்க வேறாகவிருந்தது. அந்த மூக் குத் துவாரங்கள் மெய்யாகவே ஒற்றுமை அற்றிருந்தன அல்லது ஏதோவொரு புதுவிதத்தில் ஒற்றுமை கொண்டிருந்தன.

பிக்காசோவினுடையவைபோல்.

அவன் அதைச் சொன்னான்.

"யாரைச் சொல்கிறாய் பி-கா?"

"இல்லை அவனில்லை" என்று முணுமுணுத்தான்.

அவளுக்கு விபத்து ஏதும் நடந்



ததா என வினவினான்.

"ஏன் கேட்கிறாய்?"

"ஆகா. இந்த மூக்கிற்காக அப் படி நினைக்கிறாயா?"

"ஓம் ஓம். மூக்கிற்காகத்தான் கேட்கிறேன்."

"இல்லை. அது எப்பவும் இப்படித்தான்."

"அடக்கடவுளே" எனச் சொல்ல நினைத்தவன் சொல்லவில்லை.

"உண்மையாகவா?" என்றான். வியந்தான்.

நான் உண்மையில் ஒரு ஒற்று மையான ஒரு மனுசி. அவள் காதோடு கிசுகிசுத்தாள். நான் சமத் தன்மையை எப்படி நேசிக்கிறேன் என்று பார்க்கிறீர்களா. என் ஜன னல்கட்டில் உள்ள ஜெரெனியம் செடிகளைப் பாருங்கள், வலப்பு றத்தில் ஒன்று இடப்புறத்தில் ஒன்று. ஒரு சமச்சீராக. என்னை நம்புங்கள். எனக்குள் நான் வேறுவிதமானவள். நிறைய வித்தியாசமானவள்.

அவள் அவனது கைகளைப் பற் றினாள். அவளின் மிரண்ட விழிக ளின் நெருக்கம் பிடரிவரை உருகி ஓடுவதை அவன் உணர்ந்தான்.

நான் குடும்பவாழ்வை விரும்புகி றேன். ஒருவருடன் சேர்ந்து வாழ் தலை ஏற்றுக்கொள்கிறேன். மெல் லிய குரலில் இதைச் சொன்னாள். சங்கடப்பட்டாள்.

"அவற்றிலுள்ள சமத்தன்மைக்கா கவா?" என்று வினவியவனை,

"அவற்றிலுள்ள ஒற்றுமைக்காக" என்று திருத்தினாள்.

"மெய்யாகவே அதிலுள்ள ஒற்று மையை விரும்பலாம்" என்றான்.

அவன் எழுந்து கொண்டான்.

"நீங்கள் போறீங்களா? "

"ஓம்"

அவள் வாசற்கதவுவரை வந்தாள்.

"உண்மையில் உள்ளுக்குள் நான் வேறு விதமானவள்" அவள் மீண்டும் அந்தப் பேச்செடுத்தாள்.

"உள்ளுக்குள் நீ அந்த ஜெரெ னியம் செடிகளைப் போலச் சமச்சீரா னவள், நிறைய சமத்துவமானவள், அதைத்தானே சொல்கிறாய்? "

அவன் படிகளில் இறங்கிச் சென் றான். திரும்பிப் பார்க்கவில்லை.

அவள் ஜன்னலருகில் நின்று அவனைப் பார்த்தாள்.

அவன் கீழே நின்று கைக்குட் டையால் தன் நெற்றியைத் துடைப் பது தெரிந்தது. ஒருமுறை. இரு முறை. இன்னொருமுறை. ஆனால் அவன் துடைத்துவிட்டு நிம்மதியாகச் சிரித்ததை, கண்களை நீர் மறைத் திருந்ததால் அதை, அவள் காண வில்லை. அந்த ஜெரெனியம் செடிக ளும் சோகமாக நின்றன. அவற்றின் வாசம் மட்டும்மாறாதிருந்தது. ◆

ஜேர்மன் மூலம்: வோல்.ப்காங் போர்ஷட்
தமிழில்: சந்துஷ்

செ. கணேசலிங்கன்

அல்தூஸர் விளக்கிய கருத்தியல் அரசுயந்திரம்

மார்க்சியத்திற்குப் புதிய பங்களிப்புச் செய்தவர்களில் பிரெஞ்சு அறிஞர் அல்தூஸருக்கும் (1918-1990) பெரிய பங்குண்டு. மார்க்சியம் பற்றிய அவரது விரிவும் விளக்கங்களும் இன்று நிலைபெற்றுள்ளன. வரலாற்றை விஞ்ஞானமயப்படுத்தியதே வரலாற்றுப் பொருள்முதல்வாதம் எனவும் உலகை மாற்றியமைக்கும் மார்க்சின் சித்தாந்தமே இயங்கியல் பொருள்முதல்வாதம் எனவும் சுருக்கமாக மார்க் சியத்திற்கு விளக்கம் கூறினார்.

சமூகஅமைப்பை இறுதியாகத் தீர்மானிப்பது அதன் அடித்தளமான பொருளாதாரம் (உற்பத்திச்சக்திகளும் உற் பத்திஉறவுகளும்). இந்த அடித்தளம் மேல்மட்ட அமைப் பாக அரசியல் சட்டம் சார்ந்தவைகளையும் கருத்தியல்க ளையும் தீர்க்கமாக ஏற்படுத்திக் கொள்கிறது என்பது மார்க்சியத்தின் பிரதான கூற்றாகும்.

இக்கூற்றில் கருத்தியல்பற்றிய விரிவான விளக்கமாகக் கூறிய பெருமை அல்தூஸரையே சாரும். அவரின் பிற பங்களிப்பைவிட்டு இக்கருத்தியல்பற்றியே சில குறிப்புகள் இக்கட்டுரையில் கூற உள்ளேன்.

கருத்தியலை அரசுயந்திரத்தோடு இணைத்து கருத்தி யல் அரசுயந்திரம் என அல்தூஸர் விரித்துக் கூறினார். (கருத்தியலை (ideology) கருத்துநிலை, கருத்துருவம் என வும் சிலர் தமிழில் எழுதுவர்) அரசுயந்திரம் என்பதை இரண்டாகப் பிரித்துப் பார்க்கலாம். அரசு என்பது ஒரு பலாத்கார ஒடுக்குமுறை யந்திரம் என லெனின் 'அரசும் புரட்சியும்' என்ற தன் நூலில் கூறியுள்ளார். அடுத்தது கருத்தியல் சார்ந்த அரசுயந்திரம். அரசு என்பது வன்முறை யான வடிவம், கருத்தியல்கள் வன்முறையற்றவை என்று கொள்வோரும் உளர். கருத்தியல்கள் என்பன குடும்பம், மதம், சாதி, கல்வி, கலை இலக்கியங்கள், சட்டவிதிகள், இன, நிற, பால் பேதங்கள் என விரிக்கலாம். மேலோட்டமா கப் பார்க்கும்போது இவை வன்முறையற்றவைகளாகத் தோன்றலாம். ஆழ்ந்து நோக்கும்போது அவற்றுள்ளே ஏற்றத்தாழ்வுகளும் வன்முறைகளும் மறைந்துள்ளதைக் காணலாம்.

குடும்பம் என்ற அமைப்புக்குள்ளே ஆதிக்கஉறவுகள் நிலைத்திருப்பதை அறியலாம். தாத்தா, அப்பா, அம்மா, அண்ணா, தம்பி, தங்கையரிடை வீடுகளுக்குள்ளேயே ஆதிக்கஉறவுகளும் அவற்றையொட்டி வன்முறைகளையும் பார்க்கிறோம். மதம், பால்பேதம், கல்வி, உழைப்பு வாய்ப் புகளை ஒட்டியும் ஏற்றத்தாழ்வுகளையும் படிமுறை ஆட்சி யையும் குடும்பத்துள்ளே அவதானிக்கலாம். குடும்ப அமைப் புள் எவரும் சுதந்திரம் பெற்றுள்ளனர் என்று கூறிவிட முடியாது. குடும்பத்தின் பெயர்கள் ஒவ்வொரு நபருடனும் தொடர்கின்றன. தனிநபர் பெயர் எங்கும் பரவலாக அனும திக்கப்படுவதில்லை. அப்பா பெயருடன், திருமணமான பெயர் கணவன் பெயருடன் குடும்பத்தில் இணைக்கப்ப டுகிறது. ஐரோப்பிய நாடுகளில் குடும்பப்பெயர் பரம்பரை பரம்பரையாகத் தொடர்கிறது. அரசுயந்திரத்துடன் சட்டரீதி யாக குடும்பமும் பிணைக்கப்படுகிறது. பாஸ்போட், வருமான வரி, சொத்துரிமை, உறவுமுறைகள் யாவும் இணைகின்றன. (அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம். தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை என்பவை எமது குடும்ப அமைப் பைப் பேணும் கருத்தியல்கள்)

மதம் குடும்பத்துடனேயே தொடர்கிறது. மதம் ஆதிக்கம் மிக்க கருத்தியல், அபினி போல. குடும்பம், அரசு, சமூக உறவுகளுடன் ஆத்மாவையே மதம் பிணைத்து வைத்துள் ளது. நிலப்பிரபுத்துவ சமூகஅமைப்பில் ஆதிக்கம் செலுத் தும் கருத்தியல் மதம் என அல்தூஸர் கூறுவார். (முதலா ளித்துவத்தில் ஆதிக்கம் செலுத்தும் கருத்தியல்சட்டவிதி கள் என்பார்) மதவெறியால் ஏற்படும் வன்முறைகளை வரலாறு கண்டுள்ளது. ஐரோப்பாவிலேயே சிலுவை யுத்தம் 300 ஆண்டுகளாக நடந்ததை வரலாறு கூறும். மத்திய கிழக்கு, ஆபிரிக்கா, இந்தியா முதலிய நாடுகளிலே மதக் கலவரங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

அரசுயந்திரமே கல்விக்கொள்கையைக் கட்டுப்படுத்துகி றது. கல்வி முடிந்ததும் வேலையற்றவர் தெருவில் அலைய, ஒரு பகுதியினர் அரசுயந்திரத்துடன் இணைந்து இராணுவம், பொலிஸ், அரசுநிர்வாக அதிகாரிகளாக மாறுவர். இவர்க

இன்று படைக்கப்படும் கலை, இலக்கியங்களும் அரசு யந்திரத்துக்குச் சேவை செய்வதாகவே ஆக்கப்பட்டு வெளிவரும்.

கருத்தியல்கள் வெறும் கருத்துக்களாலானவை, விஞ்ஞானபூர்வமற்றவை, அநாதியாகத் தொடர்ந்து வருபவை. மக்கள் கருத்தியல்களின் ஆதிக்கத்தில் நடமாடுகின்றனர்.

ளால் பெரும்பான்மையோர் அடக்கி ஒடுக்கப்படுவர். முதலாளித்துவத்தின் லாபத்திற்காக யந்திரங்களில் கூலி அடிமைகளாக உழைப்பர்.

ஒரே கல்வி, இரு முரண்பட்ட வர்க்கமாக அரசுயந்திரம் பிரிக்கிறது. ஒரு பகுதியினர் உழைக்க; மறு பகுதியினர் அடக்கி ஒடுக்க. முதலாளித்துவத்தில் Grammer school என்ற ஆரம்பக்கல்வியை வலியுறுத்துவர். அறிவு வளர்ச்சிக்காக அல்ல, தொழிற்சாலைகளின், அரசுயந்திரத்தின் சட்டதிட்டங்களைப் படித்தறிவதற்காக என அல்தூஸர் கூறுவார். பள்ளிக்கூடத்து ஆரம்பக்கல்வியின் மூலமே முதலாளித்துவ சட்டங்களை மதித்து நடக்கவும் அவர்களது அரசியலின் புனிதத்தன்மையை ஏற்றுக்கொள்வதற்கும் கற்பிக்கப்படுவர். கல்விக்கூடங்கள் இதற்குத் துணைபுரியும்.

இன்று படைக்கப்படும் கலை, இலக்கியங்களும் அரசு யந்திரத்துக்குச் சேவை செய்வதாகவே ஆக்கப்பட்டு வெளி வரும். அரசு சார்ந்த சட்டவிதிகள் மீறப்பட்டால் தண்டனை கிடைக்கும்.

இந்தியா, இலங்கை போன்ற படிமுறைச் சமூக அமைப்பில் சாதி என்ற கருத்தியல் ஆழமாகப் பதிந்திருப்பதைக் காணலாம். உயர்ந்த சாதியினரே ஆட்சிப்பீடத்தில் அதிகாரத்தில் இருப்பதைக் காணலாம். (இலங்கையில் 'கொய்கம' உயர்சாதியினரின் ஆட்சியே 1948இல் சுதந்திரம் கிட்டிய காலத்திலிருந்து நடைபெறுகிறது. பிரேமதாசாவின் நாலு ஆண்டு ஆட்சி விதிவிலக்காகும். விதிவிலக்கு விதியாகாது)

வெள்ளைநிறத்தவரே உயர்ந்தவர். மனித இனத்தில் ஆண்களே முதன்மையானவர் என்ற கருத்தியல்களும் நிலைபெற்றுள்ளன. மனிதஇனம் தொடர்ந்து சமூகமாக நிலைபெற தேவையானவை இரண்டு. ஒன்று உணவு, இருப்பிடம், உடை, நீர் ஆகிய சமூக உற்பத்திகள். மற்றது மனித இன, உயிரின உற்பத்தி. சமூக உற்பத்தியிலும் குடித்தொகைப் பெருக்கத்திலும் ஈடுபடக்கூடியவர் பெண்ணினமே. (ஆணில்லாமல் குடிப்பெருக்கமில்லை என்று இன்றைய விஞ்ஞான உலகில் கூற முனைவது விதண்டாவாதம்)

ஜனநாயக மத்தியஸ்துவம் இல்லாத சமூகஅமைப்புகளில் தலைவர் கூறுவதே சரியான கருத்து, கட்டளை எனவும் கடைப்பிடிக்கப்படலாம். தனிநபர் வணக்கம் கருத்தியலாகும்.

கருத்தியல்கள் வெறும் கருத்துக்களாலானவை, விஞ்ஞானபூர்வமற்றவை, அநாதியாகத் தொடர்ந்து வருபவை. மக்கள் கருத்தியல்களின் ஆதிக்கத்தில் நடமாடுகின்றனர். இவ்வாறெல்லாம் கருத்தியல்பற்றி விரிவான விளக்கம்கூறி மார்க்சிய சிந்தனையை வளம்படுத்திய பெருமை அல்தூஸர் என்ற மார்க்சிய அறிஞரையே சாரும்.

அன்னாரின் இறுதிக்காலத்தில் நடைபெற்ற விபத்தான சம்பவம் அவரின் மார்க்சியத்திற்கான பங்களிப்பை எவ்விதமும் பாதிக்கமாட்டாது. ◆

அ.ஜ. கான்

தியாகிகளுக்கு வீழ்த்து

சொர்க்கங்களடைய வாழ்த்துகிறோம்
எப்போதும் எல்லா காலத்திலும்
எதிரியின் கையில்
மரணிக்கும் அனைத்து வீரர்களும்

போர்க்களத்தில்
சித்ரவதைக் கூடங்களில்
சிறைகளில்
ரத்தம் சிதறும் இவ்விடங்களில்
போராட்டம் மிகவும் துல்லியமானது
வீரனின் வாழ்வு அர்த்தம் பெறுகிறது
சோதனைக் காலங்களில்
தைரியமான இறுதி மூச்சுவரை
மரணத்திற்கு அப்பாலும்
தியாகிகளின் வாழ்வு உயிர்ப்பிக்கப்படுகிறது. ◆

ஜோஸ் மரியா சிசன் (பிலிப்பைன்ஸ்)
தமிழில் : அ.ஜ. கான்
நன்றி : Third World Calling

நா. கண்ணன்



கஸ்டானியா மனிதன்

வானம் பற்றி எரிவதுபோல் தோன்றியது. உதிர்காலச் செம்மை ஆடிக்கொண்டிருந்தது. கொற்றவையின் நர்த்தனம் போல். சிவப்பு, மஞ்சள், ரோசா இப்படி வண்ணஆடை கட்டிய கொற்றவையின் நடனம்போல், உதிர்கால மரங்கள் ஆடிக்கொண்டு இருந்தன. வாசலில் நின்றிருந்த காரின்மீது மஞ்சள் மழை பெய்ததுபோல் இலைகள். வாரக்கடைசி நாட்கள். தெரு பெருக்கப்படாமல் இலைகளின் கூத்தாட்டத்திற்கு மேடைகட்டியது போல் கிடந்தது. காற்றின் சுழற்சியில் இலைகள் மேலே பறந்தன.

வீட்டின் பின்புறமாகப் பார்த்தால் கஸ்டானியா மரம் கனிந்து கர்ப்பஸ் தீரிபோல் நிற்பது தெரியும். கர்ப்ப முற்றவள் நடக்கமுடியாமல் அசைவதுபோல் இம்மரமும் மெதுவாக ஆடிக்கொண்டிருந்தது. இலைகளின் ஆட்டத்திற்கு ஈடுகொடுப்பதுபோல் அங்கும் இங்கும் ஓடிக்கொண்டிருந்தது. புசுபுசுவென்ற அணில். இவ்வளவு பெரிய அணிலை நான் முன்பின் பார்த்ததில்லை. சோவியத் சிவப்பு. அது அடிக்கொருதரம் ஓடி வந்து கஸ்டானியா கொட்டைகளைப் பொறுக்கிக்கொண்டிருந்தது. புத்திசாலி அணில், வரப்போகின்ற பனிகாலத்தை எதிர்நோக்கி இப்போதே கொழுப்பு புரதம் நிரம்பிய கொட்டைகளை சேகரித்து வைத்துக்கொள்கிறது. அதற்கும் குழந்தை குட்டிகள் இருக்கும்தானே!

இந்த சிவப்பு அணில் வராத போது அவன் கொட்டை பொறுக்கிக் கொண்டிருந்தான் பரட்டைத்தலை. தலை வாருவதை மறந்திருப்பான் போலிருக்கிறது. அழுக்கான கால் சராய். மேல்கோட்டு லேசாக கிழிந்திருந்தது. கஸ்டானியா கொட்டைகளைப் பொறுக்கி கோட்டுப் பைக்குள் போட்டுக்கொண்டான். வீட்டின் கண்ணாடி சன்னலில் இருந்து பார்த்தால் எல்லாம் தெரிகிறது. இவனை எனக்குத் தெரியும். சனிக்கிழமை சாமான் வாங்கப்போகும்போது, இரண்ட கார்கள் நிற்கும் பாதாள அறை ஓரத்தில், மூத்திர நாற்றத்தில் புகைபிடித்துக்கொண்டு நிற்பான். கையில் எப்போதும் ஒரு பியர் டின் இருக்கும். சோகை பிடித்த கன்னத்தின் வழியே புன்னகை தருவான். பியர் வாங்கக் காசு இல்லாதபோது காரை நிறுத்திவிட்டு வரும் என்னிடம் காசு கேட்பான். ஒன்றோ, இரண்டோ அவன் அதிர்ஷ்டத்தைப் பொறுத்து கிடைக்கும். மறக்காமல் நன்றி சொல்வான். அவன் முரட்டு நாயை ஒதுங்கி இருக்க கட்டளையிடுவான்.

இவன் பொழப்பே பிச்சை எடுக்கும்போது அவன் நாய் வைத்திருப்பது ஆச்சர்யமாக இருக்கும். சும்மா, சோணி நாயல்ல. நன்கு வளர்ந்து திடகாத்திரமாக இருக்கும் நாய். அந்த நாயிற்கும் சேர்த்து பிச்சை எடுக்கிறானோ என்னவோ. நாய் அவனுக்கு நன்றியுடன் இருக்கிறது. இவன் நமக்கு நன்றியுடன் இருக்கிறான். இரண்டுமே நன்றியுள்ள ஜீவன்கள்தான். சில நேரங்களில் பளபளக்கும் லெதர் பேண்ட்டும், பெரிய வெள்ளி முத்திரைகொண்ட பெல்ட்டும் அணிந்த பெரு முலைப் பெண் அவனுடன் நிற்பது உண்டு. அவளிடமும் ஒரு நாய் உண்டு. இந்த நாய் இருப்பது அவர்களுக்கு ஒரு கௌரவத்தைக் கொடுக்க வேண்டும். இல்லையெனில் உள்ள சம்பாத்தியத்தின் (அது என்ன?) கால் பங்கு நாய் வளர்க்கக் கொடுக்கமுடியுமோ? முடிகிறது இந்த தெருவோர ஜேர்மானியர்களால்.

இதில் பணக்கார ஜெர்மானியனுக்கும் ஏழை ஜெர்மானியனுக்கும் வித்தியாசமில்லை. நாய் ஒரு அந்தஸ்து. காசு உள்ளவனிடம் ஒரு மெர்சிடஸ் கார் இருக்கும். அதில் ஒரு நகக்கீறல் கூட இல்லாமல் பளபளக்கும். நல்ல உயர்ஜாதி நாய் இருக்கும். சிலநேரங்களில் மனைவி இருப்பாள். எப்போதாவது குழந்தை இருக்கும். ரயில்வே ஸ்டேஷனில் உள்ள ஒரு பெரிய போஸ்டர் சொல்கிறது, உங்கள் நாயைவிட குழந்தை முக்கியமில்லையா? குழந்தைகளுக்கான நேரத்தைக் கொடுங்கள் என்று. பலர் நினைக்கிறார்கள் பொஞ்சாதி பிள்ளைகளைவிட நாய் நன்றி உடையது என்று.

அதனால்தான் அவனிடமும், அவளிடமும் நாய் இருந்தது. சில நேரங்களில் நாய்கள் சண்டை போடும். நாய்களை வைத்து இவர்கள் சண்டை போடுவர். போவோர் வருவோர் மரியாதையாக விலகி நடப்பர். நாய்களினால் மரியாதையும் வருகிறது அவர்களுக்கு.

கஸ்டானியா கொட்டைகளை மாலையில் பியர் குடித்து வறுத்துத் தின்பான். அப்போது அந்த புகையும் மணமும் காற்றுடன் கலக்கும்.

இலைகள் உதிர்ந்து, மழையில் மக்கி, பனிக்காலமும் வந்துவிட்டது.

பனிக்காலம் பெரிய தொல்லை பிடித்த காலம். கழுத்தில் ஒன்று, காதில் ஒன்று, தலையில் ஒன்று, உடம்பில் ஒன்று என பல வகையான உடைகளை அணிந்து, கை மரத்துப் போகாமல் உறைபோட்டு, காலில் தடிப்பான பூட்ஸ் போட்டு இராணுவ வீரன் போல் தினம், தினம் நடக்கவேண்டும். இத்தனை கனத்தையும் சுமந்ததால் மாலையில் உடல் வலிக்கும். சூடான நீரில் சுகமாய் குளித்தால்தான் அலுப்பு நீங்கும். காரில் அமர்ந்து, கார் சூடாவதற்குள் உடல் விறைத்துவிடும்.

பனிபெய்த ஒரு நாள், இப்படி காரில் பயணித்து வேலைக்கு வந்த போது கார்கள் நிறுத்தும் அடிப்பகுதியில் அவனைப் பார்த்தேன். கடற்கரை பார்த்து இருக்கும் அப்பெரிய கட்டிடத்தின் அடிப்பகுதி. கடல் காற்று உள்ளே பரவி குளிரை அதிகப்படுத்திக்கொண்டிருந்தது. கொஞ்சம் பாதுகாப்பான மூலையில் அவன் அடுப்பை மூட்டி சமையல் செய்து கொண்டிருந்தான். அவனது பெண் துணையும், நாய்களும், வேறொருவனும் கூட இருந்தனர். எல்லோரும் சேர்ந்து பலமாக பேசிக் கொண்டு பொழுதைப் போக்கிக் கொண்டிருந்தனர்.

நான் அவர்களைப் பார்த்தவாறே அலுவலகத்திற்கு இட்டுச் செல்லும் மின் உந்து அறையில் (லிப்ட்) ஏறினேன். தொடர்ந்து பல உயர் அதிகாரிகளும், தொழில்நுட்ப வல்லுநர்களும் ஏறினர். பலர் தங்கள் கோட்டில் கஸ்டானியா மனிதனின் சமையல் வாசனை ஒட்டிக்கொண்டு இருப்பதாக முகம் சுளித்தனர். சிலர், எப்படி சத்தமாக சமூக ஒழுங்கு இன்றி பேசிக் கொள்கின்றனர் என்றனர். சிலர் இந்த வீடற்ற கபோதிகள் இங்கு ஏன் வந்தனர் என்றனர். நம் வரிப்பணத்தில் இவர்களுக்கு மாசக்காசு கொடுத்து, தேவாலயங்களில் உணவு கொடுத்து, இருக்க இடம் கொடுத்தால் கூட வெளியேதான் வாழ்வேன் என்று சொல்லும் இவர்கள் பிடிவாதத்தைப் (சுதந்திரத்தை அல்ல) பற்றி பேசினார்.

இப்படியாக பல பேசி சூடுபடுத்தப்பட்ட அறைகளில் அவரவர் நுழைந்தனர்.

காபி குடிக்கும் இடைவேளை நேரத்தில் வெளியே பார்த்ததில் பனி ஏகமாய் பெய்துகொண்டு இருந்தது. கார்கள் ஆமைவேகத்தில் நகர்ந்துகொண்டு இருந்தன. காற்று வீசி குளிரை அதிகப்படுத்திக் கொண்டிருந்தது. மாலையில் வேலை முடிந்து வெளியே பார்த்தபோது வானம் கருத்திருந்தது. கார்களின் போக்குவரத்து சுத்தமாய் ஸ்தம்பித்துப் போயிருந்தது. சக அலுவலர்கள் இச்சேதியை முன் அறிந்து வெளியேறி இருந்தனர்.

நான் கடைசியாக வெளியேறி காரை எடுக்க வந்தபோது பளிச் பளிச்சென்று விளக்கொளியுடன் ஆம்புலன்ஸ் கார் அங்கு நின்றிருந்தது. கஸ்டானியா மனிதன் கட்டைபோல் கிடந்தான். அவனை ஏற்றிக்கொண்டு போனபின் நான் அவனை மீண்டும் பார்க்கமுடியவில்லை.

அடுத்த வருடத்தில், இவர்கள் தற்காலிகமாய் குளிர்காலத்தில் ஒண்டிய இடத்தில் சைக்கிள் நிறுத்த வசதிகள் செய்யப்பட்டு நிறைய சைக்கிள்கள் நின்றன. ◆



ஓவியம்: **VEESHMAN (age 11)**

ஒரு பரிமாணமும்.... மூன்று பரிமாணமும்....

இரண்டு தர ஆறு பன்னிரெண்டு.
மிச்சம்....
என்ன பிறகு மிச்சம்?
நரகம்....!
விளங்கியும்,
விளங்காமலும்!
பரமண்டலத்தில் இருக்கும் பிதாவே....
கனியைத் 'திண்டும்'
நிர்வாணம் தெரியிதில்லை.
இலட்சியம் [.....]
. ? ! [.....]

உடைமைகள் பூத்த அறம் பல்வேறு அர்த்தத் தேய் மானங்களோடு - இலட்சியமாய் இன்றும் நீடிக்கவே செய் கின்றது.

மேற்கில் இருந்து சிந்திப்பதால் உலகம் தன்னை உதிர்த்தி முளைவிடுவதாகத் தெரிகின்றது. இருக்கும் இடத் தில் இருந்து சௌக்கியம் கேட்டால்...? தேவை... சமூக-உயிரியல் விஞ்ஞானிகள் தேவை! எந்தப் பண்பாட்டுத்த ளத்தில் கை வைத்தால் குரல் வெடிக்கும் என ஆய்வு செய்ய...!

உலகச்சமுதாயம் அனைத்தும் தமது நாட்டு மரபியல் 'மாந்திரிக'வசப்பட்டு, அதுவே தலை எழுத்து எனவும், விதி எனவும், எல்லாம் அவன் பார்த்துக்கொள்வான் எனவும் எதிர்ப்புணர்வற்று, கேள்விக்குட்படுத்தாமல், பெரும்பான்மை யினர் சகித்துப்போகின்றவர்களாகவே வாழுகின்றனர். சமு தாயங்கள் அனைத்தையும் மையப்படுத்தியிருப்பது, தனியு டைமைச் சமுதாயக் கருத்துருவமே.

பொதுவாக தனியுடைமைச்சமுதாயக் கருத்தியலானது மனிதனை நகர்த்தி எந்த இடத்தில் நிறுத்தியுள்ளது என்பதே இப் பிரதியின் சுருக்கம். அனைத்து ஊடகங்களினாலும் நிருபணமானது போல் புனைவும், சித்தரிப்பாகவுமே இது இருக்கலாம். பல்வேறு சாத்தியப்பாடுகளில் ஏன் இதுவும் ஒன்றாக இருக்கக்கூடாது? அல்லது இதுவா நிரந்தரம். சப்பித் துப்பிடலாம்.

மனிதஇனம் தோன்றி மில்லியன் வருடங்களையும், நாக ரீகம் நிறுவப்பட்டு ஆயிரக்கணக்கான வருடங்களையும் உருட்டித்தள்ளி, கேள்விகளுக்கெல்லாம் விடைகள் எழுதி, சூரியனின் கேள்விக்கு முடிவுரை எழுத சமுதாயம் ஒன்று நிமிர்ந்து நிற்கின்றது.

எந்தச் சமுதாயத்தில் வாழ்ந்துகொண்டு இருக்கின் றோமோ, அச்சமுதாயக் கருத்தியலின் ஊடாக எதை ஏற் பது, எவற்றைப் புதைப்பது, எதனுடன் சமரசம் செய்வது...? அனைத்தையும் உதறி உரிந்து அம்மணமாய் நிற்க நாம் தயாரா?

கருத்தியல் மாற்றத்திற்கான சாத்தியப்பாடுகள் அரசிய லின் ஊடாகவா/கலை இலக்கியங்களின் ஊடாகவா! அரசி யலின் ஊடாகவே என கொடி உயர்த்தியவர்கள் எல்லோ ரும் அம்பலப்படுத்தப்பட்டு முச்சந்தியில் நிற்கும் காலம்.

மேலாண்மை நிரம்பிய சமுதாயக் கருத்தியல் நிர்வாக அதிகாரத்தைக்கொண்ட அரசு, அரசியல் அதிகாரத்தை இல்லாமற் செய்கின்ற இறுதியான நோக்கம் பற்றிய பிர க்ஞை இல்லாமல், நிர்வாக அதிகாரத்திற்கான போராட் டமாகவே சர்வதேசரீதியாக மையப்படுத்தப்பட்டு, அதி காரமாக, அதிகாரத்தை நோக்கிய தனிமனித இலட்சியமாக நிர்மாணிக்கப்பட்டாகிவிட்டது.

மாற்றுக் கலாச்சாரத்திற்கான முதற்பணியே அரசிய லைத் தோலுரித்துக் காட்டுவதாகத்தான் இருக்கமுடியும். சமுதாயப் பொதுச்சிந்தனையை உள்ளடக்கிப் பேணிப்பாது காக்கும் பணியை அரசு, அதிகார நிறுவனங்களின் ஊடாக தனது மேலாண்மை நலன்களுக்காக எல்லாவிதமான சாத் தியப்பாடுகளின்மூலமாகவும் மேற்கொள்ளும். இத்தீர்மானப் புரிதலுடன், சமுதாயக் கருத்தியல்மாற்றத்திற்கான குரல்கள்

'வாழ்க்கையை முன்தள்ளும் நிர்ப்பந்தக் கருத்தி யலாக, ஆளும் கருத்தியலுக்கு, அதன் விருப்பத் திற்கு ஆட்படுத்தக்கூடியதாக உருவாக்கும் முயற்சி கள் அனைத்தும் வெட்டிப் புதைக்கப்படவேண்டி யவை' என கலை இலக்கியங்களினூடாக முகம் காட்டுகின்றோம்.

பெரும்பாலான தமிழிற்கான பின்நவீனத்துவ விநி யோகமானது, அரசியல் ஊடாக தோற்றம்பெற்ற தீவிரம், அதிகாரம் போன்ற கருத்தியல் வியாதிகளை உள்வாங்கிப் பரப்புவதற்கான அறிகுறிகளை பார் வைக்கே தெரியக்கூடியதாக தன்னை அடை யாளப்படுத்தி முன்தள்ளுகின்றது.

ஓங்கி ஒலிக்க இன்று கலை இலக்கியமே வாழ்க்கையின் நிர்ப்பந்தம் என ஊசலாடும்தன்மை முற்றாக மறைந்து போகாமல், ஆக்கிரமிப்பைத் தொடர்ந்து பேணும் இச்சமுதா யக் கருத்தியலின் இலட்சியங்களை முன்தள்ளிக கொண்டே!!! "வாழ்க்கையை முன்தள்ளும் நிர்ப்பந்தக் கருத்தியலாக, ஆளும் கருத்தியலுக்கு, அதன் விருப் பத்திற்கு ஆட்படுத்தக்கூடியதாக உருவாக்கும் முயற்சிகள் அனைத்தும் வெட்டிப் புதைக்கப்படவேண்டியவை" என

கலை இலக்கியங்களினூடாக முகம் காட்டுகின்றோம்.

மரபிலக்கியங்கள், பின்பு நவீன கலை இலக்கியங்களாக இன்று நவீனத்தைக் கடந்து தலித்தியம், ஆதிக்கக் கருத்தியலின் மனிதவிரோத குரூரங்களை அம்பலப்படுத்தி புஜபலம் கொண்டதாக இச்சமுதாயத்தில் பின்நவீனத்துவமாக வேர் விட்டுப் பரவுகின்றது. (நாளை என்ன'வீனமாகுமோ')

பின்நவீனத்துவமானது பல்வேறு அலகுகளின் ஊடாக, அனைத்து வகையாலும் சமூக அங்கீகாரம் மறுக்கப்பட்ட இனங்களின் நம்பிக்கைக்குரியதாக தன்னை முன்னிலைப்படுத்தி, தொடர்ந்து அவர்களின் இருப்பிற்கான எல்லை நோக்கி நகர்த்தப்படவேண்டும் என்பதில் எந்தவிதமான மாற்றுக் கருத்தும் உட்புகுந்துவிடமுடியாது. ஆனால்...! பெரும்பாலான தமிழிற்கான பின்நவீனத்துவ விநியோகமானது, அரசியல் ஊடாக தோற்றம்பெற்ற தீவிரம், அதிகாரம் போன்ற கருத்தியல் வியாதிகளை உள்வாங்கிப் பரப்புவதற்கான அறிகுறிகளை பார்வைக்கே தெரியக்கூடியதாக தன்னை அடையாளப்படுத்தி முன்தள்ளுகின்றது.

அதில் முதன்மைப்படுத்தி நிற்பதானது, தலித்திய-பின்நவீனத்துவ இலக்கிய எழுத்தாளர்களின் 'முறுகல்' பரிமாற்றம்; புனைவினதும், சித்திரிப்பினதும் விபரீதங்களாகவுள்ளது.

பின்நவீனத்துவ எழுத்தாளர்களின் ஆக்கங்களுக்கிடையிலான விமர்சனங்கள் பல தலித்திலக்கிய குழுமனப்பான்மை தோற்றம் பெறுவதற்கான வாய்ப்புகளை நிரப்பிக் கொண்டே, ஆதிக்க இலட்சியத்திற்காகவே தமது வாழ்க்கையின் அனைத்து மதிப்பீடுகளையும் தோற்றுவிக்கும் வாய்ப்பின் ஊடாக, இச் சமுதாயக் கருத்தியலானது தலித்திலக்கியமும் பிளவுபடும் வாய்ப்பை உருவாக்கும்.

எந்த இடத்தில் இருந்து எதை நகர்த்த நினைத்தார்களோ, அந்த இடத்தில் தம்மை இருத்தும் செயலாகிவிடும். இன்றைய முற்போக்கின் பொதுக் கருத்தியலாய் உருமாறிய இலட்சியம் பன்முகப் பேச்சுக்களால் உணர்ச்சிகரமான ஒருமைப்பாட்டை உருவாக்கி, சமூகத்தோடு வாழாமல், 'சமூகத்துள்' வாழ நிர்ப்பந்திக்கும்.

விட்டு விலகாமல் முதுகுகளுக்கு (.....) பின்னால் மறையாமல், எந்த அவசியத்தை ஏற்படுத்தியதோ அதற்கான எல்லையை நெருங்க முன்நிபந்தனைகளாக சிலவற்றை நெருங்கித் தாண்டியே நகரமுடியும். "அனைத்து அதிகார நிறுவனங்களோடும் உறவாடிக்கொண்டிருக்க நாம் தயாரில்லை" என்பது 'சமூகத்துள்' வாழும் கோட்பாடாக போர்த்தியிருக்கலாம். நாம் சமூகத்தோடும் வாழவேண்டும்!

மாற்றப்படவேண்டும், தகர்க்கப்படவேண்டும் என்கின்ற இன்றைய சமுதாயக்கருத்தியலானது மனித சமூகங்களை பல்வேறு நிறுவனங்களின் ஊடாக பிளவுபடுத்தியே தன்னைப் பாதுகாத்துக்கொள்கின்றது. இலகுவானதும், முதன்மையானதுமான மதங்களின் ஊடாக அங்கீகரிக்கும் நிர்ப்பந்தக் கருத்தியல் நிகழ்ந்துகொண்டுதான் இருக்கின்றது.

"பிரான்சில் மட்டும் 8இலட்சம் மக்கள் பேய்ஆடும்/சாமிஆடும் நம்பிக்கைக் கருத்துக்களை உள்வாங்கி மூளைச்சலவைக்குள்ளாக்கப்படுகின்றார்களாம். உலகம் முழுவதுமாக 120மில்லியன் மக்கள் பேய் ஆட்டும் பூசாரிகளால் தீர்மானிக்கப்படுபவர்களாகவே மாறி உள்ளார்கள் எனத் தகவல்கள். பல மில்லியன் மக்கள் இரண்டாயிரம் ஆண்டை எதிர்கொள்வதற்காக விபரீதமான முடிவுகளை மேற்கொள்ள தங்களைத் தயாராக்கிக் கொண்டிருக்கிறார்கள்"

மேற்படி சமூகங்கள் பிற்போக்கான சமுதாயக் கருத்தியல் நிறுவனங்களால், சமுதாயப்போராட்ட உணர்விற்குத் தடையாக இருப்பதை உணர்வதோடு, அவர்களுக்கான, அவர்களின் வாழ்வின் அர்த்தத்தை உணரத்தூண்டும் சமுதாயக்கருத்தியல் மாற்றத்தின் அவசியம் கருதுவதோடு மட்டும் அல்லாது எல்லாவித அதிகார நிறுவனங்களுக்குள்ளும் நசிந்திருக்கும் சமூகத்தோடும்தான் வாழ்வின் நிர்ப்பந்தம்

("இப்பிரதியின் தொண்டைக்குள் ஏகாதிபத்தியக் கயிறு" ஹ....ஹ்ம்....ஹா....)

அனைத்து ஊடகங்களின் மதிப்பீடுகளும், புனைவும் சித்தரிப்புமாகவே உள்வாங்கப்படுகின்றது. எழுத்தாளனின் நோக்கம் புரிதல்களினால் சிதைக்கப்படுவது நிகழ்ந்து கொண்டிருக்கிறது. எழுத்தாளன் சுதந்திரமாக, சாத்தியப்பாடுகளாக முன்வைப்பவைகளை நிராகரிப்பதென்பது ஊடகங்களினாலான பிம்பம், புனைவு, சித்தரிப்பு போன்ற வைகளும் காரணமாகும்.

Xம் Yம் உரையாடினால் ஒன்று முரண்பாடு தெரியும்/உடன்பாடு புரியும் இதை பரஸ்பரம் மதிப்பளிக்கும் உரையாடல்களின்மூலமாக நெருங்க முடியும். ஊடகங்களினாலான பிரதிபலிப்புக்குள் மயங்குவதும், புலம்புவதும் இச்சமுதாயக் கருத்தியலின் தொங்குதசைக் குணாம்சமாகத்தான் இருக்கமுடியும். இயங்கியல் தொடர்புடையவையாக சாம்பல்பூக்க மறுக்கும் நெருப்பாக தடம் பதித்து, பரிமாணப் பரவலின் ஊடாக மாற்றுச் சமுதாயத்தின் அவசியத்திற்கான முன்தள்ளும் பணியை, தரமான இலக்கியப் பரிமாற்றங்களின் ஊடாகவே விரிவுபடுத்தலாம். ◆

ஓவியம்: **VEESHMAN (age 11)**

இரா. இரவீந்திரன்

தள்ளுபடி புத்தகக் கண்காட்சி

★ வரிசைக் கிரமமாய்
வர்ணமயமாய்
புத்தம் புதியதாய்
புத்தகங்கள் பல கிடந்தன...
மூளையை மூடிய
நூலாம்படைகளைத்
தூசி தட்டி
தூய்மைப்படுத்தும் புத்தகங்கள்...

★ கனத்த கண்ணாடியுடன்
கரிய குறுந்தாடியுடன்
நீண்ட தோள்பையுடன்
பொதுவுடைமைவாதிகள்
மார்க்ஸையும், எங்கெல்சையும்
புரட்டிக் கொண்டிருந்தனர்...

★ நெற்றியில் நீறுடன்
விழிகளில் வழியும்
தெய்வீகத் தன்மையோடு
பகவத் கீதையையும்
பாகவதம், பாசுரம்
விவேகம் ஆனந்தமென
புத்தகங்களை தேடித் திரட்டி
பெற்றனர் சிலர்...

★ கறுப்புச் சட்டையுடன்
நாத்திகமே நன்மையென
பெரியாரின் பேருண்மைகளை
புரட்டிக் கொண்டிருந்தனர்
சிலர்...

அகிம்சையே அகிலம் உயர
அற்புத வழியென
அண்ணலின் புத்தகங்களை
ஆய்ந்தனர் சிலர்...

★ ஓஷோவின் காத்திருப்பில்
உருகிப்போய்
நூல்களைப் புரட்டினர் சிலர்...

★ கபிலர் தொட்டு கல்யாண்ஜீ வரை
கவிதைகளைத் தேடித் தேடிக்
களைத்தனர் பலர்...

★ மூளையை மூடியிருக்கும்
நூலாம்படைகளைத்
தூசி தட்டி தூய்மைப்படுத்தும்
புத்தகங்கள்...

★ புரட்டியவற்றையெல்லாம்
தங்களோடு
திரட்டிக் கொண்டே
சென்றனர்...

★ தேநீர் குவளைகளைக்
கழுவவும்...
நூல்களின் மீது
படியும்
நூலாம் படைகளைத்
தட்டவும்,
துடைக்கவும் செய்யும்
எட்டு வயதுச் சிறுவனை
யாரும் கவனிக்காமல்
ஓ! இதுதான்
தள்ளுபடி
புத்தகக் கண்காட்சியோ...?

தனி இருக்கும் இடம் கூட...

காலம்: 1999ம் ஆண்டின் தை மாத நாளொன்று, காலை 10மணி

இடம்: **ஒரு ஜெர்மன் நகர** மாவட்ட நீதிமன்றம்.

சரியாக 9.40க்கெல்லாம் சந்திரன் ஒரு 100வருடங்களை தாண்டியிருந்த அப்பழங்காலக் கட்டிடத்துள் வந்தான். ஜெர்மனியில் வாழும் இந்த மூன்று வருடங்களுக்குள் அவனும் இந்த நாட்டிலே சில நீதிமன்றப்படிகளில் ஏறி இறங்கியிருக்கின்றான். ஆனால் இன்று நடைபெற இருக்கின்ற வழக்கின் விடயமோ வேறு. மனசுள் குளிர் பாய்ந்த மறுகணமே "அவன்களுக்குத் தண்டனை வேண்டித் தரவேண்டும்" ஆத்திரம் திரண்டு தலை கொதித்தது. இந்த வழக்கால் எழப்போகும் விளைவுகளும்கூடப் பயங்கரமாகத் தெரிந்தது! ஆனால்.... உலகத்தின் எந்த மூலைக்குப் போனாலும் அவனை நிழலாய்த் துரத்திவரும் அந்தீகள்.... உடம்பில் உயிரில் ஊறிப் போயிருக்கும் இந்தத் திமிர்கள்.... காலம் காலமாய் திரண்டிருக்கும் இந்த ஆல கால விஷத்தை எத்தனை அரக்கர்கள் கடைந் திருக்கவேண்டும்!

வழக்கு நடைபெறும் அறையைக் கண்டு பிடித்துவிட்ட நிம்மதியில் அறைக்கு முன்னாலிருந்த கதிரையொன்றில் உட்கார்ந்தான். 10நிமிட இடைவேளையின்பின் ஒரு போலிஸ்காரன் வந்தான். சந்திரன் அவனைப் பார்த்தான். அவன் காலைவணக்கத்தை இவனுக்குத் தன் தொண்டைக்குள் சொல்லியபடி இவனைப் பார்த்து தலையை அசைத்தான். சந்திரனுக்கு இவனை ஞாபகம் வந்தது. சந்திரன் வைத்தியசாலையில் இருந்த போதும், பின்னர் காவல்நிலையத்திலும் தன்னிடம் வாக்கு மூலம் எடுத்த அதே போலிஸ்காரன் இவன். அவன் என்னவோ முணுமுணுத்தான். சந்திரன் அதனைக் காது கொடுக்க முற்பட்டாலும் அது சரியாக பிடிபடவில்லை.

10.05 ஆகியிருந்தது. *(நீதிபதியின் மொழி உருவத்தில்)* கணா.பாதி.பி.ள்.ளை. சிவா.சோ.தியனதும் தா.மோ.த.ரம் சிவா.னா.டியான் இனதும் குற்ற விவகாரம் சம்பந்தமாக சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் உள்ளே வரவும். ஒலிபெருக்கியில் அறிவிக்கப்பட்டது. சந்திரன், போலிஸ்காரன் அந்தப் பாரமான கதவைத் திறந்துகொண்டு உள்ளே போனார்கள். இவர்கள் இருவரும் வணக்கம் கூறி உட்கார தாமோதரனும், சிவசோதியும் மிக வேகமாக உள் வந்தனர். இவர்கள் எங்கேயோ இந்தக் கட்டிடத்தின் மூலையொன்றில் பதுங்கி இருந்திருக்கவேண்டும்! இல்லாவிட்டால் கூப்பிட்ட குரலுக்கு இங்கு தோன்றியிருக்கமுடியாது. *(சந்திரன் நினைத்தான்)*

சிறிய மேடையின் நடுவிலே நீதிபதி, பின்னால் சுவரில் நீதித் தேவதை. அவள் கண்கள் கட்டப்பட்டு, கையில் தராசு -"இந்தா நீதியைப் பிடி" - தோற்றம்.

நீதி: குற்றம் சுமத்தப்பட்டிருக்கும் கணா.பாதி.பி.ள்.ளை சிவா.சோ.தி தா.மோ.த.ரம் சிவா.னா.டி.யான் இங்கு முன்னால் வந்திருங்கள். சாட்சிகளாகிய மாரி.மு.த்து சந்திரா. தா.சான், மையர் (போலிஸ்காரர்) தயவுசெய்து வெளியே இருங்கள். நீங்கள் உண்மையையே உங்கள் சாட்சியத்தில் கூறவேண்டும். கூட குறைய சொல்லக்கூடாது. *(சந்திரன் நினைத்தான்: எனக்கு நடந்த கொடுமைகளில் கூட்டல் கழித்தல்களே இல்லை. அவைகள் பெருக்கமோ பெருகியவாறே இருக்கின்றனவே!)* நீங்கள் சொன்னவை உண்மையெனச் சத்தியம் செய்யப்பட்டு பின்னர் அவை பிழையெனக் கண்டுபிடிக்கப்பட்டால் தண்டனை வழங்கப்படும். சந்திரனும் போலிஸ்காரனும் வெளியே வந்தார்கள். சந்திரன் போலிஸ்காரனுக்குப் பக்கத்திலிருந்த கதிரையில் அமர்ந்தான். இவன் நடந்த சம்பவத்தை மீட்டுப்பார்த்தான். தன் நெற்றியில் தளும்போட இருந்த காயம், இடுப்பில் இன்னும் அவதிப்படுத்தும் வலி, 6மாதங்கள் கடந்தும் இடதுமுழங்கால் வலி படுத்தும் பாடுகள் அவனை இன்னும் வாட்டி எடுக்கின்றபோது அந்த சம்பவம் ஒவ்வொன்றும் நேற்று நடந்ததாய்... எனக்கு விழுந்த அடிகள் உதைகள் கொடுமைகள் யாவும் எதற்காக? அதற்கு முன்னரும், சிவசோதியும் தாமோதரனும் அவன் பொருட்களை எடுத்து அந்த அறைமுழுக்க வீசியது. அவனுடைய சாப்பாட்டுப் பாத்திரங்களை குப்பைவாளியில் போட்டிருந்தது. பொது மலசலகூடத்தை, குளிப்பறையை, அறையை துப்புரவாக்குவது சந்திரனுடைய கடமை என்று அட்டகாசம் புரிந்தது. இவன் வேலைக்குப் போய் வந்து படுத்திருப்பான். பல சமயங்களில் நடுநிசியில் திடீரென முளைப்பான்கள் இந்த ஆறுமுகம் பரம்பரை. அறைக்குள் வந்து தமிழ்சினிமாப் பாணி வில்லன்களாக மாறி சத்தம்போட்டு அகங்காரமாய் கேலியாய் சிரித்து சினிமாப்பாட்டை சத்தமாய் வைத்து, அது பக்கத்துரும்காரனை ஆத்திரப்பட வைத்து, அவனோடு சண்டை பிடித்து, அவனுக்கு ஏச வேண்டிய தூசணத்தையெல்லாம் இவனுக்குத் திருப்பி, இவன் படுத்திருக்கும் படுக்கையை உதைந்து, உதைந்து.... இவன் தன்னந்தனியாய் எதிர்த்துப் பேச பயந்து, வெளியேறவும் முடியாமல் போர்வை மெத்தையை தலைமுழுக்க இழுத்திப் போர்த்தியபடி, நடுங்கியபடி படுத்து கிடப்பான். இந்த இரவில் யார் வீட்டுக் கதவைத் தட்டமுடியும்?

அதிகாலையில் எழுந்து வேலைக்குப் போகவேண்டிய அந்த நாட்கள் கெதியாகவே விடிந்திடாதோ எனத் தூங்காமலே கழிந்த இரவு. பயங்கரங்கள் பல. ஒவ்வொருநாளும் வேலைவிட்டு வந்து அறைக்கத வைத் திறக்க முன்பு இவன்கள் வந்திருக்கிறான்களா என்று கதவில் காதுவைத்து உறுதிசெய்தபின்னரே அறையைத் திறப்பது. அவன்கள் இருப்பது தெரிந்தால் ஓசைப்படாமல் வெளியேறி, ஆளைக் கசக்கும் குளிரில் அலைந்து.... 20கிலோமீட்டர் தொலைவில் வாழும் நண்பனுக்கு போன்பண்ணி.... அவன் 'ஓம்' என்றால் அவனுக்கு இடைஞ்சல் தரக்கூடாது - பிடிவாதத்தில் - ஒரு மணித்தியாலத்துக்கு ஒன்று ஆகப் போகும் பஸ் போக்குவரத்தில் கடைசி பஸ் பிடித்து.... மனைவியோடு வாழும் அவன் வேண்டா வெறுப்பாய் இவனுக்குப் படுக்க இடம் தருவது.... முடியாத பட்சத்தில் இவனும் அந்தக் கிளையைப் பற்றிக் கொள்வது....

இப்படி எத்தனையோ ஆத்திர இரவுகள் அவனை அலைக்கழித்தன. இது அவன்கள் அங்கு வந்து போகும் நாட்களில் தவறாமல் நடைபெற்றது. அவன்கள் எப்போ வருவான்கள் போவான்கள் என்பது தெரியாத விடுகதையாய் இருந்தது. தனியனாய் வீதியில்- இரவில், பகலில் - நடந்த போதெல்லாம் நடுங்கிக்கொண்டே இன்னும் போய்க்கொண்டிருக்கிறான். வீதியில் வைத்தும் இவன்கள் எதிர்ப்பட்டால் ஏச்சுகள், வசவுகள். இவனுக்கு மட்டுமில்லாமல் இவன் பரம்பரைக்கும் சேர்ந்து விழுந்தன. அவனுக்கு அரசியல் தஞ்ச அலுவலகம் தந்திருக்கும் இடமோ ஊரின் ஒதுக்குப்புறத்தில் இருந்தது. அந்த ஊர்மக்களின் இருப்பிடங்களை விட்டுத்தள்ளி அகதிகளுக்காக அமைந்த அந்த வசிப்பிடம், தாயகத்திலே ஒதுக்கப்பட்ட சாதியினர் இருக்கவேண்டிய இடமாகத் தெரிவு செய்யப்பட்டிருக்குமே அந்தமாதிரியான ஒரு மீள்சோகத்தை அவனுள் அது ஏற்படுத்தியிருந்தது. அங்கிருப்போர் அநேகமாய் நண்பர்கள் உறவினர்கள் வீடுகளுக்குப் போவதுமாய் வருவதுமாய் அலைந்துகொண்டிருப்பர். தனக்கு அப்படி யாராவது இருந்தால்.... அந்த நினைப்பே சந்தோசம் தந்தது. அங்கு வாழ்ந்த தமிழர்களும் அந்த விலாசத்தில் இருப்பதற்காகக் காட்டிக் கொள்ளவும், புதிதாக யாரும் வந்தால் அவரைப்பற்றித் தெரிந்து கொள்ளவுமே வந்தார்கள். இவனோடு அந்த அறையிலே சேர்க்கப்பட்டிருந்தவர்களும் அந்த ரகமே. சந்திரனின்மேல் தமது ஆதிக்கத்தைச் செலுத்தவேண்டுமென்ற அதிகாரவெறிதான் அவர்களை அங்கு அடிக்கடி இழுத்துவந்தது. இல்லப் பொறுப்பாளனிடம் சந்திரன் எத்தனையோ தடவைகள் முறையிட்டிருந்தான் தனக்கு வேறு அறை தரும்படி. அவன் இவனை ஒரு புதிய பிராணியைப் பார்ப்பதுபோல் பார்த்துவிட்டுச் சொன்னான்: தமிழர்கள் தமிழர்களோடு சேர்ந்திருக்கத்தானே விரும்புவர்! மொழி சாப்பாடு பழக்கவழக்கங்களோடு ஒத்துப்போவதைத்தானே எல்லாரும் விரும்புவார்கள்! ம்.... எனக்கென்றால் புரியவில்லை. ஒத்துப்போவதே உங்களுக்குக்கெல்லாம் தெரியாத விடயமாய்ப் போய்விட்டது. எனக்குத் தலைக்குமேலே வேலை இருக்கிறது. இன்றைக்கு நீ இப்படிச் சொல்வாய். நாளைக்கு வேறை வீடு பார்த்துத்தா என்பாய். உங்களுக்கெல்லாம் சாப்பாடு தந்து உடுப்புத் தந்து இருக்க இடம் தந்து எவ்வளவு செய்திருக்கிறோம். இந்தளவாவது உனக்குக் கிடைத்திருக்கிறதே. போதாதா. போய்வா." வெளியில் தள்ளி கதவை மூடாத குறையாக எத்தனை தடவை சந்திரனை விரட்டுவான்! அவைகளையும் அவன் சகித்துக்கொண்டிருந்த காரணம். என்றைக்காவது அவனது அரசியல் தஞ்ச விண்ணப்பம் நிருபிக்கப்பட்டு தானே அறையொன்று தேடி வெளியேறிவிடலாம் என்ற நம்பிக்கையே. அதுவரை.... சம்பவம் நடந்த அந்த இரவில் தான் மயங்கிப்போனது, வைத்தியசாலையில் நினைவு திரும்பியது, கால்களில் நெற்றியில் கட்டு, இடுப்பை அசைக்கமுடியாத நிலையை உணர்ந்தபோதுதான்.... கோபம் தலைக்கேறி உடம்பின் ஒவ்வொரு நரம்பிலும் கொதித்தது. கடவுளின்மேலே எக்கச்சக்கமாய் கோபம் வந்தது. காலையிலும் மாலையிலும் தான் கும்பிடும் கடவுள் ஏன் இப்படித் தண்டனை தர அனுமதிக்கவேண்டும்? எனக்காக கொடுக்கப்பட்டிருக்கும் அந்த அலுமாரியின் உள்ளே மேல்மூலையில் அவருக்கு கொடுக்கப்பட்டிருக்கும் பவிசான இடம் - எனது நெஞ்சுக் கூட்டுக்குள் பொத்திப் பொத்தி இரகசியம் காப்பாத்திற மாதிரியெல்லோ கடவுளே உன்னை நான் வைத்திருக்கிறேன்! அவர் ஏன் என்னை இந்த மிருகங்களிடமிருந்து காப்பாற்றவில்லை. மறுநாள் காலையில் போலிஸ் அவனிடம் வாக்கு மூலம் எடுத்தது. என்ன காரணத்துக்காக உன்னை அடித்தார்கள் என்று கேட்டபோதுதான் அவன் அதனை அவர்களுக்கு புரியவைக்க முயன்றான். குழம்பிய மனோநிலையில் சந்திரன் இருப்பதாய் அவனைப் புரிய விருப்பமில்லாதவர்களாய் போலிஸ் பார்வை, குறிப்பு, தோள் அசைப்பு இருந்தது. அவன் சொன்னதை எல்லாம் வாக்குமூலத்தில் குறிக்கவில்லை என்பதும் பின்னர் தெரிய வந்தது.

சரியாக 10.30க்கு மாரி...முத்து.. சந்..தி...ரான். பெயர் ஒலிபெருக்கியில் ஒலித்தது. சந்திரன் உள்ளே போனான்.

நீதி: உங்கள் பெயர், வயது, திருமணமானவரா, விலாசம், தொழில், வருமானம், எப்போதிருந்து ஜெர்மனியில் இருக்கிறீர்கள் அரசியல் அகதி அந்தஸ்து... கூறுங்கள்.

சந்திரன்: வரிசையாச் சொல்லிக் கொண்டே வந்தவன் *(இவர்கள் என் சாதியையும் கேட்டிருக்கலாமே - எரிச்சல் பட்டான்)*

நீதி: நீங்கள் அன்றைய தினம் நடந்த சம்பவத்தைக் கூறுங்கள்.

சந்: அன்றைய தினம் நான் தனியே சமைத்துக்கொண்டிருந்தபோது இங்கு சமூகமளித்திருப்பவர்களான - சிவசோதியை, தாமோதரனை நோக்கி குசினிக்குள் வந்த என்னைத் திடீரென தாக்கத் தொடங்கினார்கள்...

நீதி: முதலில் நீங்கள் அவர்களோடு சண்டையைத் தொடங்கவில்லையா?

சந்: அப்படியில்லை. அவர்கள் என்னோடு ஏற்கனவே முரண்பட்டிருந்தார்கள். அவர்களுக்கு என்னில் கோபம் இருக்கிறது.

நீதி: நீங்கள் இங்கு குற்றம் சாட்டப்பட்டிருக்கும் அவர்களுக்கு கோபம் ஏற்படுத்துகிறமாதிரி என்ன செய்தீர்கள்?

சந்: இவர்கள்தான் என்னைக் கண்டதும் ஆத்திரப்பட்டார்கள். என்னை எப்போது கண்டாலும்

ஏசினார்கள். அந்த அறையில் என க்கு இருக்க உரிமை இல்லை என் கிறார்கள். என்னை மிகக் கேவல மான வார்த்தைகளில் திட்டுகி றார்கள்.

நீதி: அன்றைக்கு நடந்ததுமட்டும் சொன்னால் போதும். குற்றம் சுமத் தப்பட்டிருக்கும் சிவா..சோதி எத னால் எப்படி அடித்தார்? உங்கள் சாட்சியம் இங்கே கோப்பில் எழுத் தில் இருக்கிறது. சுருக்கமாய்க் கூறுங்கள். *(சுவர் மணிக்கூட்டைக் கவனிக்கிறார்)*

சந்: நான் என்பாட்டில்தான் சமைத்துக்கொண்டிருந்தேன்.

நீதி: குசினியில் எங்கு நின்றி ருந்தீர்கள்?

சந்: அடுப்புக்கு முன்னால் நான் நின்றிருந்தபோது திடீரென அங்கு வந்த சிவசோதி என்னைக் கேட்டார் "அடேய் நளவா யார் உன்னை இங்கே சமைக்கவிட்ட்து? *(இவ்விடத்தில் நளவாவுக்கு சந்திரன் விளக்கம் சொல்ல ஆரம்பிக்க)*

நீதி: உங்கள் கூப்பிடுபெயர் சந் திரனல்லவா?

சந்: இங்குதான் நான் விளங் கப்படுத்தவேண்டும். எங்கள் நாட் டில்....

(நீதிபதி பக்கத்திலிருக்கும் எழுத்தரைப் பார்த்து தலையை பக்கவாட்டில் அசைத்தபடியே, அரசுதரப்பு வழக்கறிஞரை கேள்விக் குறியோடு பார்க்கிறார்)

நீதி: இப்படியும் இருக்கிறதா, எனக்குப் புரியவில்லை.

சந்: எங்கள் மதத்தில் இப்படி இருப்பதாகச் சொல்கிறார்கள். எனக் கும்தான் புரியவில்லை. பாருங்கள் இதுமாதிரியேதான் இந்த நாட்டில் வெளிநாட்டவர்களை இந்நாட்டுமக் கள் ஏன் வெறுக்கிறார்கள் என்று எனக்கும் விளங்குகிறதில்லை.

நீதி: அது வேறு விடயம். நாங் கள் இங்கு அது கதைக்க உட் கார்ந்து கொண்டிருக்கவில்லை. விட யத்துக்கு வாருங்கள்.

சந்: நடந்தது இதுதான். இவர் கள் இருவரும் என்னைக் கூடாத வார்த்தைகளில் ஏசியபடி குசினிக்கு வந்தனர். "உனக்கென்னடா நாயே உரிமை இருக்கிறது இங்கே" என்று தாமோதரன் கேட்டார். தொடர்ந்து தலையிலும், உடம்பிலும் தும்புத் தடியால் தாக்கப்பட்டேன். தள்ளப் பட்டு பக்கத்தில் இருந்த சுவரோடு மோதப்பட்டு இடுப்பு முறியுமாற்போல வலி. நான் கீழே விழுந்தேன். சிவ சோதியும் தாமோதரனும் நிறையக் குடித்திருந்தார்கள். சிவசோதி கதிரையால் என்னை அடிக்க, தாமோதரன் காலால் உதைத்தார். கால்விரல்களை நசித்தார். இடது முழங்காலிலே போத்தல் ஒன்றால் தாக்கப்பட்டேன். நான் மிகச் சத்த மாகக் கத்தியும் அத்தாக்கு தல்களை முடிந்தளவு தடுக்கவும் முயன்றேன். இரண்டுபேர்கள் ஒன்று சேர்ந்து தாக்கும்போது நான் தனி யாள் என்ன செய்யமுடியும்? பக்கத் துஅறையில் இருந்தவர்கள் என் சத்தம்கேட்டு ஓடிவரவும் இவர்கள் ஓடிவிட்டார்கள். பிறகு நான் மயங்கி விட்டேன் என நினைக்கிறேன். என் உடம்பில் இன்னும் உள்காயங்கள் வலிகள் இருக்கின்றன.

நீதி: நீங்கள் இவர்களின் பொருட்களைக் களவெடுத்தீர்களா? அவர்கள் அங்கிருந்தபோது இடை யில் புகுந்து அவர்களை சமைக்க விடாமல் குழப்பினீர்களா? நீங்கள் அன்றைக்கு எந்தளவு மது குடித்தி ருந்தீர்கள்? கேட்கிற கேள்விக்கு மட்டும் பதில் சொல்லுங்கள்.

சந்: அப்படியொன்றுமேயில்லை. நான் மது பாவிக்கிறவன் இல்லை. நான் குறைந்த சாதிக்காரன் என்ப தால்தான் என்னை இவர்கள் அடித் தார்கள். இதற்கு முன்னரும் என்னை அவர்கள் விரட்டுவதும், மிரட்டுவதும் அடிப்பதுவுமாக நடந்தி ருக்கிறது. அத்தோடு அவர்களின் எந்தவித பொருள்களும் அறையில் இல்லையே. அவர்கள் இருக்கும் அறையில் நான் இருக்கக்கூடாதாம். பிரச்சினை இதுதான். நான் தீண்டத் தகாதவனாம்.

நீதி: ஒவ்வொரு நாட்டிலும் ஒவ் வொரு பழக்கவழக்கங்கள்! எனக் கென்றால் புரியவில்லை. சும்மா எதுவும் இல்லாமல் யாரும் யாரை அடிப்பார்களா?

சந்: இருக்கிறது. நான் அந்தச் சாதியில் பிறந்ததுதான் நான் செய்த குற்றம்.

சிவ: இவர்கள் சாதியே களவெ டுப்பதும், பொய்சொல்வதும் அந்தச் சாதிப் புத்தியையே காட்டுவதும்....

நீதி: சிவசோதி உங்கள் விளக் கம் எனக்குப் புரியவில்லை. உங் கள் பொருட்களை சந்திரன் களவா டியிருந்தால் அதுபற்றி நீங்கள் வீட் டுப் பொறுப்பாளரிடம் முறையிட்டி ருக்கவேண்டும். *(சந்திரனை நோக்கி)* நீங்கள் இப்போது போகலாம்.

சந்: அய்யா, எனக்குக் கொடுக் கப்பட்டுள்ள அறைக்குப் போகப் பயமாக இருக்கிறது. நான் வேலைநேரம் முடிய இன்னும் வெளி யிலேயே சுற்றுகிறேன். படுப்பதற்கு மட்டும் தெரிந்தவர் வீட்டுக்குப் போகிறேன். எனக்குத் தொடர்ந்தும் அங்கு இடம் கிடைக்காது. சிவசோ தியும் தாமோதரனும் என்னை, எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற அந்த அறைக்கு வரக்கூடாதென ஏசிக் காலைக் கையை முறிப்பேன் எனப் பயமுறுத்துகின்றனர். என் பொருட்கள் அங்கிருக்கின்றன. போய் எடுக்கவும் முடியவில்லை.

நீதி: உங்களுக்கு கொடுக் கப்பட்ட இடத்தில்தான் நீங்கள் இருக்கவேண்டும். சிவாசோதியோ தாமோதரனோ உங்களைப் பயமு றுத்தமுடியாது. நீங்கள் இதுபற்றி உங்களுக்குரிய பொறுப்பிலா காவிடம் கதையுங்கள்.

சந்: கனம் அய்யா. நான் எத்த னையோ முறை அங்கு போய் முறையிட்டுவிட்டேன். அவர்கள் அதனைக் கணக்கிலெடுக்கிறார்களே இல்லை. "உங்கள் உயிருக்கு உங்கள் நாட்டில் ஆபத்திருக்கிறது என்று நீங்கள் கூறுகிறபடியால்தான் நாம் உங்களுக்கு அரசியல் தஞ்சம் கொடுக்க கடமைப்பட்டிருக்கிறோம். உங்களுக்காக எல்லா வசதிகளும் செய்து தரப்பட்டிருக்கிறபோது இன் னும் இன்னும் ஏன் எங்களைத் தொந்தரவு செய்கிறீர்கள்? உங்க ளுக்குள் நீங்கள் முரண்பட்டால் அது உங்கள் பிரச்சனை" என் கின்றனர்.

நீதி: ஆமாம். அதுபற்றிய விட யத்தை நீங்கள் அவர்களோடுதான் கதைக்கவேண்டும். இப்போது இங்கு வழக்குபற்றியதுதான் கதைக்கப்படு கிறது. சந்திரன், நீங்கள் இனிமேல் இங்கிருக்கவேண்டிய அவசிய மில்லை போகலாம்.

சந்: அய்யா இவர்கள் என்னைக் கொலைசெய்துவிட்டு வேறுநாட்டுக் குத் தப்பியோடிவிட்டால்.... என் உயிருக்கு இந்தநாட்டிலாவது உத்த ரவாதம் உண்டா? இந்த இரண்டு பேரும் செய்த அநியாயங்களைப் பற்றி எனக்குமட்டும்தான் அய்யா தெரியும். நான் உயிரோடு இருக்க வேண்டும். அய்யா.

நீதி: இதுபற்றி நீங்கள் உங்க ளுக்குரிய அலுவலகத்தோடுதான்

கதைக்கவேண்டும். நான் இந்த வழக்கை விசாரிக்கமட்டுமே பொறுப்புள்ளவன். இங்கு நேரம் போய்க் கொண்டிருக்கிறது. அடுத்த வழக்குக் குரிய காலத்தைத் தாழ்த்தக்கூடாது நீங்கள் உங்கள் இடத்தைவிட்டு அகன்று பின்னால் போய் இருங்கள்.

சந்திரன் பின்னால் போய் இருக்க, மற்றச் சாட்சி உள்ளே அழைக்கப்பட்டது. சிவசோதியும் தாமோதரனும் தங்கள் குற்றங்களை ஒப்புக்கொள்ளவில்லை. சந்திரனே சண்டை ஆரம்பித்ததாக அடம்பிடித்தனர். வீட்டுப் பொறுப்பாளரின், பக்கத்துரும்காரனின் எழுத்து சாட்சியங்கள். சந்திரனின் காயங்கள். வைத்தியசிகிச்சை அணுகப்பட்டது. தீர்ப்பு வாசிக்கப்பட்டபோது யாவரும் எழுந்துநிற்க சொல்லப்பட்டது. குற்றவாளிகளாகக் காணப்பட்டோர் குடித்திருந்து, அதனால் அவர்கள் இவ்வாறு நடந்துகொண்டமையாலும் இவர்கள் இருவருக்கும் முறையே ஒரு வருட நன்னடத்தைப்பிணையும் அபராதமும் வழங்கப்படுவதாயும் ஏன் இவ்வாறான தண்டனை வழங்கப்படுகிறது எனவும் விளக்கம் கூறப்பட்டது. சந்தி ரனுக்கான வைத்தியச் செலவுகளையும் வழக்குச் செலவையும் இவர்களே பொறுப்பேற்க வேண்டுமென்று தீர்ப்பளிக்கப்பட்டபோது, சிவசோதி "எளிய சாதி நாய்கள்" என முணுமுணுத்தான். நீதிபதி ஒரு தடவை நிமிர்ந்து சிவசோதியைப் பாரத்தபின் மீண்டும் தொடர்ந்தார்.

வழக்கு முடிந்து எல்லாரும் வெளியேறியபோது கடைசி ஆளாக சோர்வுடன் வெளியேறினான் சந்திரன். எல்லாரும் நீதிமன்ற வளாகத்தை விட்டு வெளியேறிவிட்டார்கள் என்று நன்கு கவனித்தபின் வீதிக்கு வந்த சந்திரன் ஒவ்வொரு அடியாக மிகமிக பயத்தோடு நடக்கத் தொடங்கினான். வெளிநாட்டவருக்குரிய அலுவலகத்துக்கு 12மணிக்குமுன் போனால் அறையை மாற்றித் தருவதுபற்றி கதைக்கலாம் என நினைத்தபடியும் அங்குள்ள அதிகாரி தன்னை எப்படியும் நாய் விரட்டுவது போல தன்னை விரட்டுவான் என்ற மனஎரிவோடும் சந்திரன் விரைவாய் நடந்தான். இன்று நீதிமன்றத்தில் நடந்தவைகளைப்பற்றி சொல்லியாவது வேறு நகரத்துக்காவது தன்னை மாற்றித் தரும்படி கேட்க வேண்டுமென உறுதிப்படுத்திக் கொண்டான். ◆

இரா. இரவீந்திரன்

நாமும் அவர்களும்

★ *கந்தகக் குழம்புகள்பட்டு*
கால்த் தடங்கள் அழிந்துபோயின
அவர்களின் பாதைகளில்...

★ *கார்த்திகை தீபங்களாய்*
எரிந்தவை அவர்களின்
குடில்கள்...

★ *கார்கால முகில் மழைகளுக்கு*
பதிலாய் - என்றும்
கரிய அமில வாயு
மழைகள் - அவர்தம்
பூமிதனில்...

★ *ஏர்சாலால் சீராக்கப்பட்டவை*
அல்ல அவர்தாம் நிலங்கள்
கூர்மிகு துவக்குக் கத்திகளால்
குதறப்பட்டவை...

★ *கருவேல முட்பட்டு*
கந்தலான துணிபோல
தெருவோரம் தெறித்த குண்டுகளில்
கருக்களோடு அழிந்தவர்கள்
அவர்கள்...

★ *ஈழத் தோட்டங்களில்*
இன்றும் பூப்பவை
பன்னீர்ப் பூக்களில்லை
கண்ணீர்ப் பூக்களே...

★ *இருபத்திநான்கு கேரட்டில்*
இதயம் இனிக்க
நெக்லஸ் அணிந்து
நீளப்புன்னகை செய்கிறோம்
நாம்...

★ *முழந்தாளிட்டு*
முதுகுக்குப்பின்னால்
புறங்கை கட்டி
காற்றில்லா டியூப்பில்
பெட்ரோல் உள்ளோடும் நெக்லஸை
கதறக் கதற - கழுத்தின் மீது மாட்டப்பட்டு
நெஞ்சம் எரியச்
சாகிறார்கள்
அவர்கள்...

★ *ஓட்டுக்கள் பெற மட்டும்*
வேட்டுக்களால்
அவர்கள் இழந்தவற்றை
பாட்டுகளாக்கிப் படிப்போம்
நாம்...
புலம் பெயர்வுகளால்
புரையோடிய
ரணங்களை குணமாக்கும்
அவர்தம் தாய்மண்...
அவர்களுக்கு என்றைக்கு
கிடைக்கும்...? ◆

மேற்கு நாடுகளின் வளர்ச்சியும் மூன்றாமுலகமும்

உலகநாடுகளின் உணவுத்தேவைகளை பசுமைப்புரட்சி மூலமாகவே நிறைவுபடுத்தமுடியும் என்ற கருத்தை விவசாய வல்லுநர்கள் பல கமத்தொழிலில் ஆராய்ச்சியாளர்கள் முன் வைத்தது மாத்திரமல்லாமல் இம்முறையின் மூலமாகத்தான் மூன்றாம் உலக நாட்டில் ஏற்பட்டுள்ள வறுமையையும் நீக்கமுடியும் என்ற கருத்தையும் வெளியிட்டார்கள்.

ஒல்லாந்து விவசாய விஞ்ஞான ஆராய்ச்சிச் சர்வகலாசாலையினால் வெளியிடப்பட்ட அறிக்கையின்படி அமிலமழை பெய்தலும், மண்ணின் தன்மை மாறுபடுதலும், காடுகள் அழிவதற்கும் முக்கிய காரணம் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஐரோப்பாவில் மூன்றில் ஒரு பங்கு காடுகள் அழிவதற்கும் இந்த அமில மழையே காரணம் என்றும் கண்டறியப் பட்டுள்ளது.

குறுகியகால எல்லைகளில் பெரும் பொருளாதாரச் சாதனைகளை நிறைவேற்றி லாபத்தைத் திரட்டும் வேட்டையில் மேற்கு நாடுகள் கையாண்ட உற்பத்தி முறையால் மூன்றாம் உலக நாடுகளின் சூழலை எவ்வளவு தூரம் பாதிப்புறச் செய்துள்ளது என்பது மிக விரிவான ஆய்வுக்கு இட்டுச் செல்வது.

கடந்த காலங்களில் மேற்கு நாடுகள் மேற்கொண்ட கைத்தொழில் விவசாயக் கொள்கைகள் சூழலிலும், மூலவளங்களின் விரயத்திலும் பெருங் கேடுகளை விளைவித்தது. இதுபற்றி இன்று மூன்றாம் உலக நாடுகளின் ஆய்வாளர்கள் மத்தியிலும் மக்கள் மத்தியிலும் காத்திரமான சிந்தனைப் போக்கு வளர்ந்து வருகிறது.

18ம் நூற்றாண்டில் ஐரோப்பியத்தொழில் உற்பத்தியில் நீராவிமூலம் இயந்திரங்களை இயக்கும் முறை அறிமுகமானது. அதற்கு வேண்டிய எரிபொருள் மரங்களாகவே இருந்தது. இதற்காக அதிகமான ஐரோப்பியக்காடுகள் காடுகள் அழிக்கப்பட்டன. அத்துடன் காலனித்துவ ஆதிக்கத்திலிருந்த நாடுகளிலும் காடுகள் அழிக்கப்பட்டு எரிபொருளாக ஐரோப்பாவிற்கு எடுத்துச் செல்லப்பட்டது. ஐரோப்பாவில் காடுகள் அழிக்கப்பட்டதால் அதனுடன் வாழ்ந்த மிருகங்கள், பறவைகள், சிறு பிராணிகளும் அழிவுற்றன. தற்போதுள்ள ஐரோப்பிய காடுகளில் 80சதவிகிதத்துக்கு மேற்பட்ட காடுகள் பிற்காலப்பகுதிகளில் நடப்பட்டவைகளே.

நிலக்கரியின் கண்டுபிடிப்புக்குப் பின் அதற்காக நிலங்கள் கிண்டப்பட்டதும் காடுகள் அழிக்கப்பட்டதும் தொழிற்சாலைகளின் கழிவுகளும், ஆலைகளிலிருந்து வரும் நச்சுப் புகையும் தூசிகளும் மனிதனுக்கும் சூழலுக்கும் அதிக பின்விளைவுகளைக் கொடுத்தது. பின் எண்ணெய் பாவனைக்கு வந்தவுடன் அதனாலும் சூழலுக்கு ஏற்பட்ட தாக்கங்கள் பல. எண்ணெய் எடுக்கும் இடங்களும் அதைச் சுற்றிய பகுதிகளிலும் அதிக அளவில் பாதிப்பு ஏற்பட்டது. அன்று எண்ணெய் சுத்திகரிப்பால் ஏற்பட்ட கழிவுப் பொருட்கள் அப்படியே வெளிகளிலும் காடுகளிலும் கடல்களிலும் கொட்டப்பட்டதால் அவற்றாலும் சூழலுக்கு மேலும் பாதிப்பு ஏற்பட்டது.

15ம் நூற்றாண்டில் ஐரோப்பியர்கள் அமெரிக்காவை ஆக்கிரமித்ததும், அங்குள்ள செல்வங்களை அபகரித்ததும் நாம் அறிந்தவையே. அத்துடன் அன்று அங்கு வாழ்ந்த 70 மில்லியன் மக்களையும் 100 மில்லியன் பைசான் எருமைகளையும் ஐரோப்பியர் அழித்தனர். பல்ஆயிரம் வருடங்களாக அந்நாட்டு மக்கள் பேணிக்காத்துவந்த மரங்களும், காடுகளும் அழிக்கப்பட்டன.

இரண்டாம் உலகயுத்தத்தின் பின் மக்களின் வாழ்க்கை முறையிலும் உற்பத்திமுறைகளிலும் பெரிதும் மாற்றம் ஏற்பட்டது. அத்துடன் பல தொழில் ஸ்தாபனங்கள், அணு உலை ஆலைகள் உருவாக்கப்பட்டது. உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருட்களின் 90 சதவிகிதம் மூன்றாம் உலக நாடுகளில் இருந்துதான் பெறவேண்டியிருந்தது. உதாரணம்: உலோகங்கள், எண்ணெய், இரசாயனஆலைகளுக்கு வேண்டிய மூலப்பொருட்கள், அணுஆலைகளுக்கு வேண்டிய யூரேனியம், உலோகங்கள், தாதுப்பொருட்கள், அது மாத்திரமல்லாமல் தேயிலை, கோப்பி, கொக்கோ, றப்பர், பருத்தி, தென்னம்பொருட்கள், பழவகைகள் என்று அடுக்கிக்கொண்டு போகலாம். இவைகளைப் பெறுவ தற்காகவும், உற்பத்தி செய்வதற்காகவும் இயற்கை அழிக்கப்பட்டது.

மிருக வளர்ப்பு:

அமெரிக்காவின் பெரிய இரசாயன ஸ்தாபனங்கள், எண்ணெய் ஸ்தாபனங்கள், காப்புறுதி ஸ்தாபனங்கள் பெரிய அளவில் மிருகங்களை வளர்க்கும் முறையை உருவாக்கின. அத்துடன் கோதுமை, சோளம் ஆகியவற்றைக் கொண்டு குறுகிய காலத்தில் மிருகங்களின் பருமனையும் நிறையையும் அதிகரித்து அதிக இலாபமடையும் முறைகளையும் கண்டறிந்தார்கள். இதனால் இவர்கள் சிறு சிறு இடங்களில் பெருந்தொகையான மிருகங்களை வளர்க்

கத் தொடங்கினார்கள். இவர்களின் முக்கிய நோக்கம் அதிக மிருகங்களை வளர்த்து அதிக இலாபம் அடைவதே. ஆனால், இதனால் ஏற்படும் தீமைகளையும் சூழலுக்கு ஏற்படும் தாக்கங்களையும் பற்றி அறிந்துகொள்ள இவர்கள் முயற்சிக்கவும் இல்லை. விரும்பவும் இல்லை. இம்முறை நாளடைவில் ஐரோப்பாவிற்கும் பரவியதுமல்லாமல் இடநெருக்கடி காரணமாக மிகச் சிறு இடங்களிலும் பெருந்தொகையான மிருகங்களை வளர்க்கும் முறைக்கும் வித்திட்டது. இவ்வகையில் பெருமளவு விலங்குகளை வளர்க்கும் போது அவற்றிற்கான உணவுவகைகளும் பெருமளவில் தேவைப்படுகின்றது. கால்நடை வளர்ப்பின்போது முக்கியமாக கோதுமை, சோளம், சோயா, எண்ணெய்வித்து வகைகளே உணவாகப் பாவிக்கப்படுகின்றன. மாடு வளர்ப்பில் 1 கிலோ இறைச்சியைப் பெறுவதற்கு 16 கிலோ கோதுமையும் அத்துடன் எண்ணெய் வித்து வகைகளும் சோயா, சோளம் ஆகியனவும் தேவைப்படுகின்றது. இதில் ஏறத்தாழ 15 கிலோ உணவுகள் விலங்கின் எரிபொருள் தேவைக்கும் (Energy production) மிகுதி கழிவுப் பொருட்களாகவும் வெளியேற்றப்படுகின்றது. போசனைக்குத் தேவையான முக்கிய மூலப்பொருட்களாகிய சோயா, சோளம், கோதுமை, எண்ணெய் வித்துக்கள் போன்றவை அனேகமாக பிரேசில் போன்ற மூன்றாம் உலக நாடுகளில் உற்பத்தி செய்யப்பட்டு மலிவான விலையில் மேற்குநாடுகளால் இறக்குமதி செய்யப்படுகின்றன.

பசுமைப்புரட்சி:

60களில் பெருமளவில் பசுமைப்புரட்சி என்ற பெயரில் மூன்றாமுலகின் பல பகுதிகளில் புதுவிதமான உற்பத்தி முறைகளை அறிமுகம் செய்தார்கள். உலகநாடுகளின் உணவுத்தேவைகளை பசுமைப்புரட்சி மூலமாகவே நிறைவுபடுத்தமுடியும் என்ற கருத்தை விவசாய வல்லுநர்கள் பல கமத்தொழிலில் ஆராய்ச்சியாளர்கள் முன்வைத்தது மாத்திரமல்லாமல் இம்முறையின் மூலமாகத்தான் மூன்றாம் உலக நாட்டில் ஏற்பட்டுள்ள வறுமையையும் நீக்கமுடியும் என்ற கருத்தையும் வெளியிட்டார்கள். மாறுதலில்லாத ஒரே தானிய தாவரங்களை ஒரு இடத்திலேயே சிறப்பான வித்துக்கள் மூலம் பயிரிட்டு அதிக உற்பத்தியை அடைய முடியும் என்றும் கூறப்பட்டது. இதற்காக பல பெருங்காடுகள் பெரிய அளவில் அழிக்கப்பட்டதுடன் ஏற்றுமதிக்காகவும் பல புதிய புதிய தானிய எண்ணெய் வித்துக்கள் மூன்றாம் உலகநாடுகளில் அறிமுகம் செய்யப்பட்டது. அத்துடன் மேற்குலகின் பாரிய மிருகப்பண்ணைகளுக்கு பெருந்தொகையாக தானியங்கள் வேண்டியிருப்பதால் அதற்கெனப் பெருமளவு பொருட்கள் ஏற்றுமதிக்காக உற்பத்தி செய்யப்பட்டது. இப்படியாக மூன்றாம் உலகநாடுகளில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் பெரும்பகுதி மேற்குநாடுகளில் உணவுக்காக வளர்க்கப்படும் மிருகங்களுக்காகவும், அவர்களின் செல்லப்பிள்ளைகளான நாய் பூனைகளுக்கு உணவாகவும் பயன்படுத்தப்பட்டது.

சிறிதளவு அந்நிய செலாவணியை ஈட்டிக்கொடுக்கும் இத்தொழிலுக்காக மூன்றாம் உலகநாடுகளிலுள்ள செழிப்பான பிரதேசங்களும் காடுகளும் அழிக்கப்பட்டன. இதனால் இயற்கைச்சமநிலை பாதிக்கப்பட்டது.. காடுகள் அழிக்கப்பட்டதால் மழைவீழ்ச்சி குன்றி இந்நாடுகள் வரண்ட பிரதேசங்களாகின்றன. அத்துடன் காடுகள் அழிக்கப்பட்டு விட்டதால் நிலஅரிப்பு ஏற்படுவதோடு, நீர் தேங்கி நிற்காது வழிந்தோடுவதால் மேல் மண்ணில் உள்ள கனிமங்களையும் கழுவிக்கொண்டு கடலில்கொண்டு சேர்த்துவிடுவதால் நிலத்தடி நீரின் அளவும் குறைகின்றது. அது நாளடைவில் மண்ணின் செழிப்புத்தன்மையைக் குறைப்பதோடு விளைச்சலையும் குறைக்கிறது. மழைவீழ்ச்சி குறைவதால் விவசாயத்திற்கு நிலத்தடி நீரைப் பாவிக்கவேண்டிய கட்டாயம் ஏற்படுகின்றது. நிலத்தடி நீர் மட்டம் குறைந்து கொண்டே சொல்லும் அதேநேரத்தில் நிலத்தடி நீர் மேல் எடுக்கப்படுவதால் நிலத்தடி நீர்மட்டம் சிதைவடைந்து கீழுள்ள உவர் நீர் நன்நீருடன் கலக்கின்றது. அதனால் பயிர்ச்செய்கை பண்ணப்படும் நிலம் உவராக மாறுகின்றது. மேலும் பயிர்கள் பெரும் விஸ்தீரணத்தில் செய்கை பண்ணப்படுவதாலும் சுழற்சிமுறை பயிர்ச்செய்கை செய்யமுடியாதிருப்பதாலும் மண்ணின் தன்மை மாறுபாடு அடைகிறது. இவற்றை நிவர்த்தி செய்வதற்காக, நவீன செயற்கை உரங்களையும் பூச்சிகொல்லி மருந்துகளையும் அதிக அளவில் பாவிக்க வேண்டியதாயிற்று. இவை எல்லாம் பெரும்பாலும் மேலைநாடுகளில் இருந்து அன்னியச் செலாவணியைக் கொடுத்து மூன்றாம் உலகிற்கு இறக்குமதி செய்யப்படுகின்றது. அதிக அளவில் செயற்கை உரங்கள் பாவிப்பதால் மண்ணின் தன்மை மாறுபட்டு அமிலத்தன்மை கூடுகிறது. செடிகொடிகள் வேகமாக வளருவதால் அவற்றின் நோய்எதிர்ப்புச்சக்தி மாறுபட்டு அதிக அளவில் கிருமிநாசினிகளைப் பயன்படுத்தும் தேவையும் ஏற்படுகிறது. மண்ணின் தன்மை மாறுவதால் இயற்கையாகவே மண்ணிலுள்ள நைதரசன் உற்பத்தி செய்யும் நுண்ணங்கிகள் மடிகின்றன. அழுகல் வளரிகள் பாதிக்கப்படுவதால் செடிகொடிகளின் காய்ந்த இலைகளும் குப்பைகளும் உக்கலாக இலகுவில் மாற்ற மடைய முடியாதிருப்பதால் அவற்றை தாவரங்கள் மீண்டும் பயன்படுத்தமுடியாமல் போகின்றது. மண்ணின் தன்மை மாறுபடுவதால் தாவரங்களின் வளர்ச்சிக்குத் தேவையான முக்கிய கனிமங்களாகிய கல்சியம், பொஸ்பரஸ், மங்கனிஸ், கந்தகம் போன்றன நீரில் கரையும் தன்மையற்ற பொருட்களாக மாற்றப்படுவதால் தாவரங்களால் உறிஞ்சப்பட முடியாதவையாக உள்ளன. செயற்கை உரங்களிலுள்ள தாவரங்களால் பாவிக்கப்படாத மேலதிக நைதரசன்பொருட்கள், பொஸ்பேற், சல்பர் போன்றவற்றின் ஒரு பகுதி நிலத்தடி நீரைச் சென்றடைகிறது. மற்றைய பகுதி அடித்துச் செல்லப்படும் மழைநீரோடு கலந்து ஆறு, குளம், குட்டை, கடல் போன்றவற்றைச் சென்றடைகிறது. இவற்றின் சேர்க்கையால் நிலத்தடி நீரின் நைதரசன் செறிவு கூடி இந்நீரைப்பாவிப்பதால் மனிதருக்கும் குழந்தைகளுக்கும் தீமைகள் ஏற்படுகின்றது. குளம் குட்டைகளில் நைதரசன், பொஸ்பேற் ஆகியவற்றின் செறிவு அதிகரிப்பதால் பாசியின் வளர்ச்சி அளவுக்கு அதிகமாக பெருகுகின்றன. இவை நீரில் கரைந்திருக்கும் ஒட்சிசனைப் பாவிப்பதால் நீரில் ஒட்சிசனின் அளவு குறைகிறது. இதனால் ஒட்சிசனை நம்பி வாழும் உயிரினங்கள் மடிகின்றன. அத்துடன் ஒட்சிசன் இல்லாமல் வாழும் உயிரினங்கள் பெருகுகின்றன. இதே போன்றே பரவைக்கடல்கள் போன்ற இடங்களிலும் பாதிப்பு ஏற்படுகின்றது. இதனால் இயற்கையின் சமநிலை பாதிக்கப்படுகின்றது. பாசிகளின் அழுகலினால் வெளியிடப்படும் மீதேன்வாயு நீரில் கரைவதாலும் உயிரினங்களுக்கு பாதிப்பு உண்டாகிறது. சூரியவெப்பத்தினால் மேலெழும்பும் மீதேன்வாயுவினால் வளிமண்டலம் மாசடைகிறது. மேலும் மண்ணின் தன்மையில் மாற்றம் ஏற்படுவதால் இயற்கை உழவன் என்று அழைக்கப்படும் மண்புழு செத்து மடிவதால் மண்ணிற்குள் ஏற்படுத்தப்படும் மயிர்துளைக் காற்றோட்டம்

தடைப்பட்டு தாவரவேர்களினதும் நுண்ணுயிர்களுக்கும் ஒட்சிசன் இல்லாமல் போய்விடுகின்றன.

அனேகமாக பூச்சிகொல்லி, பங்கசுகொல்லி மருந்து களில் பாரஉலோகங்களும், அலோகங்களும் சேர்க் கப்பட்டுள்ளதால் F.A.O வின் அறிக்கையின்படி குடிநீரை மாசுபடுத்தும் முக்கியகாரணியாக பூச்சிகொல்லி மருந்து களே அமைகின்றது. பூச்சிகொல்லியின் முக்கிய கூட்டுப்பொ ருட்களாக பிஸ்மத், அன்ரிமணி, துத்தநாகம், பாதரசம், இரும்பு, தகரம் போன்ற பாரஉலோகங்களும் கந்தகம், பொஸ்பரஸ், குளொறின், சயனைட் போன்ற அலோ கங்களும் சேர்ந்துள்ளன. இப்பூச்சிகொல்லிகளால் உயிரி னங்களுக்கு ஆபத்து ஏற்படும் அபாயம் உள்ளது. இப்பூச்சி கொல்லியின் பாவனை தேவையற்ற பூச்சிகளைவிட பல பயனுள்ள பறவைகள், தேனீக்கள் போன்ற உயிரினங்க ளையும் அழிப்பதன்முலம் மீண்டும் மீண்டும் இயற்கையின் சமநிலை பாதிக்கப்படுகின்றது. அத்துடன் இவற்றின் ஒருப குதி தாவரங்களால் உறிஞ்சப்பட்டும் ஒருபகுதி நிலத்தடி நீரையும் போய் அடைந்து குடிநீரை மாசுபடுத்துகிறது. இவ்வாறு உற்பத்தி செய்யப்பட்ட தாவரஉணவுகள் மனிதர் களுக்கும் மிருகங்களுக்கும் உணவாக உபயோகப்படுத் தப்படுகின்றது. தாவர தானியவகைகளில் மேற்குறிப்பிட்ட பாரஉலோகங்களும் அலோகங்களும் சிறிதளவிலேயே காணப்பட்டாலும் மிருகங்களுக்கு அதிகஅளவில் இத் தானி யங்கள் உணவாகக் கொடுப்பதால் பாரஉலோகங்களும், அலோகங்களும் செறிவடைந்த நிலையில் அவற்றின் சிறுநீர கம், மூளை, ஈரல், தசைகள், தோல்கள், மற்றும் கொழுப்பு ஆகிய பகுதிகளிலும் படிவுகளாகப் படிகின்றன. இவை களை மனிதர்கள் உண்ணுவதால் மனிதனுக்கும் பல்வேறு நோய்கள் உண்டாகின்றன.

கால்நடைக் கழிவுகள்:

உதாரணமாக 50 000 மாடுகள் வளர்க்கப்படும் ஒர் பண்ணையில் 10 மில்லியன் லீட்டர் கழிவுகள் கிடைக்கின் றன. இக் கழிவுகளில் பாரஉலோகங்களும் நைதரசன் பொருட்களும் இருப்பதால் இவை விரைவில் உக்கலாக முடியாத காரணத்தினால் மண்ணின் மீளத்தன்மைக்கு ஏற்புடையதாக இல்லாததால் அதன் ஒருபகுதி நிலத்தடி நீரை சென்றடைகின்றது. ஒருபகுதி மீதேன், நைதர ஒக்சைட்டு, அமோனியா போன்ற வாயுக்களாக வளிமண் டலத்தில் கலந்து அமில மழையாக மீண்டும் பூமியை வந்து அடைகிறது. இதனால் மரங்கள், செடிகள் என்பன பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகின்றது. ஒல்லாந்து விவசாய விஞ்ஞான ஆராய்ச்சிச் சர்வகலாசாலையினால் வெளியிடப் பட்ட அறிக்கையின்படி அமிலமழை பெய்தலும், மண்ணின் தன்மை மாறுபடுதலும், காடுகள் அழிவதற்கும் முக்கிய காரணம் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஐரோப் பாவில் மூன்றில் ஒரு பங்கு காடுகள் அழிவதற்கும் இந்த அமில மழையே காரணம் என்றும் கண்டறியப் பட்டுள்ளது. இவ் வளிமண்டல மாசடைதல் ஐரோப்பாவுடன் மட்டும் நின்றுவிடவில்லை. முழு வளிமண்டலத்தையும் மாசடையச் செய்கின்றது. இதனால் உலகின் எல்லாப் பகுதிகளுமே பாதிப்படைகின்றது என்று நிரூபிக்கப்பட்டுள்ளது.

உலக தானிய உற்பத்தியில், கோதுமையின் மூன்றில் ஒரு பங்கும், எண்ணெய் வித்துக்களாகிய சூரியகாந்தி, சோயா என்பவற்றில் மூன்றில் இரண்டு பங்கும், பால்மாவில் மூன்றில் ஒரு பங்கும் கால்நடை உணவாக பயன்படுத்தப்ப டுகிறது. F.A.O அறிக்கையின்படி. அமேசன், பிறேசில் போன்ற நாடுகளில் பெருமளவு காடுகள் அழிக்கப்பட்டு மந்தைகளுக்கு மேய்ச்சல் நிலமாக மாற்றப்பட்டுள்ளது. இங்கு வளர்க்கப்படும் கால்நடைகளின் மாமிசம் நெஞ் சுப்பகுதியிலும் தொடைப்பகுதியிலும் உள்ள இறைச் சிப்பகுதியாக வெட்டப்பட்டு மேலைநாடுகளுக்கே அனுப் பப்படுகின்றது. மிகுதி அரைக்கப்பட்டு மேலை நாட்டிற்கு நாய், பூனைகளுக்கு உணவாக அனுப்பப்படுகிறது. பிரே சிலின் கிழக்குப்பகுதி முழுவதிலும் மேற்குநாடுகளுக்காக சோயா பயிரிடப்படுகின்றது.

றீயோவில் நடைபெற்ற சூழல் பாதுகாப்பு மகாநாட்டில் நெல் உற்பத்தி செய்வதால் மீதேன்வாயு அதிகமாக வெளி வருவதாகவும் சூழலைப்பாதிப்பதாகவும் கூறப்பட்டது. நெல், நீரில் வாழும் பயிராகையால் நெல்லை அறுவடை செய்த பின் மற்றைய வைக்கோல், நெல்லின் தண்டுகள் தண்ணீரில் அழுகுவதால் அதில் இருந்து வெளியாகும் மீதேன்வாயு வளிமண்டலத்தை பாதிப்பதாக கூறப்பட்டது. இதில் எவ்வ ளவு தூரம் உண்மை என்று பார்ப்போம். அதிகமாக நெல் உற்பத்தி செய்யும் நாடுகளில் அறுவடைகாலம் வந்துவிட் டால் வயல்களில் உள்ள நீரை வெளியெறச் செய்து நிலம் காய்ந்து ஒரு சில நாட்களின் பின் தான் அறுவடை துவங்குவது வழக்கம். இயந்திரம் மூலமாக அறுவடை செய்யும் பகுதிகளில் கூட இம்முறையையே பயன்படுத் துவார்கள். இது அறுவடை செய்வதற்கு இலகுவான முறை யாக இருப்பதால். இதனால் அறுவடை முடிந்தபின் தண்டு கள் காய்ந்து உக்கிவிடுகின்றது. ஆனால் ஒரு சில பகுதிகளில் தண்ணீர் வெளியேற முடியாதிருப்பதால் தண் டுகள் அழுகுகின்றது. இது விகிதாசாரத்தில் பார்க்கும் பொழுது வெகு சிறிதாகவே உள்ளது. இவர்கள் றீயோவில் குறிப்பிட்டதுபோல் வளிமண்டலப் பாதிப்புக்கு நெல் உற்பத் தியும் ஓர் முக்கிய காரணம் என்பதை என்னால் ஒப்புக் கொள்ள முடியாது.

மூன்றாம் உலக நாடுகளில் சூழல் பாதிப்பு இடம் பெறவில்லை என்பது எனது வாதமில்லை. எமது நாட்டிலும் அதிகமான சூழல் பாதிப்புக்கள் நடைபெற்றவண்ணமே உள்ளது. இதற்கு அறியாமையும் ஒரு காரணமாக உள் ளது. அறியாமை மாத்திரமல்லாமல் நாட்டை வழிநடத்திச் செல்பவர்களே அதைப்பற்றி அறியாமலும் அறிந்துகொள்ள இயலாமலும் இருப்பதும் ஒரு காரணமாகவும் உள்ளது. எமது மக்கள் இயற்கையைப்பற்றி அறியாதவர்கள் அல்ல. இயற்கைக்கும் மனித வாழ்க்கைக்கும் உள்ள தொடர்பை அவர்கள் நன்கு அறிவார்கள். இவற்றை நல்ல முறையில் கொண்டு செல்வதற்கு அரசும் சூழலைப் பாதுகாக்க முற் படும் ஸ்தாபனங்களும் சூழலுக்குத் தீங்கு விளைவிக்கும் பொருட்கள், இரசாயனக்கழிவுகள் நச்சுத்தன்மையுள்ள இயந்திரக் கழிவுகள் பிளாஸ்ரிக், பாரஉலோகங்கள், அலோ கங்கள் ஆகிய பொருட்களால் ஏற்படும் சேதங்களையும் அதைச் சூழலுக்கு அதிக பாதிப்பு இல்லாமல் மீளப்பயன்ப டுத்தும் வழிவகைகளையும் இலகுவான முறையில் விளக்க வேண்டும்.

1964முதல் 1985வரையிலும் பிறேசிலில் பசுமைப்புரட்சி அறிமுகம் செய்யப்பட்டது. இதற்காக காணி உள்ளவர் களுக்கு சோயாவித்து, இரசாயன உரம், இரசாயன பூச்சி கொல்லி மருந்துகள் வாங்குவதற்கு வங்கிமூலமாக கடன் வசதி ஆகியன வழங்கப்பட்டது. அத்துடன் இவைகளை நடைமுறைப்படுத்துதற்கு வேண்டிய இயந்திரம் வேண்டு வதற்கும் கடன் கொடுக்கப்பட்டது. குறைந்த காலப்பகுதி யிலேயே நிலங்களில் இரசாயன உரம், பூச்சிகொல்லிகள்

பாவிப்பால் நிலம் நச்சுத்தன்மையாக்கப்பட்டதுமல்லாமல் ஒரேவிதமான தானிய உற்பத்தியின் மூலமாகவும், களை களை அழிப்பதற்காக பூச்சிகொல்லி மருந்துகள் பாவிக் கப்பட்டதால் வேறு எந்தவிதமான செடிகளும், புற்களும் வளரமுடியாமையால் நிலஅரிப்பும் ஏற்பட்டது.

பேரளவு உற்பத்திமுறைக்கென அறிமுகப்படுத்தப்பட்ட தானியங்களையும், இரசாயனப்பசளைகள், பூச்சிகொல்லிக ளையும் ஒவ்வொருமுறையும் வாங்குவதற்கு பெருமளவு பணம் தேவைப்பட்டது. இதனால் திரும்பத் திரும்ப கடன் வாங்கி உற்பத்தி செய்வதை விட்டு விட்டு தமது பழையமு றைப்படி உற்பத்தி செய்த தானியங்களை ஸ்தாபனங்கள் வாங்க மறுத்ததால் அவர்கள் வாங்கிய கடன்களை அடை க்க முடியாமையினால் கடன் கொடுத்த ஸ்தாபனங்கள், வங்கிகள் இவர்களின் நிலங்களை அபகரித்துக் கொண்டது.

பூச்சிகொல்லி பாவிப்பால் அதில் உள்ள பாரஉ லோகங்கள், அலோகங்கள் DNSஇல் மாற்றங்கள் ஏற்படுத் துவதால் பிறக்கும் குழந்தைகள் அங்கவீனர்களாவதுடன் கருச்சிதைவும் ஏற்படுகின்றது என்றும் கண்டுபிடிக்கப்பட்டுள் ளது. இவர்கள் காலாகாலமாக தாம் உற்பத்திசெய்த, வாழ்ந்த இடங்கள் பறிபோனதாலும் வேலையில்லாததினால் வேலைதேடி நகரங்களை நோக்கி இடம்பெயர்ந்து அங்கு சேரிகளிலும் வீதிகளிலும் வாழ்வது மாத்திரமல்லாமல் பல இன்னல்களுக்கும் ஆளாக வேண்டியுள்ளது.

இந்தியாடுடேயில் இருந்து சில குறிப்புக்கள்:

முன்னாள் பள்ளி ஆசிரியரான புருஷோத்தமர், புகழ் பெற்ற ஜப்பானிய இயற்கை விவசாயியான புகுவோகாவின் 'ஒற்றைவைக்கோல் புரட்சியை' தீர்த்தள் என்ற கிராமத்துக்கு முதலில் அறிமுகம் செய்தார். விவசாயியாகிய இவரின் தோட்டத்தில் ஏழாண்டுகளுக்கு முன் வீசிய புயலின்போது அவரது தோட்டத்திலிருந்த மரங்கள் ஒடிந்து விழுந்தன. 'வேதி(இரசாயன) உரங்களைப் போட்டதால் அவை வலு விழந்து போய்விட்டன' என்கிறார் ராவ். வேதங்களில் கூறப் பட்டுள்ள பண்டைய வேளாண்மை முறைகளைப்பற்றி அவர் படித்தார். பல முற்போக்கு விவசாயிகளின் உதவியுடன் துணிந்து இயற்கை விவசாயத்தில் இறங்கிவிட்டார். சாணம், மண்புழு, கலப்புரம், கருவுற்றுள்ள பசுவின் மூத்திரம் (கோமி யம்) என்று பல இயற்கையான பொருட்களைக் கலந்து உரங்களை தயாரித்தார். அவரது முயற்சியின் விளைவு: உற்பத்தி 40-60 சதவீதமாக உயர்ந்தது. இரசாயன பசளை களுக்கும் பூச்சிகொல்லிகளுக்கும் வாங்கவேண்டி இல்லா ததால் செலவில் 30-40 சதவீதம் குறைவானது. கூட்டுப் பசளைக்கு ராவ் சேர்க்கும் பொருட்கள் வியப்பானவை. (Bio-gas) பயோகர்; தொட்டியில் கிடைக்கும் தண்ணீர், கெட்டுப்போன மோர், இளநீர், தேன், நெய். இவ் உற்பத்தி முறை பல மேல்நாட்டவர்களையும் சிந்திக்கத் தூண்டி யுள்ளது. ◆

அ.ஜ. கான்

சுதந்திரத்திற்கான பாதை

சுதந்திரத்திற்கு உண்டு நீண்ட நெடிய பாதை
உன் பதற்றம்
நெடும்பாதையைச் சுருக்காது தோழனே
உன் எண்ணம் அறிவேன்
கோபத்துடன் வெடித்துக்கொண்டிருக்கும்
உனது மூளை எரிந்துகொண்டிருக்கும்
பழிவாங்கும் எண்ணத்துடன்
சித்ரவதைகளுக்காக காத்துக்கொண்டிருக்கும்
இங்குமங்கும், எங்கும், எல்லாவிடமும்
ஆர்வத்துடன்
நீடிக்கும் கேள்விகள்
சந்தேகம்
யார்இருக்கிறார்; யார் இல்லை என
உன் வலியை நானறிவேன்
எல்லோரும் உணர்ந்துவிட்டனர்
அது ஆரம்பித்ததிலிருந்து.

புலம்பலற்ற அமைதியான அடக்கம்
இப்பாதையில் பயந்துவிட்டவர்கள் பலர்
உனக்கு முன்பு
அடிக்கடி பதிந்துள்ள ரத்தச்சுவடுகள்
அடையாளங்கள்
உனக்காகவும் எனக்காகவும்
பின் தொடர
நீண்ட, கடுமையான பாதை ஒன்று
சுதந்திரத்திற்காக.

∴பிரெட்டி ரெட்டி (இந்தியா)
தமிழில் : அ.ஜ. கான்
நன்றி: Third World Calling

பிரிப்பு

நாளை
நவராத்திரி
மண்பொம்மைகளைக்கூட
பிரித்து வைக்கிறார்கள்
இந்த ஜாதி
வெறியர்கள்
பொம்மையின் முதல்
வரிசையில் ராமன், கிருஷ்ணன், சிவன்
முருகன், சீதை, பார்வதி, சரஸ்வதி, லட்சுமி
இரண்டாவது வரிசையில் புத்தர்
ஏசு, மீரா, தியாகராஜ பிரமம், சத்யசாயி
மூன்றாவது வரிசையில்
அம்பேத்கார், காந்தி, நேரு, அண்ணா
இறுதி வரிசையில்
உழவன், குறவன், குறத்தி, வள்ளி
மலைவேடர்கள் இவர்களின்
மத்தியில் நாரதர்
ஒன்பது நாட்களாக இந்த
பொம்மைகள் நின்றும்
உட்கார்ந்தும் சிரித்தபடியே
எங்களைப் பார்த்துக்
கொண்டு
இன்பமாக
இருக்கின்றன.

ஒரே ஒரு பொம்மையின்
முனு
முணுப்பு மட்டும் என்
மூளையை வந்து
மூளையின்
மூலையை
முட்டி மோதுகின்றது.
மனிதர்களே
மனிதர்களே
உங்களுக்குள் ஆயிரம்
சாதிச்
சண்டைகள்
சந்து
சந்திற்குத்
தலைவிரித்து ஆடினாலும்
இந்த ஒன்பது நாள்
கொலுவில் கூடவா
உங்களது சாதிப்
பிரிவினையைப்
புகுத்துவது?
மண்ணால் செய்யப்பட்டாலும்
நாங்கள் ஒற்றுமையுடனும்
பொறாமையின்றி
போட்டியின்றி
மன உறுதியுடன்
வரிசையாக இருந்தாலும்
எங்களைப் பிரித்து
வைத்து எங்களுக்குள்
சாதிப்பிரிவினையைப்
புகுத்தப் பார்க்கிறார்கள் இந்த
புத்தி கெட்டவர்கள்.



'சங்கிலியன்' ஓவியம்: கொ. ரொ. கொன்ஸ்ரன்ரைன்

அராயகமும் மாக்சியமும்

ஆண்டாண்டுகாலமாக ஒடுக்குமுறையாளர்களும் சுரண்டலாளர்களும் குள்ளத்தனங்களாலும் நெட்டூரங்களாலும் மாத்திரமே ஒடுக்கிச் சுரண்டினார்கள். ஒடுக்கப்பட்டவர்களும் சுரண்டப்பட்டவர்களும் அந்த ஒடுக்குமுறையையும் சுரண்டலையும் அதேயளவு குள்ளத்தனத்தாலும் நெட்டூரத்தாலும் எதிர்கொள்ளக் கற்றுக்கொள்ளாமல் இருந்ததே இன்றுவரை உலகில் எண்ணற்றபேர் ஏழைகள் பேர்கேட்டு இன்னலுறுவதற்கான காரணமாகும். பண்டைய எண்ணற்ற தோல்விகளிலிருந்து நேற்று நூறல்ல ஆயிரக்கணக்கான தடவை விட்ட தவறை மீண்டும் மீண்டும் விட்டு ஒடுக்கப்பட்டவர்கள் தொடர்ந்து தோல்விகளையே முத்தமிட்டார்கள். நேற்றைய தலைமுறையின் அனுபவங்களை உதாசீனம் செய்து இன்றைய தலைமுறை மீண்டும் அதே பரிசோதனைகளை மீண்டும் செய்து விரக்தியடைந்துவிடுகிறது. இதிலிருந்து மீள்வதற்கு ஒரேயொரு வழிதான் இருக்கிறது. அதாவது நேற்றைய போராட்ட அனுபவங்களை சேகரித்து திரட்டி மீண்டும் பழைய தவறுகளை விடாமல் இருப்பதற்கு உணர்மையடைந்து போராடுவது. ஒடுக்குமுறையாளனின் நச்சுத்தனம் வாய்ந்த குள்ளத்தனங்களில் ஒடுக்கப்பட்டவர்களையும் சுரண்டப்பட்டவர்களையும் காத்துமழைக்குத் தாங்கக் கூடியவிதத்தில் நிறுவனப்பட விடாமல் வியாகூலப்படுத்துவது முக்கியமானது. அந்த வியாகூல வியூகங்களிற் தலை சிறந்தது தான் அராயகவாதம். இந்த அராயகவாதம் நடுத்தரவர்க்கப் புத்திஜீவிகளால் ஓகோகோ என்று புகழப்பட்டு ஒடுக்கப்பட்ட வர்க்கத்தினுள் ஓங்கி ஒலிக்கிறது.

ஒக்டோபர் புரட்சியின் வெற்றி அனாக்கிசத்தின் விஷப் பற்களை களட்டி மூலைக்குள்ளே முடக்கிவைத்தது. ஆனால் சோவியத் யூனியனில் ஸ்டாலினிசத்தின் வளர்ச்சி அதற்கு உயிர்கொடுத்ததோடு முழுக் கிழக்கு ஐரோப்பாவின் பொறிவுகள் அதை மேலும் ஊதிப் பெருக்க வைத்தது. அராயகவாதிகள் சொல்கிறார்கள். "சோவியத் யூனியனிலே ஸ்டாலினிச அதிகாரத்துவம் வளர்ந்ததற்கான மூலகாரணம் போல்சவிக் கட்சியின் ஜனநாயக மத்தித்துவக் கட்சி அமைப்பு முறையாகும். அங்கே லெனின் ஆண்டாலென்ன ரொக்சி ஆண்டாலென்ன அது தனிமனித சர்வாதிகாரத்திற்கே இட்டுச் செல்லும். எங்கே அரச வடிவம் இருக்கிறதோ அங்கே அது ஒடுக்குமுறைக்கு வழிசமைக்கும். ஆதலால் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றுதலே தவறாகும். இந்த நிலைப்பாடு ஏற்கனவே ஆட்சியிலிருக்கும் முதலாளித்துவ ஏகாதிபத்திய அரசுகள் எந்தவித நிரந்தர ஒடுக்குமுறைக் கருவிகளும் இல்லாமல் வெறுங்கையோடு ஆட்சி செய்யுமாக இருந்தால் சிலவேளை சரியாகக் கூடும். அன்றேல் பாட்டாளிவர்க்க அரசிடம் வேண்டிக் கட்டுவதிலும் பார்க்க முதலாளித்துவ அரசினால் ஒடுக்கப்படுவது துன்பங் குறைந்தது. ஏனெனில் அது ஏற்கனவே பழக்கப்பட்ட ஒன்று. வஞ்சகமே வேண்டாம் என்ற நிலைப்பாட்டின் மூலம் முதலாளித்துவம் பாதுகாக்கப்படவில்லையா?"

"முதலாளித்துவ உற்பத்திமுறை வளரவளர பெரிய முதலாளித்துவங்களின் பொருளாதார அரசியல் வல்லாண்மையும் கூடவே வளருகிறது. அது செல்வம் முழுவதையும் அபகரிப்பதோடு நிர்வகிக்கும் அரச யந்திரத்தையும் தனது கைக்குள்ளே வைத்திருக்கிறது. அது முதலாளித்துவத் திற்கு அடிபணிந்தவொன்று. அது இரக்கமற்ற நெட்டூரத்தையும் சந்தர்ப்பவாத முறையில் ஜனநாயகத்தையும் மாறி மாறி மிக நறுக்காகக் கையாள்வதன் மூலம் தன் இலக்கை அடைந்துவிடுகிறது. பாட்டாளிகளின் உற்பத்திப் பாத்திரம் வளரவளர முதலாளித்துவத்தின் ஆதிக்கமும் வலுக்கிறது. பாட்டாளிவர்க்கம் எந்த மட்டத்திற்கு ஸ்தாபனப்பட்டுக் கெட்டியாகி அரசியலைக் கற்றுக் கொள்கிறதோ முதலாளித்துவம் அதை ஈடுகொடுக்கக் கூடிய வகையில் தனது ஆளும் கருவிகளை நறுக்காகப் பலப்படுத்தி மேலும் மேலும் புதிய புதிய சமூகத் தட்டுகளை குறிப்பாக தொழிற் புத்திஜீவிகளை பாட்டாளிவர்க்கத்திற்கு எதிராகக் கிளப்பி விடுகிறது"

-ரொக்சி மூன்றாமகிலத்தின் முதல் ஐந்து வருடங்கள் பாகம்1, பக்கம்82

"மிரட்டல்தான் முதலாளித்துவத்தின் ஒட்டுமொத்தத் தூண்டும் முறையாகும். அதற்கு சொற்களிலே விசுவாசம் கிடையாது. அது செயலையே கோருகிறது. சிறைப்பிடித்தல், ஆர்ப்பாட்ட ஊர்வலங்களைச் சிதறடித்தல், பறிமுதல் செய்தல், சுடும் படைகள் என்பன அதன் நாளாந்த நடைமுறை. முதலாளித்துவத்திற்கு தங்கள்மேல் நல்லெண்ணம் ஏற்படச் செய்வதற்காக முதலாளித்துவ மந்திரிகள் தாம் உருக்காலான மனிதர்கள் என்று போஸ் கொடுக்கப் பிரயாசைப்படுகிறார்கள். ஜேர்மன் மந்திரிகளுக்கு தங்களது சொந்தச் சமூகங்களை 1871 பிரான்சில் செய்தது போல சுட்டுத் தள்ளும்படி லொலிட் ஜோர்ச் கொதிப்போடு கட்டளையிட்டுள்ளார். ஒரு மூன்றாம் நிலையிலுள்ள சிப்பாய் தான் தொழிலாளர்களை மிரட்டிப்பேசிய அறிக்கையை மேல் அதிகாரிகள் சபையிலே கொந்தளிப்போடு புழுகித்தள்ளுகிறான். உத்தியோகபூர்வ அரச யந்திரம் மேலும் மேலும் வெளிப்படையாகவே தொழிலாளர்களை குரூரமாக இரத்த வெறிகொண்டு ஒடுக்கும் ஸ்தாபனமாக உருமாறிக்கொண்டுள்ளது. தனிச்சொத்துடைமையையும் முதலாளித்துவ ஜனநாயகத்தையும் பாதுகாப்பதற்காக அதனோடு கூடவே முத

லாளித்துவத்தின் ஆதரவோடும் அதுவே தயாரித்துவிட்ட பிரத்தியேக எதிர்ப்புரட்சி நிறுவனங்கள் வேலைநிறுத்தங்களைப் பலாத்காரமாக உடைப்பதற்காக, ஆத்திரமூட்டாளர்களாக, சோடினைவழக்குகள் போடுபவர்களாக, புரட்சிகரஸ் தாபனங்களை சின்னாபின்னப்படுத்துவதற்காக, கொம்பூனிச அமைப்புகளுக்குள் பாய்ந்து அவர்களின் உடமைகளையும் ஆவணங்களையும் பறிப்பதற்காக, வெகுசனக்கொலைகளுக்காக, மண்கொள்ளைக்காக, தீக்கிரையாக்குவதற்காக, புரட்சிகரத் தலைவர்களைக் கொல்வதற்காக, இதேபோன்ற மேலும் பல எதிர்ப்புரட்சித் தீச்செயல்களுக்காகத் தயாரித்து விடப்பட்டிருக்கிறார்கள்.

நிலப்பிரபுக்களதும் முதலாளிகளதும் இளம் மைந்தர்களும் குட்டிமுதலாளித்துவ தன்நிலைமை தாழ்ந்தவர்களும், மற்றும் தங்களின் வர்க்கத்தை இழந்த மனிதர்களும், சோவியத் றைசியாவிலே இருந்து குடியேறிய முதலாளித்துவப் பெருமான்களும் முக்கியமான பெரிய அந்தஸ்துக்களை வகித்து எதிர்ப்புரட்சி கொறில்லா அமைப்புக்களை உருவாக்கியிருக்கிறார்கள். ஏகாதிபத்திய நரபலிப்பள்ளியில் சித்தியெய்திய பட்டாளத்தலைவர்கள் இவர்களுக்குத் தலைமை கொடுக்கிறார்கள்.

20000 கொயென் சொல்லோர்ண் இராணுவத்தின் அதிகாரிகள் கப்லூற்விச் சதிக்குப் பிறகு தம்மைத்தாமே வலிமையான எதிர்ப்புரட்சிக் கருவாக அணிவகுத்துள்ளார்கள். இதைக் கலைப்பதற்கு ஜேர்மன் ஜனநாயகம் லாயக்கற்று இருக்கிறது. இதற்கு மரண அடி அடிக்கப் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தால்தான் முடியும். பழைய அதிகாரத்தின் மத்தித்துவப்படுத்தப்பட்ட இந்த பயங்கரவாத நிறுவனத்திற்குத் துணையாக யங்கர் எஸ்டேட்டுகளிலிருந்து அணிவகுக்கப்பட்ட வெண்காவலர்கள் இருக்கிறார்கள்.

அமெரிக்காவிலே 'தேசிய பாதுகாப்புக் கழகம்', 'அமெரிக்க விசுவாசக் கழகம்', 'சுதந்திரத்தின் சுத்தவீரர்கள்' போன்ற நிறுவனங்கள் முதலாளித்துவத்தின் அதிரடிப்படையாகி நிற்பதோடு இவர்களின் அதீத கன்னையான பிரத்தியேக துப்பறியும்படை சாதாரண கொலைக்குண்டர்படையாக இயங்குகிறது.

பிரான்சிலே தொழிலாளர்கள் சம்மேளனத்தை சட்டவிரோதமாக்கும் பொழுது வேலை நிறுத்தங்களை உடைப்பதற்காக 'குடிமக்கள் கழகம்' என்ற ஒன்றை சமூகத்திலே தோற்றெடுத்தார்கள்.

சோவியத் அரசுக்கும் புரட்சிகர எழுச்சிகளுக்கும் எதிராக, நாகரீகத்திற்கும் மனிதாபிமானத்திற்கும் உதாரணமாக உலகப்பாட்டாளிகளுக்கு என்னத்தைக் கொடுத்துள்ளார்கள் என்றால் இங்கிலாந்தின் ஒத்தாசையோடு இயங்கும் அரசாங்க எதிர்ப்புரட்சி வால்களையும் அவர்களோடு கூடவே இரகசியமாக இயங்கும் வெள்ளைக் கங்கேரி மாபியாக்களையும் தான்.

ஜனநாயக அரசுகளான பின்லாந்து, ஜோர்யியா, லாட்வியா, எஸ்தோனியா போன்றவை நறுக்குத்தெறித்த கங்கேரித் தினுசுகள் தான்.

பார்சிலோனாவில் பொலிஸ் கட்டளையின் பேரில் தலை மறைவுக் கொலைக்குண்டர்கள் இயங்குகிறார்கள். அங்கு பார்த்தாலும், இங்குபார்த்தாலும், எங்குபார்த்தாலும் இப்படியே நிகழ்ச்சிகள்.

தோற்கடிக்கப்பட்டு அழிந்து கிடக்கும் பல்கேரியாவிலே கிடைக்கும் முதற்சந்தர்ப்பத்திலேயே தொழிலாளர்களது முதுகுகளையும் எலும்புகளையும் பதம்பார்ப்பதால் தங்களது தேசப்பற்றைக் காட்டுவதற்காக வேலையிழந்த அதிகாரிகள் இரகசிய சமூகமாக இயங்குகிறார்கள்.

முரண்பாடுகளை மெதுமையாக்கும் வேலைத்திட்டமும், பாராளுமன்ற சீர்திருத்தவாதமும், சீராகச் சமூகமயமாக்குவதும், தேசிய ஐக்கியமும், உலகயுத்தத்திலிருந்து மீண்டு கொண்டிருக்கும் முதலாளித்துவத்தின் முகத்தில் அவலட்சணமான கேலிக்கூத்தாகத் தோன்றும்.

முதலாளித்துவம், சீர்திருத்தத்தினூடு பாட்டாளிவர்க்கத்தோடு சமரசம் பேசுவதை எப்பொழுதோ கைவிட்டுவிட்டது. அது தொழிலாளிவர்க்கத்தின் உச்சியிலுள்ள பிரபுக்களுக்கு சில துணிக்கைகளை வீசியெறிந்து ஊழல் செய்து அதன் மூலம் வெகுசனங்களை இரும்பாலும் இரத்தத்தாலும் அடக்கி ஆளுகிறது..

இன்று கரிசனையான ஒரு சின்னப்பிரச்சினையையாவது வாக்களிப்பின் மூலம் தீர்த்துவிட முடியாது. சீர்திருத்தவாதிகளின் மண்டைக்குள்ளே ஜனநாயகத்தின் அற்பசொற்பத்தைக் கூடக் காணமுடியாது. முழு அரசநிறுவனமும் பூர்வ வடிவத்திற் கெட்டியாக்கப்பட்டு ஆயுதம் தாங்கிய மனிதர்களின் நிறுவனமாகிவிட்டது. . முதலாளித்துவம் வோட்டுக்களை எண்ணுவதற்குப் பதிலாக துப்பாக்கிகளையும், இயந்திரத் துப்பாக்கிகளையும், பீரங்கிகளையும் அவசர அவசரமாக எண்ணும்படி கேட்கிறது. அவைகள் அவர்களின் கைவசமுள்ளதால் ஆட்சியதிகாரத்தையும் சொத்துடைமையையும் காப்பாற்றுவதா இல்லையா என்ற பிரச்சினை நேருக்கு நேர் வந்து அதைச் செய்யும்படி சொல்லுகிறது.

கூடிவாழ்வதற்கோ சமாளித்து வாழ்வதற்கோ எந்த இடமும் கிடையாது. எங்களைக் காப்பாற்ற வேண்டுமானால் முதலாளித்துவத்தைத் தூக்கி எறிய வேண்டும். இதை பாட்டாளிவர்க்கத்தை எழுச்சிகொள்ள வைப்பதன் மூலம் தான் சாதிக்கலாம்.

-ரொக்சி. மூன்றாமகிலத்தின் முதல் ஐந்து வருடங்கள்
பாகம் 1, பக்கம் 146-147

ரொக்சியின் கொலைவிசாரணையினூடு அம்பலமான இன்னொரு முக்கிய விடயம் என்னவென்றால் ஏகாதிபத்திய சதிகாரர்கள் தங்களின் சர்வதேச வலைப்பின்னலோடு தாமே தொழிலாளர்வர்க்கக் கட்சிகளையும் தொழிற்சங்கங்களையும் உண்டாக்கி விட்டிருக்கிறார்கள். தொழிலாளவர்க்கத்தினதும் ஒடுக்கப்பட்ட மக்களினதும் நலன்களைப் பேணும் விசுவாசமான தொழிலாளவர்க்க கட்சிகளை தோற்கடிக்கும் புதிய மூலோபாயம் இது. அதுமாத்திரமல்ல மிக விசுவாசமாக தொழிலாளர் வர்க்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளை ஊடறுப்பதற்காக அவர்களே தயாரித்துவிட்டுள்ள ஏகாதிபத்திய ஏஜண்டுகள் கொஞ்சநஞ்சமல்ல. இதே போன்ற சிக்கலான கொள்ளை அனுபவங்களின் பின்னணியிற்தான் மாக்சியம் 'ஜனநாயக மத்தித்துவத்தை' தனது அமைப்புமுறைக் கொள்கையாகப்பாவித்து அராயகத்தின் அத்தனை வகையறாக்களையும் மறைமுகமாகவோ நேரடியாக தெரிந்தோ தெரியாமலோ உணர்வுபூர்வமாகவோ உணர்வுபூர்வமற்ற இவர்கள் ஏகாதிபத்தியத்தின் துணைக் கருவிகள் என்று கூறுகிறது. மாக்சியம் எப்பொழுதுமே ஆயிரம் மாற்றுவழிகளை பலபக்கக் கோணங்களில் ஆராய்ந்தபின்பே 'ஜனநாயக மத்தித்துவத்தை' தனது அமைப்பு முறைக் கொள்கையாகக் கொண்டது. இதைமேலும் சிறிது விளங்கிக் கொள்வதற்காக அராயகத்தின் வரலாற்றைப் பார்ப்போம்.

அராயகம் ஒரு கற்பனாரீதியான குட்டி முதலாளித்துவ போலியான புரட்சித்தத்துவமும் போலியான இயக்கமும் ஆகும். இது விஞ்ஞான சோசலிசத்திற்கும் கட்டுப்பாட்டோடு

கூடிய ஸ்தாபனத்தினூடு அரசியல், வர்க்கப்போராட்டத்தில் பங்கு கொள்வதையும் நானாவித அரசியல் நிறுவனங்களையும், ஸ்தாபனத்தினுள் கட்டுப்பாட்டோடு இயங்குவதையும், புரட்சிக்கட்சியின் தலைமைத்துவத்தின் ஆதிக்கத்தையும் நிராகரிப்பதோடு பூரணமான விடுதலையையும் பூரணமான உரிமைகள் அத்தனையையும் சமுதாயத்திலே நிலவுகின்ற சுரண்டி, ஒடுக்குகின்ற அரசையும் அதன் ஒடுக்குமுறை நிறுவனங்களையும் நிர்மூலமாக்கி உண்மையான சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் நிலைநாட்டுவதை நிராகரிக்கும் ஒன்றாகும். அராயகவாதம் பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் பிரான்சு, இத்தாலி, ஸ்பானியா, சுவிற்சலாந்து போன்ற லத்தீன் தாய்மொழிவழி நாடுகளில் தொழிலாளர்வர்க்க இயக்கங்களில் கணிசமான ஆதிக்கத்தை வைத்திருந்தது. ஆனால் றைசியா, ஜேர்மனி போன்ற நாடுகளில் அராயகத் தொழிற்சங்கவாதமாக ஓரளவு செயற்பட்டது. ஒரு பிரத்தியேக ரூப முதலாளித்துவத் தத்துவம் அராயகவாதத்தில் விஞ்ஞான சோசலிசத்தை எதிர்த்துக் கோலோச்சுகிறது. அரசியல்ரீதியாகத் தொழிலாளி வர்க்கத்தை விடுவிப்பதற்கு உருக்கு உறுதியும் கட்டுப்பாடும் வாய்ந்த போல்சவிக் கட்சியைக் கட்டிவளர்த்து சோஷலிசப் புரட்சிமூலம் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தை நிர்மாணிப்பதை அது மூர்க்கமாக எதிர்க்கிறது. அதற்குப் பிரதியாக முதலாளித்துவ சர்வாதிகாரத்திற்கும் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்திற்கும் இடை நடுவிலான சமூகப் போராட்டம் வேண்டுமெனவும் அதைத் தேசிய அளவிலும் சர்வதேச அளவிலும் பொதுவேலை நிறுத்தத்தின் மூலம், அதுவும் ஏற்கனவே வரிசைக்கிரமமாகவும் திட்டமிட்டும் தயாரிக்காமல் தன்னிச்சையாய் வெடித்துக் கிளம்புவதன் மூலம், அதுவும் ஒரேயொரு எதிர்ப்புக் கிளர்ச்சிமூலம் எல்லாச் சமூக எதிர்ச்சக்திகளையும் முதலாளித்துவத்தையும் அதன் அரச நிர்மாணத்தையும் நிர்மூலமாக்கி சோஷலிசத்தை எந்தவித அரசஸ்தாபனமும் நிர்வாகமும் அதிகார ஆதிபத்தியமும் இல்லாமல் செயற்படுத்துவதாகும். றடிக்கல்வாத போலிப்புரட்சிகர வார்த்தை மொங்கான் மூலமும் பயங்கரவாதத்தின் மூலமும் தொழிலாளிவர்க்க இயக்கத்தை நிதானமும் திக்குத்திசையுமற்று கொக்கு மீனுக்கிழுக்க நண்டு தவளைக் கிழுக்க வித்தையடா மாமா கொத்துதடா கோழியென்று ஸ்தாபன வினாசம் பண்ணி அதன் மூலம் தானே வார்த்தை மொங்கான்களாற் திட்டித்தீர்க்கும் முதலாளித்துவ ஆட்சியதிகாரத்திற்கு அடிபணிய வைப்பதாகும். லெனின் தனது அராயகமும் சோஷலிசமும் என்ற ஆய்வுக்குறிப்பில் கூறியாங்கு, அராயகம் பிறந்தநாட் தொடக்கம் சுரண்டலுக்கெதிரான நானாவித வார்த்தை மொங்கான்களைத் தந்ததைத் தவிர வேறொன்றையும் தரவில்லை. அதனோடு அவர்கள் ஏன் முதலாளித்துவச் சுரண்டல் நடைபெறுகிறது. ஏன் முதலாளித்துவச் சமூகமுறை உருவாகிறது. ஏன் முதலாளித்துவம் சோஷலிசமாக அபிவிருத்தியடையும் என்பதன் கட்டாய விதிகளையும் பாட்டாளிவர்க்கம் வர்க்கப் போராட்டத்தினூடு சோஷலிசத்தை படைக்க வல்லது என்பதையும் விளக்கிக் கூறுவதில்லை. அராயகம் வியாகூலத்தின் விளைபொருளாகும். அவர்களின் மனோநிலையானது புத்திஜீவிகளினதும் உதிரிப்பாட்டாளிகளதும் மனோநிலையேயொழிய பாட்டாளிவர்க்க மனோநிலையல்ல.

- லெனின் பாகம் 5, பக்கம் 334

அராயகத்தின் தாய்ப்பூமி மூலத்தில் சிதறிக்கிடக்கும் தனியாள் உற்பத்திமுறையாகும். குட்டிமுதலாளித்துவத்தின் சமூகபொருளாதார முரண்பாடு என்னவென்றால் பெருமுதலாளித்துவ உற்பத்திமுறையிலே அதுவும் இன்று அது பூகோளமயமாகிப்போன நேரத்தில் சிறு முதலாளித்துவ உற்பத்தி முறையானது தொடர்ந்து அச்சுறுத்தப்படுவதும் ஒவ்வொரு பொருளாதார நெருக்கடிகளின் போதும் ஏற்ற இறக்கங்களின் போதும் பொருளாதார லாபப் போட்டிக் கிணங்க இச்சிற்றுடமையாளர்கள் மூச்சுத்திணறப் பண்ணப்படுவார்கள். ஆதலால் அவர்கள் பெரிய முதலாளித்துவச் சொத்துடைமைக்கு எதிராக அவைகளை அழிக்குமட்டும் தொழிலாளிவர்க்கத்தோடு சேர்ந்து இழுபடுவார்கள். அடுத்தபக்கத்தில் அவர்கள் தங்களுக்கென்று தனிப்பட்ட சொந்த உடைமைகளை உண்டாக்கும் ஆசையாலும் அதை மேலும் பெருக்கும் ஆசையாலும் தொழிலாளி வர்க்கத்திலிருந்து விலகிப்போய் மீண்டும் முதலாளித்துவத்தோடு சேருவார்கள். அவர்கள் முதலாளித்துவ அரசுக்கு எதிர், ஏனெனில் அது பெரிய மூலதனத்தை பாதுகாப்பதால்; அதேநேரத்தில் பாட்டாளி வர்க்கத்திற்குப் பயம், ஏனெனில் தனது தனிச்சொத்துக்கு அபாயம் ஏற்படுமென்பதால்.

சிக்கல் நிறைந்த இதன் வெளிப்பாட்டை யாழ்ப்பாணத்து சிறுவிவசாயிகள் கதியாலுக்கு சண்டைப்பட்டு காணி விற்று வழக்குப் பேசின விடயங்கள், அதனையடுத்து தரப்படுத்தல் வந்ததுதான் தாமதம் றோட்டுக்கு றோட்டு ரியூசன் கொட்டில்களும் பொதுத்தராதரப் பரீட்சைக் கிறடிற்றுகளுக்காக குதிரையோட்டமும் முடிந்ததுதான் தாமதம் சவுக்கங்காடுகளிலே களையெடுப்பு நிகழ்ச்சிகளிற் காணலாம். வரலாற்றுக்குக் குறுக்குவழி சமைப்பதற்கும் சொர்க்கத்திலிருந்தும் தப்புவதற்கு ஓட்டை வைத்திருக்கும் இவ்வர்க்கம் உலகமெல்லாம் ஓடினார்கள். வந்தது தான் தாமதம் லண்டனிலுள்ள பெற்றோல் குதங்களையெல்லாம் வாங்கி பாரிசிலே லாச்சப்பலிலும் கனடாவில் ஸ்காபறேவிலையும் கடை கடையாகப் போட்டார்கள். அடுத்தபக்கம் புத்திஜீவிப்பகுதியினர் பட்டத்திற்கு மேலே பட்டங்களை எடுத்தபோதும் ஆழுமையோ நிர்வாகப்பொறுப்பை எடுக்கும் தைரியமோ இல்லாமல் கட்டளையிடு சேவை செய்கிறேன் என்ற மனப்பான்மையோடு வாழ்ந்து கொண்டு நீ காலாற் கட்டளையிடு தலையாற் செய்கிறேன் என்று வாழ்ந்து கொண்டு ஆனால் வயிற்றைக் குமட்டுமளவுக்கு தொழிலாளர்வர்க்கத்தின் மேல் வெறுப்பு. அண்மையில் நடந்த ஈராக் மேலான ஏகாதிபத்திய யுத்தத்தின்போது சோனியளுக்குக் குடுக்கத்தான் வேண்டுமென்று வாய்கூசாமல் வாந்தியெடுத்துக்கொண்டு யாழ்ப்பாணத்திலிருந்து வறிய முஸ்லீம்கள் வெளியேற்றப்பட்டதை வெட்கமில்லாமற் புழுகிக் கொட்டுகிறார்கள். தரப்படுத்தலிலே 'ஏ'களை எடுத்துக்கொட்டி உலகின் பிரபல சர்வகலாசாலைகளில் பொறியியல், எக்கவுண்டன், டாக்டர் பட்டங்களையும் சொத்தாக சீதனங்களையும் வேண்டினால் பெட்டிக்கடை பினாட்டு யாவாரத்தைத் தவிர ஒரு தொழிற்சாலையை முன்முயற்சி செய்ய லாயக்கில்லாமல் இருக்கிறார்கள். உலகச்சந்தையின் தொழில்நுட்பச் சந்தை சவால் என்ற எண்ணக்கருகூட அவர்களுக்குத் தெரியாது.

சிற்றுடமையாளர்கள் தமது சமூக அழிவை எண்ணித் தொடர்ந்து பயத்தோடு வாழ்ந்துகொண்டு தங்களது சிற்றுடமையை பேணுவதற்காக இலங்கை முதலாளித்துவம் போன்ற வலதுசாரிகளையும் எதிர்த்து அரசியல் வர்க்கப் போராட்டத்திலும் அரசியல் புரட்சியிலும் இடது சாரிகளையும் எதிர்த்து எரிச்சலடைந்து இருப்பவற்றைத் தூக்கியெறியும் இலக்கை விட்டுவிட்டு மாறாக அதற்குள்ளேயே மேலும் சமாளித்து இருக்க முனைகிறது. குட்டி முதலாளித்

துவத்திற்கு என்ன மாதிரியான சமூகமுறை நல்லதென்றால் அரச ஆதிக்கம் அற்றதும் ஏனெனில் சமுதாய அரசியல் பிணைப்புகள் இல்லாமல் வரிக்கப்பம் போன்றவை இல் லாமல் சுதந்திரமாகவும் தனக்குத் தானே பொறுப்பாகவும் லாபமடையத்தான் விருப்பம்.

அராயகம் எங்கே பிறந்தது என்றால் பத்தொன்பாதாம் நூற்றாண்டில் தொழிற்துறை முதலாளித்துவம் உருவாகிவ ரும் பொழுது சின்னச் சின்ன உற்பத்தி முறைகள் உருவா கிய இடங்களிற்தான் ஏனெனில் வளர்ந்துகொண்டிருக்கின்ற பெரிய முதலாளித்துவம் தன்னை அழித்துப்போடும் என்ற பயத்தினால் தான் முதலாளித்துவ சமூகத்தில் வர்க்கமு ரண்பாடுகள் முற்றி முதலாளித்துவத்தின் நிரந்தர நெருக் கடிகள் குட்டிமுதலாளித்துவத்தை நெருக்கவே அராய கத்திற்கு ஏதுவான தத்துவமும் சமூக பொருளாதார நிலை மைகளும் உருவாகின்றன.

அராயகத்தின் தத்துவார்த்த தந்தையும் அதற்கு வழி சமைத்துக் கொடுத்தவரும் யாரென்றால் இங்கிலாந்தின் வில்லியம் கோட்வின் (William Godwin 1756-1836) பிரான்சின் புருடோன் (Pierre Joseph Proudon 1809-1865) இவர் தான் அனாக்கிசம் என்ற நாமத்தைச் சூட்டியவர். மற்றும் ஜேர்மனி யரான ஸ்ரேனர் (Max Stirner 1806-1856).

இங்கிலாந்தில் தொழிற்துறை முதலாளித்துவம் உருவா கும் காலத்தில் கோட்வின் ஒரு புரட்சிகரமான சமூகவிமர் சனச் சிந்தனையாளர். பிரான்சியப் புரட்சிக் காலத்தில் சமத்துவம், சுதந்திரம், மனிதாபிமானம் என்பவற்றால் தூண் டப்பட்டு 'அரசியல் நியாயத்தின் தேடல்' (Enquiry Concer-ning Political Justice, 1793) என்ற இரண்டுபாகமடங்கிய புத்தகத்தை வெளியிட்டார். அதிலே மனிதர்களை நீதியான முறையிலே ஆளவேண்டும் என்றும் அரசியல் மதச் சுமை களில் இருந்து அவர்களை விடுவிக்க வேண்டும் என்றும் அராயக-கொம்யூனிச சிந்தனை முறையால் நிலவுகின்ற சமுதாய அமைப்பை தூக்கியெறிந்து விட்டு மனிதர்கள் இதமாக இசைந்து வாழக்கூடிய சமுதாய அமைப்பை உருவாக்க வேண்டும் என்றும் கோரினார். அவரது பெரிய கண்டுபிடிப்பு என்னவென்றால் கணிசமான சமுதாயக் கொடுமைகளுக்கான மூலகாரணம் என்னவென்றால் சமு தாய நீதியின்மை, சமத்துவமின்மை, நீதியற்ற விநி யோகமும் சுரண்டலும், கண்டாமுண்டித்தனமும், அறிவுக் குறைவும், போரும், மற்றைய மக்கள்மீது விரோதமும் ஆட்சியிலே தனிச்சொத்துடமையும் அரச பலாத்காரமும் ஆகும்.

நெட்டூரங்களை களைய வேண்டுமானால் அதன் ஊற் றிடமான தனிச்சொத்துடமையையும் அரச பலாத்காரத் தையும் அகற்றவேண்டும். இந்த நெட்டூரங்களை பலாத்காரத் தினாலோ நிர்ப்பந்தத்தினாலோ அகற்றக் கூடாது. மாறாகப் பிரகடனங்களாலும் மனிதர்களுக்கிடையேயான உறவை வளர்ப்பதாலும் அவர்களின் அறிவை வளர்ப்பதாலும் அகற்ற வேண்டும். ஒருதடவை தனிச்சொத்துடமையையும் அதிகாரத்துவ அரசாங்கமும் இல்லாமல் போன அரசாங்கம் ஒன்று உருவாகி விட்டால் நீதி, நேர்மை, பகுத்தறிவானது மனிதர்களிலே இலகுவாகப் புகுந்து அவர்கள் அதியுயர் அறிதிறனைப் பெற்று சமூகநீதியும் உளவனப்பும் பெற்று சுதந்திரமும் மகிழ்வும் பெற்று உடல் உள்ளச் செழுமை யோடு வாழ்வார்கள். கோட்வின் தனது கற்பனையான அனாக்கிச கொம்யூனிச சமுதாய முறையை அங்குராப்ப ணம் செய்து நிர்மாணிக்க முனையும் போது பதினேழாம் பதினெட்டாம் நூற்றாண்டுகளின் ஆங்கிலேய பிரெஞ்சு சடவா தம், புலனுணர்வு வாதம், நாத்திகம், மற்றும் இயற்கை உரிமை, நன்னெறித்தத்துவம் போன்றவற்றின் பிரகட னங்களையும் போதனைகளையும் துணையாகக் கொண் டார். இந்த தத்துவத்தின் ஆத்மாவாக அவர் மனிதர்களுக்கு மேலும் மேலும் அதியுயர் உண்மைகளை அறியும் சக்தியும் மனோவளர்ச்சி நிறைவைப் பெறும் கெட்டித்தனமும் இருப் பதாக நம்பினார். மனிதர்களின் முன்னேற்றத்தை தடுக்கும் மூலகாரணத்தை அகற்றி நீதியும் பகுத்தறிவும் சமுதா யத்தை பரிபாலிக்க வேண்டும். பகுத்தறிவு வளர்ந்து உல கைப்பற்றிய அறிகை வலுத்திருந்தால் மக்கள் நீதி நேர் மையான விடயங்களை அறிந்து சமுதாயத்திலே இசைந்து வாழ்ந்து அனைவரின் உரிமைகளும் மதிக்கப்பட்டு வெல் லப்படும் வழித்துறைகளிற் செல்வார்கள்.

இப்படி யோசித்த கோட்வின் அந்த நாளைய ஆங்கி லேய தொழிற்துறை முதலாளித்துவப் புரட்சியின் தாக் கத்திற்கு உள்ளான குட்டிமுதலாளித்துவத்தின் மனோநி லைகளை வெளிக்கொணர்ந்தார். அன்றைய இளைய ஆங் கிலத் தொழிலாளர்கள் இடையே அவரின் சிந்தனைகள் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியதோடு ஆங்கிலேய முதலா ளித்துவ புரட்சியின் போது அவரின் போதனைகளை கடைப் பிடித்தார்கள். அதன் காரணமாகவே பிரெஞ்சு, அமெரிக்கப் புரட்சிபோன்று முடியாட்சி முற்றாக ஒழிக்கப்படாமல் அது சட்டசபையோடான முடியாட்சியாகியது. ஆங்கிலேயக் கவி ஞரான செல்லியும் கோட்வினால் ஆட்கொள்ளப்பட்டு பிரமை நிறைந்த அராயக எண்ணங்களை வெளிக்கொணர்ந்த வராகும்.

(PRODHON) புறுடோனை மாக்ஸ் பிரான்சிய குட்டிமு தலாளித்துவத்தின் ஊதுகுழல் என்றார், அவர் தனிச்சொத்து என்பது என்ன? பொருளாதார முரண்பாடு அல்லது வறுமை யின் தத்துவம் என்ற நூல்களை எழுதினார். புறுடோனின் போதனை இதுதான்: சமவுரிமை, பரஸ்பரம், வட்டியில்லாத கடன், மக்கள் வங்கி, உற்பத்திப்பொருட்களைச் சமமாகப் பங்கிடுதல்மூலம் எல்லாத் தொழிலாளர்களும் சின்னச்சின்ன உற்பத்தியாளராகவும் சின்னச் சொத்துள்ளவர் ஆகலாமென் றும் அவர்கள் உற்பத்தி செய்த பொருட்களை நியாயமான முறையில் பண்டமாற்றிக் கொள்ளலாமெனவும் முதலாளித் துவத்தைச் சமாதானமுறையிற் சீர்திருத்தி அரசபலாத்கா ரத்தை இல்லாமற்செய்து ஒரு மனிதனை மற்ற மனிதன் சுரண்டுவதை இல்லாமற் செய்யலாமெனவும் கூறினார். ஏற்க னவே பிரெஞ்சுச் சிந்தனையாளர்கள் தனிச்சொத்தென்பது மற்றவர்களின் உழைப்பைக் களவெடுப்பதால் மாத்திரமே திரளுமென்றும் வரலாற்றில் ஓரடி முன்னேறவேண்டுமெனி லும் ஒட்டுமொத்தச் சமுதாயமாக இணைந்து செயற்பட்டே முன்னேறமுடியுமென்றும் உள்உரசல்களும் உள்முரண் பாடுகளும் நிலவினால் முழுச்சமுதாயமுமே உக்கி உழு த்து உருக்குலைந்து போகும் என்ற கருத்துக் கோலோச்சிய காலம்.

புறுடோன் முதலாளித்துவ அரசின் வர்க்கப் பாத் திரத்தை பிழையாக விளங்கி அரசியலிலிருந்து விலகிநிற்க வேண்டுமென்று பிரசாரம் செய்தார். இதனூடு அவர் பாட் டாளிவர்க்கம் ஜனநாயக உரிமைகளுக்காகவும் வாக்குரி மைகளுக்காகவும் போராடக்கூடாதென்றும் ஆட்சியதிகாரத் தைக் கைப்பற்றக் கூடாதென்றும் கூறினார். நிறுவனமாகி பொருளாதாரப் போராட்டங்களை நடத்துவதையும் தொழிற் சங்கப் போராட்டங்களையும் நிராகரித்தார். தொழிலாளர்கள் ஒருவரையொருவர் பரஸ்பரம் நேசிப்பதாலும் ஒருவருக் கொருவர் உதவிசெய்வதாலும் பொருளாதாரக் குணவியல்

களில் விடுதலைபெறலாமென்று நம்பினார். 1863இல் சமஷ்டித்தத்துவத்தைப் பிரகடனப்படுத்துவதன் மூலம் அரசபலாத்காரத்தை அகற்றமுடியாதென்றும் சமஷ்டிமுறைமூலம் அதிகாரத்தைப் பரவலாக்கி அதைக் குறைத்துக்கொள்ள முடியுமென்றும் ஆனால் அராயகம்தான் சிறந்ததென்றும் அரசபலாத்காரம் இல்லாததென்றும் கூறினார்.

மாக்ஸ் தனது 'மெய்யியலின் வறுமை' என்ற புத்தகத்தில் புறுடோனின் குட்டிமுதலாளித்துவ கருத்துவாதப் பொருளாதார தத்துவார்த்தப் போதனையைத் தகர்த்தெறிந்தார். இளம் மாக்சினது சிந்தனையிலே இயங்கிய சடவாதம் ததும்பி வழிவதையும் எதிர்காலத்தில் எழுத இருந்த 'மூலதனம்' புத்தகத்தின் கரு கர்ப்பமாவதையும் அந்த நூலிற் காணலாம். இன்னும் மேலாக இந்தப் புத்தகம் விமர்சனக் கலைக்கு ஓர் பதச்சோறு. மாக்ஸ் ஒரு நாளும் தனது சொந்தப் புரட்சிக்கரக் கருத்துக்களை தானே முதற் கண் பிரேரித்தது கிடையாது. மற்றயவர்களின் கருத்தை விமர்சிக்கும் பொழுது அவர்களின் தவறுகளை வரலாற்று ரீதியாகவும் பலபக்கப் பார்வையோடும் தொகையிட்டு முழுமையாக எந்தவித சிலேடைக்கும் வியாகூலத்திற்கும் இடம் விடாது தெட்டத்தெளிவாக ஸ்தூலமாக விளக்கிய பின்னர் தனது புதிய புரட்சிகரமான சொந்தக் கருத்துக்களான பொருள்முதல்வாத நோக்கிலான வரலாற்றையும் உற்பத்திச் சக்திகளுக்கும் உற்பத்திஉறவுகளுக்கும் உள்ள பரஸ்பர தொடர்புகளையும் நேரடியாக விளக்கிக் காட்டி அப்போது நிலவும் உற்பத்தி தரும் சமூக உறவுகளின் அருவப்படுத்தலே பொருளாதார வகையினங்களின் தத்துவார்த்த வெளிப்பாடு என்பதற்கு பொருள் முதல்வாத விளக்கம் தருவர். விமர்சனத்தின்போது விசமத்தனமாய் குறைகூறி விட்டு இறுமாப்போடு இறும்பூதெய்தியவர் அல்லர். தனது சொந்தக் கருத்துக்களைப் பிரேரித்து வேண்டிக்கட்டி காலத்தின் நீதி வழங்கலுக்குக் காத்திருப்பார். அவர் அப்புத்தகத்தை நண்பனான புறுடோன் காரசாரமான உனது விமர்சனத்தை எதிர்பார்க்கிறேன் என்று கடிதம் எழுதியதன் பேரிலேயே எழுதினார். எழுதும்பொழுது விஞ்ஞானத்திற்குத் துரோகமிழைக்காமல் தனது நட்பைத் தாரைவார்த்தார். முழுமையாகக் கரிசனையோடு கட்டாயம் பலமுறை படிக்க வேண்டிய அந்த நூலிலிருந்து.

"முதலாளித்துவ உற்பத்திஉறவுகளான உழைப்புப்பிரிவினை, கடன், மதிப்பு, பணம் முதலியவற்றை நிலைபேறுடைய, மாற்றவொணாத, நிரந்தரமான வகையினங்களாகப் பொருளாதாரவாதிகள் காட்டுகிறார்கள். தயார்நிலையிலே தம் எதிரே உள்ள இவ்வகையினங்களை வைத்துக் கொண்டு திரு. புறுடோன் இந்த வகையினங்கள், கோட்பாடுகள், விதிகள், கருத்துக்கள், எண்ணங்கள் ஆகியன அமைவுற்றதன் செய்கையை, அவற்றின் தோற்றத்தை நமக்கு விளக்க விரும்புகிறார்.

மேலே சொன்ன உறவுகளில் எப்படி உற்பத்தி நிகழ்கிறது என்பதை பொருளாதாரவாதிகள் விளக்குகிறார்கள். ஆனால் இந்த உறவுகளே எப்படி உற்பத்தியாகின்றன என்பதை அதாவது அவற்றை ஈன்றெடுத்த வரலாற்று இயக்கத்தை விளக்குவதில்லை.

"திரு புறுடோன் என்கின்ற பொருளாதாரவாதிக்கு நன்றாகப் புரியும், மனிதர்கள் திட்டவட்டமான உற்பத்தி உறவுகளிலே இருந்து கொண்டு கம்பளி, பஞ்சு, பட்டுத் துணிகளைச் செய்கிறார்கள் என்று. ஆனால் கம்பளி, பஞ்சு முதலான துணிகளை உற்பத்தி செய்வது போலவே இந்த திட்டவட்டமான உற்பத்திஉறவுகளையும் மனிதர்களே உற்பத்தி செய்கிறார்கள் என்பதைத்தான் அவர் புரிந்து கொள்ளவில்லை. சமுதாய உறவுகள் உற்பத்திச்சக்திகளோடு நெருக்கமாகப் பிணைக்கப்பட்டுள்ளன. புதிய உற்பத்திச்சக்திகளைப் பெறுவதிலே மனிதர்கள் தமது உற்பத்திமுறையை மாற்றிக்கொள்கிறார்கள். உற்பத்திமுறையையும் தமது வாழ்க்கைக்கான சம்பாதிக்கும்முறையையும் மாற்றிக்கொள்வதிலே தங்களுடைய சமுதாய உறவுகள் அனைத்தையும் மாற்றிவிடுகிறார்கள். கையால் ஆட்டி மாவரைக்கும் இயந்திரம் உங்களுக்கு நிலப்பிரபுவைக் கொண்ட சமுதாயத்தைக் கொடுக்கிறது. நீராவியால் ஓடுகிற இயந்திரம் தொழிற்துறை முதலாளியைக் கொண்ட சமுதாயத்தைக் கொடுக்கிறது.

தமது பொருள் உற்பத்திக்கும் தரத்துக்கும் பொருத்தமாக தமது சமுதாய உறவுகளை நிறுவிக்கொள்கிற அதே மனிதர்கள்தாம்,அந்தச் சமுதாய உறவுகளுக்குப் பொருத்தமாகக் கோட்பாடுகளையும் கருத்துக்களையும் வகையினங்களையும் உற்பத்தி செய்கிறார்கள்.

ஆகவே இந்தக் கருத்துக்களும் இந்த வகையினங்களும் வெளியிடுகிற உறவுகள் எந்த அளவுக்கு நிரந்தரமானவையாக இல்லையோ அதே அளவுக்குத் தாமும் நிரந்தரமானவை அல்ல. அவை வரலாற்று ரீதியான, தற்காலிகமான விளைபொருட்களே.

உற்பத்திச்சக்திகளின் வளர்ச்சியிலே சமுதாய உற்பத்தியின் அழிவிலே, கருத்துக்களின் உருவாக்கத்திலே ஓர் இடையறாத இயக்கம் இருக்கிறது. மாற்றவொணாத ஒரே விஷயம் இயக்கத்தின் சூட்சுமத் தன்மையேயாகும் அது 'சாகாவரம் பெற்ற சாவு'.

"மனிதர்கள் தாங்களாகவே ஏதாவதொரு சமுதாயத்தைத் தேர்ந்து கொள்ளச் சுதந்திரம் பெற்றிருக்கிறார்களா? நிச்சயமாகவில்லை."

"தமது வரலாற்றுக்கெல்லாம் அடிப்படையாக இருக்கும் பொருளாதாரச்சக்திகளை தேர்ந்து கொள்ள மனிதர்கள் சுதந்திரமுள்ளவர்களாயில்லை." "எந்தப் பொருளாதார வடிவங்களில் மனிதர்கள் உற்பத்தி செய்தும், நுகர்ந்தும், பரிமாற்றம் செய்தும் வருகிறார்களோ அந்தப் பொருளாதார வடிவங்கள் தற்காலிகமானவை, வரலாற்று ரீதியானவை"".

கம்பன், மில்ரன், வைற்லிங், டால்ஸ்டாய், யேசு போன்றோரின் சமத்துவ கொம்யூனிசத்திற்கும் மாக்சியம் சொல்லும் கொம்யூனிசத்திற்குமுள்ள வித்தியாசத்தை ஏங்கல்ஸ் 'மெய்யறிவின் வறுமையின்' முகவுரையிலே விளக்குகிறார்.

"சமுதாய விளைபொருள் முழுவதும் தமது விளைபொருள் என்கின்ற முறையில் தொழிலாளர்களுக்குச் சொந்தமாகும். ஏனெனில் அவர்கள் மட்டுமே உண்மையான உற்பத்தியாளர்கள் என்னும்படியான ரிக்கார்டோ தத்துவத்தின் மேற்கூறிய செயற்பாடு நேராகக் கம்யூனிசத்திற்குக் கொண்டு செல்கிறது. ஆனால், மேலே மேற்கோள் காட்டிய பகுதியில் மார்க்கிசம் குறித்துக் காட்டுகிறபடி, புறவடிவு வகையிலே அது பொருளாதாரரீதியிலே தவறாகும். ஏனெனில் அது வெறுமனே நீதிநெறிமுறைமையை அரசியல் பொருளாதாரத்தில் செயற்படுத்துவதாகும். முதலாளித்துவ பொருளாதாரத்தின் விதிகளின்படி, விளைபொருட்களின் மிகப் பெரும்பகுதி அதை உற்பத்தி செய்த தொழிலாளர்களுக்குச் சொந்தமாக இல்லை. அது அநியாயம், அப்படி இருக்கக் கூடாது என்று இப்போது சொல்வோமானால் அதற்கும் அரசியல் பொருளாதாரத்துக்கும் உடனடி சம்பந்தம் ஒன்றும் இல்லை. இந்தப் பொருளாதார உண்மை, நமது நீதி நெறி உணர்ச்சிக்கு முரண்பாடாக இருக்கிறது என்று மட்டுமே சொல்லிக்

கொள்கிறோம். எனவே தான், இதனை எப்போதும் மார்க்ஸ் தமது கம்யூனிச கோரிக்கைகளுக்கு ஆதாரமாக கொள்ள வில்லை. முதலாளித்துவ உற்பத்திமுறையின் தவிர்க்க முடியாத வீழ்ச்சியையே ஆதாரமாகக் கொண்டார். அவ் வீழ்ச்சி நம் கண்ணெதிரே மேன்மேலும் அதிகரித்த அள விலே தினந்தோறும் நிகழ்ந்து வருகிறது."

"கேடான ஆட்சி ஒரு காரணமல்ல, அது ஒரு பின்விளை வுதான். அது படைப்பாளி அல்ல அதுவே படைக்கப் பெற்றது. அது சொத்துடைமையின் சமமற்ற நிலை பெற்றெ டுத்த பிள்ளையாகும் என்பதையும் சொத்துடமையின் சமமற்ற நிலை நமது தற்கால சமுதாய அமைப்பு முறை யோடு பிரிக்கவொணாதபடிக்கு பிணைக்கப் பட்டிருக்கிறது." என்பதை மாக்ஸ் நிர்மாணித்து புறுடோனின் பொருளாதார தத்துவத்தைத் தகர்த்தெறிந்தார்.

செப்டம்பர் 7, 1867 முதலாமகிலத்தின் லவ்சான காங் கிரஸ் தொழிலாளி வர்க்கத்தின் சமுதாய விடுதலை என்பது அரசியல் விடுதலையில் இருந்து பிரிக்கவொணாதது என்று பிரகடனப்படுத்தியது. அராயகவாதிகள் பிரேரித்த அரசியல் செய்யக்கூடாது. பாராளுமன்றத் தேர்தலிலே பங்குகொள்ளக்கூடாது. தொழிற்சங்கமாக இயங்கிப் போரா டக் கூடாது. தொழிலாளர்கள் சுதந்திரமாக ஒருபுரட்சிக் கட்சியை கட்டி வளர்க்கக்கூடாது என்ற தீர்மானங்கள் லவ்சனாக் காங்கிரசிற் தோற்கடிக்கப்பட்டது. அந்தக் காங் கிரஸ் தொழிலாளிவர்க்கத்தின் சமுதாய விடுதலை என்பது அரசியல் விடுதலையில் இருந்து பிரிக்கவொணாதது என்று பிரகடனப்படுத்தியது.

பாரிஸ் கொம்யூன் தொழிலாளிவர்க்கத்தின் அரசாங்க வடிவமொன்று மாக்ஸ் சுட்டிக்காட்டி வர்க்கப்போராட்டம் தான் தொழிலாளிவர்க்கத்தின் பொருளாதார சமூகவிடு தலையை தரவல்லது என்பதையும் நிறுவிக்காட்டி புரட்சி, அரசு பற்றிய தத்துவத்தால் புறுடோனிசத்தைப் பிழை யென்று நிறுவிக்காட்டினார். முதலாம் அகிலத்திலுள்ள பிரெஞ்சுக் கிளையில் அதிகம்பேர் இடது புறுடோனிஸ்ட்டா கவும் அதேவேளையில் பாரிஸ் கொம்யூன் தலைவர்க ளாகவும் இருந்ததே பாரிஸ் கொம்யூன் வீழ்ச்சிக்கு காரண மாகும். 1891இல் ஏங்கல்ஸ் கூறுகையில் பாரிஸ் கொம்யூன் தான் சோஷலிசத்தின் புறுடோனின் பள்ளியின் சுடலைக் கல்லென்று கூறினார்.

பாரிஸ் கொம்யூன் எவ்வாறு தோற்கடிக்கப்பட்டது என்று சொல்லவந்த மாக்ஸ்:

"ஒவ்வொரு புரட்சிக்குப் பிறகும் தியோர் பாவர் டியூக் போர், கர்னியே-பழே (இதே தரத்தைக் கொண்ட சில போக்கிரிகள் மட்டுமே இவர்களுக்கு உதவியாக பலத்தைக் கொடுக்கிறார்கள்.) ஆகியவர்களைப் போன்ற காலாவதியா கிப்போன நாடாளுமன்றக் கோமாளிகளும் சூழ்ச்சிக்காரர்க ளும் மேற்பரப்பில் தொடர்ந்து மறுபடியும் தோன்றுவதும் நிர்வாக அதிகாரத்தைத் தகாத வழியில் கைப்பற்றுவதும் எப்படியென்று கேட்கப்படலாம். இந்த மனிதர்கள் எப்பொ ழுதுமே புரட்சியைத் தங்களுக்குப் பயன்படுத்திக்கொண்டு, புரட்சிக்குத் துரோகம் செய்து, புரட்சி செய்த மக்களை சுட்டுக்கொன்று, முந்திய அரசாங்கங்களிடமிருந்து பறித்த சில சலுகைகளை (அவற்றை இவர்கள் எதிர்த்தவர்கள்.) தாங்கள் எடுத்துக்கொண்டதால் அதை எப்படி நிறைவேற்ற முடியும்.

இது மிகச் சாதாரண விஷயமே. பெப்ரவரி புரட்சிக் குப்பின் தியுயோரைப் போல அவர்கள் மிகவும் வெறுக்கப் பட்டாற்கூட, பொதுமக்களுடைய பெருந்தன்மை அவர்களை விட்டுவிடுகிறது. மக்களுடைய ஒவ்வொரு வெற்றிகரமான எழுச்சிக்குப் பின்பும் மக்களின் உறுதியான எதிரிகள் சமரசம் என்று கூக்குரலிடுகிறார்கள். வெற்றியினால் ஏற்பட்ட உற்சாகத்தின் முதல் வினாடிகளில் மக்களும் அதை எதிரொலிக்கிறார்கள். அந்த முதல் வினாடிக்குப் பின் மக்களிடம் சடத்துவ சக்தி இருக்கின்றவரை தியோர் மற்றும் டியுக்போரைப் போன்ற நபர்கள் வேண்டுமென்றே தங்களை மறைத்துக் கொள்கிறார்கள். இருட்டில் உழைக்கிறார்கள். மக்கள் நிராயுதபாணியாக்கப்பட்டவுடன் அவர்கள் மறுபடியும் தோன்றுகிறார்கள். அப்பொழுதே முதலாளிவர்க்கம் அவர்க ளைத் தமது தலைவர்கள் என்று பேரொலியுடன் பாராட் டுகிறது.

அல்லது பாவ்லர், கர்னியே-பழே, யூல் சிமோன், இதரர் கள் போலவே, செப்டம்பர் 4ஆம் திகதிக்குப் பின் தயோரைப் போல அவர்கள் லூயி பிலிப்பின் கீழ் 'கவுரவமான' குடியரசு வாத எதிர்க்கட்சியாகக் கருதப்பட்டவர்கள். இதுவே பின் லூயி பொனப்பாட்டின் கீழ் நாடாளுமன்ற எதிர்க்கட்சியா யிற்று, புரட்சியானால் அவர்கள் அதிகாரத்திற்கு உயர்த் தப்படுகின்றபொழுது அவர்கள் துவக்கி வைக்கின்ற பிற் போக்கு ஆட்சிமுறைகள் உண்மையான புரட்சிக்காரர்களை வெளியேற்றி, கொலைசெய்து நாடுகடத்தி அவர்களை எதிர்க்கட்சி ஆக்குகிறது. "மக்கள் அவர்களுடைய கடந்தகா லத்தை மறந்து விடுகிறார்கள். முதலாளிவர்க்கம் அவர் களை தங்களுடைய நபர்களாகக் கருதுகிறது. அவர்களு டைய இழிவு நிறைந்த கடந்தகாலம் மறக்கப்படுகிறது. இவ்வாறாக அவர்கள் தங்களுடைய துரோகத்தையும் இழிவான செயலையும் மறுபடியும் தொடங்குவதற்காகத் தோன்றுகிறார்கள்."

-மார்க்ஸ் பிரான்சில் வர்க்கப்போராட்டங்கள்

இதுபோன்ற எண்ணற்ற புரட்சிகள் தோற்கடிக்கப்பட்ட நுட்பங்களை இடித்துச் சொல்லும் ஓர் உருக்குறுதி வாய்ந்த மத்தித்துவப் புரட்சிக்கட்சி இருந்தால் மாத்திரம் தான் எழுச்சிகொண்ட புரட்சிகளை எதிர்ப்புரட்சியிலிருந்து காப்பாற்றலாம். வரலாற்றில் எத்தனையோ புரட்சிகள் ஒரு போல்சவிக் கட்சிபோன்ற அனுபவச்செழுமை நிறைந்த புரட்சிக்கட்சி இல்லாமையால் வெற்றியின் விளிம்பில் தோல் வியை முத்தமிட்டன.

மார்ச் 21, 1919இல் உண்டாகிய சோவியத் கங்கேரி ஆகஸ்ட் 1, 1919 தோற்கடிக்கப்பட்டது. ஏப்ரல் 14, 1919 ஏற்படுத்தப்பட்ட முன்னிச்சின் பவேரிய சோவியத் குடியரசு மே 1, 1919 தோற்கடிக்கப்பட்டது. 1918 இலையுதிர்காலத்து ஜப்பானியத் தொழிலாளர்களின் எழுச்சி அந்த மக்களின் 25 வீதமான மக்களை ஒடுக்கி மிக்காடோ அரசாங்கத்தாற் தோற்கடிக்கப்பட்டது.

ஜேர்மனியில் ஜனவரி 1918 பொதுவேலைநிறுத்தம் 1919 ஜனவரி-மார்ச் புரட்சிகர எழுச்சி, 1920 கப்புச் சதி, 1921 பெரிய எழுச்சி, 1923இல் ஆட்சியைக் கைப்பற்றக்கூடிய அத்தனை நிலைமைகளும் இருந்தன. இந்தா பிடி சோஷ லிசப் புரட்சி வருகிறேன் என்றிருந்தது. உடனே அது எதி ர்ப்புரட்சியாக மாறியது. 1920இல் இத்தாலியில் தொழிலா ளர்கள் தொழிற்சாலைகளையும் மில்களையும் எஸ்டேட்க ளையும் கைப்பற்றியிருந்தும் கூட சோஷலிசப் புரட்சியை முழுமையாக்க முடியாமற்போயிற்று. இப்படித் தொழி லாளர்களின் எத்தனையோ எழுச்சிகளைக் காட்டமுடியும். அவை ஒவ்வொன்றும் ஒரு சுயாதீனமான பாட்டாளி வர்க்கப் புரட்சிக் கட்சியின் தேவையையும் அந்தக் கட்சியின் குணாம் சம் எப்படி இருக்க வேண்டும் என்பதையும் அவைகளை

போல்சவிக்கட்சியோடு ஒப்பிட்டுக் காட்டியுமே சென்றன.

பாரிஸ் கொம்யூன் காலத்தில் அரசைப்பற்றி சொல்லவந்த மாக்ஸ், "அரசுகள் பிரமாண்ட அளவிலான நிரந்தர இராணுவங்களையும் ஏராளமான அரச புல்லுருவிகளையும் மாபெரும் தேசியக்கடன்களையும் ஏற்படுத்துவதில் மையங் கொண்டிருந்தன. ஆனால் அரசு என்ற இரத்தமுறிஞ்சும் இயந்திரம் இரண்டாவது பேரரசின் கீழ் மட்டுமே அதன் கடைசி வளர்ச்சியை அடைந்தது. நிரந்தரமான இராணுவத்தையும் அனைத்தையும் இயக்குகின்ற அதிகாரவர்க்கத்தையும், எல்லோரையும் முட்டாளாக்குகின்ற மதக்குருக்களையும் அடிமைப்புத்தியுள்ள நீதிமன்றங்களின் படிநிலைவரிசையையும் கொண்ட அரசாங்க அதிகாரம் சமூகத்திலிருந்து மிகவும் சுதந்திரமடைந்துவிட்ட படியால் இரைதேடி அலைகின்ற கொள்ளைக்கூட்டத்தைத் தனக்கு பின்னால் வைத்திருக்கின்ற ஒரு அருவருப்பான, சாதாரணமான துர்ச் சாகசக்காரன் அதை ஆட்சிசெய்யப் போதுமானதாக இருந்தது.

பெருந்திரளான பொதுமக்களின், அதாவது உற்பத்தி செய்கின்ற பெருந்திரளான மக்களின் பெயராலும். பகிரங்கமாக அவர்களுடைய நலன்களுக்காகவும் புரட்சி நடைபெறுவது இதற்கு முந்திய எல்லா புரட்சிகளையும் போல் இந்தப் புரட்சியிலும் ஒரு கூறாக இருக்கிறது. மக்கள் முதல் எழுச்சிக்குப்பின் தங்கள் ஆயுதங்களை எறிந்துவிடாதிருப்பதும் ஆதிக்கம் செலுத்தும் வர்க்கங்களின் குடியரசுவாதக் கோமாளிகளின் கைகளில் அதிகாரத்தை ஒப்படைக்காதிருப்பதும் கம்யூனை ஏற்படுத்தியதன் மூலம் அவர்கள் புரட்சியின் நடைமுறை நிர்வாகத்தை தங்களுடைய கைகளில் எடுத்துக்கொண்டு அதே சமயத்தில் ஆதிக்கம் செலுத்தும் வர்க்கத்தினரின் அரசாங்க இயந்திரத்திற்கு, அரசஇயந்திரத்துக்குப் பதிலாகத் தங்களுடைய சொந்த அரசாங்க இயந்திரத்தை ஏற்படுத்தி வெற்றி கிடைக்கின்றபொழுது மக்களுடைய கைகளிலேயே அந்த அதிகாரத்தை தக்கவைப்பதற்குரிய சாதனத்தை கண்டுபிடிப்பதும் இங்கே புதிய அம்சம் எனலாம்.

தொழிலாளிவர்க்கத்தின் மெய்யான விருப்பார்வங்களையும் உண்மையான இயக்கத்தையும் பற்றி எவ்விதத்திலும் அறிவில்லாத இந்தப் பரோபகார ஆதரவாளர்கள் ஒரு விஷயத்தை மறந்துவிடுகிறார்கள். குறுங்குழுக்களை நிறுவிய சோஷலிசவாதிகள் அனைவருமே உலக அரங்கத்தில் தொழிலாளிவர்க்கம் வரலாற்றின் உந்து சக்தியாக நுழைவதற்கு முதலாளித்துவச் சமுதாயத்தின் முன்னேற்றத்தின் மூலம் போதிய பயிற்சியளிக்கப்பட்டு ஸ்தாபனமாக அமைக்கப்படாத காலகட்டத்தைச் சேர்ந்தவர்கள். தொழிலாளி வர்க்கத்தினரின் விடுதலையின் சடத்துவ நிலைமைகள் பழைய உலகத்தில் போதிய அளவுக்கு முதிர்ச்சி அடையவுமில்லை. அவர்களுக்குத் துன்பம் இருந்தது. ஆனால் அவர்களுடைய சொந்த இயக்கத்துக்குரிய நிலைமைகள் இன்னும் ஏற்படவில்லை. இக்குறுங்குழுக்களின் கற்பனாவாத ஸ்தாபகர்கள் இன்றைய சமுதாயத்தைப்பற்றி தங்களுடைய விமர்சனத்தில் கூலி உழைப்புமுறை மற்றும் வர்க்கஆதிக்கத்தின் அனைத்துப் பொருளாதார நிலைமைகளையும் அகற்றுதல் என்ற அந்தச் சமூக இயக்கத்தின் இலட்சியத்தை தெளிவாக விவரித்தாலும், அவர்கள் சமூகத்தில் அதன் மாற்றத்துக்கு அவசியமான சடத்துவ நிலைமைகளைப் பார்க்கவில்லை. தொழிலாளிவர்க்கத்திடமும் அந்த இயக்கத்தின் அமைப்புரீதியான, உணர்வுபூர்வமான சக்தியைப் பார்க்கவில்லை. அவர்கள் ஒரு புதிய சமூகத்தைப்பற்றி புனைவுச் சித்திரங்களையும் திட்டங்களையும் தீட்டி இயக்கத்திற்கு அவசியமான வரலாற்று நிலைமைகள் இல்லாததை ஈடுசெய்ய முயன்றார்கள். அவற்றின் பிரச்சாரத்தில் மீட்சிக்குரிய உண்மையான வழிகளை அவர்கள் கண்டார்கள். தொழிலாளிவர்க்கத்தின் இயக்கம் யதார்த்தமாகிய வினாடியிலிருந்து இப்புனைவுக் கற்பனைகள் மறைந்தன. இக்கற்பனாவாதிகளின் குறிக்கோள்களை தொழிலாளிவர்க்கம் கைவிடவில்லை. அதற்குப் பதிலாக அவற்றை நிதர்சனமாக்க வல்ல சடத்துவசாதனங்களை அது கண்டு கொண்டதே அதற்குக் காரணம். அவற்றுக்குப் பதிலாக இயக்கத்தின் வரலாற்று நிலைமைகளைப்பற்றி உண்மையான நுண்ணறிவு ஏற்பட்டது. தொழிலாளி வர்க்கத்தின் போர்க்குணமிக்க ஸ்தாபனம் மென்மேலும் பலமடைந்தது. ஆனால் கற்பனாவாதிகள் பிரகடனம் செய்த கடைசி இரண்டு குறிக்கோள்களும் பாரிஸ் புரட்சியும் அகில மும் பிரகடனம் செய்திருக்கும் கடைசிக் குறிக்கோள்களே! அவற்றை அடைகின்ற வழிகள் மட்டுமேவேறு"

-மாக்ஸ் பிரான்சில் வர்க்கப்போராட்டங்கள்-

ஸ்ரேர்னர் Stirner

ஜேர்மனியில் ஸ்ரேர்னர்தான் அராயகத்தைப் பாவனை செய்தார். இவர் ஏங்கல்ஸ்சோடு பெர்லினில் இளைய கெகலிய இயக்கத்தில் இருந்தவராகும். ஸ்ரேர்னர் தனது 'ஒரேயொரு தனது சொத்துடமை' (1845) என்ற புத்தகத்தில் அகவயவாதத்தையும் தனிமனிதவாதத்தையும் தனது தத்துவமாக வெளிப்படுத்துகிறார். அவரது தத்துவங்களில் உலகமும் உலகத்தின் மனிதர்களும் வர்க்கப்போராட்டமும் போட்டியும் என்பவைகளில் தனிமனித விருப்பங்களையும் ஆசை அபிலாசைகளையும் ஜேர்மனியின் குட்டிமுதலாளித்துவ புத்திஜீவிகளின் பிரதிபலிப்புகளையும் வெளிப்படுத்துகிறார். வரலாற்றுரீதியற்ற நிதர்சனத்தோடு எந்தவித சம்பந்தமும் இல்லாத எழுத்துக்களில் அதீத அகவய மனப்பாங்கோடு உலகமே தனது 'தனிச்சொத்தென்றும்' நானே எனது நான் என்றும் நானே எனது உண்மையான நண்பனென்றும் அது ஒன்றுதான் நிதர்சனமானதென்றும் அதற்கப்பால் வேறு நிதர்சனமில்லையென்றும் அரச அதிகாரமும் ஆதிக்கமும் தன்னை அங்கீகரிக்காதென்றும் கூறினார். இந்த 'நான்' இந்த 'என்நலம்' எல்லாவற்றிற்கும் முன்னிலையில் நின்று எல்லாவற்றிற்கும் எதிராக நின்று அவைகளின் சுதந்திரத்தை மட்டுப்படுத்தும். ஸ்ரேர்னர் குட்டிமுதலாளித்துவத்தின் ஆத்மாவாக தனிமனிதத்துவமும் தன்னலமுமே தனது தன்னுணர்மைத்தத்துவத்தினதும் நடவடிக்கைகளினதும் அடிப்படை என்றியம்பினார். மனிதர்கள் இயற்கையிலேயே தன்னை மையமாக உடையவர்கள் என்றும் தனக்கு மிஞ்சியதுதான் தானம் என்றும் பிரகடனப்படுத்தினார். ஒரு சமூக ஸ்தாபனத்திலே இயங்குவதென்பது தனது தனிமனிதத்துவத்தை நசுக்கித் தனது சுயத்தைக் கொன்றால் மாத்திரம்தான் முடியுமென்றும் அதுவே ஒரு சிறைக்கூடமென்றும் கூறினார். இதன் மூலம் குட்டிமுதலாளித்துவத்தைத் தனிமைப்படுத்தி அரசியல்ரீதியிலும் பொருளாதாரரீதியிலும் சக்தியற்றவர்களாக்கி இதனூடு அவர்களை இனிது இனிது ஏகாந்தம் இனிதென்று சொல்லப்பண்ணி தன்னையும் தனது செல்வத்தையும் உலகில் வளர்ப்பதே கடமையென்றாக்கி தாமே தங்களின் உலகமாக வாழ்வதே சரியென்றார். தானும் தனது தேவைகளையும் தவிர மற்றவர்கள் எக்கேடுகெட்டாலும் பரவாயில்லையென்று வாழ்ந்

தால் உலகில் காட்டுமிராண்டித்தனம் தான் கோலோச்சும். மனிதன் ஒரு சமூகமிருகமென்றும் அனேக மனிதர்களோடு கலந்துரையாட - அனேகமனிதர்களோடு பழகிக் கூடிவாழும்போது மனிதர்கள் மேலும் மேலும் மனிதத்துவத்தைப் பெறுவார்கள் என்று கேகல் ஏற்கனவே கண்டிருந்தார். ஸ்ரேர்னர் தனது தனிமனிதத்துவத்தால் முழுமானிட சம்பிரதாயங்களையும் பகைத்து அடிப்படை ஜேர்மனியத் தத்துவத்தையும் இலக்கியத்தையும் பகைத்து மற்றைய மனிதர்களுக்கு தான் செய்யும் கடமை ஒன்றுமில்லை யென்று சொல்லி மற்றைய மனிதர்கள் துன்பமும் கஷ்டமும் அடையவிடாதபடிக்கு தான் நடக்கவேண்டிய நன்னெறி யொன்றுமில்லை என்றும் அரசாங்க சமுதாய ஒழுங்குகள் என்பது ஒரு கற்பனையான காட்டுமிராண்டிச் சமுதாய ஒழுங்குகள் என்றும் அவைகள் மனிதர்களின் சுய ஆளுமைக்கு இடைஞ்சலானவை என்றும் கூறினார். உலகின் அதியுயர் விதியும் கடமையும் என்னைப் பேணுவதுதான். எனக்குமேல் உலகில் ஒன்றுமில்லை. தன்னைவிட்ட சம்பிரதாயம் மேலுமில்லை கீழுமில்லை. பிரதானமானது என்ன வென்றால் தனிமனிதத்துவத்தால் எந்த ஆதிக்கத்தையும் ஆளுமையையும் எதிர்த்து அராயகத்தை நிர்மாணிப்பதால் ஒவ்வொரு தனிமனிதர்களும் பூரண சுதந்திரம் பெற்று, அரசாங்கம் சமுதாயம் என்ற கற்பனைக் குளறுபடிகளை தன்னலம் கொண்ட மனிதர்களின் கூட்டத்தால் இடம் பெயர்க்கவேண்டும்.

அந்தக்கூட்டத்திலே உனது சொந்த ஆதிக்கமும் சொந்த உடைமையும் உன்னைப் பலமாக்கி உன்னைச் சமுதாயத்தில் பலவானாக்கும்.

மாக்சும் ஏங்கல்சும் தங்களது 'ஜேர்மானியத் தத்துவத்தில்' ஸ்ரேர்னரை விமர்சித்து அவரது தத்துவத்திலுள்ள விஞ்ஞான விரோதத்தை நிறுவிக்காட்டினார்கள்.

கவுட்ஸ்கி கொம்யூனிசவாதியாக இருந்து லெனின் போன்றோரைக் கற்பிக்கும் காலத்தில் கான்ரின் நன்னெறியின் அடிப்படை விதிகளை விமர்சிக்கும் பொழுது:- 'கானறுக்கு தனிமனிதத்துவத்தையும் மனிதர்களையும் மாத்திரம் தெரியும். அவர் சமுதாயத்தை ஒட்டுறவோ பிணைப்போ இல்லாத ஒன்றையொன்று புறநீங்கலாக வைத்திருக்கும் தனித்தனி மனிதர்களின் குவியலாகப் பார்க்கிறாரேயொழிய அந்த சமுதாயமென்ற ஜந்துவின் ஒவ்வொரு கலங்களே தனி மனிதர்களென்றும் இவர்கள் தனித்து ஒருவரையொருவர் மாறிமாறி எதிர்ப்பதை மாத்திரம் செய்யவில்லை. மாறாக தங்களுக்குள்ளே உழைப்புப் பிரிவினையைச் செய்து ஏதோ ஒரு சமூகவடிவத்தில் சேர்ந்து வாழ்கிறார்கள். அந்தக் கூட்டு வாழ்க்கையானது அவர் இவரின் நல்ல குணம் கெட்ட குணத்தாலோவல்ல மாறாக அங்கே நிலவுகின்ற உற்பத்திச்சக்திகளுக்கு இசையவே அப்படி வாழப்பண்ணியது. எவ்வளவுக்கெவ்வளவு முதலாளித்துவ சமுதாயம் வளர்ச்சி கண்டுள்ளதோ அவ்வளவுக்கவ்வளவு தனி மனிதர்களின் கடமைகளை ஒட்டுமொத்த சமுதாயத்திற்கு எதிராக்கி புரியாத புதிராக்கியும் சிக்கறுக்க முடியாத சிக்கலாக்கியும் அதனூடு தனி அங்கங்களின் கடமைகளை ஒட்டுமொத்தத்திற்கு எதிராக்கி அது மேலும் மேலும் நடைபெறவே தனிப்பட்ட நலன்களுகும் ஒட்டு மொத்த நலன்களுக்குமிடையே முட்டிமோதல் நடைபெற்று, அதனூடு தனித்தனி சமூக ஸ்தாபனங்களுக்கிடையே முட்டிமோதல்களையுடைய அங்கங்களின் சேர்க்கையால் சமுதாயம் உண்டாக்கப்பட்டிருக்கிறது. இந்த முட்டிமோதல் களின் கடைசிவடிவமே தத்துவார்த்த வடிவமாகியுள்ளது. இங்கே எந்தவடிவம் பேரழிவைத் தோற்றுவிக்கிறது என் பதற்கு கான்ரின் நன்னெறியிலே விடை கிடையாது. ஏனெனில் சமுதாயவிதிகளின் எல்லாவடிவங்களும் பொருளாதார உறவுகளின் நிபந்தனைக்கு உட்பட்டதென்பதை கான்ரிய நன்னெறி கருத்திற் கொள்ளவில்லை."

ஒட்டுமொத்த இயற்கைவிதிகளின் விளையுளாகவே பொருளாதார உறவுகளும் ஒரு தொகை பொருளாதார உறவுகளின் நிபந்தனைக்குட்பட்டே சமுதாயவிதிகள் அமைகின்றன.

பகூனினும் பகூனினிச அராயகமும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் அனாக்கிசத்திற்குத் தலைமை கொடுத்தவர் மைகேல் பகூனின் ஆவர். இவர் ஒரு றைசியப் புரட்சியாளர். இவரை ஏங்கல்ஸ் முதன் முதற் சந்திக்கும் பொழுது பிரெஞ்சும் ஜேர்மனும் நறுக்காகக் கதைக்கக்கூடியவராக இருந்ததோடு புரட்சி செய்ய வேண்டுமானால் பல மொழிகளிலே புலமை வேண்டும் என்பதையும் உணர்ந்திருந்தார். இவர் ஒரு நிலவுடமையாளனுக்கு மகனாகப் பிறந்து பீற்றர்ஸ் பேக்கில் கல்விகற்றார். Fichteயின் தத்துவ வழித்தோன்றல். பெர்லினிலே கேகலின் தத்துவத்தையும் செல்லிங்கிடமிருந்து 'வெளிப்பாட்டின் தத்துவத்தைக்' கற்றார். 1840இல் பெர்லினில் இடது கெகலிய வாதியாக இருந்து ஜேர்மனியில் நிலவிய பிற்போக்குத்தனத்தை எதிர்த்தவர். 1842 சூறிச்சில் வைற்லிங்கோடு நண்பராகி கொம்யூனிசத்தின்பக்கம் ஆகர்சிக்கப்பட்டவர். 1844 பாரிசில் புறுடோனோடும் மாக்ஸ் ஏங்கல்சோடும் நண்பரானவர்.

பகூனினது வெளிநாட்டுப் புரட்சிகர நடவடிக்கையைக் கேள்வியுற்ற றைசிய சார் றைசியாவுக்கு வருமாறு கோரினார். அவர் வராது போகவே அவர் இல்லாமலே வழக்குத் தொடர்ந்து 1844 அவரது குடியுரிமையைப்பறித்து றைசியாவுக்கு திரும்பியதும் சைபீரியாவில் கடுழியத்தண்டனைக்கு அனுப்பப்பட வேண்டும் என தீர்க்கப்பட்டது. 1847இல் பாரிசில் போலந்து (1830-1831) நினைவாண்டுவிழாவில் சாரிசத்தைக் கண்டித்து போலந்து மக்களை றைசிய முற் போக்குச் சக்திகளோடு இணைந்து முழு செலவாக் விடுதலையணியிற் சேரும்படி அறை கூவினார். றைசிய அரசாங்கத்தின் நிர்ப்பந்தத்தால் பிரான்ஸ் பகூனினை றைசியாவுக்குத் திருப்பி அனுப்பியது.

இவர் 1848-1849 புரட்சியிலே சுறுசுறுப்பாக பங்கேற்றுக் குறிப்பாக சிலேவிக் மக்களின் இயக்கத்தில் வேலை செய்வதோடு 1848இல் பிராக்கில் நடந்த சிலேவிக் காங்கிரசில் பங்குகொண்டு அந்த காங்கிரசின் தலைவர்களில் ஒருவரானதோடு யூனில் நடந்த எழுச்சியிலும் பங்குகொண்டார். கங்கேரியிலும் ஜேர்மனியிலும் உள்ள சிலேவிக் மக்கள் கூட்டாக ஒரு சிலேவிக் குடியரசை நிறுவவேண்டுமென்று கோரினார். 1849 மேயில் திறெஸ்டனில் (சாக்சன்) நடந்த எழுச்சியில் பங்கு கொண்டார். இந்த எழுச்சி நசுக்கப்பட்டு அவர் செம்னிட்ஸ் என்ற இடத்தில் கைதானார். 1850 ஏப்ரல் மாதத்தில் சாக்சனிக்கோடு அவருக்கு மரணதண்டனை வழங்கி மீண்டும் மன்னிப்பளித்து ஆயுள்தண்டனையாக்கியது. 1851இல் சிறைக்குள்ளே செய்த புரட்சிகரப் பிரச்சாரத்தின் காரணமாக 1851 மே மாதத்தில் சாக்சனை ஆஸ்திரியாவிடம் ஒப்படைத்து ஆஸ்திரியாவில் ஒல்மூட்ஸ் கோடு இவருக்கு மீண்டும் மரணதண்டனை வழங்கி மீண்டும் மன்னிக்கப்பட்டு ஆயுள் தண்டனை ஆக்கப்பட்டது. மீண்டும்

ஆஸ்திரிய அரசாங்கத்தால் நிக்கலஸ் மன்னனிடம் கையளிக்கப்பட்டு அலெக்சாய் றவலினிலுள் பீற்றர் பவுஸ் கோட்டைக்குள் அடைக்கப்பட்டார். அங்கே தந்திரோபாய மாக தான் இனிமேல் ஐரோப்பாவில் புரட்சியிற் பங்குபற்ற மாட்டேனென்றும் முந்திப் பங்குபற்றியதற்காக மனம் வருந்துகின்றேன் எனவும் சார் மன்னனுக்குக் கடிதமெழுதி மிகப்பாடுபட்டு விடுதலையடைந்து 1857இல் சைபீரியாவிற் குடியேற்றப்பட்டார். 1881ல் சைபீரியாவிலிருந்து ஜப்பானுக் கும் ஜப்பானிலிருந்து அமெரிக்காவுக்கும் அமெரிக்காவிலி ருந்து லண்டனுக்கும் தப்பியோடினார். 1862-1863இல் கேட்ச னோடும் ஒகறேவோடும் சேர்ந்து 'நாடும் சுதந்திரமும்' என்ற இரகசிய புரட்சிகர அமைப்பை ஏற்படுத்தினார். 1864-1867இல் இவர் இத்தாலியிலும் சுவிற்சலாந்திலும் வாழ்ந்தார். 1870 செப்ரம்பர் பிரெஞ்சு பிறஸ்சிய யுத்தத்தில் இவர் லியோன் எழுச்சியிற் பங்கு கொண்டு 1874இல் இத்தாலி பொலொக்னா எழுச்சியில் அராயகச் செயற்பாடுகளில் ஈடு பட்டார்.

பகூனின் சுவிற்சலாந்தில் மடிந்து அங்கேயே அடக்கம் செய்யப்பட்டார். இவரது இந்த மிக நீண்ட விட்டுக்கொடுக் காத செயற்பாடுகளும் தியாகங்களும் அவருக்கு அங்கீகா ரத்தையும் ஆளுமையையும் கொடுத்தது. அதன் பலாபல னாய் இன்றுவரை அராயகத்தை பூண்டோடு அழிக்க முடிய வில்லை.

பகூனினின் கருத்துப்படி வரலாறு என்பது மெல்லமெல் லவும் வரிசைக்கிரமமாகவும் கூர்ப்படைந்து செல்லும் இந்தக் கூர்ப்பினூடு மிருகங்கள் போல் அடிமையாக வாழும் மனி தன் சுதந்திரமனிதனாக வாழும் நிலைக்குக் கூர்ப்படைவான். இந்தக் கூர்ப்பின் ஆதிவடிவங்களே மதமும் அரசுமாகும். மனிதன் மிருகங்களிலிருந்து சிந்தனையாலேயே வித்தியா சப்படுகிறான். இதுவே மிருகங்களுக்கில்லாத மதம் மனி தனுக்கு உருவாகக் காரணம். அரசு என்பது கொடுங் கோன்மையையும் சுரண்டலையும் அடிப்படையாகக் கொண் டது. அதற்காக அது கற்பனையான கடவுளைத் தனக்கு ஆதாரமாகப் படைத்துள்ளது. எதிர்கால சமுதாயம் எல்லையற்ற சுதந்திரமுள்ளதாக மாறிவந்து மனிதர்கள் எல்லாவித ஆதிக்கத்திலிருந்தும் பிரிந்து தனது முழுச் சக்தியையும் பாவித்து பூரணமாக அபிவிருத்தியடைவான்.

பகூனினது அராயகத் தத்துவம் ஸ்ரேனரது தனிமனிதவா தத்திலிருந்தே தொடங்கியது. அவர் எந்தவடிவ ஸ்தாபனத் தையும் நிராகரித்தார். அவர் தொழிலாளிவர்க்க அரசையும் மாக்சிய மூலதத்துவமான பாட்டாளிவர்க்க அரசையும் நிராக ரித்தார். அவர் தொழிலாளர்களினதும் விவசாயிகளினதும் சுதந்திர சம்மேளனத்தைக் கோரினார். அவரது ஆதரவாளர் கள் அரசியலிலே பங்கெடுப்பதை அதுவும் நிலவுகின்ற அரசுவிட்ட எல்லைக்குள் பங்கெடுப்பதை நிராகரித்தனர். பகூனின் சோஷலிசப் புரட்சியின் உண்மையான உள்ளடக் கத்தை விளங்காமல் அதற்கான பொருளாதார அரசியல் நிலைமைகளை விளங்காமல், அதைச் செய்யும் வரலாற் றுசக்தியான தொழிலாளிவர்க்கத்தையும் விளங்கிக்கொள்ள வில்லை. ஒரு வர்க்க சுயாதீனமான தொழிலாளர்வர்க்க கட்சியை உண்டுபண்ணுவதை நிராகரிப்பதோடு தானாகவே வரும் தன்னிச்சையான எழுச்சிவேண்டுமென்றார்.

அதற்கான உந்துசக்தி தொழிலாளர்களோடு சேர்ந்து விவசாயிகளிடத்தும் உதிரிப்பாட்டாளிகளிடத்தும் மாணவர் களிடத்தும் இருப்பதாகக் கண்டார். மாணவர்களிடையே அராயகத்தின் ஆதிக்கம் அதிகமாக வலுத்திருந்தது. பகூ னினது அராயகம் என்பது முதலாளிவர்க்க அமைப்புமுறை யில் விரக்தியடைந்த குட்டிமுதலாளித்துவப் பகுதியினரின் தன்னிச்சையான எழுச்சியாகும். தனிச்சொத்துடைமையை இல்லாமற் செய்யும்படி கோரிய பகூனின் சிற்றுடமையா ளர்களை ஒரு சம்மேளனமாக இணையும்படி கோரினார்.

இவரும் இவரது ஆதரவாளர்களும் ஆயிரத்து எண் ணூற்றி அறுபதுகளில் வித்தியாசம் வித்தியாசமான இரக சிய அமைப்புகளைக் கட்டினார்கள். உதாரணத்திற்கு "சோஷலிச ஜனநாயகத்தின் சர்வதேச சகோதரத்துவ ஐக் கிய சங்கம். இவர்கள் சர்வதேச தொழிலாளர் சங்கத்தினுள் ஊடுருவி எப்பாடுபட்டும் அதன் தலைமையைக் கைப்பற்ற முயற்சித்தனர். தலைமையிலே இருந்தாற்தான் தங்களது அராயக சிந்தனைகளை சர்வதேச தொழிலாளர் இயக் கத்தினுள்ளே கொண்டுசென்று அதன் நிறுவனத்தை சீர்கு லைக்கலாம் எனக் கண்டனர். அவர்கள் மாக்சியத்தைப் பொருளாதாரச் சடத்துவவாதம் என கண்டனர்.

மாக்சும் ஏங்கல்சும் பகூனினுக்கும் அவரின் ஆதரவாளர் களுக்குமெதிராக ஜீவமரணப் போராட்டத்தை நடாத்தினர். அவர்களைத் தொழிலாளி வர்க்கத்தைக் காட்டிக் கொடுக் கும் துரோகிகள் என்று அம்பலப்படுத்தினர். 1872 முதலாம் அகிலத்தின் (சர்வதேச சங்கத்தின்) கவுக் காங்கிரஸ் அவர்களது செயற்பாடுகளையும் சிந்தனைமுறையையும் ஸ்தூலமாக விபரித்துக்காட்டி அவர்களைச் சர்வதேசக் கட்சியிலிருந்து அகற்றினர். அவர்கள் அந்தக் காங்கிரசில் உள்நுளைவதற்காக நானாவித சதிவேலைகளையும், சேற டிப்புகளையும், உளவுவேலைகளையும் பயங்கரவாதமு றைகளையும் பாவித்தனர்.

இவர்களது அடுத்த நோக்கு அராயகக் கொம்யூனிசம். அவர்களது சமூக நன்னெறிக்கொள்ளை பரஸ்பரமாக உத வுவது. அவர்கள் கற்பனையாக அரசில்லாத கொம்யூனிச சமுதாயத்தால் தொழிலாளர்களின் நன்னெறிகளைவளர்த்து சமூகநலனுக்கு மேலாக தன்னலங்கொண்ட தனிமனிதர் களை வைப்பதாகும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் பிரான்சில் அராயகத் தொழிற்சங்கவாதம் ஆதிக்கம் செலுத்தியது. தொழிலாளி வர்க்கம் அரசியலுக்காகப் போராடுவதையும், அப்போராட் டத்தை நடாத்துவதற்கு தேவையான புரட்சிக் கட்சியையும் அதன் முழுவெற்றியான பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தை யும் நிராகரித்தனர். அவர்கள் புரட்சிக் கட்சியிலுள்ள தொழிற்சங்கப் பகுதியினருக்கு பூரணமான சுயாதீனம் Autonomy தேவையென்று அடம்பிடித்தனர். இவர்களின் வாரி சுகள்தான் இன்றைய ஓட்டோனோமன்கள். முதலாளித் துவத்தைத் தோற்கடிப்பதிலே தொழிற்சங்கமே நிர்ணயமான பாத்திரத்தை வகுக்குமேயொழிய புரட்சிக்கட்சியல்லவென்று அவர்கள் சொன்னார்கள். தொழிலாளர்கள் புரட்சியில்லாமல் ஒரு பொதுவேலைநிறுத்தத்தின் மூலம் முதலாளித்துவத் தைத் தோற்கடித்து உற்பத்திச்சாதனங்களை சமுதாய உடமையாக்கி உற்பத்தியை ஒவ்வொருவரின் கைகளிலுமெ டுக்கவேண்டுமென்று சொன்னார்கள். அக்டோபர் புரட்சி நிதர்சனமாகி பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம் ஏற்பட்டதே அராயகத்தின் தோல்வியாகும்.

முதலாம் அகிலம் தனது கவுக்காங்கிரசில் சில தீர்க்க மான நடைமுறை அனுபவங்களைப் பிரகடனப்படுத்தியது.

உடமை வர்க்கத்தின் காலாகாலமாகத்திரண்டு கெட் டியான நிறுவன அதிகாரத்திற்கு முன்னால் பாட்டாளிவர்க் கத்தால் ஒரு கட்சியாக மாத்திரமே அதுவும் உடைமை வர்க்கத்திலிருந்து தன்னை முற்றிலும் சுயாதீனமாக்கிய தன்னை முற்றிலும் அதிலிருந்து வேறுபடுத்திக் காட்டும்

கட்சியாகமாத்திரமே செயற்படமுடியும்.

முதலாளிகளும் நிலப்பிரபுக்களும் தங்களது அரசியற் சலுகைகளின்மூலமே தங்களது பொருளாதார ஆதிக்கத் தையும் தொழிலாளர்களை அடிமையாக்குவதையும் நிர் மாணித்து நிலைநிறுத்தி நீடிப்பர். ஆதலால் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுதல் பாட்டாளிவர்க்கத்தின் மிகப் பெருங்கடமையாகும்.

எங்கேயாவது ஒரு ஸ்தாபனமிருந்தால் ஐக்கியப்பட்டுச் செயற்படுவதற்காக சில சுயவிருப்பங்களைத் தியாகம் செய்ய வேண்டுமென்பதை அராயகவாதிகளால் விளங்கமுடி யவில்லை. முதலாமகிலம் போராடுவதற்காக அணிவகுக்கப் பட்டதேயொழிய அருமையான தத்துவங்களுக்காகவல்ல.

அடிமைப்படுத்தப்பட்டு ஒடுக்கப்பட்டுச் சுரண்டப்பட்ட வர்க் கம் தனது சொந்தமுயற்சிகளின்மூலமும் சொந்த செயற்பா டுகளின்மூலம் மாத்திரம்தான் தனக்கான புரட்சிக்கட்சியைத் தானே கட்டிவளர்த்து அந்தப் புரட்சிக்கட்சியின்மூலம் ஒடுக்குமுறை அரசை ஆயுதமேந்திய போராட்டத்தின்மூலம் நிர்மூலமாக்கி தனது அரசை நிர்மாணித்துப் பாதுகாத்து அதன்மூலம் சுரண்டுகின்ற தனிச்சொத்துடமையை இல்லா மற் செய்து உற்பத்தியையும் விநியோகத்தையும் நவீனவிஞ் ஞான வளர்ச்சியின் மட்டத்திற்குப் புரட்சிகரமாக உயர்த்துவ தன்மூலம் வர்க்கங்களை இல்லாமற் செய்ய வேண்டும்.

அகிலத்திற்கு யுத்தங்களில் வெற்றியுமில்லை. தோல்வி யுமில்லை. அது யூதவிரோதத்தை றைசியவிரோதத்தால் சமன் செய்யவில்லை. (தமிழ்விரோதத்தை சிங்கள விரோ தத்தால் சமநிலையாக்கப்படாது.)

அகிலத்தின் விசாலமான வேலைத்திட்டத்தையும் மிகப் பெரிய குறிக்கோளையும் உன்னதமான இலட்சியத்தையும் குறுங்குழுவாத வேலைத்திட்டத்தால் பிரதியிடக்கூடாது. (உதாரணமாக முதலிற் தமிழீழம் பிறகு சோஷலிசம்.....)

பரந்துபட்ட தொழிலாளர்களின் ஆதரவை வெல்வதற்கு கடுமையாக உழைத்து பெரிய அர்ப்பணிப்புக்களைச் செய் யாமல் இலகுவான குறுக்குவழிகளில் எதையும் சாதிக்கமு யல்வது சந்தர்ப்பவாதத்திற்கு வழிதிறந்து காட்டிக்கொடுப் பைப் பூரணப்படுத்தும்.

பேண் காங்கிரசிலே அராயகவாதிகள் வர்க்கங்களையும் தனிமனிதர்களையும் சமப்படுத்துவோம். ஆண்பாலையும் பெண்பாலையும் சமப்படுத்துவோம் என பிரேரித்துத் தோல் விகண்ட படிப்பினையை மனதிற்கொண்டு சோஷலிசம் வர்க் கங்களைச் சமப்படுத்தாது வர்க்கங்களையே இல்லாமற் செய்யவேண்டும்.

அராயகவாதிகளின் வேலைத்திட்டம்

அராயக இயக்கத்தின் இலக்கு சர்வவியாபகப் புரட்சி. ஒரேதடவையில் சமூக, தத்துவார்த்த, பொருளாதார, அரசி யற் புரட்சியைச் செய்தல். ஏனெனில் இப்போதுள்ள அமை ப்பு முறை தனிச்சொத்தை அடிப்படையாகக் கொண்டது. அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டது. அங்கே சமய, மறநிலைமனோபாவ, முதலாளித்துவத் தத்துவம் அன்றேல் யக்கோப்பியன் புரட்சி அதிகாரம் நிலைகொண்டிருந்தா லென்ன எல்லாவற்றையும் கல்லுக்குமேல் கல்லில்லாமல் தவிடுபொடியாக்க வேண்டும். முதலில் இவைகளை ஐரோப் பாவில் சாதித்து பின் உலகம் முழுவதும் சாதிக்க வேண் டும். தொழிலாளர்களுக்கு சமாதானம், ஒடுக்கப்பட்டவர்க ளுக்கு சுதந்திரம், ஆழ்வோருக்கும், சுரண்டுவோருக்கும் இது போன்றவற்றை பாதுகாக்கும் எல்லோருக்கும் சாவுமணி, நாம் எல்லா அரசுகளையும், எல்லா கோவில்களையும் அவர்களின் ஸ்தாபனங்களோடு, சட்டதிட்டங்களோடு, மத, அரசியல், நீதிமுறை, நிதி, பொலிஸ், சர்வகலாச்சாலை, பொருளாதார சமூகம், முழுவதையும் தகர்த்தெறிவோம். இவைகளெல்லாம் மில்லியன் கணக்கான வறிய மனிதர் களை ஏமாற்றி, அடிமையாக்கி, சித்திரவதை செய்து சுரண்டுகின்றன. இதைச் செய்பவர்கள், இந்த அமைப்புக் களை இயக்குபவர்கள், ஆதரித்து லாபமடைபவர்கள், காரி யாளர்களும் அதிகாரிகளும், பலபேர் ஸ்தாபனமாக ஐக்கி யப்பட்டும் தனிமனிதர்களாகவும் செய்கிறார்கள். இவர்கள் எல்லோரினதும் அழிவிலேயே சுதந்திரக் காற்றை பூரண மாகச் சுகிக்க முடியும்.

அதிகாரத்துவங்கள் தம்மை திருச்சபை என்றும், முடி யரசு என்றும் சட்டசபையென்றும், முதலாளித்துவ குடியரசு என்றும், புரட்சிகர சர்வாதிகாரமென்றும் சொல்கின்றன. எம்மைப் பொறுத்தவரை நாம் எல்லாவற்றையுமே வெறுக் கின்றோம். ஏனெனில் எல்லாமே சுரண்டலினதும் கொடுங் கோன்மையினதும் ஊற்றிடங்கள்.

புரட்சியாளர்கள் புரட்சியைச் செய்த மறுநாள் ஒரு புரட்சிகர அரசை அமைத்தால் அது இப்போது இருக்கின்ற எல்லா அரசு களைக் கூட்டிப் பார்ப்பதிலும்பார்க்க அபாயகரமானது.

ஆகவே அராயகவாதிகளான நாங்கள் புரட்சியாளர் களின் இயற்கையான எதிரிகள், ஆகவே புரட்சியை நிர்மூல மாக்குவதுதான் அராயகவாதிகளது முன்னணிக் கடமை யாகும்.

அராயகம் நன்றாக நம்புகிறது புரட்சிகளை தனிமனிதர் களோ இரகசிய ஸ்தாபனங்களோ உற்பத்தி செய்வதில்லை. அவை தானாகவே வரும். அதற்கேற்ற காலமும் நேரமும் வந்தால் வரும். அவை பல சக்திகளால் உற்பத்தி செய்யப் படும். அவை காரண காரியங்களாலும் உண்மையினாலும் வரும். அவை வெகுசனங்களின் ஆழமான பாரம்பரிய உணர்மையாக நீண்டநாட்களாக உருவாகிக்கொண்டுவந்து பற்றிப்படர்ந்து வெடித்துக் கிளம்பும்.

-அராயக சகோதரர்களுக்காக மைகேல் பகூனின் மாக்ஸ் ஏங்கல்ஸ் மொத்தப்படைப்பு பக்கம் 23- பக்கம் 466.

இதுதான் புரட்சிக்குமேற் புரட்சியாகும். இதைச் சாதிப்ப தற்கான முதல் நிபந்தனையாக இப்போது ஆட்சிசெய்கின்ற அரசுகளையும் அரசாங்கங்களையும் எதிர்த்து நிலவுகின்ற புரட்சிமுறைகளின்மூலம் போராடக் கூடாது. ஆனால் பெரிய சத்தமாக வாய்கிழியக் கத்த வேண்டும்.

ஆளுகின்ற பொனப்பாட்டிச அரசையல்ல பிறைசிய அன்றேல் றைசிய அரசையல்ல நொருக்கியெறியவேண்டும். ஆனால் ஒரு சூக்குமமான அரசை எங்கும் நிலவாத அரசை தோற்கடிக்க வேண்டும். அராயகவாத சகோதரர்கள் எங் கேயோ புகைமண்டலத்தில் பதுங்கியிருக்கும் அரசுக் கெதிராகப் போராடும் நேரத்தில், யதார்த்தத்தில் நிலவும் அரசுகள் சாதாரண புரட்சியாளர்கள் மேல் ஏவிவிடும் குண் டாந்தடிக்கும் சிறைச்சாலைக்கும் குண்டுகளுக்கும் தப்புவ தென்று அவர்களுக்குத் தெரியும். முதலாளித்துவ அரசுகள் வழங்கும் சலுகையினால் தாம் தப்பிக் கொண்ட அராயக சகோதரர்கள் கொஞ்ச நஞ்சமானவர்களல்ல.

பகூனினது சிந்தனையினதும் செயலினதும் ஐக்கியம் என்பதன் அர்த்தம் வேதவிசுவாசமும் கண்மூடித்தனமான கீழ்ப்படிவுமாகும். ஒருபட்டாளம்போன்று இருக்கவேண்டும். யெகூவிற்களது யேசு சபைபோன்று எதிர்வார்த்தை பேசாத விசுவாசிகளை யூனியர் அங்கத்தவர்களாகக் கொண்ட அராயக சபை வேண்டும்.

-மாக்ஸ் அதேபுத்தகம்.

கடந்த அரை நூற்றாண்டுகாலமாக இலங்கை ரொக்சியத்தின் வரலாற்றை உருக்கமாகப் படித்தவர்கள் இந்த எதிர்வார்த்தை பேசாத விசுவாச ரொக்சியவாதிகளை உருவாக்க ஐரோப்பிய சமூகசோவனிஸ்ட்டுகள் மீண்டும் மீண்டும் முயன்றதாற்தான் இன்றைய இலங்கை சுடுகாடாகியுள்ளதென்பதை விளங்கிக் கொள்வர்.

போல்சவிசபாணி ஜனநாயக மத்தித்துவக் கட்சியில் ஏதும் பிழை இருக்கிறதா என்று மில்லியன் முறை 1903 லிருந்து 1924இல் தான் சாகும் வரை லெனின் பரிசீலித்துப்பார்த்தார். அவரது அந்திமநாட்களில் அதிகாரத்துவம் வளர்ந்து கொண்டுவந்த அந்த சோவியத் பாட்டாளிவர்க்க சர்வாதிகார ஆட்சியில் வேறு மாற்றுவழிகள் ஏதுமுண்டா என ஆராய்ந்து பார்த்தார். அவரும் போல்சவிக்குகளும் ஜனநாயக மத்தித்துவக் கட்சியற்ற வேறு எந்த மொடல் கட்சியாலும் இன்றல்ல என்றைக்கும் ஆட்சியைக் கைப்பற்ற முடியாதென்ற முடிவுக்கே அவர்கள் வந்தார்கள். மாக்சியவாதிகளின் உன்னதமான விதி முறையில் ஒன்று என்னவென்றால் ஆயிரம் மாற்றுவழிகளை அவர்கள் யோசித்து பிரேரித்து வாதித்து விவாதித்து அதன் பின்னரே முடிவுக்குவந்து செயற்படுவர். ஆதலாற்தான் அவர்கள் அளந்துவைத்த அடியெடுப்புகளில் இலகுவில் பின்வாங்குவதில்லை. மூன்றாமகிலம் பிரஞ்சுக் கொம்யூனிசக் கட்சிக்குள் நிலவிய அராயகத்திற்கு எதிராகப் போராடும் பொழுது எழுதுகிறது.

"வெவ்வேறு கொம்யூனிச அமைப்புக்களுக்கிடையே சகோதரத்துவத்தோடு கூடிய புரட்சிகரக் கலந்துரையாடல்கள் கரடுமுரடற்று இசைவாக நடைபெற வேண்டும்.

மூன்றாம் அகிலத்தினால் விதிக்கப்பட்ட ஸ்தாபன விதிகளும் கட்டுப்பாடுகளும் வெறுமனே புத்திகூர்மையின் வெளிப்பாடுகளல்ல மாறாக இந்தப் பூகோளத்திலுள்ள முக்கால் நூற்றாண்டு பாட்டாளிவர்க்க விடுதலைப் போராட்டத்தின் கடைந்தெடுத்த முடிவுகளாகும். அது தனது முதலாவது புரட்சிகர காலகட்டத்தைக் கடந்து போகையில் அனுபவித்த தொழிலாளிவர்க்கத்தின் போராட்டங்களும் வீணே கழியவில்லை. தோல்விகள் வெற்றிகள் என்ற இரண்டுமே, போராடும் பாட்டாளிகள், தங்களது அங்கத்தவர்களை சிதறவிடாமல் எவ்வாறு கெட்டியாக்கி வைப்பதும், வர்க்கத்தினுடைய ஸ்தாபனத்தின் கட்டுப்பாடுகளை எவ்வாறு பேணுவதும் எவ்வாறு ஐக்கியப்படுத்தப்பட்ட ஒரு தலைமைத்துவத்தை வைத்திருப்பதும் இன்றியமையாதது என்பதையே.

ஆதலாற்தான் உலக கொம்யூனிச காங்கிரஸ் அவர்களது ஆய்வுரைகளிலும் விசேட தீர்மானங்களிலும் உலகத்தொழிலாளர் கட்சிகள் பெற்ற அறிவினதும் அனுபவத்தினதும் சாராம்சத்தை இரத்தினச் சுருக்கமாகத் தருவதோடு ஜனநாயக மத்தித்துவத் தத்துவத்தை பாட்டாளிவர்க்க அரசியல் ஸ்தாபனத்தின் முக்கிய அத்திவாரமாகக் கடைப்பிடிக்கும்படி முன்மொழிந்தார்கள்.

மத்தித்துவம் Centralism - ஏனெனில் அது ஒரு தொழிலாளிவர்க்கத்தின் எல்லாப் பகுதிகளையும் நடைமுறைச் செயற்பாடுகளில் ஐக்கியப்படும்படி கோருவதோடு அந்தச் செயற்பாடுகளை ஒரே நேரத்தில் ஒரு பொதுச் சுலோகத்தின் கீழ் செயற்படும்படியும் கோரும்.

இதை ஒரு மிக நேர்மையாகக் கூட்டிக் குவித்துச் செறிந்த தலைமைத்துவத்தின் கீழ் மிகப் பொறுப்புவாய்ந்த மத்திய பிரதேச அமைப்புகளினால். அவைகளின் சேர்க்கையும் அரசியற் குறிக்கோளும் நிலையானதாக இருக்கும்பொழுது மாத்திரம்தான் சாதிக்கலாம்.

ஜனநாயகம் Democracy - ஏனெனில் இந்த மத்திய பிரதேச தலைமைகள் சில நிபந்தனைகளினால் மிகச் சிறிதாக இருப்பதினால்; அவர்கள் கட்டாயமாக கட்சி அங்கத்தவர்களினால் மாத்திரம் பிரேரித்துத் தேர்ந்தெடுக்கப்படுவதினால் அவர்களாற் கட்டுப்படுத்தப்படவும் அவைகளுக்கு வகைசொல்ல வேண்டியும் இருக்கவேண்டும் என்பதற்காகவேயாகும். மத்தித்துவப்படுத்தப்பட்டு கூட்டிக்குவிக்கப்பட்டு செறிந்த தலைமையை சிலவேளைகளில் புரட்சியாளர்கள் எதிர்க்கக் கூடும். ஏனெனில் சிலவேளைகளில் அங்கத்தவர்கள் போதியமட்டத்திற்கு உற்சாகமாகச் செயற்படாத பட்சத்தில் அது தலைவர்களின் தன்னிச்சையான ஆதிக்கத்திற்கு இட்டுச்சென்று குறுங்குழு ஆதிக்கம் படைக்கக்கூடும். (Oligarchic) என்று அனுமானித்து எதிர்க்கக் கூடும். இங்கே மத்தித்துவத்தைப் பிழையாகப் பிரயோகித்ததால் தலைமை உருக்குலைந்து குறுங்குழு ஆதிக்கமாக மாறியது என்பதே எல்லோருக்கும் தெரிந்தவிடயம் இருந்த போதும் இங்கே மத்தித்துவத்தின் தவறல்ல மாறாக அதன் விதிமுறையையும் அனுகூலத்தையும் பிழையாகப் பிரயோகித்ததன் விளைவே அதுவாகும். ஆனால் இதன் இயற்கையான தன்மையில் மிகக் கட்டுப்பாடான மத்தித்துவ ஸ்தாபனம் ஒரு வரிசைக்கிரமமான நிலையான தொடர்ச்சியான அரசியற் தலைமைத்துவத்தை அளிக்கும் உத்தரவாதத்தினால் வெகுசனங்களின் செயற்பாடுகளை உயர்ந்தமட்டத்திற்கு உயர்த்தும் தொழிலாளர்களுக்கு ஒரு தலைமையும் தேவையில்லை என்பவர்கள் வெறுமனே தொழிலாளர்களைப் பிழையானவழிக்கு இட்டுச் செல்பவர்களாகும். பிரதேச, தேசிய அளவில் மிகக் கவனமாகத் தலைவர்களைத் தேர்ந்தெடுக்காமல் அவர்களது செயற்பாடுகளை தொடர்ந்து பரிசோதிக்காமல் தொழிலாளிவர்க்கம் ஒருநாளும் வெற்றியீட்டாது. சமஷ்டிமுறையிலான ஒரு கட்சியமைப்பு முறை தலைமைத்துவத்தை துகள்களாகச் சிதறடித்து சிதறிய தலைமைத்துவமாக்கி ஒரு திட்டவட்டமான சொந்தப் பொறுப்புணர்ச்சி இல்லாத தலைமையுள்ளதாக்கிவிடும். நறுக்காக அப்படியான நிலைமைகளிலே ஸ்தாபனத்தினுள்ளே குழுக்கள் படிமமாகி, அவைகள் எவரின் கட்டுப்பாட்டின் கீழும் இல்லாத ஒன்றாகி அவைகள் அங்கத்தவர்களுக்குப் பின்புறமாக தலைமையாகி கற்பனையான சமஷ்டிமுறைத் தலைமை அமைப்புமுறையின் மேன்மையென்பதால் ஓராட்டும்.

சோவியத் குடியரசின் சமஷ்டிமுறை அமைப்பைச் சுட்டிக்காட்டி பாட்டாளிவர்க்கக் கட்சிக்குள்ளும் சமஷ்டிமுறை வேண்டுமென்று நியாயம் கூறுவது வெறும் தப்பபிப்பிராயமாகும். சோவியத் குடியரசான அரச ஸ்தாபனத்தில் சமஷ்டிமுறையைப் பிரயோகிப்பது ஏனெனில் மிகப்பரந்த நிலப்பரப்பில் வெவ்வேறு வித்தியாசம் வித்தியாசமான தேசிய இன மக்களும் இனக்குழுக்களும் அமைந்திருப்பதால் (பைலோறசியா, உக்கிரேன், யோர்ஜியா ஆர்மானியன்....) அவைகளோடு கூட்டாக அரசாட்சி நடாத்துவதற்கு அது இன்றியமையாதது. இப்படியான சமஷ்டிமுறையிலான ஸ்தாபனமுறையை ஏற்படுத்த வேண்டிய அத்தியாவசியம் ஏன் ஏற்பட்டதென்றால் சில தேசிய அரச செயற்பாடுகளுக்காக (அரசகருமமொழி, தேசிய பாடசாலை போன்றன) ஆனால் நாம் இந்தச் சமஷ்டிமுறையை ஒரு பாட்டாளிவர்க்கக் கட்சியைக் கட்டிவளர்ப்பதற்குப் பிரயோகிக்க இயலாது இப்பொழுது நாம் அப்படிச் செயற்படவில்லை. உக்கிரேனியன், யோர்ஜியன் ஆர்மானியன் மற்றும் அனேக கொம்யூனிச அமைப்புகள் ஒரேயொரு ஸ்தாபனத்தில் ஐக்கியப்படுத்

தப்பட்டார்களேயொழிய சமஷ்டிமுறையிலல்ல. மாறாக இறுக்கமான மத்தித்துவ முறையிலாகும். இந்தக் கட்சி மத்தித்துவம் இல்லையென்றால் றைசியத் தொழிலாளிவர்க்கம் சோவியத்குடியரசைப் பாதுகாப்பதில் வெற்றியீட்டியிருக்கமாட்டாது மாத்திரமல்ல, ஏன் ஆட்சியதிகாரத்தைக்கூடக் கைப்பற்றியிருக்கமாட்டாது.

மிகக் கண்டிப்பான மத்தித்துவமும் கட்டுப்பாட்டுடன் கூடிய அதிகாரமுமுடைய முதலாளித்துவத்திற்கு முன்னால் முகங்கொடுக்க அதற்குக் குறைவில்லாத மத்தித்துவமும் கட்டுப்பாடுமுடைய பாட்டாளிவர்க்க அதிகாரம் வேண்டுமென்று ஒவ்வொரு வர்க்க உணர்மையுள்ள தொழிலாளர்களுக்கும் தெளிவாகத் தெரியும். ஆதலாற்தான் ஜனநாயக மத்தித்துவச் சிந்தனையை எதிர்ப்பவர்களை, பாட்டாளிவர்க்கத்தின் உணர்மையடைந்த பகுதியினரின் ஆவல்களுக்கு விரோதமாக ஆளுமைசெலுத்துவதனூடு தங்களையறியாமலே புரட்சியின் நலனுக்குக் கேடு விளைவிப்பவர்களாகும் என்று மூன்றாவது கொம்யூனிச அகிலம் பிரகடனப்படுத்திக்காட்டும்.

கொம்யூனிசக் கட்சிகள் வித்துவான்களின் கலந்துரையாடற் கழகமோ அன்றேல் பிரச்சாரச் சபைகளோவல்ல. அவை எதிரியை எதிர்த்துப் போராடும் நிறுவனங்களாதலால் அவைகள் அதற்கேற்றமுறையிலேயே கட்டப்படவேண்டும்.

நவீனகாலத்துத் தொழிலாளர்கள் புரட்சிகள் எல்லாமே முதலாளித்துவ ஒடுக்குமுறைக்கெதிரான பயங்கரமான போராட்டமாகும். தொழிலாளர்வர்க்கத்தின் சிறந்த பகுதியினர் செய்த எண்ணற்ற தியாகங்கள் அத்தனையும் சோஷலிசப் புரட்சிக்காகப் போராடும் முன்னணிப்படையினரால் மறந்து விடக்கூடாத படிப்பினைகளாகும். என்ன காரணத்திற்காகப் பாரிஸ் கொம்யூன் தோற்றது என்பதை, பாரிஸ் கொம்யூனின் ஆத்மீக உரிமைக்காரனான சைனே சம்மேளனம் மாத்திரம் தான் கடைசியாக உதாசீனம் செய்யும். அது குட்டி முதலாளித்துவ ஜனநாயக சமஷ்டித்தத்துவங்களாலேயே தோற்கடிக்கப்பட்டது. அங்கே தொழிலாளர்களை ஐக்கியப்படுத்தி கட்டுப்பாடுள்ளதாக்கி மத்தித்துவப்படுத்தி புரட்சிக்கு வழிகாட்ட ஒரு பலமான கை இல்லாததனாலேயே.

-மூன்றாமகிலத்தின் முதல் ஐந்து வருடங்கள்.
ரொக்சி பக்கம் 158-164

"போல்சவிக்கட்சியின் ஸ்தாபனப் பிரச்சனை அதன் வேலைத்திட்டத்தோடும் தந்திரோபாயத்தோடும் நீக்கமறப் பிணைந்த ஒன்று அதன் ஜனநாயக மத்தித்துவத்தின் உட்கட்சி ஆதிபத்தியம் கட்சிக்குள்ளே கலந்துரையாடவும் விமர்சிக்கவும் அதிருப்தியை வெளியிடவும் தேர்ந்தெடுக்கவும் தலைமையிறக்கம் செய்யவும் பூரணமாக அனுமதிக்கும் அதே வேளையில், நடைமுறையில், தேர்ந்தெடுக்கவும் திருப்பி இறக்கவும் கூடிய ஆனால் பூரண ஆதிபத்தியத்தையுடைய தலைமையின்கீழ் உருக்குறுதிக் கட்டுப்பாட்டை கோருகிறது. அதன் ஜனநாயக அர்த்தம் கட்சிக்கு கட்சியின் மற்ற எல்லாக் கிளைகளிலுமிருந்தும் தனித்துவத்தையும் மத்தித்துவம் என்பதன் அர்த்தம் போராட்டசக்திக்கு உத்தரவாதமளிக்கக்கூடிய வர்க்க உணர்மையால் உண்டான கட்டுப்பாடு லெனின் மரணத்திற்குப்பிறகு ஸ்டாலினால் எழுதப்பட்ட நகல்வேலைத்திட்டத்தில் இந்த ஜனநாயக மத்தித்துவம் போதாதென்று சொல்லி Revolutionary order புரட்சிகர உத்தரவு புரட்சிகரப் பதவிவரிசை என்ற சூத்திரத்தை உட்புகுத்தி அக்கட்சியின் உட்கட்சி ஜனநாயகத்தைத் திருகி அதிகாரத்துவ மத்தித்துவம் புகுத்தப்பட்டது. இதன்மூலம் கட்சியின் உச்சியிலுள்ள அதிகாரிகள் கட்சிக்கு மேலால் உயர்த்தப்பட்டு கட்டுத்தர்ப்பார் நடாத்தும் சுதந்திரத்தை சுகிக்க அனுமதிக்கப்பட்டது. இதன் மூலம் கட்சியின் சட்டதிட்டத்தை நசுக்கி கட்சி மாநாடுகளை ஒத்திப்போட்டு அதிகாரத்துவம் அனாதி ஆகியது. இதன்பலாபலனால் ஜனநாயக மத்தித்துவம் என்பது மேலேயுள்ள உத்தியோகத்தர்களுக்கு மறுவார்த்தை பேசாது அடங்கி நடத்தல் என்ற அர்த்தமாகியது. கட்சியின் ஜனநாயகம் மேலதிகாரிகளின் சுற்றுநிருபக் கடிதங்கள்மூலம் களைந்தெறியப்பட்டு 58வது கட்சிச் சட்டத்தின் கீழ் மிரட்டப்பட்டது.

இந்தப் புரட்சிகர உத்தரவு றைசியக் கொம்யூனிஸ்ட் கட்சிக்கு மாத்திரமல்ல கொம்யூனிச அகிலத்தினுள்ளும் புகுத்தப்பட்டது. இந்தப் புரட்சிகர உத்தரவென்பது கட்சிக்குள் தத்துவார்த்த கன்னைகளும் குழுக்களும் உருவாவதோடு தொடர்புடையது. கட்சிக்குள் நடைபெற்ற ஒவ்வொரு வாக்குவாதங்களும் அபிப்பிராயபேதங்களும் இந்தப் புரட்சிகர உத்தரவு மூலம் நசுக்கப்பட்டது. கட்சிக்குள் தற்காலிகமான தத்துவார்த்தக் குழுக்கள் உருவாகாமல் கட்சியின் தத்துவார்த்த வளர்ச்சியென்பதை நினைத்துக் கூடப் பார்க்கமுடியாது. அப்படி ஒரு வழியை இன்னுமொருவரும் கண்டுபிடிக்கவில்லை. அப்படிக் கண்டுபிடிக்க முயன்றவர்கள் கட்சியின் தத்துவார்த்த ஆன்மாவை திருகி எறிந்தார்கள்.

இயற்கையாகவே குழுக்களும் அபிப்பிராய பேதங்களும் தீதானவைதான். ஆனால் இந்தத் தீமை கட்சி அபிவிருத்தி இயங்கியலோடு இணைந்தவொன்றாகும். என்ன மாதிரி Toxin என்ற ஏற்புநொதியம் உடலோடு இணைந்துள்ளதோ அதேமாதிரி.

இந்தக் குழுக்கள் கன்னைப்போக்காக வளர்ச்சியடைதல் ஆபத்தானதுதான். தலைமைத்துவக் கலையென்பது இந்தக் கன்னைப்போக்கு அபிவிருத்தியடையவிடாமல் தடுப்பதுதான். இதை வெறுமனே தடை செய்வது மூலம் இல்லாமற் செய்துவிட முடியாது."

-ரொக்சி லெனினுக்குப் பின் மூன்றாமகிலம் பக்கம் 111

மாக்சியம் கடந்துவந்த பாதை கொஞ்சநஞ்சமல்ல. அதிலேயுள்ள அராயகத்திற்கு எதிரான எழுத்துக்களும் குறைவல்ல. ஒன்றை மட்டும் நாம் சொல்வோம். அராயகம் ஆதிக்கமடைந்த இத்தாலியிலே முசோலினியும் ஸ்பானியாவில் பிறாங்கோ பாசிசமும் வந்ததை வரலாறு சொல்லும். எங்கே அரர்யகம் கணிசமான வளர்ச்சிகண்டதோ அங்கே தொழிலாளிவர்க்கம் தோல்விகண்டது. எங்கே தொழிலாளிவர்க்கம் தோல்விகண்டதோ அங்கே பாசிசம் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றியது. எங்கே தொழிலாளிவர்க்கம் தோற்கடிக்கப்பட்டதோ அங்கெல்லாம் பாசிசம் நிர்மாணமானது.

"மனிதர்கள் தாம் வாழும் சமூகத்தை திருப்பி புரட்சிகரமாகக் கட்டமுடியவில்லையென்றால், அவர்கள் கொம்யூனிசத்தை அடையமுடியவில்லையென்றால் மனித சமுதாயம் ஓர் அழுகின முட்டைக்குக்கூட பெறுமதி இல்லாததாகிவிடும். அவர்கள் அனாதியாக சுமை மிருகமாகவே இருப்பார்கள். ஏன் அவர்கள் சுமை மிருகத்திலும் கேவலமானவர்களாகும். இந்த மிருகங்களுக்கு வர்க்கமாகப் பிரிந்திருக்கத் தெரியாது. ஒரு மாடு இன்னொரு மாட்டையோ ஒரு குதிரை இன்னொரு குதிரையையோ ஆளுவது கிடையாது."

-ரொக்சி- எப்படி புரட்சி ஆயுதபாணியாக்கப்பட்டது பாகம் 1
பக்கம் 53

நீலிதை

தவணைமுறையில்

★ ஆடம்பரத்தை
தவணை முறையில்
தங்க வைக்கும்
கௌரவக் கடன்கள்

★ அடுப்பு முதல்
அலுவலகம் வரை
இடிதாங்கியாய்
சுமைதாங்கியாய்
கழுத்தினில் தாலிதொங்க
தவணை முறையில்
தட்சணைகள்

★ பெற்ற பட்டத்தை
பயனுடையதாக்க
தவணை முறையில்
கையூட்டு

★ உயிர்போகும்
நேரத்தில் கூட
மகன்களிடம்
தவணை முறையில்
உணவு பெறும்
தாய் தந்தை. ◆

புகைப்படம்:
'தாய்மை' தமயந்தி

முகமறியாத் தோழனுக்கு

இளைய அப்துல்லாஹ்

தோன்றிப் பின்னரொரு
நாளில்
இறப்பென்றறியா
செஞ்சீனப் பறவையாகிலும்
உயிர் பெறும்
ஓசைச் சிறகடிப்பில்
உரம் பெறுக.

என் தோழனே!
உன் உயிர்ப்பு
என் தேசத்தின் தேவையைப் போல்;
நீ வேண்டும்.

எந்த மூலையிடுக்கின்
திக்கு மந்திரம்
காற்றாகி உன் மேனியில
பட்டுத் தெறிக்கும்
உன் வரவு தேவை.

கல்லறைக் கனல்கூட
சுதந்திரம் உச்சரிக்கும்
எஞ்சிய மண் உக்கா
மூளைப் பிசிர் அறையில்
இன்னும் எழும் உணர்வுகள்.

மீண்டுமொரு முறையாகிலும்
அத்யாவசிய மீட்புயிர்
பெறவேண்டும்.

எத்தனை கழுத்துகளில்
கூர் விழினும்
என் நினைவகலாத் தோழனே!
பின்னரொரு நாளிலாகிலும்
பீனிக்ஸ் உருக்கொண்டு
நீ மீண்டும் அலை.

சாம்பல் மேட்டிடை
ஆயிரம் முறை
அது உயிர்த்தெழும்
ஒரு முறை பேசுவாய்
அல்லவே.

தசாப்தங்களின்
வரலாறு பொய்ப்பிக்கா
அலைச்சலில்
விளாசும் தீப்பிழம்பில்
எரித்தார்ப்பரிக்கும்
கொடுமைகள் அழிந்தொழுகி
உன் காலடி நக்கும்.

அப்போது நீயும் மன்னவன்
நானும்....
ஏதாவது மீளவும்
தோன்றலாம்.
எம் பரம்பரையாவது
மூச்சு விடவும்
வாழ்ந்து மகிழவும்
வேண்டும்.
◆

24.02.99 அதிகாலை 1.45



ஓவியம்: VITHURAN (age 15)



ஓவியம்: VEESHMAN (age 11)

கல்பனைக்கதைகள்

அற்ற கல்பனை

I

சிறிதே திறந்த கதவின் வழியே பார்க்கிறேன்
மாலையில்
தடங்களற்ற விரிந்த காட்சியாக
கணக்கற்ற அழுத்தமான
வெளிச்ச புள்ளியிடப்பட்ட இரவுகள்
தொடைகளுக்கிடையில்
அமைதியாய் ஒருவன் ஓய்வெடுக்கையில்
நம்பமுடியாத ஒன்று
தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டது
சிறையறை எண் 2-லிருந்து

II

சகோதரனே,
இது ஒரு கல்லறை
மரணத்திற்காக எங்கெல்லாம்
மனிதர்கள் காத்திருக்கிறார்களோ
அல்லது
வாழ்க்கையைத் தொடர
இச்சுவர்களுக்குள்
ஒரு கல்லறைக் கல்லற்று
இக்கல்லறைகள் குறைக்கப்படும்.

III

நாடுகடத்தும் தண்டனைச் சங்கிலிகள்
இரும்புச் சிறைகள்
மனிதர்கள்மீது வெற்றி கொள்கின்றன
அவர்களின் உயிர்கள்
அவர்களின் ஆத்மாக்கள் சுழன்று வெளியேறும்
போராட்டத்தின்வழி நம்பிக்கையுடன்

அறிவதாக:
அங்குச் சங்கிலிகளோ அல்லது
சிறைகளோ அல்லது தங்கமோ
இவைகளின் தைரியத்தில் சிக்கவைக்காத
உண்மையுடன் பித்துப்பிடித்த ஓர் உலகம்
அவர்கள் நிற்கும்போது
புதைக்கப்பட்டனர் உயிருடன் இருக்கும்போது
இன்னும் பைபிள் சொல்கிறது
மரணங்களும் அடக்கங்களும்
எதிர்மறையானவைகள்,
Jehovah-வுடன் வாழமுடியாது
ஏழு மெழுகுவர்த்திகளின் சுடர்கள்
ஏழு சிறைகளின்மீது கொளுத்தப்பட்டுள்ளன
திருவெளிப்பாட்டின் பார்வைகள் போல.

சங்கிலிடும்போது
சங்கிலியாக
சிறையிலிடும்போது
சிறையாக
அவைகளுக்குள்ளிருந்து மனிதர்களாக
இங்கு.

முகமூடி நடனங்கள்
முகமூடியில்லாத நடனக்காரர்களுடன்
பார்வையற்ற முகமூடித் தயாரிப்பாளர்கள்
ஒரு மனிதனின் விதைப்பைகளை விட
வேறு சாபம்தான் என்ன
இவைகள் நிகழ
பனிமேகத்தை ஊடுருவிச் செல்லுமா
நாளையின் விதி.

IV

மேல்மாடியின்
சிமெண்ட் படிகளின்மீது
உட்கார்கையில்
கண்ணுக்கெட்டிய தொலைவில்
பாத்ரூம்களும் கக்கூஸ்களும்
இயற்கைக்கு அழகூட்டுகின்றன
வருகைப் பதிவேடு நாடகம் முடிகிறது
சிறையதிகாரிக்கும் கைதிகளுக்குமிடையே
நாடகம் தொடங்குகிறது
நேற்றைய ஒமோகா-விற்கும்
நாளைய ஆல்.பா-விற்குமிடையே

V

எங்கள் எல்லோருக்கும் அப்பால்
இந்தச் சுவற்றிற்கு அப்பால்
இன்னமும் அந்தப் பேரச்சம் கிடக்கிறது
உயர்ந்த பட்ச பாதுகாப்புடன்
அது உருவாக்குகிறது உயரமான, அழகான
ஒடுக்குமுறை. ◆

ஜங்காபி ஜோஸ்வா சிசன் (மாலவி)
தமழில்: அ. ஜ. கான்
நன்றி: Third World Callin

நன்றி

- ஆக்கங்கள் அனுப்பிய அனைத்துப் படைப்பாளிகளுக்கும்
- ஆக்கங்கள் கேட்டு நாம் கோரிய விளம்பரத்தை பிரசுரித்துதவிய தினக்குரல் (இலங்கை), சரிநிகர் (இலங்கை), சுந்தரசுகன் (இந்தியா), காலக்குறி (இந்தியா), எக்ஸில் (பிரான்ஸ்) ஆகிய பத்திரிகைகள், சஞ்சிகைகளுக்கும்
- இம்மலர் வெளிவருவதற்கு முன்னின்று உழைத்த நண்பர் அசோக்கிற்கும்
- இம்மலர் உருப்பெற கணனியில் பதித்துதவியவர்களுக்கும்
- இம்மலர் வெளிவர உடுக்கை இழந்தவன் கைபோல தயங்காது பொருள் உதவி செய்த எம் இனிய நண்பர்களுக்கும்
- ஓவியங்கள் தந்ததுடன் இம்மலரை சிறப்புற அமைத்துத் தந்த ஓவியர் கிருஷ்ணராஜாவுக்கும்

புதியபூமி எழுந்து வரட்டும்

இந்திரன்

எல்லா இடங்களிலும்
தங்கள் அடிமைப் பாடல்களை
- ஒப்பாரிகளை, சோக கீதங்களை
மகிழ்ச்சிப் பாடல்களை -
பாடிக்கொண்டிருக்கும்
எனதுமக்களுக்காக
மகிழ்ச்சியைப் பரப்பியபடி
கண்மூடித்தனமாகத் திரிகின்ற,
சோம்பேறித்தனத்தினால்
நேரத்தைப் பாழடிக்கிற,
பசியெடுக்கும்போது தூங்கிவிடுகிற,
சுமை அதிகமாகும்போது கதறுகிற,
நம்பிக்கை அற்றுப்போகும்போது
குடிக்கிற
எனது மக்களுக்காக
கண்ணுக்குப் புலப்படாமல்
எல்லா இடங்களிலும் ஏறி உட்கார்ந்துகொண்டு
சிரிக்கிற ஜென்மங்களினால்
தங்களுக்குத் தாங்களே கட்டப்பட்டு,
விலங்கிடப்பட்டு,
குழப்பிவிடப்பட்டுள்ள
எனது மக்களுக்காக
குழப்பங்களிலிருந்தும்
இரட்டை வேடங்களிலிருந்தும்
தவறாகப் புரிந்துகொள்ளாமலிருந்தும்
நல்ல வழிகளை உருவாக்க முயன்று
நிமிர்ந்து நின்று விழிக்கும்
எனது மக்களுக்காக
எல்லா முகங்களையும், எல்லா மக்களையும்
எல்லா ஆண்களையும், பெண்களையும்
அவர்களின் கணக்கிடமுடியாத தலைமுறைகளையும்
அணைத்துக்கொள்ளும் ஓர் உலகை
படைக்க முயலும்
எனது மக்களுக்காக
ஒரு புதிய பூமி எழுந்து வரட்டும்.
வேறொரு புதிய உலகம் பிறக்கட்டும்.
வானத்தில் அமைதி என்பது
அழுகுறப் பொறிக்கப்படட்டும்.
அஞ்சாமை மிக்க ஓர் இரண்டாம் தலைமுறை
வெளிவரட்டும்.
விடுதலை வேட்கை நிரம்பிய மக்கள் வளரட்டும்.
எதையும் குணப்படுத்தும் அழகும்
உறுதியுடன் பற்றிக்கொள்ளும் வலிமையும்
நம் இரத்தத்திலும், உயிரிலும்
விடாமல் துடிக்கட்டும்.
மனிதன் என்னும் ஓர் இனம் எழுந்துவந்து
அதிகாரத்தைக் கைப்பற்றட்டும்.

மார்கரேட் வாக்கர்
தமிழில்: இந்திரன்
நன்றி: அறைக்குள் வந்த ஆபிரிக்கவானம்